# மாதவமித்ரன்

சஞ்சிகை 10 எண் 6-12
11 எண் 1
மே – ஆகஸ்ட் 19..


T.
Q22m21193.K,
N28mm
N37.6.12
208172



# மாத்வமித்திரன்.

# THE MADHWA MITRAN.

EDITOR:
Adyam Bhagavatha Ranganathachariar,
KUMBAKONAM.

1404
OFFICE OF THE REG... 17 MAY 19.. MADRAS

பௌர்ணமிதோறும் வெளிவரும்.



| | | |
|---|---|---|
| Vol. 10 | பஹுதான்ய ஸம்வத்ஸரம் | No. 10 |
| 10 | வைசாக மாஸம். (பௌர்ணமி) | ெ. 10 |
| | (14-5-1938) சனிவாரம். | |



பொருளடக்கம். பக்கம்.


1. ஸ்ரீ மத்வ விஜயம்
(ஸ்ரீநாராயண பண்டிதாசாரியார்) 283
2. விஷ்ணு ஸஹஸ்ரநாமம் 288
3. சங்க்ஷேபராமாயணம்
(ஸ்ரீ... பண்டிதாசாரியார்) 291
4. பிரபஞ்சம் பொய்யன்று, மெய்யேதான்
(ஸ்ரீமான் விச்வம்பர சாஸ்திரிகள்) 296
5. ஸ்ரீ மகாபாரத தாத்பர்ய நிர்ணயம்
(ஸ்ரீ மத்வாசாரியார்) 303
6. செய்திக்திரட்டு 308
ஸ்மார்த்த பிராம்மணர்களின் மாமிஸ பக்ஷணம் 311
மாத்வ ஸ்திரீகளின் ஜபமந்த்ர ஸ்தோத்திரம் 313
விசேஷதினங்கள் 314


பத்திரிகாசிரியர்:—ஆத்யம் பாகவத ரங்கநாதாசாரியார், கும்பகோணம்.

# மாத்வமித்திரன்.

---

மாத்வர்களின் சாஸ்திரீயமான தமிழ் பத்திரிகை இது ஒன்றே. ஸ்ரீமத்வமதத்தின் அரிய இரகசியங்கள் ஸம்பிரதாயங்கள் மாகாத்மியங்கள் புராணசரிதைகள் மாத்வவகுப்பு புண்ய புருஷர்களின் சரித்ரங்கள் வேதாந்த சர்ச்சைகள் தர்மசாஸ்திர விசாரங்கள் தினசரி விரதாதி குறிப்பு:— மகாபாரத தாத்பர்ய நிர்ணயம் முதலான அநேக கிரந்தங்களின் மொழிபெயர்ப்புகள் முதலிய எண்ணிறைந்த விஷயங்கள் நிறைந்திருக்கின்றன ஸ்ரீமத்வமதத்தை சுலபமாய் அறிந்துகொள்ள இப்பத்திரிகைக்கே உடனே சந்தாதாரராய்ச் சேருங்கள் இது பிரதி பௌர்ணமியிலும் கும்பகோணத்திலிருந்து வெளியாகிறது இதற்கு வருடசந்தா முன்பணமாய் ரூபாய் மூன்று. பிரதி சிராவணமாதமும் இப்பத்திரிகைக்கு வருடஆரம்பமாகும் எந்த மாதத்தில் சந்தாதாரராய் சேர்ந்தாலும் அந்த வருஷத்திய பிந்திய சஞ்சிகைகள் அனுப்பப்படும் பழைய வாலியங்கள் விலைக்குக் கிடைக்கும் பத்திரிகை சரியானபடி கிடைக்காவிட்டால் பௌர்ணமி கழிந்தஒருவாரத்துக்குள் நமக்கு அறிவிக்கவேண்டியதுடன் அந்தந்த தபாலாபீசுக்கும் அறிவித்துவிடவேண்டும் பதிலறிய விரும்புகிறவர்கள் ஸ்டாம்பை அனுப்பவேண்டும் ஒவ்வொரு கடிதத்திலும் தெளிவாய் பூரா மேல் விலாசமும் எழுதி அனுப்பவேண்டும்.

மானேஜர் மாத்வமித்திரன்,

ஸ்ரீ வியாஸ விலாஸம், கும்பகோ.

## மாத்வமித்திரன் பழைய வாலியங்கள் வெகு சொற்பம்தானிருக்கின்றன. உடனே அவைகளைப்பெற முந்துங்கள்.

OFFICE OF THE REGISTRAR 17 MAY 1938 MADRAS

ஸ்ரீ லக்ஷ்மீ நரஸிம்ஹாய நம:

# மாத்வமித்திரன்.

श्रीमन्मध्वमते हरिः परतरः, सत्यं जगत् , तत्वतःभेदः,
जीवगणाः हरेरनुचराः, नीचोच्चभावं गताः ॥
मुक्तिः नैजसुखानुभूतिः, अमला भक्तिश्च तत्साधनं,
ह्यक्षादित्रितयं प्रमाणमखिलाम्नायैकवेद्यो हरिः ॥

VOL. 10 } பஹுதான்ய ஸம்வத்ஸரம். வைசாக மாஸம். { NO. 10

ஸ்ரீ நாராயண பண்டிதாசாரியார் இயற்றிய

## ஸ்ரீமத்வ விஜயம்.

தமிழ்நாடு அரசுக் காப்பக நூலகம் சென்னை-600 008
208172

---

பன்னிரண்டாவது ஸர்க்கம்.

ஓர் அத்வைதியின் அறிக்கை.

---

(முன் 179ம் பக்கம் தொடர்ச்சி).

13. "மத்வாசாரியார் இயற்றியிருக்கும் பிரம்மஸூத்திர பாஷியமோ ஸூலபமாய் பிரம்மஸூத்திரங்களுக்கு நேராக அர்த்தம் செய்வதாய் இருக்கிறது. பிரபலமான சுருத்யாதி பிரமாணங்களை ஆதாரமாய்க் கொண்டிருக்கிறது. ஆனால் தானென்ன? எங்களுக்கு என்ன கேடு" என்று நம்மவர்களிலேயே சிலர் வெட்கம் விட்டு வெளியே உரக்கச் சொல்லி மதாபிமானமுள்ள எங்களை ஸகிக்கமாளாததாயுள்ள வெட்கக் கடலில் மூழ்க அடிக்கின்றனர். 14. எங்கும் வியாபித்திருப்பவர்களும் சங்க சக்ராதி முத்திரைகளை தரித்திருப்பவர்களும் மதுர வார்த்தை

சாந்தஸ்வபாவம் முதலான சத்குணங்கள் பொருந்திய அந்த மத்வாசாரியாரின் சிஷ்யர்களின் ஸமூகம், எங்கும் வியாபித்திருப்பதும், குணங்கள் எனப்படும் நூற் கயிறுகளால் பின்னப்பட்டிருப்பதுமான வலைகளைப்போல், ஆங்காங்கும் கூடும் ஜனத்திரளாகிய ஸமூத்ரத்தில் எல்லா பிராணிகளின் மனதை இனி எப்படி பிடித்து இழுக்காமல் இருக்குமோ, அப்பேர்ப்பட்ட உபாயத்தை எமது சங்கர பகவத் பாதாளின் சாஸ்திரம் அழிந்து போகாமல் காப்பாற்றப்படுவதற்காக வேண்டி நாம் செய்யவேண்டும். 15 ஹம்ஸங்களின் சப்தத்தை அடக்க சாமர்த்தியம் பெற்றவைகளான மேகங்கள் ஏராளமான மழை ஜலத்தைப் பொழிந்து சமுத்ரத்தைப் பெருக்குவதுபோல், ஹம்ஸங்கள் என்னும் யோகிகளாகிய எங்களை ப்ரம்மம் நிர்குணம் என்பதற்கு ஸாதகமாய்ச் சொல்லும் யுக்தியாதி பிரமாணங்களைச் சொல்லவொட்டாமல், வாயை அடக்க சாமர்த்தியம் பெற்றிருப்பவர்களான, அந்த மத்வாசாரியாரின் சிஷ்யர்கள், "மய்யனந்த குணே அநந்தே, அதகஸ்மாத் உச்யதே ப்ரம்மேதி, ப்ருஹந்தே ஹ்யஸ்மின் குணா:" இத்யாதி சுருதிகளின் பக்தோபஸ்து உள்ள, "ப்ரம்ம ஸகுணம் பவிதுமர்ஹதி, வஸ்துத்வாத், கடவத்," இத்யாதி, ப்ரம்மத்துக்கு குணங்களை ஸாதித்துக்கொடுக்கும், அநுமானங்களை எடுத்துச்சொல்லி ஜனங்களுக்கு இயற்கையாகவே இருந்துவரும் ப்ரம்மத்தின் ஸகுணத்வ புத்தியையே வளர்த்துகின்றனர். 16. எமது சத்ருக்களின் மேன்மையை அதிகம் எடுத்துச் சொல்வானேன்? உலகமெல்லாம் அழிந்து போகும் பிரளய காலத்தில் பிரளய ஜலம் உலகத்தை எல்லாம் வியாபிப்பதுபோல், எமது அத்வைத சாஸ்த்ரம் நாசமடையும் இந்த சமயத்தில் இம்மத்வாசாரியாரின் சீடர்கள் உலகம் யாவற்றையும் சுயேச்சையாய் வியாபித்து வருகின்றனர்."

## மற்றொரு அத்வைதியின் சூழ்ச்சி.

17. இவ்வாறு அந்த சபையில் அந்த அத்வைதி சொன்ன வார்த்தையைக் கேட்டுவிட்டு, தன்னுடைய அத்வைதத்தில் மஹாபிமானமுள்ளவனும், அத்வைத மஹாபிமானம்கொண்ட பத்மதீர்த்தாதிகளின் மனோநிலையை அறிந்தவனும், துஷ்டனுமான மற்றொரு அத்வைதி தன் மதத்தினரின் மனதை உற்சாகப்படுத்திக்கொண்டு, முட்டாள்தனமாய் இந்த துணிச்சலான வார்த்தையை அப்பொழுது உரக்க உரைத்தான். 18. நெருப்பு இருப்பதாய் சொன்ன சொல்லைக்கொண்டே பயந்து உருகிப் போகும் உர்மைப்போன்ற பயங்காளிகளின் மதாபிமானமில்லாத மனதைச் சுடவேண்டும் இது மிகவும் கேவலமாகும். அக்னியின் ஸாக்ஷாத் சம்பந்தம் ஏற்பட்டால் மட்டில் உருகும் வெண்ணெ இந்த பயங்காளிகளின் மனதைக்காட்டிலும், அதிக வலிவுள்ளது என்று எனக்குத் தோன்றுகிறது. மத்வாசாரியாரை நேரில் பார்க்காதிருக்கும்போதே அவர் இவ்வாறு இருக்கிறார் என்று காதாற்கேட்டமாத்திரத்தில் இப்படி நீங்கள் பயப்பட்டிருப்பது மிகவும் வெட்கக்கேடாய் இருக்கிறது.



19. எமது சங்கரபகவத்பாதாளால் செய்யப்பட்ட சாஸ்திரமோ எங்களுக்கு பரமசுகத்தை அளிப்பது. எமது மதத்தின்படி பிரம்ம ஐக்யம்தான் அபாத்யமாதலால் பிரம்மத்தைத் தவிர்த்துள்ள எல்லா தேவாதிகளுக்குப் கூட பாதிக்கப்படும் தன்மையை அளிக்கவல்லது. எப்படி சுக்ராச் சாரியாரின் அபிசாரவித்தை தேவாதிகளுக்கு பாதிக்கப்படும் தன்மையைக் கொடுத்து, அவர்களால் பூஜிக்கப்படுபவரான அவர்களின் குரு பிருஹஸ்பதியையும் வெட்கிக்கசெய்கிறதோ, அப்படியேதான் இந்த சங்கர வித்தையும் தேவகுருவான பிருஹஸ்பதியையும் அவருடைய சாஸ்திரத்தையும் இதற்கு போட்டி போடச் செய்யாமல் செய்து தலைகுனியச் செய்கிறது. இப்பேர்ப்பட்ட சங்கர வித்தையைக் கைப்பிடித்த இந்த பத்ம தீர்த்தாதிகள் நமக்கு பக்கபலமாய் எதிரில் இருக்கையில் நாம் வருத்தப்பட வேண்டியது யாது உண்டு. 20. எமது அத்வைதம், ப்ரம்மத்தின் ஸகுணத்வத்தை சாதித்துக் கொடுப்பதாயுள்ள கண்டிக்கமாளாததான அனுமானங்களால் தடுக்கப்பட்டு போய் சாதிக்க முடியாதது என்று எமது அத்வைதிகளுக்கு தோன்றினதால்தான் என்ன? அதனால் அத்வைதிகளான எங்களுக்கு தோல்வி ஏற்பட்டு விட்டதாய் நினைக்கவேண்டாம். இந்த பத்மதீர்த்தாதிகளால் நாம் பாதுகாக்கப்பட்டு இருக்குமளவும் எங்களை ஜயிப்பவர் ஒருவருமில்லை. இவர்கள் எப்பேர்ப்பட்டவர்களெனில், நல்ல வீரியமுள்ள மந்திரங்கள் ஔஷதங்கள் முதலிய

வைகளைக் கையாளுபவர்கள். எதிரியை 1. சாலனம் செய்யவும் (நிலையை பெயர்க்கவும்) 2. வசீகரணம்செய்யவும் (தன் வசமாக்கிக் கொள்ளவும்) 3. ஸ்தம்பனம் செய்யவும் (திக்பிரமை கொள்ளும்படிச் செய்யவும்) 4. வித்வேஷணம் செய்யவும் (எல்லோரையும் பகைக்கும்படி செய்யவும்) 5. உச்சாடனம் செய்யவும் (ஓடும்படி செய்யவும்) 6. மாரணம் செய்யவும் (கொலைகளைச் செய்யவும்) ஆக இந்த ஆறு காரியங்களைச் செய்யமுடிந்தவர்கள். 21. இம்மாதிரியான ஸாமர்த்தியம் பெற்றவர்களான எங்களை ஜயிப்பவர் யாரும் இருக்கமாட்டார். ஆனாலும்கூட எமது விருத்தமான த்வைத சித்தாந்தத்தை நாம் அலக்ஷியம் செய்யலாகாது. அதை கண்டிக்க நம்மால் முடிந்தவளவு பல உபாயங்களால் நாம் எத்தனப்படவேண்டியதுதான். ஆனால் நீர் கூறுகிறபடி கூக்குரல் போடும்படியான சமயம் இப்போது வந்துவிடவில்லை முடிந்தவளவுதான் நாம் அதை கண்டிக்க வேண்டுமென்று, ஏன் சொல்லுகிறேன் என்றால், இணையற்றதான உத்தமமாயுள்ள ஐக்யக்ஞானம் பெற்றவரென ப்ரக்யாதரான சங்கராசாரியார் முதலான ஆசாரியார்களும்கூட பேதத்தை ஸாதிக்க முடிவதாயுள்ள எமது எதிர் கக்ஷியான பிரபலமாயுள்ள த்வைதம் நிராகரிக்கப்படுகிறதோ படுகிறதில்லையோ என்று சந்தேகிக்கின்றனர். 22. ஆனாலும் நாம் எவ்வாறு நம்மால் முடிந்தவளவு மத்வமதத்தை அழிக்க எத்தனிக்கவேண்டுமென்றால், எங்களில் நிபுணர்கள்—எங்கள் ஜாதியார்களிலோ இதர ஜாதியார்களிலோ உதாசீனமாய் இருப்பவர்களின் கூட்டத்தில் புகுந்து "நூதனமாய் புறப்பட்டிருக்கும் மத்வாசாரியாரால், தொன்றுதொட்டு பரம்பரையாய்வந்த அத்வைத தத்வத்தை நிர்ணயித்துக் கொடுக்கும் சங்கராசாரியாரின் சாஸ்திரம் அய்யய்யோ நாசமாக்கப்படுகிறதே" என்று கூக்குரல்போட்டுக்கொண்டு, அந்த மத்வாசாரியார் முதலானவர்களிடம் தோஷங்களை, அவை இருந்தாலும் சரி இல்லாதிருந்தாலும் சரி வெளியில் எடுத்துச் சொல்லி, மத்வ சாஸ்திரத்தில் த்வேஷம் வரும்படிச் செய்யவேண்டும். 23 அவ்வாறு மத்வாசாரியார் முதலானவர்களில் தோஷங்களைச் சொல்லி மத்வமதத்தை நிராகரித்து, அத்வைத மதத்தை பிரசாரம் செய்பவர்கள் "மத்வ மதத்தில் சேராதீர்கள் ! அத்வைதமதத்தையே தழுவுங்கள்' என்று தம்சொந்த அபிப்பிராயத்தை வியக்தமாய் எமது அத்வைத ப்ரம்மம் போல் வாயால் சொல்லத் தகுந்தன்று. அவ்வாறு அவர்கள் மத்வமதத்தை தழுவாதபடியும் அத்வைதத்தை விடாதபடியும், அவர்களை எங்கள் வசமாக்கிக்கொள்தல், எங்களை உத்தமர்களென எண்ணும்படி செய்தல் முதலான எல்லா காரியங்களும் எமது மேற்சொல்லிய மாயாவித்தையின் சாமர்த்தியத்தால் நடைபெறும். ஆதலால் நாம் வாய்விட்டு எதையும் சொல்ல வேண்டியதில்லை. நம்மைச் சேர்ந்தவர்களாயில்லாமல் எமது சித்தாந்தத்திற்கு, எதிரான அபிப்பிராயமுள்ள சத்ருக்கள் எல்லோரையும் சாஸ்திர யுக்தியால் நிராகரணம் செய்யவேண்டுவதுபோல், மருந்திடல் ஆபிசார ப்ரயோகம் செய்தல் முதலிய உபாயங்களைக்கொண்டு ஹிம்சிக்கவேண்டியதுதான். 24. மத்வாசாரியாரோ அவருடைய சிஷ்யர்களோ ஓர் ஊருக்கு வருவதற்கு முன் நம்மவர்கள் முன்னடியே போய், அவ்வூரிலுள்ள முக்யஸ்தர்களை, நல்ல வார்த்தையைச் சொல்லியோ, அவர்களில் அபிப்பிராய பேதத்தை உண்டாக்கியோ, அவர்களுக்கு லஞ்சம் கொடுத்தோ அவர்களை அடிதடிசெய்து கண்டித்தோ, இவ்வாறு ஸாமம் தானம் பேதம் தண்டம் என்னும் நான்கு உபாயத்தால் தம் சுவாதீனமாக்கிக் கொண்டு மத்வாசாரியாருக்கும் அவருடைய சிஷ்யர்களுக்கும் எதிர்கொண்டழைத்தல், நமஸ்காரம் செய்தல், பிக்ஷையளித்தல் முதலான மரியாதைகள் ஒவ்வொரு கிராமத்திலும் நடைபெறுதபடி நாம் தடுக்கவேண்டும். இவ்வாறு அந்தந்த ஊர் ஜனங்கள் எதிர்கொண்டுவந்து நமஸ்கரித்து அழைக்காமற்போனால் மத்வாசாரியார் முதலியோர் அந்தந்த ஊருக்குள் பிரவேசிக்காமலேயே கிராமாந்தரம் சென்று விடுவார்கள். அப்படிக்கும் வெளியே செல்லாமல், வேண்டுமென்று பெரிய ஊர்களில் பிரவேசித்தால், எங்கள் ஆசாமிகள் எப்போதும் தயாராயிருந்து அவர்களிடமுள்ள புஸ்தகங்களைக் கொள்ளையிடுதல் அவர்களை அடித்தல் திட்டுதல் கலகம் செய்தல் முதலியவைகளை, அவர்களின் கௌரவத்தை பங்கம் செய்ய நம்மவர்கள் அவசியம் செய்யவேண்டும்.

என்றிவ்வாறு வக்ரபுத்தியுள்ள அத்வைதிகள் தாம் செய்ய வேண்டிய காரியங்களை அடுத்தடுத்து யோசித்து ஸ்ரீ மத்வாசாரி

யார் உடுபியிலேயே இருந்து கொண்டு தாம் செய்த ப்ரம்ம ஸூத்ர பாஷியத்தை பாடப்ரவசனம் செய்து கொண்டு, மிகுந்த க்யாதி பெற்றிருக்கும் காலத்தில், அதைக்கேட்டு பொறுக்காமல் விஷ்ணு பக்தரான ஸ்ரீமத்வாசாரியாரை நிந்தித்தல், அவருக்கு கௌரவம் ஏற்படாதபடி நடத்தல், முதலான மகாத்வேஷத்தைச் செய்தனர். அப்படி அவர்கள் முக்யப்ராணரான ஸ்ரீமத்வாசாரியாருடைய த்வேஷத்தைச் செய்திருக்காவிடில், துக்கமே உக்ர ஜலமாகக் கொண்ட அந்ததாமிஸ்ரம் என்னும் கடலில் அதாவது அந்ததாமிஸ்ரம் என்னும் மகாதமஸ்ஸில், அடியில் போய்சேர, இவர்கள் அருகர்கள் ஆவது எப்படி? ஹரிமுக்யப்ராணர்களை த்வேஷித்தாலல்லவோ தமோயோக்யர்களுக்கு அவர்களின் கதியான அந்தம்தமஸ்ஸு கிடைக்கும், அவர்கள் தம்கதியைப் பெறத்தான் அவ்வாறு செய்தனர். (தொடரும்)

---

# ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ர நாமம்.

(முன் 270ம் பக்கம் தொடர்ச்சி)

362. அதுல: (ஓம் அதுலாய நம:) உபமை இல்லாதவ

363 சரப: (ஓம் சரபாய நம:) த்ரிபுராஸுரர்க கொன்ற பரமசிவனின் பாணத்தில் பிரகாசிப்பவர். ப்ரளயோத கத்தில் விளங்குபவர். வரம்பு மீறியவர்களை அழிப்பவர்.

364 பீம: (ஓம் பீமாய நம:) ப்ரயாணங்களை ஸ்ரீ வேத வியாஸர் முதலான ரூபங்களால் தாங்குகிறவர். ஜனங்கள் பயப்படக் காரணமானவர். பக்தர்களின் பயத்தை பேதிப்பவர்.

365 ஸமயக்ஞ: (ஓம் ஸமயக்ஞாய நம:) பக்தர்களுக்கு அபீஷ்டத்தைத் தரும் காலத்தை அறிபவர். லட்சுமியுடன் கூடியவரும் இருப்பதை எல்லாம் அறிபவருமாயிருப்பவர் ஸ்ருஷ்டியாதிகாலங்களை அறிபவர். சாஸ்திரங்களை அறிபவர் பக்தர்களின் சுபத்தைத் தரும் உபாயத்தை நன்கு அறிபவர்.



366 ஹவிர் ஹரி: (ஓம் ஹவிர் ஹரயே நம:) யக்ஞத்தில் ஹவிர் பாகங்களை எடுத்துக்கொள்பவர். பக்தர்களால் எடுத்துக் கொள்ளப்படுகிறவரும் பக்தர்களின் கஷ்டங்களை நிவிருத்திப்பவருமானவர்.

367 ஸர்வலக்ஷண லக்ஷண்ய: (ஓம் ஸர்வலக்ஷண லக்ஷண்யாய நம:) ஜகத்தின் ஜன்மாதிகளுக்கு காரணமாயிருப்பதான லக்ஷணங்களால் அறியப்பட அருகரானவர். ஸமஸ்தமான லக்ஷணங்களையுமுடையவர். ஸமஸ்தமான லக்ஷணங்களுள்ளவரும் நன்கு காணப்படுகிறவருமாயிருப்பவர். எல்லா பிரமாணங்களாலும் அறியப்படுகிறவர்.

368 லக்ஷ்மீவான் (ஓம் லக்ஷ்மீவதே நம:) பக்தர்களை பார்ப்பவர். மகாலக்ஷ்மியுடன் இருப்பவர். சம்பத்துக்களுடன் இருப்பவர். சோபையுடனிருப்பவர்.

369 ஸமிதிஞ்ஜய: (ஓம் ஸமிதிஞ்ஜயாய நம:) யுத்தத்தில் ஜயிப்பவர். எல்லா கஷ்டங்களையும் ஜயிப்பவர்.

370: விக்ஷர: (ஓம் விக்ஷராய நம:) நாசமில்லாதவர். பக்தர்கள் விரும்புவதை தானம் செய்பவர். பக்தர்களிடத்தில் நாசமில்லாத அன்புடையவர்.

371 ரோஹித: (ஓம் ரோஹிதாய நம:) சிகப்புவர்ணமுள்ளவர்

யும் இ 372 மார்க்க: (ஓம் மார்காய நம:) சாஸ்திராதிகளால் தேடு ...களான ஞானிகளுக்குச் சேர்ந்தவர். மோக்ஷத்தை விரும்பு...றவர்களால் தேடப்படுகிறவர். பக்தர்களால் தேடப்படுகிறவர், ...லிங்கசரீரத்தை மோக்ஷத்திற்கு கொண்டுபோகிறவர்.

373 ஹேது: (ஓம் ஹேதவே நம:) ஜகதுக்கு காரணமாயிருப்பவர். எல்லாவற்றிற்கும் காரணமாயிருப்பவர்.

374 தாமோதர: (ஓம் தாமோதராய நம:) ஜனங்களை அடக்குவதான ப்ரளயகாலத்திலுள்ள ஜலத்தில் விளையாடுபவர். தமமாகிய இந்திரிய நிக்ரஹமுள்ள முனிகளால் கொடுக்கப்படும் ஜலத்தால் ரமிப்பவர். தானசீலர்களுக்கு ஆனந்தத்தைத்தருபவர். நாசம் செய்பவர்களான தைத்யர்களுக்கு துக்கத்தைத்தருபவர். யசோதை

காட்டிய கயிறை வயற்றிற் கொண்டவர். இந்திரிய நிக்ரஹமுள்ளவர்களும் நாராயணனை மேலானவராய்க் கொண்டவர்களுமான ஜீவ ஸமூகத்தில் ரமிப்பவர். உலகங்களை தம் வயிற்றில் வைத்துக் கொண்டவர் தேவர்களுக்கு ஸுகத்தைத் தருபவர். இந்திரிய நிக்ரஹத்தால் ஏற்படும் புத்தியால் அறியப்படுபவர். பக்தர்கள் ஸமர்ப்பணம் செய்த ஸோமரஸங்களின் வாஸனையில் ரமிப்பவர். பக்தர்கள் ஸமர்ப்பணம் செய்யும் ஸத்கர்மங்களில் ஆனந்தப் படுகிறவர். சமாதி ஸம்பத்துக்கள் உள்ள க்ஞானிகளால் மேலானவரென்று அடையப்படுகிறவர். வேதாந்திகளால் பாடப் படுபவர். இந்திரிய நிக்ரஹமுள்ளவர்களுக்கு அக்ஷயமான வைகுண்டாதிகளை அளிப்பவர், சத்ருக்களுக்கு கஷ்டத்தை உண்டாக்குபவரும் ஸர்வக்ஞர்களான பிரம்மாதிகளுக்கு நியாமகருமானவர். க்ஞானிகள் இல்லாத ஜனங்களை நாசம் செய்பவரும் தோஷம் விலகிப்போனவருமானவர். லிங்க சரீரமுள்ளவர்களுமான ஜீவர்களை ப்ரளய காலத்தில் உதரத்தில் வைத்தவர்.

375 ஸஹ: (ஓம் ஸஹாய நம:) எல்லாவற்றையும் பொறுப்பவர். எல்லாவற்றையும் ஜயிப்பவர்.

376 மஹீதர: (ஓம் மஹீதராய நம.) பூதேவியை தரிப்பவர். பூபாரத்தைத் தொலைத்து பூமியை நிறுத்துபவர்.

377 மகாபாக: (ஓம் மகாபாகாய நம:) மகானாயும் ஷட்குணைசுவரியவானாயும் இருப்பவர். யக்ஞங்களில் உத்தம[illegible] பாகங்களைக் கொண்டவர். மகத்தான காந்தியுடைய யக்ஞ[illegible] உத்தமமான பாகங்களைக் கொண்டவர். மகத்தான காந்தியுடைய மந்திரமலையைத் தூக்கினவர். மகத்தான காந்தியுடைய கோவர்த்தன மலையைத் தூக்கினவர். உத்தமபோஜனத்தை உண்பவர். உத்தம சரீர அவயவங்களுள்ளவர்.

378 வேகவான் (ஓம் வேகவதே நம:) கஜேந்திரன் முதலான பக்தர்களை ஸம்ரக்ஷிப்பதில் வேகம் கொள்பவர்.

379 அமிதாசன: (ஓம் அமிதாசனாய நம:) சிறிது சாப்பிடுகிறவரல்லாதவர். அளவற்றதை சாப்பிடுகிறவர்.

(தொடரும்)



ஸ்ரீ நாராயண பண்டிதாசாரியார் இயற்றிய

# ஸங்கிரஹ ராமாயணம்.

## பால காண்டம்.

(முன் 262ம் பக்கம் தொடர்ச்சி)

### வித்யாப்யாஸம்.

வணங்கி நடப்பவர்களான அந்த நால்வரும் உபநயனமானவர்களாய், ஆறு அங்கங்களுடன் கூடிய வேதங்களையும், ஸமஸ்தமான அஸ்திரங்களையும் ஸம்பூர்ணமான தனுர்வேதத்தையும் எல்லா கலைகளையும் கற்றறிந்தனர். மனமடக்கமுள்ளவர்களாயும், இந்திரிய நிக்ரஹமுள்ளவர்களாயும், பராக்கிரமசாலிகளாயும், காந்திமான்களாயும், குணங்களால் எல்லோரையும் மிஞ்சுபவர்களாயும், ஸ்ரீமான்களாயும், கீர்த்திமான்களாயும் ஆயினர். அவர்கள் பூமியில் அவதரித்த தேவர்கள் தானே. அவர்களின் தந்தைக்கு உயிர்களாகவும், குரு ஜனங்களுக்கு வேலையாட்களாகவும் உலகத்தாருக்குதெய்வங்களாகவும், தாய்மார்களுக்கு பாலகர்களாகவும், இருந்தனர். இவர்களில் லக்ஷ்மணன் அவனுடைய மூத்த தமையனாருவுமான ஸ்ரீராமசந்திரன் படுக்கும் பொழுதும் உட்காரும் பொழுதும் நின்றிருக்கும் பொழுதும் நடக்கும் பொழுதும் ஓடும் பொழுதும் துதிக்கும் பொழுதும் க்ஷணமேனும் விட்டலகவில்லை. இம்மாதிரியே தான் சத்ருக்னனும் தன் தமையனை பாதனை விட்டகலவில்லை, மங்களஸ்ரூபராய் ஸ்ரீராம ரூபியான லக்ஷ்மீபதி நாராயணன் தன் க்ரீடைகளாலும் புன் சிரிப்பு விளங்கும் கடைக்கண் பார்வையான வண்டுகளாலும் ஸரஸ்வதியின் மனதையும் கவர்ந்த பேச்சுகளாலும் தன்னிடம் பக்தியுள்ள ஜனக் கூட்டங்களுக்கு ஆனந்தத்தை விளைவித்தார்.

?வது ஸர்க்கம் ஸம்பூர்ணம்.

## 4வது ஸர்க்கம்.

## விச்வாமித்திரரின் ஆகமனம்

பிறகு மக்களிடம் பேரன்பு கொண்ட தசரதராஜன் பிள்ளைகளுக்கு விவாகம் செய்து வைக்க மந்திரிமார்களுடன் கலந்து யோசித்தான், வெகு நேரம் யோசித்திருக்கையில் கார்யத்தின் நிர்ணயம் தோன்றுவதுபோல் ஸாது ஜனங்களின் நண்பரான விச்வாமித்ர மகாமுனி அந்த மந்திரி சபையில் தோன்றினார். அரசன் அந்த முனிச்ரேஷ்டரைக் கண்டு களித்து எழுந்து உத்தமமான ஆஸனத்தை கொடுத்து, வஸிஷ்டருடன் சேர்ந்து அர்க்ய பாத்யாதிகளால் பூஜித்துவிட்டு இவ்வாறு பேசினான். பூஜ்யரான முனிவரே! உங்களைப்போன்ற பகவத் பக்தர்கள் இயற்கையாகவே பரிபூர்ணமானவர்களாயினும் எங்கள் க்ஷேமத்திற்காகத்தான் நீங்கள் விரும்பும் காரியங்களைச் செய்கின்றேரும். நாராயணனையே எப்போதும் ஹ்ருதயத்தில் குடிவைத்திருக்கும் பெரியோர்கள் த்வாதச ஆதித்யர்களைப்போல் உலகை பிரகாசித்துக்கொண்டு விஷ்ணு பக்தர்களை அனுக்ரஹிப்பதற்காக உலகில் சஞ்சரிக்கின்றனரேயன்றி, தம் சொந்த காரியத்திற்காக சஞ்சரிப்பதில்லை என்று சொன்னதைக்கேட்டு விசுவாமித்ரர் இவ்வாறு சொன்னார். வஸிஷ்டாதி மகான்களின் சுவாதீனத்திலுள்ள உமக்கு இவ்வாறு சொல்வதுதான் தகும். மகாக்ரூரர்களான மாரீசன் ஸுபாஹு என்னும் இரண்டு ராக்ஷஸர்களால் நான் செய்யும் யக்ஞ[illegible] அடிக்கடி அழிக்கப் பட்டன. அதைக் காப்பாற்றுவதற்கு இப்போது உன்னை அண்டியிருக்கிறேன். பரமசிவனின் வரத்தால் கொல்ல முடியாதவர்களாயும் ஸாதுக்களை அவமதிக்கிறவர்களாயுமுள்ள. அந்த ராக்ஷஸர்களின் விஷயத்தில், மடுக்களின் விஷயத்தில் நெருப்பு வீணாய் போவதைப்போல் என் சாபமும் வீணாகவே முடிந்திருக்கிறது. ஆகையால் அரசனே! உம்முடைய பிள்ளைகளில் ஜேஷ்டனும் ச்ரேஷ்டனும் கமலக் கண்ணனுமான ஸ்ரீ ராமனை அந்த ராக்ஷஸர்களைக் கொல்ல அனுப்பும். அதனால் நிச்சயம் உமக்கு நல்லதே உண்டாகும். அரசனே! உம்முடைய பிள்ளையின் தேஜஸ்ஸு வேதத்தாலேயே நன்கு அறியப்பட வேண்டியது, தேவர்களாலும் சரியே தைத்யர்களாலும் சரியே



தாக்கமுடியாதது என்பதை நான் அறிவேன். நான் மட்டிலுமல்ல. வஸிஷ்டர் முதலான ப்ரம்மக்ஞானிகளான ப்ராம்மணர்களும் அறிவார்கள். என்று விச்வாமித்ரர் சொன்னதைக் கேட்டவுடன் தசரதன் ஸ்ரீராமசந்திரனின் பிரிதலாகிய அக்னி தன்னை வாட்டுமே என்று பயந்தான். நினைத்து நினைத்து மூர்ச்சையடைந்தான். ஒரு முகூர்த்தத்தின் மேல் பிரக்ஞை வந்ததும் மீண்டும் சங்கடமடைந்தான். பெருமூச்சுவிட்டுக்கொண்டு அழுத வண்ணமாய் கருணை வரும்படி விச்வாமித்ரரைப் பார்த்து இவ்வாறு சொன்னான். முனிச்ரேஷ்டரே! குமார வயதுள்ள ராமசந்திரன் வெகு ஸுகுமாரன். கோமளமான சரீரமுள்ளவன். ஸுகமாய் இருப்பவன். ஸுகமாய் வளர்ந்தவன். அஸ்திரங்களை அறியாதவன். யுத்தம் செய்யத் தெரியாதவன். இப்பேர்ப்பட்டவனையா நீர் அழைத்துப்போவது? அழைத்துப்போகலாகாது. ஒன்பதனாயிரம் வருஷகாலம் மக்கள் ஆசையால் தவம் செய்தேன். முனியே! இப்பொழுதுதான் ஸ்ரீராமனுடைய திருமுக சந்திரனைக்கண்டு ஆனந்தமடைந்திருக்கிறேன். இப்பேர்ப்பட்ட ஸ்ரீராமசந்திரனை விட்டு இதுவரையில் வருந்திக்கொண்டிருந்த நான் 2 நாழிகைகூடப் பிரிந்திருக்க இஷ்டப்படேன். ராமசந்திரன் என் உயிராக இருக்கிறான். ஆகவே அவனை நீர் அழைத்துப் போகாதேயும். மாயாவிகளான அந்த ராக்ஷஸர்களுடன் யுத்தம் செய்ய, அடிக்கடி யுத்தம் செய்து தேர்ந்தவனும், சமர்த்தனும் [illegible]க சைனியத்துடனிருப்பவனுமான என்னை வேண்டுமானா[illegible] அழைத்துபோம். ராவணனை பக்கபலமாக வைத்துக்கொண்டு ராக்ஷஸர்கள் உங்களை கொல்கின்றனர். அதனால் எங்களுக்கு ஸர்வநாசமும் சம்பவித்திருக்கிறது. இனி உலகமே தலைகீழாய் போகும். ராவணன் என்னும் பெயரைக்கேட்டே தேவர்களனைவரும் இந்திரனுடன் சேர்ந்து தம் தம் பதவிகளை விட்டு ஓடுகின்றனரென்றால் அவனை நாம் எப்படி த்வேஷிப்பது? இந்த விஷயத்தைத் தாம் ஆலோசிக்கவேண்டும். ஆயினும்கூட க்ஷத்திரியனான நான் கோப்ராம்மணர்களுக்காகவே என் சரீரத்தை தரித்திருக்கிறேன். இந்த என் சரீரத்தில் பஞ்சப்ராணங்கள் இருக்குமளவும் சத்ருக்களுடன் நான் யுத்தம் செய்கிறேன். இவ்வாறு தசரதன் பேசிய வார்த்தையாகிய நெய் சேர்ந்ததும்; ஏற்கனவே

ராக்ஷஸர்கள் செய்த குற்றங்களாகிய கட்டைகள் சேர்ந்து எறிந்து கொண்டிருந்த விச்வாமித்ரராகிய அக்னி அதிகமாய் எறிந்தது. விச்வாமித்திரர் செய்த கோபத்தின் விஸ்தாரத்தைக் கண்டுவிட்டு வசிஷ்டர் தசரதனைப் பார்த்து இவ்வாறு சொன்னார். “ தசரதா! நீர் விச்வாமித்திரரைப் பார்த்து தானாக அவர் பிரியப்படுவதை நான் செய்து தருகிறேன் என்று, ப்ரதிக்ஞை செய்து கொடுத்தாய் விட்டது. அவரோ உன்னிடம் அதிதியாய் வந்திருப்பவர். பிராம்மணர். வேத மோதியவர். யக்ஞம் செய்ய ஆசைப்படுகிறார். வைஷ்ணவராய் இருக்கிறார். இப்பேர்ப்பட்டவருக்கு செய்து கொடுப்பதாய் பிரதிக்ஞை செய்து விட்டு, அதை செய்யாமல் விட்டுவிடுவது ரகுகுலத்தில் பிறந்த உனக்கு தர்மமாகாது. உன் பிள்ளையான ஸ்ரீராமன் விஷயத்தில் என்ன யோஜனை. அவனுடைய மகிமை அபாரமானது. அது வெளியே தெரியாமல் அசனால் மறைக்கப்பட்டு இருக்கிறான். அவன் கோபங் கொண்டானென்றால் தன் மகிமையைக் கொண்டு, ஸுராஸுரர்களைக் கொண்ட பதினாங்கு லோகங்களையும் தகித்து விடுவான். விச்வாமித்ரரும் மகாபராக்கிரமம் வாய்ந்தவராய் இருப்பதோடு, ஸ்ரீராமனிடம் மகா பக்தியுள்ளவர். விஷ்ணு பக்தர், ஸ்ரீராமன் ஸர்வ வல்லமை பெற்றவனாயிருப்பினும் அவனுக்கு உதவியாகவே இந்த விச்வாமித்ரர் இருக்கப்போகிறார். முன்பு இந்த விச்வாமித்ரர் க்ஷத்திரியராக இருந்து அரசாளும் போது, ப்ரஜேசுவரர்களில் ஒருவரான கிருசாச்வராஜனால் தக்ஷப்ரஜேசுவரரின் பெண்களான ஜயா ஸுப்ரப[illegible] பவர்களிடம் பிறந்த நூறு அஸ்திரங்களுட் கொடுக்கப்பட்டு அவ[illegible]களை இவர் நன்கறிவார். இவைகளைத்தவிற மற்றும் பல அஸ்திரங்களையும் அறிவார். இத்யாதி காரணங்களால் தசரதா, விச்வாமித்ரருடன் ஸ்ரீ ராமனை அனுப்ப வேண்டியது தான். ராக்ஷஸ குலம் கொல்லப்படவேண்டியது தான். யக்ஞகாரியம் ஸம்ரக்ஷிக்கப்படவேண்டியது தான். என்று வசிஷ்டர்சொன்னதைக்கேட்டு தசரதன் மனம் சமாதான மடைந்து சந்தோஷ முள்ளவராய், ஸ்ரீ ராம லக்ஷ்மணர்கள் இருவர்களையும் அனுப்பித்தான். விச்வாமித்ரரிடம் இவர்களை ஒப்பிவித்தான். ராம லக்ஷ்மணர்கள் இருவர்களும் இரண்டு கைகளில் இரண்டு கோதண்டங்களை தரித்தும், இரண்டு அம்பாரத்தூளிகளை தோளில் போட்டுக்கொண்டும்



அழகாய் பேசிக்கொண்டும் பாலர்களாய் இருந்தும் பராக்கிரமசாலிகளாய் இருந்துகொண்டும், புன் சிரிப்பு சிரித்துக் கொண்டும் விச்வாமித்ரரின் பின்னாடி சென்றனர். தேவர்களின் ஆசாரியனான பிரஹஸ்பதியின் பின்னாடி செல்லும் பரிசுத்தர்களான இந்திரன் உபேந்திரனைப்போல், விச்வாமித்ரரின் பின்னாடி செல்லும் ராமலக்ஷ்மணர்களைப்பார்த்து அயோத்யா பட்டணத்து ஜனங்கள் பரமானந்தமடைந்தனர்.

## விச்வாமித்திரரால் மந்திரோபதேசம்.

அயோத்தியிலிருந்து ஒன்னரை யோஜனை தூரம் வழி கடந்து கதிக்ஞர்களில் உத்தமரான விச்வாமித்ரர் சரயூநதியின் வடகரையில் ஸ்ரீராமனைப்பார்த்து இவ்வாறு சொன்னார். “குழந்தாய் ராமசந்திரா! லக்ஷ்மணனுடன் இருக்கும் உனக்கு இரண்டு மந்திரங்களை உபதேசிக்கப் போகிறேன். பலை அதிபலை என்று அவைகளுக்குப் பெயர். உங்களுக்கு பசி தாகம் முதலியவைகளை குறைக்கும். சதுர்முகனால் உபதேசமானவைகள். ஸமஸ்த இஷ்டங்களையும் கொடுப்பவைகள். என்று சொல்லும் பிராமணோத்தமரான விச்வாமித்ரரிடமிருந்து லக்ஷ்மீபதியான ஸ்ரீராமசந்திரன் ஸர்வக்ஞரும் ஸம்பூர்ண காமருமாயினும், பெரியோர்கள் சொல்வதைக்கேட்பதாகிய சிஷ்டாசாரத்தை கற்பிக்கவரானதால் உபதேசம் பெற்றார். ராஜ குமாரர்களாய் அரண்மனையில் சுகமாய் படுத்து பழக்கமடைந்த அந்த ராம லக்ஷ்மணர்கள் விசுவாமித்திரால் அதிகமாய் சீராட்டப்பட்டவர்களாய், ஸரயூநதியின் கரையில் அன்று இரவு படுத்து பிரகாசித்தனர். மறுநாள் விடியற்[illegible]யில் எழுந்து ஸந்தியோபாஸனையை செய்து கொண்டு நல்ல மா[illegible]ந்தியுடையவர்களாய் கங்கா ஸரயூஸங்கமத்திலுள்ள மன்மதனுக்கு பிரியமான ஆசிரமத்துக்கு சென்றனர். அந்த ஆசிரமத்தில் தான் பார்வதியின் புருஷனான பரமசிவனின் மூன்றாவது கண்ணாகிய அக்னியின் ஜ்வாலையால் மன்மதனுடைய சரீரம் சுட்டுப்போய் அனங்கனென்று பெயர் பெற்றான். அங்கு அவர்கள் மூவரும் அன்றிரவு வாசம் செய்தனர். அங்குள்ள மகான்களான மகரிஷிகளின் கூட்டங்கள், நம் ஆசிரமத்துக்கே வந்து சேர்ந்த ஸ்ரீராமாவதாரராகிய ஸ்ரீஹரியை மிகுந்த ஆரவாரத்துடன் பூஜை செய்தனர். வணக்கத்துடன் கூடிய அந்த மகரிஷிகள் ஸ்ரீராமசந்திரனின் திருமுகத்தை தரிசித்து இன்றைய பொழுது நல்லபொழுது என்று ஸந்த்யோபாஸ்தியைச் செய்தனர்.

(தொடரும்.)

# பிரபஞ்சம் பொய்யன்று. மெய்யேதான்.

## ஓர் அத்வைத வித்வானின் பகிரங்க அங்கீகாரம்.

சதுஸ்சாஸ்திர வித்வான் ஸ்ரீமான் விச்வம்பர சாஸ்திரிகள் பேல்காம் மதுரவாணி ஸம்ஸ்கிருத பத்திரிகையின் 2வது வாலியம் 8வது சஞ்சிகையில் அறிவிப்பதாவது:—

(முன் 275ம் பக்கம் தொடர்ச்சி)

“புண்யேன புண்யம் லோகம் நயதி பாபேன பாபம் உபாப்யாமேவ மனுஷ்யலோகம்” “பூரிதிவா அயம்லோக:” “ஸ்வர்க காமோ யஜேத” “ஸ்வர்கத்வாரமபாவ்ருதம்” “தேதம் புக்த்வா ஸ்வர்க்கலோகம் விசாலம் க்ஷீணே புண்யம் மர்த்தியலோகம் விசந்தி” முதலான சுருதி ஸ்மிருதிகள் ஸ்வர்க்கம் பூமி முதலான லோகங்களுக்கு ஸத்யத்வத்தை அறிவிக்கிறது.

“அஸத்யம ப்ரதிஷ்டம்தே ஜகதாஹுரனீச்வரம்” (பகவத்கீதை அத் 16 ச 8) “ஆஸுரீம் யோனிமாபன்னா: மூடாஜன்மனி ஜன்மனி” மாமப்ராப்யைவ கௌந்தேய ததோ யாந்த்யத்மமாம் கதிம்” என்று சாக்ஷாத் பகவானால் சொல்லப்பட்ட பகவத்கீதையும், ஜகத்துக்கு அஸத்யத்வத்தைச் சொல்பவர்கள் அஸுரர்களென்றும், அவர்கள் பகவானை அடையமாட்டார்களென்றும், அதோ கதியைத்தான் அடைவார்கள் என்றும் போதித்து, ஜகத்து ஸத்யமென்றுதான் அபிப்பிராயம் கிறது.

“ஜன்மாத்யஸ்ய யத:” “முதலான ப்ரம்மஸூத்திரங்களும் ப்ரம்மத்தால் சிருஷ்டிக்கப்படும் தன்மை சம்ரக்ஷிக்கப்படும் தன்மை முதலியவைகளை அறிவிப்பதின் மூலமாய், ஜகத்தின் ஸத்யத்வத்தைதான் அறிவிக்கிறது. முக்காலத்திலும் இல்லாததான முயற்கொம்பு குதிரைக்கொம்பு முதலியவைகளுக்கு சிருஷ்டிக்கப்படும் தன்மை சம்ரக்ஷிக்கப்படும் தன்மை முதலியவை அஸம்பாவிதமானதால், ஜகத்து மித்யையாயிருக்கும் பக்ஷத்தில், அதற்கு சிருஷ்டிக்கப்படும் தன்மை முதலியவை பொருந்தமாட்டாதாதலால் ஜகத்துக்கு ஸத்யத்வம்தான் ஸித்திக்கிறது.

“அனாவ்ருத்தி: சப்தாத்” அனாவ்ருத்தி சப்தாத் என்று கடைசி ப்ரம்ம சூத்ரமும் குண பூர்ணராயுள்ள ப்ரம்ம க்ஞானத்தால்தான்



மீண்டும் திரும்புதல் இல்லாததாகிய மோக்ஷத்தை அறிவிக்கிறது. அந்த மோக்ஷத்தில் “ஜக்ஷன்க்ரீடன் ரமமாண:” என்றிவ்வாறு சுருதி முக்த ஜீவன் விளையாடுகிறான், சாப்பிடுகிறான், என்று பலவகை போகங்களை அனுபவிப்பதை, அறிவிப்பதன் மூலமாய், அனுபவிக்கப்படும் வஸ்துக்களுக்கும் அனுபவிக்கும் முக்தர்களுக்கும் ஸத்யத்வத்தையே ஒப்புக்கொள்கிறது. ஸ்ரீ சங்கராசாரியாரும்கூட இந்த ஸூத்ரம் ஸர்வக்ஞத்வம் முதலான குணங்களுடன் கூடிய ஸகுண ப்ரம்மக்ஞானத்தால் புனராவிருத்தி ரஹிதமான (திரும்புதல் இல்லாத)தும் போகங்களுடன் கூடியதுமான மோக்ஷமுண்டாவதாய்த்தான் அர்த்தம் தந்து வியாக்யானம் செய்துள்ளார்.

இதோ கடம் இதோ படம் என்னும் ப்ரத்யக்ஷமும் கடம் படம் முதலான பிரபஞ்சத்திற்கு ஸத்யத்வத்தைத்தான் அறிவிக்கிறது.

“ஜகத் ஸத்யம் அர்த்தக்ரியாகாரித்வாத்” முதலான அனுமானமும் ஜகத்துக்கு ஸத்யத்வத்தைதான் அறிவிக்கிறது.

ஆதலால் பிரமாணங்கள் என்று இரு கக்ஷியாராலும் ஒப்புக்கொள்ளப்பட்டவைகளான சுருதி, கீதை, பிரம்ம ஸூத்திரம் இவைகளாகிய ஆகமங்களாலும். ப்ரத்யக்ஷத்தாலும் அனுமானத்தாலும் போதிக்கப்படும் ஜகத்தக்கு ஸத்யத்வம் மறுக்கமுடியாதது.

“விச்வம் ஸத்தியம்” “ததேதத் ஸத்யம்” முதலான சுருதிகளாலும், “அஸத்யம் அப்ரதிஷ்டம்தே” முதலான ஸ்மிருதிகளாலும், ப்ரத்யக்ஷத்தாலும், அனுமானத்தாலும், ஜகத்தின ஸத்ய நிலை அறிவிக்கப்பட்டிருப்பினும், ஜகத்தின் பொய்யான நிலையை அறிவிக்கும் பலிஷ்டமான “ஸர்வம் கல்விதம ப்ரம்ம” முதலான சுருதிகளுக்கு விரோதம் இருப்பதால், மேற்சொன்ன ஸத்ய நிலையை அறிவிக்கும் சுருதிகள் பாரமார்த்திகமான (அதாவது உண்மையான, ஸத்யநிலையை (ஸத்யத்வத்தை) க்குறித்ததல்லவென்றும், கேவலம் பேச்சுக்குமட்டில் பொய்யாக ஸத்யமென்பதாய் வைத்துக்கொண்டிருப்பது (அதாவது வ்யாவஹாரிகமானது) ஆன ஸத்ய நிலையைக் குறித்ததாகும் என்றும், ஆகவே இந்த பிரமாணங்களால் ஜகத்துக்கு பாரமார்த்திகமான (உண்மையான) ஸத்யத்வம் ஏற்படுவதில்லை என்றும் கக்ஷிபேசினால், அந்த கக்ஷி சரியானதாகாது. “ஸர்வம் கல்விதம ப்ரம்ம” முதலான சுருதிகள் ஜகத்தின் பொய்யான நிலையை, அதாவது மித்யாத்வத்தையே அறிவிப்பதில்லையாதலால், ஸத்யத்வத்தை அறிவிக்கும் எண்ணிறைந்த பிரமாணங்களுக்கு அவைகளின் விரோதமே ஏற்படுவதில்லை. பிரமாணங்களென்று

ஒப்புக்கொள்ளப்பட்டவைகள் வியவஹாரிக ஸத்யத்வத்தை (பொய்யான ஸத்யத்வத்தை) குறிப்பதாய் ஆகாது, ப்ரத்யக்ஷாதி பிரமாணங்கள் ஸதஸத்விலக்ஷணமாயுள்ளது, முதலான வியவஹாரிக ஸத்யத்வத்தை விஷயமாகக் கொள்வதில்லை என்று அத்வைதிகளாலேயே ஸாதிக்கப்பட்டிருக்கிறது. ஆதலால் "விச்வம் ஸத்யம்" முதலான ஜகத்தின் ஸத்ய நிலையை போதிக்கும் பிரமாணங்கள் வியவஹாரிக ஸத்யத்வத்தை விஷயமாகக்கொண்டதாய் ஆகாது. பாரமார்த்திக ஸத்யத்வ விஷயமே ஆகும்.

எப்படி எனில் "ஸர்வம் கல்விதம் ப்ரம்ம" என்னும் சுருதி ஜகத்தின் மித்யாத்வத்தையே நிரூபிப்பதில்லை. ஏனெனில் இந்த சுருதியில் அவ்வாறு அறிவிக்கும் பதமே இல்லை.

அவ்வாறு மித்யாத்வத்தை அறிவிக்கும் பதம் இந்த சுருதியில் இல்லாவிடினும், ஸர்வம் இதம் = இந்த எல்லா உலகமும், ப்ரம்ம = பிரம்மமே என்று, இவ்விரண்டு பதமும் ஒரே வேற்றுமையில் உபயோகிக்கப்பட்டு, இங்கு ஸாமானாதிகரண்யம் இருப்பதால், ஜகத் மித்யையாயிருப்பதைக்கொண்டு (அந்த பொய்யான ஜகத்துக்கும், உண்மையான (ஸத்ய பூதமாகவுள்ள) பிரம்மத்துக்கும் அபேதம் ஏற்படமாட்டாததன் நிமித்தம், இந்த 'ஸர்வம் கல்விதம் ப்ரம்ம' என்னும் சுருதி, இவ்விரண்டுக்கும் அபேதத்தை போதிக்காது என்று இருப்பதைக்கொண்டு, நான் பார்த்தது தூண் என்னும் இடத்தில்போல், பாதாயாம் ஸாமானாதிகரண்யம் என்னும் நியாயத்தின்படி, ஸாமானாதிகரத்தினால் அபேதம் தோன்றினும், பாத ஞானத்தில் அபேதம் பொருந்தாவிடின், அதை கல்பிதம் என்று சொல்லவேண்டுமென்றபடி, "ஸர்வம் இதம் = ஜகத் இதிபாதம் ப்ரம்ம" இந்த எல்லா ஜகத்தாய் தோன்றியது எதுவோ அது பிரம்மம்தான் என்று வைத்துக்கொண்டு, பிரம்மத்தில் கல்பித்துக்கொண்ட அதாவது ஆரோபணம் செய்துகொண்ட, ஜகத்தின் மித்யாத்வத்தை இந்த சுருதி அறிவிக்கிறது. என்றிவ்வாறு கக்ஷி சொல்வதும் தகாது. ஏனெனில் எமது அத்வைத மதத்தில் பிரமைக்கு காரணமாயுள்ளவைகளே ஏற்படுவதில்லையாதலால் பிரமையே உண்டாகமாட்டாது. எப்படி எனில்.

எமது அத்வைத மதத்தில் ஜகத்திற்கு மித்யாத்வத்தை எளிதில் சொல்லிவிடமுடியாது. பிரமைக்கு விஷயம் எதுவோ அதுதான் மித்யை எனப்படுகிறது. அத்வைதமதத்தில் பிரமைக்கு காரணங்களே இல்லாதிருக்கும் நிலைமையில், பிரமை என்பது ஒருக்காலும் உண்டாக மாட்டாது. பிரமைக்கு காரணங்கள், அதாவது பிரமை உண்டாக வேண்டுமானால், அடியிற்கண்டவைகள் கட்டாயம் இருக்க வேண்டுமென்பது யாவரும் அறிந்ததே (1) அதிஷ்டானம், பிரமிக்கப்படும் பொருள், அதைக்கண்டு விட்டுதான் பிரமை உண்டாகிறது. (2) அந்த பொருளின் ஸாமான்ய தர்மம் என்றால் ஸாமான்ய தன்மை. ஏதுவெனில் இதம்த்வாதி, எதிரிலுள்ளது முதலான தன்மை (3) மேற்சொன்ன பொருளின் விசேஷமான தர்மம். (4) ஸாதிருச்யம், மேற்சொன்ன பொருளை எந்த மற்றொரு பொருள் என்று பிரமிக்கப்படுகிறதோ அந்தப் பொருளைப் போலவே ஸதிருசமாக இருத்தல், சுருங்கச் சொல்லின் கல்பனை செய்யப்படும் அதாவது அரோபணம் செய்யப்படும் பொருளுக்கு ஸதிருசமாக இருத்தல் (5) காண்பவன் ஸாமான்ய தர்மங்கொண்டதாய் மேற்கண்ட அதிஷ்டானத்தை அறிதல் (6) அதன் விசேஷ தர்மத்தை அறியாதிருத்தல், இப்படி அநேக காரணங்கள் உண்டு. ஓர் கயிற்றைக்கண்டு பாம்பு என்று பிரமை ஏற்படும்பொழுது இந்த எல்லா காரணங்களும் எல்லோர் அனுபவத்தில் வந்திருப்பதை ஒருவரும் மறுக்கமுடியாது. இந்த பாம்பு என்னும் பிரமைக்கு கயிறு அதிஷ்டானமாகும். அது எதிரில் கிடந்ததால் எதிரில் இருப்பது என்பது அதன் ஸாதாரண தர்மமம் ஆகும். கயிற்றின் தன்மை அதன் விசேஷ தர்மமாகும். பாம்புபோல் நீண்டிருப்பது வளைந்திருப்பது முதலியவைகளைக் காட்டுவது ஸாத்ருச்யமாகும். ஆக இந்த நான்கு காரணங்களில் ஒன்று இல்லாமல் இருப்பினும், கயிறு பாம்பின் பிரமைக்கு அதிஷ்டானமாய் இருக்கமுடியாது. இதை நேரில் பார்ப்பவன் யாரோ ஒரு தேவத்தன், இதோ நேரில் இருக்கிறதே, என்று எதிரிலிருப்பதாகிய ஸாமான்ய ரூபத்தால், அதிஷ்டானத்தை அறியும் பொழுதுதான் அவனுக்கு பிரமை ஏற்படுகிறது. அப்படி அறியாமல் இருந்தால் அவன் எப்படி பிரமிக்ககூடும். அதிஷ்டானமாயுள்ள கயிற்றில் அந்த கயிற்றுக்குள்ளதான விசேஷ தன்மையை அந்த தேவதத்தன் அறியாமல் இருக்கும்பொழுதுதான் பிரமை உண்டாகிறது. விசேஷமாக உள்ள அதாவது அஸாதியாய் உள்ள கயிற்றின் தன்மையின் அறிவு அவனுக்கு இருக்கும் பக்ஷத்தில், என்றால் அவன் எதிரிலுள்ளது கயிறு என்று அறிந்திருக்கும் பக்ஷத்தில், அவனுக்கு பாம்பு என்னும் பிரமை உண்டாகவே மாட்டாதல்லவா? அப்படியேத்தான் அவனுக்கு ஸாதிருச்யக்ஞானமும் அவசியமாகும். அது அவசியமில்லை என்றும் ஸாதிருச்யக்ஞானமில்லாமற்போனாலும் பிரமை ஏற்படுமென்றும் சொல்லும் பக்ஷத்தில், பாம்புக்கு சதிருசமாய் இல்லாததான குடம்

முதலானவைகளைக்கண்டு விட்டு, அவைகளிலும்கூட பாம்பின் பிரமை ஏன் உண்டாகக்கூடாது. அவ்வாறு உண்டாவதில்லையாதலால் அதிஷ்டானத்திற்கு அதில் கல்பிக்கப்படும் பொருளின் சாதிருச்யமும் அவசியமாகும். ஆகவே இத்யாதி எல்லா காரணங்களும் பூரா இருப்பதால்தான் கயிற்றில் ஸர்பத்தின் பிரமை உண்டாகிறது. ஜகத்தின் பிரமையோவென்றால் இத்யாதி காரணங்கள் இல்லையாதலால் ஏற்படுகிறதே இல்லை. இது நிச்சயம். அதையும் நிரூபிக்கிறேன். ஜகத்தின் பிரமைக்கு அதிஷ்டானம் பிரம்மமோ அல்லது வேறு எதுவோ இருக்க கூடும். அதிஷ்டானத்திலேயேதான் பிரமை பொருந்திருக்கிறபடியால் பிரமைக்கு முன்னாடி அதிஷ்டானம் இருக்கவேண்டுமென்பது நிர்பந்தம் இருப்பதைக்கொண்டு, பிரமையால் கல்பிதமாயுள்ள வேறு எதுவும் அதிஷ்டானமென்று எளிதில் சொல்லிவிடமுடியாது. பிரம்மத்தையே அதிஷ்டானமென்று சொல்லிவிடலாமென்றாலோ, எமது அத்வைத மதத்தில் பிரம்மமோ சிறிய பிரமைக்கும்கூட அதிஷ்டானமாய் இருக்க முடிவதே இல்லை. அதிஷ்டானமாய் ஆவதற்கு காரணமானவைகளான ஸாமான்ய தர்மம் என்ன, விசேஷ தர்மம் என்ன, ஆரோபிக்கப்படும் பொருளின் சாதிருச்யம் என்ன, இத்யாதி தர்மங்களை, அத்வைதிகளான நாங்கள் ஸமஸ்தமான தர்மங்களுமில்லாத எமது பிரம்மத்திற்கு ஏற்பதில்லையல்லவா. உண்மையாக அதாவது பரமார்த்தமாக எமது பிரம்மம் எந்த தர்மத்தையும் கொள்ளாமல் நிர் விசேஷமாய் இருப்பினும், அந்த பிரம்மத்தில் உண்மையாய் இல்லாத கல்பிதமாயுள்ள அதாவது பொய்யான தர்மங்கள் இருப்பதாய் நாம் ஒப்புக்கொண்டுவிட்டால், எமது பிரம்மம் அதிஷ்டானமாகி விடலாமே என்று கோணல் கக்ஷியாடுவதும் பொருத்தமாக இல்லை. ஜகத்தின் பிரமைக்கு அதிஷ்டானமாக இருக்க காரணமான பொய்யாகவுள்ள அந்த தர்மங்களையும்கூட ஆரோபணம் என்றால் கல்பனை செய்யவேண்டியிருப்பதால், அவைகளுக்கும் அதிஷ்டானமாயிருக்கவும்கூட காரணங்களான வேறு தர்மங்கள் வேண்டும். அந்த தர்மங்களும் ஆரோபணம் செய்யப்படுவதாய் ஒப்புக்கொண்டால், அதற்கும் அதிஷ்டானமாய் இருக்க காரணமான மற்றும் இதர தர்மங்களும் வேண்டும். இப்படி முடிவே இல்லாத அதாவது அனவஸ்தையுள்ள பிரமையின் பரம்பரை வந்துசேரும். செடியிலிருந்து விதை. விதையிலிருந்து செடி உண்டாவதாகிய பீஜாங்குர பரம்பரை அநாதியாய் இருந்து வியவஹரிக்கப்பட பிரமாணமாய் இருப்பதுபோல், இந்த பிரமை பரம்பரையும் அநாதியாய் இருப்பதாலும், வ்யவஹாரத்துக்கு ஏற்காததாய் இல்லாதிருத்தலாலும், தோஷமாகாதென்று சொல்ல



லாகாது. ப்ரம்மத்தில் ஜகத்தின் பிரமை இருக்கிறதென்பதே அப்ரமாணிகமானதால், அதை சித்தித்துக்கொள்ள கல்பனை செய்யப்படும் அனவஸ்தையுள்ள பிரமை பரம்பரை குருட்டு பரம்பரைப்போல் ஒப்புக்கொள்ள கூடாததே ஆகும். நாம் விரும்புவதை ஸாதித்துக் கொடுப்பதாய் ஆகாது. ஆதலால் இந்த கக்ஷிக்கு ஏற்படும் தோஷம் நீக்க முடியாதே. அப்படியேத்தான் சங்கராசாரியாரும் இப்பேர்ப்பட்ட நிர்மூலமான அனவஸ்தையுள்ள பிரமபரம்பரைக்கு தோஷம் இருக்கிறதென்பதை ஒப்புக்கொண்டிருக்கிறார். "அநாதித்வே அந்த பரம்பராந்யாயேன அப்ரதிஷ்டைவ அனவஸ்தா வ்யவஹாரவிலோபினீ ஸ்யாத் ந அபிப்ராயஸித்தி:" என்று (பிரம்மசூத்ர பாஷியம் 2—2—30ல்) ஆதலால் எமது மதத்தின்படி பிரமையே உண்டாவதில்லையாதலால் பிரமைக்கு விஷயமாய் இருத்தலாகிய மித்யாத்வம் ஜகத்துக்கு சித்திப்பதில்லை. இப்படியேத்தான் மிகுந்த தயவுடன் பரம சாதுவும் புத்திமானுமான பாமதீகாரர் நன்கு எடுத்துரைத்திருக்கிறார். அவர் சொல்லியிருப்பதாவது:—

"யுக்தம் ஹி புரோவர்த்தினி த்ரவ்யே த்ராகியஸி ஸாமான்ய ரூபேண ஆலோசிதே விசேஷ ரூபேண அக்ருஹீதே விசேஷாந்தர ஸமாரோபணம்। இஹது ப்ரகாசாத்மன: நிர்விசேஷ ஸாமான்யஸ்ய அபராதீன ப்ரகாசஸ்ய நா க்ருஹீதமஸ்தி கிஞ்சித்ரூபமிதிகஸ்ய விசேஷஸ்ய அக்ராஹே கிம் விசேஷாந்தரம் ஸமாரோப்யதாம்। தஸ்மாத் ப்ரம்மண: ஜீவபாவாரோபாஸம்பவாத் ஜீவோ ஜீவ: ப்ரம்ம சப்ரம மேதி தத்வமஸீதி ப்ரதீகோபதேச ஏவேதி ப்ராப்தம்"॥ என்று ஆக்ஷேபனை செய்துகொண்டு "நிரம்சஸ்யாபி அநாதி அநிர்வாச்ய அவித்யாதத் வாஸனாஸமாரோபித விவித ப்ரபஞ்சாத்மன: ஸாம்சஸ்யேவ கஸ்யசித் அம்சஸ்ய அக்ராஹணாத் விப்ரம இவ। பரமார்த்தஸ்து ந விப்ரமோ நாம கஸ்சித் நஸம்ஸாரோ நாம கிந்து ஸர்வமேதத் ஸர்வானுபபத்தி பாஜனத்வேன அநிர்வசனீயமிதி யுக்த முத்பச்யாம:" பிரமை உண்டாகவேண்டுமானால் அதிஷ்டானத்தில் ஆரோபிக்கப்படும் பொருளின் ஸாதிருச்யம், அதிஷ்டானத்தின் ஸாமான்ய தர்மம் விசேஷ தர்மம் இவைகள் எல்லாமே இருந்து, அது ஸாமான்ய ரூபத்தால் அறியப்பட்டு, விசேஷ ரூபத்தால் அறியப்படாமல் இருந்தால்தான் அந்த அதிஷ்டானத்தில் இதர விசேஷம் ஆரோபிக்கப்படுகிறது. (எப்படி எனில் ஆரோபிக்கப்படுவதான ஸர்ப்பம்போல் வளைந்திருத்தல் நீண்டிருத்தல் முதலான ஸாத்ருச்யம் என்ன, எதிரிலிருப்பதாகிய இதம் த்வரூபஸாமான்ய தர்மம் என்ன, ரஜ்ஜு த்வரூபமான விசேஷ தர்மம்

என்ன, இவைகள் இருந்து இதோ வென்ற சாமான்ய ரூபத்தால்மட்டில் அது தெரிந்துகொள்ளப்பட்டு, அதன்ன கயிற்றின் தன்மையால் தெரிந்துகொள்ளப்படாததால், கயிற்றில் வேறு ஒன்றான சர்பத்தின் தன்மை ஆரோபிக்கப்படுகிறது. இந்த பிரம்மம் பிரகாச ரூபமாய் ஸாமான்ய தர்மமோ விசேஷ தர்மமோ எந்த தர்மமுமில்லாததாய் இருப்பதால், இதை ஸாமான்ய ரூபத்தால் அறிவது என்பதும் விசேஷ தர்மத்தால் அறியாமல் இருப்பது என்பதும் பொருந்தாது. ஆரோபிக்கப்போகும் ஜகத்தின் ஸாதிருச்யமும் இல்லை. அதனால் பிரம்மத்தில் ஜீவபாவம் முதலான எதையும் ஆரோபணம் செய்யமுடியாது என்றால், பிரம்மமே ஜீவன் முதலான பிரமை உண்டாவதில்லை, ஆதலால் ஜீவன் ஜீவனேயாவான், பிரம்மம் பிரம்மமே யாகும். பிரம்மத்தில் ஜீவபாவம் ஆரோபணம் செய்யப்படுவதில்லையாதலால், தத்வமஸி என்னும் வாக்கியத்திற்கு ஜீவப்ரம்ம அபேதம் என்னும் அர்த்தம் சொல்லக்கூடாது. தேவதா விக்ரஹத்தில் பகவான் இருப்பதாய் நாம் சொல்வதுபோலத்தான், ஜீவனிடத்தில் பரமாத்மா இருப்பதாய் அந்த சுருதி சொல்லுகிறது என்று நாம் சொல்லவேண்டியதாய் ஏற்பட்டது. என்றிவ்வாறு பூர்வபக்ஷத்தை கல்பித்துக்கொண்டு பிரமை பொருந்துவதில்லையே என்னும் இந்த ஆக்ஷேபணைக்கு, அவர் இவ்வாறு பதில் கூறியிருக்கிறார். ஸாம்சமான அதாவது அம்சங்களுள்ளதான ஓர் அதிஷ்டானத்தில் சில அம்சங்களை (பாகங்களை) மட்டில் கிரஹிக்காமலிருந்தால், பிரமை உண்டாவதுபோல், பிரம்மம் நிரம்சமான (தர்மம் இன்னது தர்மி இன்னது என்றும் பாகுபாடு இல்லாத) தாகையால், பிரமைக்கு காரணமான சில அம்சங்கள் தெரிகிறது என்றும் சில அம்சங்கள் தெரிவதில்லை என்றும் இல்லாவிடினும், அநாதியானதும் அநிர்வாச்யமானதுமான அவித்யா அதன் வாசனைகளால் கல்பிதமாயுள்ள, பல வகை ஜகத் ஸ்வரூபனான் பரமாத்மாவின் கல்பிதமாகவுள்ள, ஓர் பாகத்தை கிரஹிக்காமல் இருப்பதால் பிரமை உண்டாவதாய் தோற்றம்தான் இருக்கிறது; ஆனால் உண்மையில் பிரமை என்பதே இல்லை. கர்த்ருத்வம் போக்த்ருத்வம் முதலான ஸம்ஸாரமும் இல்லை. பிரமையும் ஸம்ஸாரமும் இருப்பதாய் நாம் சொல்வோமாயின் அவைகளுக்கு த்வைதிகள் சொல்லும் எல்லா அனுபபத்திகளும் என்றால் தோஷங்களும் வந்துசேருகிறபடியால், ஜகத்தின் பிரமை எப்படி உண்டாயிற்றென்று எங்களுக்குச் சொல்ல வராமலிருப்பதே ஸரி என்று அறிகிறோம் என்று.

ஆதலால் இந்த அபிப்பிராயமே சங்கராசாரியாருக்கும் உண்டென்று பிரம்மசூத்திர பாஷ்யத்தில் 4-1-3ல் அறிவித்திருப்பதாவது,



“யத்யேவம் ப்ரதிபுத்தோவஸி நாஸ்தி கஸ்யசித் அப்ரபோத:” என்று. சங்கராசாரியாரைப்பார்த்து ஓர் சிஷ்யன், “இந்த அக்ஞானம் அதாவது ஸம்ஸாரம் யாருக்கு?” என்றான். அதற்கு ஆசாரியார் “உனக்குத்தான்” என்றார். பிறகு சிஷ்யன், “அஹம் ஈசுவர: நானே ஈசுவரன்” என்று சுருதியில் சொல்லியிருக்க, எனக்கு அக்ஞானம் என்பது எப்படி பொருந்தும்” என்று கேட்டான். அதற்கு சங்கராசாரியார் “உனக்கு இம்மாதிரி அறிவு இருக்கும் பக்ஷத்தில் யாருக்குமே அக்ஞானம் என்பது இல்லை” என்றார். இதனால் பிரமை என்பது உண்டாவதில்லை என்பதே சங்கராசாரியாருக்கும் ஸம்மதமானது என்று அறிவித்துள்ளார். கர்த்தாவும் இல்லாதிருப்பதால் ஜகத்தின் பிரமை உண்டாவதில்லை. ஜகத்தின் பிரமையில் கர்த்தா பிரம்மமாவது ஜீவனாவது இருக்கவேண்டும். ஜீவன் கர்த்தாவாய் இருக்கமுடியாது. ஏனெனில் எமது அத்வைதமதத்தில் பிரம்மத்தைத்தவிர வேறெதற்கும் ஸத்யத்வமில்லை. உண்மையாகவேண்டாமே, கல்பிதமாக அவன் இருக்கட்டுமே என்றாலோ இனி முன்னாடி வரப்போகிறவைகளுக்கு அவனுக்கு கர்த்ருத்வம் இருக்காது. இவ்வாறே அதிஷ்டானத்திற்கும் கர்த்தா ஏற்படுவதில்லையாதலால் ஜகத்து கல்பிக்கப்பட்டிருப்பது என்பது ஏற்படுவதில்லை. ஆதலால் இந்த காரணங்களைக்கொண்டு ஜகத் கல்பிக்கப்பட்டது என்னும் ஜகத்தின் மித்யாத்வம் அதாவது பிரபஞ்சம் பொய் என்பது “இந்த ஸர்வம் கல்விதம் பிரம்ம” என்னும் சுருதியால் சித்திப்பதில்லை.

(தொடரும்.)

ஸ்ரீ மத்வாசாரியார் இயற்றிய

## ஸ்ரீமகாபாரத தாத்பர்ய நிர்ணயம்.

(ஸ்ரீம. வே. பாகவதரங்கனாதாசாரியாரின் மொழி பெயர்ப்பு)

### முப்பத்தி ஒன்றும் அத்யாயம்.

[முன் 281ம் பக்கம் தொடர்ச்சி]

ஸமஸ்தமான ஸத்கர்மங்களையும் விஷ்ணுவிடம் ஸமர்ப்பணம் செய்து, கண்ணீர்விடும் பாண்டவர்களிடமிருந்தும் மற்ற சொந்த ஜனங்களிடமிருந்தும் வனவாசம் செய்ய அனுமதிபெற்று,

வீட்டைவிட்டு புறப்பட்டு, உத்தம புத்தியுள்ள திருதராஷ்டிரன் தன் பட்டிணத்து ஜனங்களைப்பார்த்து இவ்வாறு சொன்னார். மகாத்மர்களான என் முன்னோர்களாயுள்ள அரசர்களால் நீங்கள் தர்மமார்க்கத்தில் சம்ரக்ஷிக்கப்பட்டீர்கள். சாதுக்களே! மகா கருணாசாலிகளான நீங்கள் என்னிடமிருக்கும் உத்தம சிநேகத்தால் நான் உங்களை சம்ரக்ஷிக்கவில்லை, என்று அசட்டையாகவும் சொல்லவில்லை. உங்கள் ஆசிரயத்தைக்கொண்டு நான் யக்ஞங்களைச் செய்தேன். வாபீகூபதடாகாதிகளை நிர்மாணம் செய்தேன். என் பிள்ளையான துரியோதனன் பாப புத்தியுள்ளவன். எல்லா க்ஷத்திரியர்களையும் நாசம் செய்தவன். எல்லோரிடமும் மிகவும் அன்புள்ளவன் மூடன். பெரியோர்களின் ஆக்ஞையை மீறியவன். அண்ணன் தம்பிமார்களின் சிநேகத்தை விட்டு மகாத்மர்களான பாண்டவர்களிடம் மற்றொரு அசுரன் செய்யாமல் இருக்கும் மகத்தான த்வேஷ காரியத்தைச் செய்தான். குச்சிதமான புத்தியுள்ள துரியோதனன் ஸ்ரீகிருஷ்ணமூர்த்திக்கு விரோதமான அநேக காரியங்களைச் செய்தான். மூட்டாளான துரியோதனன் உங்கள் விஷயத்திலேயும் அதிகம் தீங்குகளைச் செய்தான். துரியோதனனின் எல்லா தம்பிகளும் அவனுடைய துஷ்ட சுபாவத்தை பின்பற்றியே நடந்தனர். அவர்கள் எல்லோரும் தம் பிள்ளைகள் மந்திரிகள் பந்துக்களுடன் சேர்ந்து தாம் செய்த பாவத்தால் தான் கொல்லப்பட்டுபோயினர். வயது முதிர்ந்தவனும். புத்ர சோகம் வியாபித்தவனுமான நான் பிள்ளைகளின் சேர்க்கையால் ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியுடன் சேர்ந்த பாண்டவர்களின் விஷயத்தில் செய்த பாபத்தையும், நான் செய்த அமங்களமான காரியத்தையும் தபஸ் செய்து நிவிருத்தி செய்து கொள்ளவேண்டுமென்று எத்தனப்பட்டிருக்கிறேன். மித்ரர்களிடம் பிரியம்கொண்ட ஜனங்களே! கருணைகொண்டு எனக்கு இந்த விஷயத்தில் அநுமதி அளியுங்கள். மகாத்மர்களான பாண்டவர்களிடம் நீங்கள் சிநேகம் கொண்டிருந்தபோதிலும் என் ப்ரீதிக்காகவும் இன்னமும் எப்பொழுதும் அவர்களிடம் இடைவிடாத சிநேகத்தை வைக்கவேண்டும். பாண்டவர்கள் தான் எனக்கு ஸத்புத்திரர்கள். இஹலோகத்திலேயும், பரலோகத்தி



லேயும் எனக்கு சௌக்யத்தை அளிப்பவர்கள். என்றிவ்வாறு திருதராஷ்டிரராஜன் சொல்லவும், பட்டணத்து ஜனங்கள் மிகுந்த துக்கமுள்ளவர்களாய் கண்ணீர் விட்டுக்கொண்டிருந்த திருதராஷ்டிரனின் குணங்களை உரக்கச்சொல்லிக்கொண்டு வெகு சிரமப்பட்டு அனுமதியைக் கொடுத்தனர். ஜனங்களிடமிருந்து அனுமதி பெற்று திருதராஷ்டிரன் வெகு தூரம் பின் தொடர்ந்துவர வனத்திற்கு பிரயாணமானார். காந்தாரியுடன்கூடிய திருதராஷ்டிரனின் பின்னுடி ஸஞ்சயனும், விதுரனும் புறப்பட்டார்கள். குந்தி தேவியும் வனவாசம் செய்ய நிச்சயம் செய்து திருதராஷ்டிரனின் பின்னுடி புறப்பட்டாள். தம்முடைய தாய் வனம் செல்கிறாளே என்று மிகுந்த துக்கமடைந்த பாண்டவர்கள் பத்னிமார்களுடன் சேர்ந்து வனம் செல்ல வேண்டாமென்று தடுத்தும், குந்தி பாண்டவர்களை மிகவும் சிரமப்பட்டு நிறுத்தி திருதராஷ்டிரனின் பின்னுடி பிரயாணம் செய்தாள். காந்தாரியுடன் சேர்ந்த திருதராஷ்டிரன் குந்தி தேவி, விதுரன் ஸஞ்ஜயன் இவர்களால் வழி காட்டப்பட்டவராய் குருக்ஷேத்திரம் போனார். தேவர்களால் பூஜிக்கப்பெற்று ஜகத்குருவான ஸ்ரீ வேதவியாஸரின் பதரிகாசிரமத்தை க்ரமமாய்ப் போய்ச்சேர்ந்தார்.

அங்கு பிரம்மாவின் துடையினின்றும் பிறந்தவரான நாரதர் வந்து, காந்தாரி தேவியுடன் கூடிய திருதராஷ்டிரனுக்கு மூன்று வருஷம் கழித்து அவருடைய கந்தர்வலோகம் கிடைக்குமென்று சொன்னார். அந்த வார்த்தையில் மிகவும் நம்பிக்கையுடன் திருதராஷ்டிரராஜன் ஸ்ரீவேதவியாஸர் உபதேசித்த உத்தம தபஸ்லை செய்தார். விதுரன், காந்தாரிதேவி, குந்திதேவி, ஸஞ்ஜயன் இவர்களுடன் சேர்ந்து திருதராஷ்டிரன் ப்ரபுவான ஸ்ரீஹரியை தபஸ்ஸால் ஆராதித்து வரும்பொழுது, பாண்டவர்கள் தம் பத்னிமார்கள் பந்துக்கள் வேலையாட்களுடன் இவர்களைக்காண இந்த ஆசிரமத்துக்கு வந்தனர். இந்த வனத்தில் விதுரன் தர்மபுத்ரருடன் ஐக்யத்தை அடைந்தான். பிறகு பாண்டவர்கள், காந்தாரி ஸஞ்ஜயன், இவர்களுடன் சேர்ந்திருக்கும் திருதராஷ்டிரனையும் குந்தியையும் ஸேவித்திருக்கும்பொழுது அபரிமிதமான சக்தி என்ன, தேஜஸ் என்ன, அற்புதமான க்ஞானம் என்ன,

அற்புதமான ஐசுவரியமென்ன, ஆனந்தமென்ன, இவைகளே சொரூபமாகவுள்ள விஷ்ணுவான ஸ்ரீவேதவியாஸர் அங்கு தோன்றினார். ஸ்ரீ வேதவியாஸரைக்கண்டு எல்லோரும் மேலான பக்தியுடன் பூஜை செய்தனர். அவர்களால் பூஜையைப்பெற்று அங்கேயே உட்கார்ந்துகொண்டு இவ்வாறு சொன்னார். எவரெவர்களுக்கு என்னென்ன விருப்பமோ அவைகளை அவரவர் சொல்லட்டும். அவரவர்களுக்கு அந்தந்த இஷ்டத்தை நான் தருகிறேன் என்றார். அப்பொழுது பாண்டவர்கள் பத்னிமார்களுடன் சேர்ந்து தங்களுக்கு பகவானிடம் இருந்துவரும் பக்தி விருத்தியடைய வேண்டுமென்று கேட்டுக்கொண்டனர். குந்தி, தான் சூரிய புத்ரனை கர்ணனை உண்டாக்கியதாலும் கொல்லச் செய்ததாலும் ஏற்பட்ட பாபம் நிவிருத்தியடைய வேண்டுமென்று கேட்டுக்கொண்டாள். பாண்டவர்களுக்கும் குந்திக்கும் இப்படியே ஆகட்டும் என்று ஸ்ரீவேதவியாஸர் வரனைக்கொடுக்கவும், திருதராஷ்டிரன் காந்தாரியுடன் யோசித்து, யுத்தத்தில் இறந்துபோன ஜாடா ஜனங்களையும் தான் பார்க்கவேண்டுமென்று ஈசுவரனை ஸ்ரீவேதவியாஸரைப் பிரார்த்தித்தான். பிறகு எல்லோருக்கும் ஸ்வாமியும் ஸத்யவதியின் குமாருமான ஸ்ரீவேதவியாஸரின் ஆக்ஞையின்பேரில் யுத்தத்தில் இறந்துபோன எல்லோரும் ஸ்வர்க்கலோகத்தினின்றும் வந்துசேர்ந்தனர். அந்தக்ஷணமே ஸ்ரீவேதவியாஸர் திருதராஷ்டிரனுக்கு திவ்விய சக்ஷுஸ்ஸை அளித்தார். பதினெட்டு அக்ஷௌஹிணீ சைனியத்தார்களும் அன்று இரவு ஸ்ரீவேதவியாஸரின் ஆக்ஞையின்பேரில் முன்னே இருந்தமாதிரியே அவரவர்களின் பத்னிமார்களுடன் வாசம் செய்தனர். ஸ்ரீவேதவியாசர் அருளிய இந்த அதியாச்சர்யமான காரியத்தைப் பார்த்து பத்னிகளுடன்கூடிய பாண்டவர்களும் திருதராஷ்டிரனும் மிகுந்த சந்தோஷமடைந்தனர். பிறகு ஸ்ரீவேதவியாஸரின் ஆக்ஞையின் பேரில் விதவையான உத்தராதேவியைத்தவிர மற்ற எல்லா விதவைகளும் அவரவர்களின் பர்த்தாக்களுடன் சேர்ந்து ஸ்வர்க்கலோகம் சென்றனர். இந்த பரம ஆச்சரியமான கதையை பரீக்ஷித்ராஜனின் குமாரனை ஜனமேஜயராஜன் ஸ்ரீவேதவியாஸரின் சிஷ்யரான வைசம்பாயனமுனிவரால் கேட்டு தன் தந்தையான



பரீக்ஷித்தைப் பார்க்கவேண்டுமென்று ஆசைப்பட்டு, அந்த ஸர்ப்பஸத்ர யாகத்தின் மண்டபத்தில் உட்கார்ந்திருந்த ஸ்ரீவேதவியாஸரைப் பிரார்த்தித்துக் கேட்கவும், எண்ணமுடியாத சாமர்த்தியமுள்ள ஸ்ரீவேதவியாஸர் அக்ஷணமே வைகுண்டத்திலிருந்து அங்கு வசித்துவந்த பரீக்ஷித்ராஜனை வரவழைத்தார். ஸ்ரீவேதவியாஸரால் வரவழைக்கப்பட்ட தன் தந்தையான பரீக்ஷித்ராஜனை ஜனமேஜயன் நேரில் கண்டு மகா சந்தோஷமடைந்தான். பிரம்மாதிகளால் நமஸ்காரம் செய்யப்படுபவரான ஸ்ரீவேதவியாஸரை மறுபடியும் பூஜித்து தன்னை மன்னிக்கும்படி வேண்டிக்கொண்டான். ஸ்ரீவேதவியாஸர் இயற்றியிருக்கும் மகாபாரதத்தில் தன் சொந்த ஜனங்களுடன் மறுபடியும் மிகுந்த விசுவாசமடைந்தான்.

பிறகு பாண்டவர்கள் மறுபடியும் ஹஸ்தினபுரத்துக்கு வந்து தர்ம மார்க்கமாய் பூமியை சம்ரக்ஷித்துக்கொண்டு ஜகத் ரக்ஷகனை வாஸுதேவரிடம் மனோ நிலையை பெற்றவர்களாய், ஆசையை விட்டவர்களாய் ஸாதுக்களால் சேவிக்கத்தகுந்தவைகளான போகங்களை அனுபவித்தனர். மூன்று வருஷம் கழிந்தபின் திருதராஷ்டிரன் மூன்று அக்னிகளையும் ஆத்மாரோபணம் செய்துகொண்டார் என்றும், அவரால் விடப்பட்டதான அந்த ஆஹவனீயம் கார்ஹபத்யம் தக்ஷிண என்னும் மூன்று அக்னிகள் அவர் இருந்த வனத்தை தகித்துக்கொண்டு வரும்பொழுது, சுவாச பந்தனத்திற்காக வாயில் பந்து அடைத்துக்கொண்டு தியானம் செய்துகொண்டிருந்த அந்த திருதராஷ்டிரன் காந்தாரி தேவியுடனும், குந்தி தேவியுடனும் அந்த அக்னிகளால் சரீரம் கொளுத்தப்பட்டு போயினர் என்றும் பாண்டவர்கள் செய்தி கேட்டனர். தங்கள் பெரிய அப்பாவான திருதராஷ்டிர ராஜன் இறந்துபோய் ஸ்வர்க்கத்தில் இருப்பதாகவும், அந்த ஸ்வர்க்கத்திலேயே தன் தாயான குந்தி, தந்தையான பாண்டு ராஜாவுடன் சேர்ந்து பூஜிதளாய் இருந்துவருவதாயும் நாரதரால் கேட்டு, துக்கமடைந்து, அவர்களுக்கு சரமக்ரியைகளை செய்தனர். அந்த திருதராஷ்டிரன் முதலியோர் விஷ்ணு பக்தியாலும், பரிசுத்தமான கர்மாக்களாலும் ஞானத்தாலும் மரண காலத்தில் நாராயணனை ஸ்மரித்தவர்களாய், ஸத்புத்ரர்களான பாண்டவர்களால் விதிப்படி செய்யப்

பட்ட ஔர்த்வ தேஹிக கிரியைகளால் அழிவற்ற ஆனந்தவிருத்தியை அவர்கள் சத்கதியை அடைய அருகர்களானதால் அடையப்பெற்றனர். கவல்கணனின் மகனான சஞ்ஜயன் ஸ்ரீ வேதவியாஸரின் சமீபம் போய்ச்சேர்ந்து, அவரை மறுபடியும் மகா ஸேவை செய்து, அவனுடைய சொந்தமான தும்புரு என்னும் கந்தர்வனின் லோகம் போய்ச் சேர்ந்தான். பாண்டவர்கள் ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி வைகுண்டம் செல்வதை எதிர்பார்த்துக்கொண்டு பூமியை பரிபாலித்துவந்தனர். மகாத்மாக்களும் தர்மார்த்த மோக்ஷமாகிய நான்கு வகை புருஷார்த்தங்களால் பரிபூர்ணர்களும் நாராயணனின் சரண ஸ்மரணை விலகாதவர்களும் பின்னால் சொன்ன ரீதியில் ஸமஸ்த பூமண்டலத்தையும் ஸம்ரக்ஷித்துவருபவர்களும் மகான்களுமான பாண்டவர்களுக்கு திருதராஷ்டிரன் சரீரம் விட்டபின் பதினெட்டு வருஷம் கழிந்தது.

ஸ்ரீமத் ஆனந்த தீர்த்த பகவத் பாதாள் இயற்றிய
ஸ்ரீ மகாபாரத தாத்பர்ய நிர்ணயத்தில்
முப்பத்தி ஒன்றாவது அத்யாயம் ஸம்பூர்ணம்.
ஸ்ரீ கிருஷ்ணார்ப்பணமஸ்து.

---

# செய்தித்திரட்டு.

---

சேலம் ஜில்லா ஆத்தூர் தாலுக்கா எத்தாப்பூர் கிராமத்தில் நாளது மீ 14உ முதற்கொண்டு 19உ வரையில் மிகுந்த ஆரவாரத்துடன் ஸ்ரீமான் சேங்காலிபுரம் நாராயண தீக்ஷிதர்வாளால் நடத்தப்படும் பிரத்யக்ஷ பசு வதையைக் கொண்ட சர்வதோமுக யாகம் சாஸ்திரசம்மதியற்றதென்றும், சாஸ்திர விரோதமென்றும், இதனால் யாதொரு புண்யமும் ஏற்படமாட்டாததோடு, மகா பாபங்கள் உண்டாகி நரகாதி அநர்த்தங்களும் உண்டாகக் காரணமாகுமென்றும், அஹிம்சா பரமோ தர்ம: என்று இந்து மதம் உத்கோஷித்துக்கொண்டிருக்க யாகத்தில் ஆடுகளைக் கொல்வது ஹிம்சையாகாதென்று சொல்வது கலியுகத்தில் ஏற்காதது என்றும், இதற்கு சுருதி ஸ்ம்ருதி புராணங்களில் ஏராளமான ஆதாரங்கள் இருக்கின்றனவென்றும், முக்ய இந்து தலைவரான பண்டித மதன் மோகன் மாளவியாவும் இப்பேர்ப்பட்ட யாகத்தை ஒப்புக்கொள்ளவில்லை என்றும், இந்த ஜீவகாருண்யமற்ற யாகத்தை ஒரு சிலர் பிராம்மணர்கள் நடத்துவதைக்கண்டு பிராம்மண சமூகத்திற்கே அவமதிப்பை அவப்பெயர் ஏற்படுகிறதென்றும்; அதனால் இப்பேர்ப்பட்ட பிரத்யக்ஷ பசுவதையைக்கொண்ட யாகத்தை கண்டிக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறதென்றும், சாஸ்திர விஷயமாய் விவாதம் செய்ய வருப்பக்ஷத்தில் சரியான சாஸ்திர நியாயங்களையும் ஆதாரங்களையும் காட்ட சித்தமாய் இருக்கின்றனரென்றும், ஆத்தூர் வாசிகளில் பிரமுகர்களான ஸ்ரீமான்கள் ஸம்ஸ்கிருத வித்வான் S. ஆனந்த தீர்த்தாசாரியார், வக்கீல் S. பூவராக மூர்த்தி ஆசாரியார், வக்கீல் N. G. நரசிங்கராவ், S. வெங்கடநரசு, K. அனந்தராமன், கண்ட்ராக்டர் D. கிருஷ்ண ராவ், A. D. பட்டாபிராம ராவ், ஆராச்சி K. நாராயண ராவ் முதலியவர்கள் கையெழுத்திட்டு துண்டுப் பிரகாரங்கள் மூலமாய் எங்கும் பிரசித்தம் செய்திருப்பதை அறிவிக்க ஆனந்தம் கொள்கிறோம்.

[குறிப்பு—இது சம்பந்தமாய் எமது அபிப்பிராயத்தை வேறிடத்தில் பிரசுரித்திருக்கிறோம். ப—ர்]

ஸ்ரீரங்கம் ஸ்ரீமன் மத்வஸித்தாந்த ஸபையின் 1938ம் வருஷத்தின் முதல் கால்பாக வருஷத்தின் வரவு சிலவு கணக்கு சென்ற இதழில் 282ம் பக்கத்தில் பிரசுரிக்கப்பட்டிருப்பதில் அச்சுப்பிழை ஏற்பட்டிருப்பதாகவும், வரவு ரூ. 66—8—3ல் மொத்தச் சிலவு ரூ 42—1—11 என்றும் கையிருப்பு ரூ. 24—6—4 என்றும் நாளது ஏப்ரல் மாதத்திய வரவு ரூ. 28-6-4; சிலவு ரூ. 6-0-9; இருப்பு ரூ. 22-5-7 என்றும் அறிவிக்கப்படுகிறது.

வழக்கப்படி இந்நகர் ஸ்ரீ சாரங்கபாணி ஸ்வாமியின் பிரம்மோற்சவமாகிய சைத்ரோஸ்வம் இரண்டாவது திருநாளாகிய நாளது மாதம் 5—5—1938 குரு வாரத்தன்று காலையிலேயே ஸ்ரீ சாரங்கபாணி ஸ்வாமி ஸ்ரீ சக்ரபாணி ஸ்வாமியுடன் ஸ்ரீ விஜயீந்திர ஸ்வாமிகளின் மடத்து கட்டிடங்களுக்குச் சேர்ந்ததான தோட்டகுடி ராயர் சத்திரத்தின் வெளி மண்டபத்தில் எழுந்தருளி இரண்டு ஸ்வாமிகளும் நிர்வாபரண பூஷிதர்களாய் வீற்றிருக்கவும், கோவில் மகா நைவேத்தியமாவதற்குமுன் ஸ்ரீ விஜயீந்திர ஸ்வாமி

களின் பூஜகர் ஸ்ரீமான் புருஷோத்தமாசாரியார் ஸ்ரீமடத்து விக்ரஹாதிகளும் ஸாலக்ராமங்களும் கொண்ட ஸ்வாமி பெட்டியை ஸ்ரீ சாரங்கபாணி ஸ்வாமியின் பக்கத்தில் தென்புரத்தில் அடுக்கு மனையில் வைத்து, எல்லோருக்கும் ஏககாலத்தில் தாமே தூபார்த்தி ஏகார்த்தி செய்து, ஸ்ரீ பகவத்பாதாளின் த்வாதச ஸ்தோத்திரம் சொல்லி, ஸ்ரீமடத்தில் தயாரிக்கப்பட்டிருந்த மிருஷ்டான்னத்தை நிவேதனம் செய்து, பிறகு பஞ்சார்த்தி கர்பூரார்த்திகளால் மாமூலுக்கு விரோதமன்னியில் யாதொரு சச்சரவின்றி ஆராதனை நடத்தியதும், பிறகு வழக்கப்படி ஸ்ரீ விஜயீந்திர ஸ்வாமிகளுக்கு ஹஸ்தோதகமாகி சுமார் 300 பிராம்மணர்களுக்கு சரியான காலத்தில் போஜனமானதும் சந்தோஷிக்கத்தகுந்ததேயாகும்.

## வரவு.

### ஸ்ரீ ராகவேந்திர ஸ்வாமிகளின் சித்திர வர்ணப்படம்.

சுமார் 19 அங்குலம் நீளமும் 15 அங்குலம் அகலமும் உள்ள பம்பாய் லட்சுமி அச்சு யந்திர சாலையில் உயர்ந்த ஆர்ட் பேப்பரில் பலவகை வர்ணங்களுடன் பதிப்பிக்கப்பட்டதான ஸ்ரீ ராகவேந்திர ஸ்வாமிகளின் சித்திர வர்ணப்படமொன்று வரப்பெற்றோம். அசுவத்த விருக்ஷத்தினடியில் உட்கார்ந்து ஆன்ஹிகங்களை முடித்து பகவதர்ப்பணம் செய்யும் சமயம், கதாபாணியாய் வாயு பகவானின் ப்ரதமாவதாரமான ஸ்ரீ ஹனுமார் திவ்விய சேர்வை சாதிக்கும் காக்ஷி கண்ணைக் கவரத்தக்கதாய் இருக்கிறது. தற்போது பிரசாரத்தில் இருக்கும் ஸ்ரீ ராகவேந்திர ஸ்வாமிகளின் படத்தில் ஸ்ரீ ராகவேந்திரரின் திருமேனி கருப்பாய் இருப்பது போல் இப்படத்தில் காட்டப்படாமல், அவருடைய தியான சுலோகத்தில் "தப்தகாஞ்சன சங்காசம்" என்றும் "நிஷ்டப்தஹாடக நிபாமல திவ்யகாந்தி" என்றும் கண்டிருப்பதை அனுசரித்து புடம் போட்ட ஸுவர்ண வர்ண சரீரமுள்ளவராய் நடுத்தர வயதுள்ளவராய் சுந்தர சொரூபராய் காட்டப்பட்டிருப்பது பக்த கோடிகளால் கொண்டாடத்தகுந்ததேயாகும். வெகு ப்ராசீனரான அய்ஜீ சுவாமிகளின் வம்சத்தார்களில் இருந்த ப்ராசீன படத்தையே ஆதாரமாகக்கொண்டு இப்படம் தயாரிக்கப்பட்டிருக்கிற



தென்றும், இதன் கிரயத்தொகையைக்கொண்டு மதுரையில் ஸ்ரீ ராகவேந்திர நிலயமொன்றை ஸ்தாபிக்க உத்தேசித்திருக்கிறதென்றும் ஏராளமான பணச்செலவுடனும் மிகுந்த தேக சிரமத்துடனும் தயாரான இந்த மகா காரியத்தில் மாத்வ மகா ஜனங்கள் கலந்து பூரா ஆதரவையும் காட்ட வேண்டப்படுகிறார்களென்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது. இதன் விலை காபி 1க்கு அணா பன்னிரண்டு. தபாற்கூலி பிரத்யேகம். காபிகள் கிடைக்குமிடம். 1. S. லக்ஷ்மி நாராயண ராவ், 54, கோபால கோத்தன் தெரு, மதுரை. 2. T. V. S. மாதவராவ், 80, மேல ஆவணி வீதி, மதுரை.

---

## ஸ்மார்த்த பிராம்மணர்களின் மாமிஸ பக்ஷணம்.

இத்தலையங்கத்தைக் கண்டதும் மிகுந்த ஆசார சீலர்களான ஸ்மார்த்த வகுப்பு பிராம்மணர்கள் மாத்வமித்திரனிடம் ஆத்திரம் கொள்வார்கள்தான். ஆனால் ஓர் அகாரியத்தைச் செய்யும்பொழுது அது சகஜமாகவே தோன்றும். இதரர்கள் அதையே வெளியே எடுத்துச்சொல்லும்பொழுது கர்ண கடூரமாகவே இருக்கும். ஆட்டை அடித்து அதன் மாம்ஸத்தை புஜிப்பது பிராம்மணர்களுக்கேற்றதல்லவென்பது ஸாமானியனுக்கும் தெரிந்ததே. இது வேதத்தில் சொல்லப்பட்டிருக்கிறது என்று சாக்குபோக்கு சொல்லி, யக்ஞமென்ற விலையிலா மாணிக்கத்தின் பெயரைக்கொடுத்து, இந்த பயங்கரமான பிசாசகிருத்யம் பகிரங்கமாய் சிறிதும் அச்சமின்றி ஒரு சிலரால் ஆங்காங்கு அடிக்கடி நடத்தப்பட்டுவருவதும், ஆங்காங்கு கௌரவம் வாய்ந்த ஆஸ்திக புத்தியுள்ள பிராம்மண கனவான்கள் அதை ஆதரித்து வருவதும் பொதுவாய் பிராம்மண சமூகத்திற்கே மகா துக்கத்தையும், பெருத்த அவமானத்தையும் தரக்கூடியதாய் இருக்கிறது. ஒன்றிரண்டு வருஷங்களுக்கு முன்பு பிராம்மணர்களின் கசாப்புக்கடை என்று கொட்டை எழுத்துக்களில் விளம்பரத்துடன் இந்த யக்ஞத்தின் போட்டோக்கள் பல பத்திரிகைகளில் வெளியானதுடன் கடைகளில் விற்கப்பட்டுவந்தது எல்லோர் ஞாபகத்திலும் இருக்கும். ஆட்டை அடிப்பதும் மாமிஸத்தை புஜிப்பதும் எந்த இடத்திலேயும் சரியே எந்த காலத்திலேயும் சரியே

பிராம்மணர்களுக்கு தகாது என்றும் நரகாதி அனர்த்தங்களுக்கு காரணமென்றும் பொதுவாய் பிராம்மணர்கள் யாவரும் அறிந்திருக்கும் பக்ஷத்தில், ஒவ்வொரு ஜில்லாவாய் சுற்றிவரும் ஆடு அடித்து மாமிஸத்தை புஜிக்கும் அப்யாஸ வித்தையை சமத்காரமாய் காட்டி பார்ப்போர் அனைவரும் திடுக்கிடும்படி செய்துவரும் இத்தகைய கொடிய யக்ஞக் கம்பெனியாரின் தொழிலுக்கு ஆதரவு ஏற்படாமல் கம்பெனியே கலைக்க நேரிடும். சுமார் 700 வருஷகாலமாகவே மாத்வ வகுப்பு பிராம்மணர்கள் இவ்வகை யக்ஞம் அகாரியமென்று கண்டித்துவருகிறார்களாயினும், இதர வகுப்பு பிராம்மணர்களான ஸ்மார்த்தர்களிலேயும் சரியே ஸ்ரீவைஷ்ணவர்களிலேயும் சரியே எண்ணிறைந்த மேதாவிகள் கிரந்தங்கள் மூலமாகவே இவ்வகை யக்ஞம் அகாரியமென்று கண்டித்திருக்கின்றனராயினும், பொதுவாய் பிராம்மண சமூகத்தார்களில் இவ்விஷயம் பிரசாரமடையாமல் இருந்துவருவது பிராம்மண சமூகத்தாரின் தௌர்பாக்யம்தான். இதைபகிரங்கமாய் அறிவிக்க சேலம் ஜில்லா ஆத்தூர் வாசிகளான மாத்வ ப்ரமுகர்கள் முன்னணியில் நின்று துண்டு பிரசுரங்களை வெளியிட்டதைக் குறித்து மிகவும் பாராட்டுகிறோம்.

யக்ஞத்தில் கொல்லப்படும் ஆட்டுக்கு ஸ்வர்க்கம் வந்து, அது பின்பு சுகமே அடைவதால் யக்ஞத்தில் செய்யப்படும் ஹிம்சை ஹிம்சையாகாதென்றும், ஆட்டை அடிப்பதும் அதன் மாமிஸத்தை புஜிப்பதும் வேதத்தில் விதிக்கப்பட்டிருக்கிறதென்றும், இத்தகையான பசுவதையைக்கொண்ட யக்ஞத்தை நடத்துவதுதான் பிராம்மணர்களின் கடமை என்றும் இத்தகைய யக்ஞத்தை தரிசிப்பதும்கூட மகா பலமென்றும் இதனால் யக்ஞமூர்த்தியின் அனுக்ரம் ஏற்படுமென்றும் இவர்கள் கூறி பிரசாரம் செய்து இதற்கு ஆதாரங்களென்று பல மந்திரங்களை உரையாடுகின்றனர்.

''மாஹிம்ஸ்யாத் ஸர்வா பூதானி'' என்று ஜீவஹிம்சையை அறவே ஒழிக்க போதிக்கும் புனிதமான வேதம் ஸமஸ்த பாபங்களையும் போக்கக்கூடியதென்று கருதப்பட்டிருக்கும் மேலான ஸத்கர்மாவாகிய யக்ஞத்தில் மட்டில் பீஜமர்த்தனம் முதலான சித்ரவதையால் ஆட்டைக் கொல்வதையும், அதன் மாமிஸத்தை புஜிப்பதையும் உண்மையாக வற்வற்புறுத்தியிருக்கக்கூடுமா என்று யாவரும் சம்சயப்படலாம். இந்த சர்தர்ப்பத்தில் இத்தொழில் செய்து லாபமடையக்கருதும் இக்கொடியவர்களின் அர்த்தத்தை காதில் வாங்காமல் வேத வித்துக்களின் கூற்றை ஏற்பதுதான் விவேகிகளின் கடமை. (தொடரும்).



தயார் ! விற்பனைக்கு தயார் !!

# மாத்வ ஸ்திரீகளின் ஸம்பிரதாய ஜபமந்த்ர ஸ்தோத்திரம்.

இதுவரை யாரும் எந்த பாஷையிலும் இம்மாதிரியான நூலை வெளியாக்கினதில்லை. தமிழ் படிக்கத்தெரிந்த எல்லா மாத்வ ஸ்திரீகளுக்குமே உபயோகப்படும்படி எல்லா மந்த்ர ஸ்தோத்திரங்களும் தமிழ் எழுத்திலேயே பதிப்பிக்கப்பட்டிருக்கின்றன. இவைகளின் பொருளும் அறியப்படுவதற்கு அனுகூலமாக ஸம்ஸ்கிருத பாஷையிலுள்ள மந்த்ரஸ்தோத்திரங்களுக்கு அர்த்தமும், கன்னட பாஷையிலுள்ள ஸ்தோத்திரங்களுக்கு குறிப்பும், எளிய தமிழில் எழுதி சேர்க்கப்பட்டிருக்கிறது. ஸுமங்கலிகளுக்கு வழங்கப்படும் மொரதானம் முதலியவைகளில் மஞ்சள், குங்குமம், சீப்பு, கண்ணாடி, முதலான ஸௌபாக்ய திரவியங்கள் கொடுக்கப்படுவது போல், ஐஹிக ஆமுஷ்மிக ஸௌபாக்யத்திற்கு காரணமான மாத்வ ஸ்திரீகளின் ஆசார அனுஷ்டானத்தை நிலைநிறுத்தக்கூடிய இச்சிறு நூலையும் சேர்த்து தானம் செய்து பிரசாரம் செய்வது பகவத் ப்ரீதியாகுமென்பதில் ஆக்ஷேபனை இல்லை. இப்புத்தகத்தில் வெளிவந்திருக்கும் விஷயங்களாவன:—

## I ஜபமந்த்ரம்.

1. ஸங்கல்பம். 2. ஆஸனமந்த்ரம். 3. குரு மந்த்ரம். 4. பாப புருஷ விஸர்ஜனம். 5. க்ருஷ்ணமந்த்ர ஜபம். 6. பகவத் அர்ப்பணம்.

## II ஸம்பிரதாய மந்த்ரஸ்தோத்திரங்கள்.

| | |
|---|---|
| 1 உத்தானஸ்தோத்திரம் ஸ. | 11 ஹளதிஸ்தோத்திரம் க. |
| 2 துளஸிஸ்தோத்திரம் ஸ. | 12 குங்குமஸ்தோத்திரம் க. |
| 3 காவேரிஸ்தோத்திரம் க. | 13 ஆசமனஸ்தோத்திரம் க. |
| 4 கங்காஸ்தோத்திரம் க. | 14 பூஸ்தோத்திரம் க. |
| 5 ஸ்நான ஆக்ஞாஸ்தோ. க. | 15 ஹம்ஸ மந்த்ரஸ்தோத்திரம் க. |
| 6 ஸ்நானமந்த்ரம் ஸ. | 16 தீபஸ்தோத்திரம் க. |
| 7 தீரஸ்தோத்திரம் க. | 17 பரிமார்ஜனஸ்தோத்திரம் க. |
| 8 வாயுஸ்துதி க. | 18 மானஸபூஜை க. |
| 9 நாமஸ்தோத்திரம் க. | 19 ப்ரதக்ஷிண மந்த்ரம் ஸ. |
| 10 கதாநாராயணஸ்தோ. க. | 20 ப்ரதக்ஷிணஸ்தோத்திரம் க. |

21 நமஸ்கார மந்த்ரம் ஸ.
22 நமஸ்காரஸ்தோத்திரம் க.
23 மங்களார்த்தி க்ரஹண மந்த்ரம் ஸ.
24 தீர்த்தக்ரஹண மந்த்ரம் ஸ.
25 அங்காரதாரணமந்த்ரம் ஸ.
26 பாகவத கதாஸாரம் க.
27 ஸம்க்ஷேப பாகவதம் ஸ.
28 ஸம்க்ஷேப பாரதம் ஸ.
29. ஸம்க்ஷேப ராமாயணம் ஸ.
30 குரு வந்தனம் ஸ. இதில் ஸ்ரீ மத்வாசாரியார், ஸ்ரீ ஜய தீர்த்தர், ஸ்ரீவியாஸராஜஸ்வாமிகள், ஸ்ரீ விஜயீந்திரஸ்வாமிகள், ஸ்ரீராகவேந்த்ரஸ்வாமிகள், ஸ்ரீ வாதிராஜஸ்வாமிகள், ஸ்ரீ ரகூத்தமஸ்வாமிகள், ஸ்ரீபுரந்தரதாஸர், இவர்களின்வந்தன ஸ்தோத்திரங்கள்.
31 உபகாரணீ ஸ்தோத்திரம் க.
32 பஞ்சபேதம் க.
33 தாரதம்மியம் க.
34 ஸ்ரீகிருஷ்ணகந்துகஸ்துதி ஸ.

பிரதி 1க்கு அணா மூன்றே. தபாற்கூலி பைசா ஒன்பது. டஜன் 1க்கு ரூ. 2 தான். தபாற்கூலி பிரத்யேகம். ஒரு ரூபாய்க்கு குறைந்து ஆர்டர் செய்பவர்கள் கிரயத் துகையை தபால் பில்லைகளாய் அனுப்பவேண்டும்.

*Apply to:—*

மானேஜர், **மாத்வ மித்திரன்,**
ஸ்ரீ வியாஸ விலாஸம், கும்பகோணம்.

---

## விசேஷ தினங்கள்.

| | | | | |
|---|---|---|---|---|
| 21 | 5 | 38 | சனிவாரம் | ச்ரவண உப. இல்லை. விஷ்ணுப. உப. |
| 25 | 5 | 38 | புதவாரம் | ஏகாதசி உப. [இல்லை. |
| 26 | 5 | 38 | குருவாரம் | த்வாதசி. ஹரிவாஸரம் 7-31க்கு மேல் |
| 29 | 5 | 38 | பானுவாரம் | திலதர்ப்பணம் [பாரணை. |
| 8 | 6 | 38 | புதவாரம். | ஏகாதசி உபவாஸம். |
| 12 | 6 | 38 | பானுவாரம் | பௌர்ணமி, வடசாவித்திரி பூஜை. விஷ்ணுப. உப. |


## மாத்வமித்திரன் பிரசுரங்கள்.

**ஸ்ரீராகவேந்திரஸ்வாமிகளின் சரித்திரம்**:—எந்த பாஷையிலுமே இதுவரை இம்மாதிரி விரிவாய் வெளியானதில்லை. ஸ்ரீராகவேந்திரர் செய்து காட்டிய திடுக்கிடும்படியான அநேக அரிய சம்பவங்கள் விஸ்தாரமாய் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. இதைப் படித்துக்கொண்டிருக்கும்பொழுதே ஸ்ரீராகவேந்திர குருஸ்வாமியிடம் சித்தம் பதிந்து பக்தி வளர்ந்து ஆனந்தக்கண்ணீர் பெருகி சரீரம் ரோமாஞ்சமாவதை ப்ரத்யக்ஷமாய் காண்போர் பலர். மேலும் பாலர், விருத்தர்வரை மாத்வர்கள் யாவராலும் தினம் உச்சரிக்கப்படும் ஸ்ரீராகவேந்திரஸ்தோத்திரம், சுலோகங்கள் தேவநாகரத்திலும், தமிழிலும் அவ்வகளின் தமிழ் அர்த்தமும் சேர்க்கப் கப்பட்டிருக்கிறது. ஏராளமாய் சிலவடைந்து வருகிறபடியால் பிந்தி ஏமாறாதிருக்க தற்போது ஆர்டர் செய்யுங்கள். விலை அணா 0—8—0 தபாற் கூலி அணா 0—1—0.

**ஸ்ரீராகவேந்திரஸ்தோத்திர** :—தேவநாகரத்திலும், தமிழிலும் சுலோகங்கள் அவைகளின் தமிழ் அர்த்தமும் விலை அணா 2 தபாற்கூலி 0—0—6.

**ஸ்ரீவாயுஸ்துதி**:—தேவநாகரத்தில் சுலோகங்களும் அவைகளின் தமிழ் அர்த்தமும் சேர்க்கப்பட்டிருக்கிறது. வாயுஸ்துதியின் இன்னின்ன சுலோகங்களால் இன்னின்ன பலம் ஏற்படுமென்பதும் புனஸ்சரண விதானமும் காட்டப்பட்டிருக்கிறது. விலை அணா 0—5—0 தபாற்கூலி அணா ஒன்று.

**துவைதமத விளக்கம்**:—ஸ்ரீமத்வமதத்தின் அநேக ப்ரமேயங்கள் ஸ்ரீமத்வாசாரியாரின் ஜீவியசரித்திரம் முதலியவை உள்ளது விலை அணா 2. தபாற்கூலி பைசா 6.

**கும்பகோண மகாத்மியம்**:—(தமிழ்) அணா 4. தபாற்கூலி பை 6.

**துருவசரித்திர நாடகம்**:— அணா 6. தபாற்கூலி அணா 0—1—0.

**கீதாதத்வம்**:— ஸ்ரீஉத்தராதிமடம் ஸ்வாமிகள் இயற்றி ஸ்ரீமான் ஆத்யம் பாகவதரங்கநாதாசாரியாரால் தமிழில் எழுதப்பட்டது. முதல் மூன்று சஞ்சிகைகள் சுமார் 225 பக்கங்கள் தற்போது தயார். இதர சஞ்சிகைகள் அவை வெளியானவுடன் இனமாய் புக்போஸ்டில் அனுப்பப்படும். விலை 1—8—0 தபாற்கூலி 0—6—0.

ஒரு ரூபாய்க்கு குறைந்து ஆர்டர் செய்கிறவர்கள் தபாற்கூலியைச் சேர்த்து கிரயத்துகை போஸ்டேஜ் ஸ்டாம்பாய் அனுப்பப் படவேண்டும். ***Certificate of Posting*** பேரில் புஸ்தகங்கள் அனுப்பப்படும். புஸ்தகங்கள் கிடைக்காவிட்டால் இந்த ஆபீஸ் ஜவாப்தாரியல்ல.

**மானேஜர் மாத்வமித்திரன், ஸ்ரீவியாஸவிலாஸம், கும்பகோணம்.**

# டி. எஸ். ஆர்.

அண்டு

# கம்பெனி,

## கும்பகோணம்.

ஸ்தாபிதம் 1909 தந்தி விலாசம் "கோகுல்"

எங்கள் வாஸனா திரவியசாலையில் தயாரித்து விற்பனைக்குத் தயாராக இருக்கும் ஸாமான்களின் விபரம்.

| | |
|---|---|
| வாஸனைப்பாக்கு | பலகாய்கறி ஊர்காய்கள் |
| வாஸனைச்சுண்ணாம்பு | ரோஜாப்பூ குல்கந்து |
| வாஸனைப் புகையிலை | ஷர்பத் தினுசுகள் |
| ஸ்னானப்பவுடர் | கொப்பரைச்சீவல் |
| ஷேவர் பவுடர் | கோகுல் கூந்தல் [தைலம் |
| அம்பர், அரகஜா | பற்பொடி |
| தசாங்கம் | ஊதுவத்திகள் |

சந்தனாதித் தைலம்,

அரைக்கீரைவிதைத் தைலம்,

மற்றும் அநேக வாஸனா சாமான்களும் கிடைக்கும்.

கேட்லாக்குக்கு எழுதுங்கள்.


Printed at Sri Venkateswar Power Printing Works and Published by Bhagavatha Ranganathachariar, Kumbakonam.

வருட சந்தா ரூ. 3. Regd. No. M. 2419.

# மாத்வ மித்திரன்.

# THE MADHWA MITRAN.

EDITOR:
Adyam Bhagavatha Ranganathachariar,
KUMBAKONAM.

பௌர்ணமிதோறும் வெளிவரும்.

| Vol. 10<br>புஸ்தகம் 10 | பஹுதான்ய ஸம்வத்ஸரம்<br>ஜேஷ்ட மாஸம். (பௌர்ணமி)<br>(12-6-1938) பானுவாரம். | No. 11<br>நெ. 11 |
|---|---|---|



| நெ. | பொருளடக்கம். | பக்கம். |
|---|---|---|
| 1. | ஸ்ரீ மகாபாரத தாத்பர்ய நிர்ணயம் (ஸ்ரீ மத்வாசாரியார்) | 315 |
| 2. | பிரபஞ்சம் பொய்யன்று. மெய்யேதான் (ஸ்ரீமான் விச்வம்பர சாஸ்திரிகள்) | 321 |
| 3. | ஸ்ரீ மத்வ விஜயம் (ஸ்ரீநாராயண பண்டிதாசாரியார்) | 329 |
| 4. | விஷ்ணு ஸஹஸ்ரநாமம் | 332 |
| 5. | ஸ்மார்த்தர்களின் மாம்ஸ பக்ஷணம் | 336 |
| 6. | ஸ்ரீசங்கிரஹ ராமாயணம் (ஸ்ரீ நாராயண பண்டிதாசாரியார்) | 342 |
| 7. | விளம்பரம் | 346 |
| 8. | விசேஷ தினங்கள் | 346 |


ஆசிரியர்:—ஆத்யம் பாகவத ரங்கநாதாசாரியார், கும்பகோணம்.

# மாத்வமித்திரன்.

---

மாத்வர்களின் சாஸ்திரீயமான தமிழ் பத்திரிகை இது ஒன்றே ஸ்ரீமத்வமதத்தின் அரிய இரகசியங்கள் ஸம்பிரதாயங்கள் மாகாத்மியங்கள் புராணசரிதைகள் மாத்வவகுப்பு புண்ய புருஷர்களின் சரித்திரங்கள் வேதாந்த சர்ச்சைகள் தர்மசாஸ்திர விசாரங்கள் தினசரி விரதாதி குறிப்பு:— மகாபாரத தாத்பர்ய நிர்ணயம் முதலான அநேக கிரந்தங்களின் மொழிபெயர்ப்புகள் முதலிய எண்ணிறைந்த விஷயங்கள் நிறைந்திருக்கின்றன ஸ்ரீமத்வமதத்தை சுலபமாய் அறிந்துகொள்ள இப்பத்திரிகைக்கே உடனே சந்தாதாரராய்ச் சேருங்கள் இது பிரதி பௌர்ணமியிலும் கும்பகோணத்திலிருந்து வெளியாகிறது இதற்கு வருடசந்தா முன்பணமாய் ரூபாய் மூன்று. பிரதி சிராவணமாதமும் இப்பத்திரிகைக்கு வருடஆரம்பமாகும் எந்த மாதத்தில் சந்தாதாரராய்ச் சேர்ந்தாலும் அந்த வருஷத்திய பிந்திய சஞ்சிகைகள் அனுப்பப்படும் பழைய வாலியங்கள் விலைக்குக் கிடைக்கும் பத்திரிகை சரியானபடி கிடைக்காவிட்டால் பௌர்ணமி கழிந்தஒருவாரத்துக்குள் நமக்கு அறிவிக்கவேண்டியதுடன் அந்தந்த தபாலாபீசுக்கும் அறிவித்துவிடவேண்டும் பதிலறிய விரும்புகிறவர்கள் ஸ்டாம்பை அனுப்பவேண்டும். ஒவ்வொரு கடிதத்திலும் தெளிவாய் பூரா மேல் விலாசமும் எழுதி அனுப்பவேண்டும்.

மானேஜர் மாத்வமித்திரன்,

ஸ்ரீ வியாஸ விலாஸம், கும்பகோணம்.

**மாத்வமித்திரன் பழைய வாலியங்கள்**

**வெகு சொற்பம்தானிருக்கின்றன.**

**உடனே அவைகளைப்பெற**

**முந்துங்கள்.**


ஸ்ரீ லக்ஷ்மீ நரஸிம்ஹாய நம:

# மாத்வமித்திரன்.

श्रीमन्मध्वमते हरिः परतरः, सत्यं जगत् , तत्वतःभेदः,
जीवगणाः हरेरनुचराः, नीचोच्चभावं गताः ॥
मुक्तिः नैजसुखानुभूतिः, अमला भक्तिश्च तत्साधनं,
ह्यक्षादित्रितयं प्रमाणमखिलाम्नायैकवेद्यो हरिः ॥


VOL. 10 | பஹுதான்ய ஸம்வத்ஸரம். ஜேஷ்ட மாஸம். | NO. 11


ஸ்ரீ மத்வாசாரியார் இயற்றிய

## ஸ்ரீ மகாபாரத தாத்பர்ய நிர்ணயம்.

(ஸ்ரீமத். வே. பாகவத ரங்காசாரியாரின் மொழிபெயர்ப்பு.)

---

(முப்பத்திரண்டாவது அத்யாயம்.)


முன் 308-ம் பக்கம் தொடர்ச்சி.


---

### ஸ்ரீ கிருஷ்ணரின் 12 வருஷ யக்ஞம்.

இந்த முப்பத்திரண்டாவதாகிய கடைசி அத்யாயத்தில் மகாபாரதத்தின் கடைசி மூன்று பர்வங்களாகிய மௌஸல பர்வம், மகா ப்ராஸ்தான பர்வம். ஸ்வர்காரோஹண பர்வம் இவைகளின் கதைகளும், புத்தாவதாரத்தின் கதையும், கல்கி அவதாரத்தின் கதையும் ஸ்ரீ மத்வாசாரியார் இந்த மகாபாரத தாத்பர்ய நிர்ணயத்தை செய்ய காரணமும், நிரூபிக்கப்பட்டு ஸ்ரீமந் நாராயணனிடம் இந்த கிரந்தம் ஸமர்ப்பணம் செய்யப்படுகிறது.

பிறகு ஸ்ரீ கிருஷ்ணர் குருக்ஷேத்ரம் சென்று, பன்னிரண்டு

வருஷகாலம் செய்யவேண்டிய ஸத்ரம் என்னும் யக்ஞத்தைச் செய்ய அங்கு தீக்ஷை அடைந்தார். உற்பத்தி இல்லாதவரும், அப்ரமேயனுமான அந்த கிருஷ்ணர்தான் ஸ்ரீ வேதவியாஸர். ஸ்ரீ பரசுராமர் இந்த இரண்டு ரூபங்களுடன் இந்த ஸத்ர யாகத்தில் ஸதஸ்யர்களின் காரியங்களைச் செய்தார். இந்த ஸ்ரீ கிருஷ்ணரின் ஸத்ரயாகத்தில் தக்ஷப்ரஜேசுவரர் பிருகு ரிஷி முதலான ரிஷிகள் ரித்விக்குகளாய் ஆயினர். யாதவ ச்ரேஷ்டர்களுடன் கூடிய பாண்டவர்களும் விஷ்ணு பக்தர்களான ப்ரம்மா, ருத்திரன், இந்திரன் முதலான தேவர்களும் பக்தியுடன் இந்த யக்ஞத்தில் கைங்கரியம் செய்தனர். அந்தரிக்ஷலோகம், ஸ்வர்க்க லோகம், மஹர் லோகம் முதலியவைகளில் வசிப்பவர்களாயுள்ள நாராயணனின் பாதத்தை அண்டியவர்களான ஜனங்களும், பூமியில் இருந்தவரும் எல்லா ஜீவர்களும் நாகர்களுடன் இந்த யக்ஞத்திற்கு வந்து ஆனந்தமடைந்தனர். தேவர்களுக்கும், ரிஷிகளுக்கும் பரஸ்பரம் விவாதமாகி அதை முன்னிட்டு ஸ்ரீ வேதவியாஸரூபியாயும், ஸ்ரீ பரசுராம ரூபியாயுமுள்ள ஸ்ரீ ஹரி சொன்ன வார்த்தையால் வாதாடுவதே சுபாவமாகக் கொண்டவர்களும் தத்வ நிர்ணயம் தெரிந்துகொள்ள விருப்பமுள்ளவர்களுமான ஜனங்களுக்கு இந்த யக்ஞத்தில் தத்வ நிச்சயம் ஏற்பட்டது. சதுர்வித புருஷார்த்தங்களை விரும்பியவர்கள் ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தியிடமிருந்தே ஸம்பூர்ணமான தர்மார்த்த காமங்களையும், மோக்ஷத்தையும் அடையப் பெற்றனர். தேவர்கள், மனுஷ்யர்கள் முதலான ஜனங்கள் தம் தம் இஷ்டப்படிக்குள்ள அன்னபான வஸ்திரங்களுடன் இந்த யக்ஞத்தில் சஞ்சரித்தனர். இந்த குருக்ஷேத்திரத்தில் எல்லா ஸாதுக்களும் கூடியிருந்தனராதலாலும், எல்லா அபீஷ்டங்களை அடைந்திருந்ததாலும் நாராயணன் கண்ணுக்குத் தென்பட்டுக் கொண்டிருந்ததாலும் அந்த யக்ஞ காலத்தில் அந்த குருக்ஷேத்ரம் வைகுண்ட லோகத்திற்கு ஸமமாய் இருந்தது. ஸ்ரீ கிருஷ்ணர் இந்த ரீதியில் பன்னிரண்டு வருஷம் செய்யவேண்டியதான மகா யக்ஞத்தை ஸம்பூர்த்தி செய்து அவப்ருத ஸ்நானம் செய்து, யக்ஞத்திற்கு வந்திருந்த எல்லா ஜனங்களையும் பூஜித்து ஒரு வருஷம் வரையில் க்ரமமாய் அனுப்பித்துக்கொண்டிருந்தார்.



## யாதவ குலநாசம்.

தன்னுடைய யாதவ குலத்தை நாசமாக்க விருப்பங்கொண்டு பிராம்மணர்களின் சாபம் ஏற்படச் செய்தார். உத்தவனுக்கு உத்தமமான தன் க்ஞானத்தை உபதேசம் செய்து அவனை பதரிகாச்ரமத்திற்கு அனுப்பி தான் அவதாரம் செய்து 107 வருஷம் எப்போது முடியும் என்று எதிர்பார்த்துக்கொண்டு ப்ரபுவான ஸ்ரீ கிருஷ்ணர் பாண்டவர்களுடன் சேர்ந்து பூமியை ஸம்ரக்ஷித்தார். துரியோதனன் இறந்த நாளன்றே கலியுகம் ஆரம்பமாயிற்று. பிறகு தன் சாமர்த்தியத்தைக்கொண்டு ஸ்ரீ கிருஷ்ணர் 36 வருஷம் கிருத யுகமாய்ச் செய்தார். கிருதயுகத்தைவிட இந்த முப்பத்தி ஆறு வருஷத்தில் ஸ்ரீ கிருஷ்ணரின் ஆக்ஞையாலும் கலிகாலத்தின் யோக்யதையாலும், புண்யம் ஸ்வல்பமாய் இருந்தாலும் அதன் பலன் அதிகமும், பாபம் அதிகமாயிருந்தாலும் அதன் பலன் ஸ்வல்பமும் உண்டாகும்படி விசேஷம் ஏற்பட்டது. இவ்வாறு ஜனங்கள் மிக மிக தர்மிஷ்டர்களாயும் விஷ்ணு பக்தியுடையவர்களாயும் மாறி, கலியுகத்தின் அடையாளம் மறைந்துவிடவும் கலியுகத்தின் காரியங்களை நடைபெற விரும்புகிறவர்களாய் பிரம்மருத்திராதி தேவர்கள் நாசமற்றவரான ஸ்ரீ கிருஷ்ணனை ஸ்தோத்திரம் செய்து அவருடைய வைகுண்ட லோகத்திற்கு வந்து சேரவேண்டுமென்று விக்ஞாபனம் செய்துகொண்டனர். அப்படியே வந்து சேருவதாய் ஸ்ரீ கிருஷ்ணர் சொன்னார். ஸாது ஜனங்கள் அதிகமாய் இருந்தால் கலியுகம் நன்கு வளராதென்று அபிப்பிராயத்துடன் தன் குலம் நாசமடைவதற்காக யாதவர்களை ப்ரபுவான ஸ்ரீ கிருஷ்ணர் ப்ரபாஸத்திற்கு அழைத்துப்போனார். புண்ய க்ஷேத்திரமாயிருப்பினும் தன் வீட்டில் பிராணனை விடுவது சிறந்த தர்மமாகாதென்றும் தன் வீட்டை விட்டு ஸ்வல்ப க்ஷேத்திரமாயிருந்தாலும் அங்கு சென்று ப்ராணனை விடுவது மகா பலமாகுமென்றும், தர்ம ரகசியத்தை வெளிப்படுத்துவதற்காக ஸ்ரீ கிருஷ்ணர் இந்த யாதவர்களை த்வாரகையிலிருந்து ப்ரபாஸத்திற்கு அழைத்துபோய் அங்கு தானங்களையும், சிறந்த தர்மங்களையும் அவர்களைக்கொண்டு செய்வித்தார். பிறகு யாதவர்கள் மைரேயமென்னும் ஸுரையை பானம் செய்ததால்

மதங்கொண்டவர்களாய் பிராம்மணர்களின் சாபதோஷத்தால் ஸ்ரீ கிருஷ்ணரால் மோகமடைந்தவர்களாய் ஒருவரையொருவர் ஸம்ஹாரம் செய்து அவரவர்களின் மூல ரூபங்களை அடைந்தனர். இந்த யாதவர்களின் மரணத்தைப்பார்த்து பலராமர் யோக சக்தியால் தன் சரீரத்தை விட்டார்.

---

## ஸ்ரீ கிருஷ்ணரின் வைகுண்ட பிரயாணம்.

பிறகு கணக்கற்ற ஸாமர்த்தியமுள்ளவரும் உத்தமஸ்வாமியுமான ஸ்ரீ கிருஷ்ணர் தம்முடைய ஸாரதியான தாருகனை தான் பிரயாணம் செய்தபின் பாண்டவர்களும் அவர்களின் லோகத்திற்கு பிரயாணம் புறப்படவேண்டுமென்று அறிவிப்பதற்காக பாண்டவர்கள் ஸமீபத்திற்கு சீக்கிரமே அனுப்பிவைத்தார். தாருகன் புறப்பட்டுப்போன பின் ஸரஸ்வதி நதிதீரத்தில் அசுவத்த விருக்ஷத்தின் கீழ் உட்கார்ந்திருக்கும் ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தியின் இடது தொடையின்மீது இருக்கும் மிகுந்த சிகப்பு வர்ணமான அவருடைய வலது உள்ளங்காலைக் கண்டுவிட்டு, ஜரை என்னும் வேடன் சிவந்த நிறமுள்ள ரோகித் என்னும் மான் என்று சந்தேகங்கொண்டவனாய், அவன் ஸ்ரீகிருஷ்ணரின் பக்தனாயினும் பிராம்மணர்களின் சாபத்தால் உண்டான உலக்கையில் மீந்திருந்த இரும்புத்துண்டுக்கான பாணத்தை ஸ்ரீ கிருஷ்ணருடைய காலில் எய்தான். சேதனம் பேதனம் இவைகளுக்கு அனர்ஹமான சரீரம்கொண்ட ஸ்ரீ கிருஷ்ணரின் பாதத்தில் அந்த பாணம் பிரவேசித்துவிடவும், அந்த ஜரா என்னும் வேடன் ஸ்ரீ கிருஷ்ணரின் ஸமீபத்திற்கு வந்து ஸ்ரீ கிருஷ்ணரைப்பார்த்து பயந்தவனாய் பூமியில் விழுந்து நமஸ்கரித்தான். ஸ்ரீ கிருஷ்ணர் பிராம்மணர்களின் சாபத்திற்கு மரியாதை செய்பவராய் பாணப்ரஹாரம் இந்த வேடனால் தன் காலில் ஏற்படும்படி செய்துகொண்ட பின், "கடவுளே! பாபியான என்னைக் கொன்றுவிடும்" என்று வேண்டிக்கொள்ளும் அந்த வேடனை ஸ்வர்க்கத்திற்கு அனுப்பினர். முன் காலத்தில் விஷ்ணுவின் ஹ்ருதயத்தில் காலால் உதை கொடுத்த பாபத்தால் இந்த வேட ஜன்மத்தை அடைந்த அந்த பிருகுரிஷியை அவருடைய பச்சாத்தாபத்தாலும் பக்தியாலும்



மிகவும் மகிழ்ந்தவராய், ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி தன் ஆக்ஞையின் பேரில் வந்த விமானத்தில் வேடப்பிறப்புகொண்ட அந்த ஜரா என்பவனை உட்காரத்திவைத்து ஸ்வர்க்கத்திற்கு அனுப்பினார். பகவானின் ஹ்ருதயத்தில் காலால் உதைத்தலாகிய நீசமான காரியம் செய்ததால் நிந்தனைக்குள்ளான வேட ஜன்மத்தையும் ஸ்ரீகிருஷ்ணரின் பாதத்தில் பாணப்ரஹாரம் செய்ததாகிய மிக மிக நிந்திதமான காரியத்தையும் பிருகுரிஷி அடைந்தார். மனம் தோஷங்கொண்டதாய் இல்லாமலிருந்தால் அந்த பிருகுரிஷியின் பக்திக்கு குறைவு ஏற்படவில்லை. ஜரா என்னும் இந்த வேட ஜன்மத்திலேயும் ஸ்ரீகிருஷ்ணரின் உள்ளங்கால் என்று தெரியாமல் பாணப்ரயோகம் செய்ததால் அதிகமான தோஷம் உண்டாகவில்லை. பிறகு ப்ரம்மா ருத்திரன் இந்திரன் முதலான தேவர்கள் மறுபடியும் ஸ்தோத்திரம் செய்து ஸ்ரீகிருஷ்ணரை நமஸ்கரித்து அவரை எதிர்கொண்டுவந்தனர். ஸ்ரீகிருஷ்ணர் தன் தேஜஸ்ஸால் எல்லா உலகையும் பிரகாசப்படுத்திக்கொண்டு சீக்கிரமே தன் வைகுண்டம் போக புறப்பட்டார். ஸ்ரீ கோபால மந்த்ரத்தை பஜிக்கும் ஜனங்களுக்கு பலனை அளிப்பவராய் ஓர் ரூபத்துடன் பூமியிலேயே மறைந்து நின்றார். இரண்டாவது ரூபத்துடன் சூரியமண்டலத்தில் நின்றார். மூன்றாவது ரூபம் பரமசிவனால் பூஜிக்கப்பட்டவராய் சிவலோகத்தில் நின்றார். நான்காவது ரூபம் சதுர்முகனால் பூஜிக்கப்பட்டவராய் பிரம்மலோகத்தில் நின்றார். பிறகு அந்த பிரம்மலோகத்திலிருந்து உத்தம லோகமான வைகுண்டலோகத்திற்குச் செல்லும் ஸ்ரீ கிருஷ்ணரின் ஐந்தாவது ரூபத்தை தேவோத்தமர்கள் பக்தியுடன் அவரவர்கள் யோக்யதைக்கு தகுந்த தூரம் பின் தொடர்ந்தார்கள். அபரிமிதமான உத்கிருஷ்டமாயுள்ள காந்தி பொருந்திய ஸ்ரீ கிருஷ்ணரின் தேஜஸ்ஸால் பறிக்கப்பட்ட கண்களுள்ள இந்திராதிதேவர்கள் அவர்கள் எவ்வளவு தூரம் போகலாமோ அவ்வளவு வரையில் அவர் பின் தொடர்ந்துபோய் அவர்களின் கண்கள் பார்க்கமுடியாமல் மூடப் போனபின் மேலே போகமுடியாமல் நின்றுவிட்டனர். சதுர்முகன் ஏற்கனவே கருடசேஷ ருத்ரர்களால் பிரவேசிக்கப்பட்டு அவர்களுடன் சேர்ந்திருப்பினும், மூல ரூபத்தை ப்ரவேசம்

செய்த ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியை நமஸ்கரித்தவுடன் அவர்கள் அலாதியாய் போய் ஏகாகியாய் நின்றவராய் ஸ்ரீ கிருஷ்ணரால் ஆலிங்கனம் செய்துகொள்ளப்பட்டு ஏகாந்தமாய் இரகசிய வார்த்தை பேசினார். அப்படியே ஸ்தோத்திரமும் செய்தார். ஸ்ரீ கிருஷ்ணர் தன் மூல ரூபத்துடன் ஐக்யத்தை அடைந்து பிறகு தன் இஷ்டப்படி அந்த மூல ரூபத்திலிருந்து அலாதியாக வெளி வந்து, லக்ஷ்மீதேவியாருடனும் முக்தியடைந்திருந்த சதுர்முகன் முதலான தேவர்களாலும் பூஜிக்கப்பெற்றவராய் அநந்தமான சத்குணரூபியாய் விளையாடினார். சதுர்முகன் ருத்திராதி தேவர்களுடன் சேர்ந்து தன் ஸத்ய லோகம் வந்து அந்த ஸத்ய லோகத்திலிருந்துவரும் ஸ்ரீ கிருஷ்ணரை தரிசித்தும் பூஜித்தும் ஸந்தோஷப்பட்டார். தேவர்கள் எல்லோரும் சூரியமண்டலத்திலுள்ள ஸ்ரீ கிருஷ்ணரை தரிசித்தும், பூஜித்தும் சந்தோஷப்பட்டார்கள்.

## ஸ்ரீ கிருஷ்ணரின் சரீர தகனம்.

பகவான் அவர் எடுத்த எந்த அவதாரங்களிலேயும் தன் தேகத்தை விட்டதைப்போல் காட்டி துஷ்டர்களுக்கு பிரமை ஏற்படும்படியான பாசாங்கு செய்யவில்லையாதலால், பிரபுவும் அச்யுதனுமான நாராயணன் அஸுரர்களை மோகித்து அவர்களை அந்தம்தமஸ்ஸை அடையச் செய்வதற்காக, இந்த ஸ்ரீ கிருஷ்ணாவதாரத்தில் ஞானம், ஆனந்தம் இவைகள்தான் சரீரமாகக் கொண்டிருப்பினும் இவருடைய இந்த சரீரம் போலவே இருப்பதும் விட்ட சரீரம்போலவே பூமியில் படுத்துக்கிடப்பதுமான மற்றொரு சரீரத்தை ஸிருஷ்டி செய்துவிட்டு மேல் உலகம் சென்றார். ஸாரதியான தாருகன் சொன்னதின்பேரில் அர்ஜுனன் அங்குவந்து ஸ்ரீ கிருஷ்ணரின் அந்த பொய்யான சரீரத்தை அக்னியால் தகனம் செய்தான். பலராமர் முதலான முக்யஸ்தர்களான யாதவர்களின் சரீரத்தையும் அக்னியால் தகனம் செய்தான். தாருகன் வைகுண்டத்திலிருந்து எவ்வாறு பூமிக்கு வந்தானோ அப்படியே மீண்டும் வைகுண்டம் போய்ச் சேர்ந்தான். ருக்மணிதேவியும் ஸ்ரீ கிருஷ்ணரைப்போலவே அயோக்ய ஜனங்களை மோகிக்கும்படி செய்ய ஸ்ரீ கிருஷ்ணரின் சரீரத்துடன் அக்னி



யில் அந்தர்தானமடைந்தாள். ஸத்யபாமை தபஸ் செய்து வனத்தில் அந்தர்தானமடைந்தாள். இவ்விரண்டு தேவியார்களும் நாராயணனுடைய பாரிசுவங்களை அடைந்தனர். ருக்மணியும், ஸத்யபாமையும் ஞானானந்த சரீரமுள்ளவராய் இரண்டு உருவங்களுடனிருந்தபோதிலும் அவ்விருவர்களும் ஒருவரேதான். ஆதலால்தான் இவ்விருவர்களும் ஸ்ரீ கிருஷ்ணரைப்போலவே துஷ்டர்களை மோகிக்கச் செய்தனர். (தொடரும்.)

# பிரபஞ்சம்
# பொய்யன்று. மெய்யேதான்.

## ஓர் அத்வைத வித்வானின் பகிரங்க அங்கீகாரம்.

சதுஸ்சாஸ்திர வித்வான் ஸ்ரீமான் விச்வம்பர சாஸ்திரிகள் பெல்காம் மதுரவாணி ஸம்ஸ்கிருத பத்திகையின் **2**-வது வாலியம் **8**-வது சஞ்சிகையில் அறிவிப்பதாவது:—

(முன் 303-ம் பக்கம் தொடர்ச்சி.)

மேலும் இந்த ஸர்வம் கல்விதம் ப்ரம்ம என்னும் சுருதியில் இருந்து வரும் ஸாமானாதிகரண்யத்திற்கு அபேதமாகிய முக்யார்த்தம் ஏற்படுவதில்லை என்று அமுக்யார்த்தத்தை அதாவது கௌணார்த்தத்தை நாம் ஏற்படுத்திக்கொள்கிறோம். அப்படி நாம் கௌணார்த்தத்தை கல்பனை செய்துகொள்ளும்பொழுது, இதம் ஸர்வம் இந்த பிரபஞ்சம் ப்ரம்ம ப்ரம்மத்தின் அதீனம் என்பதான அமுக்யார்த்தத்தை "ஸர்வஸ்ய வசீ ஸர்வஸ்ய ஈசான:" என்ற வேறொரு சுருதியின் அர்த்தத்திற்கு அனுஸாரணையாய் ஏற்படுத்திக்கொள்வதுதான் ஒழுங்காகும். இந்த சுருதிக்கு முன்னாடி இந்த சாந்தோக்யத்திலேயே உள்ள "ஸர்வகாம: ஸர்வரஸ: ஸர்வகந்த:" என்னும் மந்த்ரத்துக்கு வ்யாக்யானம் செய்யும்பொழுது, சங்கராசாரியாரே சொல்லியிருப்பதாவது:— "ஸர்வே காமா: தோஷரஹிதா: அஸ்யேதி ஸர்வகாம: தர்மாவிருத்தோ பூதேஷு காமோஸ்மி இதிஸ்ம்ருதே:| நனு காமோஸ்மீதி வசனாத் இஹ பஹுவ்ரீஹி: நஸம்பவதி ஸர்வகாம இதி, ந காமஸ்யகர்த்தவ்யத்வாத் சப்தாதிவத் பாரார்த்யப்ரஸங்காச்ச தேவஸ்ய| தஸ்மாத் யதேஹ ஸர்வ

காம இதி பஹுவ்ரீஹி: ததாகாமோஸ்மீதி வசனாத் இஹ பஹுவ்ரீஹி: ந ஸம்பவதி ததா காமோஸ்மீதி ஸ்மிருத்யர்த்தோ வாச்ய:'' என்றார். இதற்கு வ்யாக்யானம் செய்த ஆனந்தகிரி சொல்லியிருப்பதாவது:— ''உதாஹ்ருதாம் ஸ்ம்ருதிமாச்ரித்ய உக்தம் ஆக்ஷிபதி கதமிதி| காம ஸாமாநாதிகரண்யே பாதகோபலம்பாத் பஹுவ்ரீஹிரேவேதி பரிஹாரஇதி ந காமஸ்யேதி| தஸ்ய கார்யத்வாத் ததைக்யே ப்ரம்மண: அநாதித்வம் பாத்யதே சேதன சேஷத்வாச்ச காமஸ்யததைக்யே ப்ரம்மண: ஸ்வா தந்த்ர்யம் ஹீயதே| ததாச கர்மதாரயாஸம்பவாத் பஹுவ்ரீஹிரேவ இத்யர்த்த:|| கதம்தர்ஹி காமோஸ்மீதி தாதாம்ய ஸ்மிருதி: இத்யா சங்க்யாஹ தஸ்மாத் இதி| காமேச்வரயோ: ஸாமாநாதிகரண்ய ஸம்ப வாத் ப்ரக்ருதச்ருதௌ பஹுவ்ரீஹி: யதேஷ்ட: ததா ஸம்ருதா வபி ப்ரம்ம பாரதந்த்ர்யமாத்ரம், காமஸ்ய விவக்ஷிதம் ச்ருத்யனுஸாரேண ஸ்ம்ருதி: நேதவ்யாத் இத்யார்த்த:||'' என்றார். இதன் அபிப்பிராய மாவது:— ஸர்வகாம: என்றால் ஸர்வேகாமா: யஸ்ய ஸ: எல்லா காமங் களும் யாருடைய அதீனத்திலிருக்கின்றனவோ அந்த பரமாத்மா என்று அர்த்தம் என்றார். ஏன் அப்படி அர்த்தம் செய்யப்படுகிறது என்றால் 'தர்மாவிருத்தோ பூதேஷு காமோஸ்மி பரதர்ஷப' என்று பகவத்கீதை யில் சொல்லப்பட்டிருக்கிறதே என்றார். ''காமோஸ்மி'' என்றால் காம ரூபியாக இருக்கிறேன் என்றுதானே அர்த்தம்; அதன்படி சுருதியி லுள்ள ''ஸர்வகாம:'' என்பதற்கு கர்மதாரயஸமாஸம் செய்து ''ஸர் வஸ்சாஸௌ காமஸ்ச'' என்று பரமாத்மா ஸர்வகாம ரூபியாய் இருக் கிறார், அதாவது பரமாத்மாவும் காமமும் ஒன்றே என்று ஏன் அர்த் தத்தைச் செய்யலாகாது என்று ஆக்ஷேபனை செய்துகொண்டு அதற்கு பதில் சொல்லியிருப்பதாவது:— காமம் என்பது பாதந்திரம். மேலும் ஜன்யம் (பிறக்கவல்லது) அப்பேர்ப்பட்ட காமத்துக்கும் பரமாத்மா வுக்கும் ஐக்யத்தைச் சொன்னால், பரமாத்மாவுக்கும் பாரதந்த்ரயமும் ஜன்யத்வமும் ஏற்பட்டு, பரயாத்மாவின் ஸ்வாதந்த்ரயமும், அநாதித் வமும் நாசமடையும். அதனால் பரமாத்மாவுடன் காமத்திற்கு அபே தத்தைச் சொல்லக்கூடாது; ஆதலால் ''ஸர்வகாம:'' என்பதற்கு ''ஸர் வே காமா: யஸ்ய'' என்று பஹுவ்ரீஹி ஸமாஸம் செய்து காமத்திற்கு பரமாத்மா ஸ்வாமி என்றுதான் அர்த்தம் செய்யவேண்டும். இதன் படியேதான் ''காமோஸ்மி'' என்னும் கீதாவாக்யத்திற்கும் காம: காம ஸ்வாமியாய் அஸ்மி இருக்கிறேன் என்று அர்த்தம் செய்யவேண்டும். என்று அறிவித்துள்ளார். இவ்வாறு பிரம்மத்திற்கும் காமத்திற்கும்



அபேதம் ஏற்படுவதில்லையாதலால் பிரம்மத்தின் அதீனமென்று கர் மாதிகளைச் சொல்லவேண்டுமென்று சங்கரபாஷியத்திலும் அதன் டீகை யிலும் சொல்லி காமாதி பிரபஞ்சத்திற்கு ப்ரம்மத்தின் அதீனமென்று தான் அதன் ஸாமாநாதிகரண்யத்தை நிரூபிக்கவேண்டுமென்று சொல் லப்பட்டிருக்கிறது.

மேலும் 'த இந்த்ரியாணி தத்வ்யபதேசாத், அன்யத்ர ச்ரேஷ்டாத்' என்னும் பிரம்மசூத்திரத்திற்கு (2—4—17) சங்கராசாரியார் செய் திருக்கும் பாஷியத்தில் இதரர்களான பதினொன்று ப்ராணர்கள் முக்ய ப்ராணருடையவே தான்விருத்திகளா அல்லது தனிப்பட்டவர்களா என்று சந்தேகித்துக்கொண்டு, ''ஹந்தாஸ்யைவ ஸர்வே ரூபமஸாமேதி த ஏதஸ்யைவ ஸர்வேரூபமபவன்'' என்னும் சுருதியின்படி ஸமஸ்த இந்திரி யங்களும் இந்த ப்ராணரின் ரூபமே ஆயின என்று இந்திரியங்களுக்கும் ப்ராணருக்கும் அபேதம் ஏற்பட்டால், அவர் சொல்வதாவது:— ''ப்ரும: தத்வாந்தராண்யேவ ப்ராணாத் வாகாதீனீதி | குத: வ்யபதேசபேதாத் | ச்ரேஷ்டம் வர்ஜயித்வா அவசிஷ்டா ஏகாதச இந்த்ரியாணி இத்யுச்யந் தே| ஏதஸ்மாஜ்ஜாயதே ப்ராண: மன: ஸர்வேந்திரியாணி ச | இதிஹ யேவம் ஜாதீயகேஷு ப்ரதேசேஷு ப்ருதக் ப்ராண: வ்யபதிச்யதே| ப்ருதக்ச இந்திரியாணி வ்யபதேச பேதஸ்சாயம் தத்வபேத பக்ஷ உபபத் யதே'' || என்றார். ''வைலக்ஷண்யாச்ச'' என்ற அடுத்த சூத்திரத்தை வியாக்யானம் செய்யும்பொழுது மாணமிருப்பது மரணமில்தாதது என் றும் வித்யாஸமான லக்ஷணம் ப்ராணேந்திரியங்களுக்கு இருப்பதால் இவ்வாறு விருத்தமான தர்மங்கள் இருப்பதைக்கொண்டு இதர இந் திரியங்கள் முக்ய ப்ராணருடைய விருத்திகள் அன்று என்று சித்தாந்தம் செய்திருக்கையில் ''த ஏதஸ்யைவ ஸர்வரூபமபவன்'' (பிரு. 1, 25, 21) இதி சுருதே: ப்ராணே ஏவ இந்த்ரியாணீதி| கதயுக்தம்| தத்ராபி பௌர் வா பர்யாலோசனாத் வேதப்ரதீதே: தஸ்மாத ததவிரோதேன வாகாதி ஷுபரிஸ்பந்தலாபஸ்ய ப்ராணாயத்தத்வம் தத்ரூபபணம் வாகாதீன மிதி மந்தவ்யம் ந தாதாத்ம்யம் இதி'' என்றார். இதற்கு வ்யாக்யானம் செய்த பாமதிகாரரும் சொல்லியிருப்பதாவது:- ''ப்ராணஸ்யைவ வ்ருத் தய: ஏகாதசேந்திரியாணி ந தத்வாந்தராணீதி ப்ராப்தம் | ஏவம் ப்ராப் தே உச்யதே. முக்யாத் ப்ராணாத் தத்வாந்தராணி இந்திரியாணி தத்ர தத்ர பேதேன வ்யபதேசாத்| ம்ருத்ய ப்ராப்தத்வ அப்ராப்தத்வ லக்ஷண விருத்ததர்ம ஸம்ஸர்கச்ருதே: அர்த்தக்கிரியாபேதாச்ச.........யாபி ச ப்ராணரூபதாம் இந்திரியாணாமபிததாதி ச்ருதி: தத்ராபி பௌர்வா பர்யாலோசனாயாம் பேத ஏவ ப்ரதீயதே இத்யக்தம் பாஷ்யக்ருதா

தஸ்மாத் பஹுச்ருதி விரோதாத் பூர்வாபர விரோதாச்ச ப்ராணரூபதா பிதானம் இந்திரியாணும் ப்ராணுயத்ததயா பாக்தம் கமயிதவ்யம்" என்றார். "தஸ்யைவ ஸர்வரூபமபவன்" என்னும் சுருதியில் ஸமஸ்த இந்திரியங்களும் "ஏதஸ்யைவரூபம்" இந்த ப்ராணனின் ரூபமே அபவன் ஆயின என்று இந்திரியங்களுக்கு ப்ராணத்துடன் அபேதம் தோன்றினும், "அயம் வைந: ச்ரேஷ்ட:" முதலான சுருதிகளால் ப்ராணத்திற்கு இந்திரியங்களுடன் பேதம் தோன்றுவதாலும், இந்திரியங்களுக்கு அபேதம் சொன்னால் அநேக சுருதிகளின் விரோதம் எற்படுவதாலும், முன் பின் விரோதமும் எற்படுவதாலும், விருத்தமான தர்மங்கள் இருந்துவருவதாலும், இந்திரியங்களுக்கும் பிராணருக்கும் ஐக்யம் பொருந்துவதில்லையாதலால், இந்த ஐக்யத்தைச் சொல்வதாய் தோன்றும் வாக்யத்திற்கு இந்திரியங்கள் ப்ராணருக்கு ஆதீனமானவைகள் என்றுதான் அர்த்தம் சொல்லவேண்டும். ப்ராணருடன் அபேதத்தை சொல்லக்கூடாது என்றார். இவ்வாறு சங்கராசாரியாரும் பாமதிகாரரும் கூறியிருக்கின்றனர்.

மேலும் பிருஹதாரண்யத்தில் "அதாத: ஸம்பத்திர் யதாபைவ்ஷ்யன் மன்யதேத புத்ரமாஹ] த்வம் ப்ரம்மத்வம் யக்ஞஸ்தவம் லோக இதி] ஸபுத்ர: ப்ரத்யாஹாஹம் ப்ரம்மாஹம் யக்ஞோஹம் லோக இதி" என்னும் மந்திரத்திற்கு சங்கராசாரியார் வியாக்யானம் செய்யும்பொழுது "யோத்யயனவ்யாபாரோ மமகர்த்தவ்ய: ஆஸீதேதாவந்தம் காலம் வேத விஷய: ஸ இத ஊர்த்வம் 'த்வம் ப்ரம்ம' த்வத் கர்த்ருகோ அஸ்து இத்யர்த்த:....... மதகர்த்ருகா: யக்ஞா ய ஆஸன் த இத ஊர்த்வம் த்வம் யக்ஞ: த்வத்கர்த்ருகா: பவந்து இத்யர்த்த:.........இத ஊர்த்வம் த்வம் லோகஸ்த்வயாஜேதவ்யாஸ்தே" என்று சொல்லி, த்வம் என்னும் பதத்திற்கு த்வத்கர்த்ருகம் அதாவது நீ என்றால், நீ செய்வது உன்னால் செய்யப்படுவது என்று வியாக்யானம செய்திருக்கிறார்.

இப்படி மேற்கண்ட இடங்களில் வியாக்யானம் செய்திருப்பதை அனுசரித்து, ஸர்வம் கல்விதம் ப்ரம்ம என்னும் சுருதிக்கு, இதம் ஸார்வம், இந்த பிரபஞ்சம் ப்ரம்ம பிரம்மத்தின் ஆதீனம் அதாவது பிரம்மத்தை கர்த்தாவாய்க்கொண்டது அதாவது பிரம்மத்தால் செய்யப்பட்டது என்றோ; இதம் ப்ரம்ம இந்த பிரம்மம் "ஸர்வம் ஸமாப்நோஷி ததோஸிஸர்வ:" என்று பகவத்கீதையில் சொன்னபடி, ஸர்வம் எங்கும் வியாபித்திருப்பது என்றோ, "இதம் அம்ருதமிதம் ப்ரம்மேதம் ஸர்வம்" என்னும் சுருதிக்கு வ்யாக்யானம் செய்யும் பொழுது சங்கராசாரியார் தமது பாஷியத்தில் "இதம் ஸர்வம் யஸ்மாத் ப்ரம்மண: விக்ஞானத்



ஸர்வம் பவதி" என்றும், ஆனந்தகிரி வியாக்யானத்தில், "ஸர்வம் ஸர்வாப்தி ஸ்தானம்" எல்லா பதார்த்தங்களையும் அடைவதற்கு காரணம் என்றும் சொல்லியிருப்பதைக்கொண்டு, இந்த ப்ரம்மம் ஸர்வப்ராப்திக்கு ஸாதனமானது என்றோ அர்த்தம்தான் எற்படக்கூடுமாதலால், இந்த ஸர்வம் கல்விதம் ப்ரம்ம என்னும் சுருதி ஜகத்துக்கு மித்யாத்வத்தை போதிப்பதில்லை.

இப்படியேதான் "ஆத்மைவேதம் ஸர்வம்" (சாந்தோக்யம் 7—25—2) "ப்ரம்மைவேதம் விச்வம்" (முண்டகம் 2—2—11) "இதம் ஸர்வம் யதயமாத்மா" (பிருஹதாரண்யகம் 2-4-6) முதலான சுருதிகளில் ஜகத்துக்கு மித்யாத்வத்தை போதிக்கும் பதம் இல்லை. இக்குள்ள ஸாமாநாதிகரண்யத்திற்கும் மேலே விவரித்திருக்கிறபடி "ஸர்வஸ்ய வசீ ஸர்வஸ்யேசான:" முதலான அநேக சுருதிகளுக்கு அனுஸரணையாயும் மேலே காட்டியிருக்கிறபடி சங்கரபகவத்பாதாள் முதலான அத்வைதிகளின் வியாக்யானங்களுக்கு அனுசரணையாயும் பிரம்மத்தின் அதீனமென்ற அர்த்தம் எற்படுவதாலும், மித்யாத்வத்தை போதிக்கும் பதமில்லாமலிருப்பதாலும், ஸர்வம் கல்விதம் ப்ரம்ம முதலான சுருதிகளுக்கு ஜகத்தின் ஸத்யத்வத்தை அறிவிக்கும் 'விச்வம் ஸத்யம்" முதலான சுருதிகளுடன் பாதம் அதாவது விரோதம் எற்படுவதில்லை.

மேலும் "வைதர்ம்யாச்ச நஸ்வப்நாதிவத்" என்னும் ப்ரம்மசூத்திரத்தின் பாஷியத்தில் சங்கரபகவத்பாதாளோ ஜகத்துக்கு பாத க்ஞானம் வருவதில்லை என்று கூறியிருக்கிறார். அந்த கூறியிருப்பதாவது:— 'நைவம் ஜாகரிதோபலப்தம் வஸ்து ஸ்தம்பாதிகம். கஸ்யாம் சிதப்யவஸ்தாயாம் பாத்யதே" ஜாக்ரத் காலத்தில் அதாவது விழித்துக்கொண்டிருக்கையில் ஸத்யமானதென்று அறியப்படும் கம்பம், சுவர் முதலிய வஸ்துக்களுக்கு முக்காலத்திலுமில்லாததென்கிற பாதக்ஞானம் வருகிறதில்லை ஆகையால் அவைகள் ஸத்யமானவைகளென்றுதான் ஒப்புக்கொள்ளவேண்டும் என்கிறார். இதனால் பிரபஞ்சம் மெய்யென்று அறிவிக்கும் பிரமாணங்களுக்கு பாதக்ஞானம் எற்படுவதில்லையென்பது பிரம்மசூத்திரம் செய்தவர்களுக்கும் அதன் பாஷிய கர்த்தாவான சங்கராசாரியாருக்கும் ஸம்மதமானதென்று ஸ்பஷ்டமாய் எற்படுகிறது.

மேலும் பிரபஞ்சத்தை பொய்யென்று சொல்லும் பௌத்த மதத்தை கண்டிப்பதாய் சொல்லப்பட்டிருக்கும் "நாபாவ உபலப்தே:" என்னும் சூத்திரத்திற்கு பாஷியம் செய்திருப்பதில் சங்கராசாரியார் ஜகத் கண்ணிற்குத் தென்பட்டுக்கொண்டிருப்பதால் ஜகத்தின் அபாவம் அஸத்வம் அதாவது இல்லை என்பது இல்லை. என்று நிரூபித்து

ஜகத்தின் அஸத்பாவத்தை கண்டித்து ஜகத்தின் ஸத்யத்தைத்தான் நிர்மாணம் செய்துள்ளார். அவருடைய பாஷியமாவது:— "ந கல்வ பாவோ பாஹ்யார்த்தஸ்ய அத்யவஸாதும் சக்யதே கஸ்மாத் உபலப்தே:| உபலப்யதே ஹி ப்ரதிபத்யயம் பாஹ்யோர்த்த: ஸ்தம்ப: குட்யம் கட: பட: இதி| ந சோபலப்யமானஸ்யைவ அபாவோ பவிதுமர்ஹதி| யதாஹி கஸ்சித் புஜ்ஜான: புஜிஸாத்யாயாம் த்ருப்தௌ ஸ்வயம் அனுபூயமானாயா மேவம் ப்ரூயான்னாஹம் புஞ்ஜே நவா த்ருப்யாமீதி| தத்வதிந்திரிய ஸந்நிகர்ஷேண ஸ்வயம் உபலபமான ஏவ பாஹ்யமர்த்தம் நாஹமுபலபே ந ச ஸோஸ்தீதி ப்ருவன் உபாதேயவசன: ஸ்யாத்||" பிரபஞ்சம் உபலப்தமாகிறதில்லை. (காணப்படுவதில்லை)யாதலால் ஜகத் இல்லை என்று பௌத்தர்கள் சொல்வது சரியல்ல. நாபாவ: உபலப்தே: என்றால் ந அபாவ: உபலப்தே: கடபடாதி ஜகத் தென்படுவதால் இந்த பிரபஞ்சம் இல்லை என்று சொல்லலாகாது. இவைகள் கண்ணுக்குத் தென்பட்டுக் கொண்டிருக்க இவைகள் இல்லை என்று சொல்வது அதாவது இவைகளின் அபாவம் பொருந்துவதில்லை. ஒருவன் போஜனம் செய்துவிட்டு போஜனத்தால் உண்டான திருப்தியை அனுபவித்துக்கொண்டிருந்தும் நான் போஜனமே செய்யவில்லை, திருப்தனுமாகவில்லை. என்று சொல்லும்பக்ஷத்தில் அந்த வார்த்தை எப்படி அங்கீகரிக்கத் தகுந்ததல்லவோ அப்படியேதான் ஒருவன் இந்திரிய ஸம்பந்தத்தால் கடபடாதி பதார்த்தங்களைக் கண்டுகொண்டிருந்தும், ஞானத்தைவிட வேறான அதாவது ஞானத்துக்கு அப்பாலுள்ள வெளி வஸ்துக்களை நான் காண்பதில்லை. ஆதலால் அந்த வஸ்துக்கள் இல்லையென்று சொல்பவனுடைய வார்த்தையும் ஒப்புக்கொள்ளத் தகுந்ததன்று என்றார்.

"ஸர்வப்ரமாணை: ப்ரபஞ்ச உபலப்யமானே ததபாவ ஏவ தத்வமிதி நிரூபயிதும் அசக்யம்" எல்லா பிரமாணங்களாலும் இப்பிரபஞ்சம் உபலப்தமாய்க்கொண்டிருக்க பிரபஞ்சாபாவமே அதாவது பிரபஞ்சம் இல்லாதிருத்தலே தத்வமென்று விவஸ்தை செய்வது முடியாத காரியம் என்று ப்ரம்மவித்யாபரணத்திலும் பிரபஞ்சாபாவமாகிய பிரபஞ்சத்தின் மித்யாத்வத்தை ஸாதிப்பது முடியாது என்று சொல்லப்பட்டிருக்கிறது.

பிரமாணமென்னும் சப்தத்தின் அர்த்தத்தை பரிசீலனை செய்தாலும் ஜகத்துக்கு பாரமார்த்திக ஸத்யதைதான் சித்திக்கிறது. 'ப்ர' என்னும் உபஸர்க்கத்தை முன் வைத்து 'ப்ராஞ்' என்னும் தாதுவுக்கு 'கரணே ல்யுட் ப்ரத்யயம்' வைத்தால் 'ப்ரமாணம்' என்னும் சப்தம் ஏற்படுகிறது. மாஞ் என்னும் தாதுவுக்கு அர்த்தமாயுள்ள ஞானத்திற்கு ப்ர என்னும் உபஸர்க்கம் நிஜமான வஸ்து விஷயமாகக்கொண்ட



யதார்த்த ஞானத்தை போதிக்கிறது. ல்யுட் ப்ரத்யயத்திற்கு அர்த்தம் கரணம் அதாவது காரணம் ஜனகம் என்று அறிவிக்கப்படுகிறது. ஆக ப்ரமாணம் என்னும் வார்த்தைக்கு ஸத்யமாகவுள்ள வஸ்துவை விஷயமாக்கிக்கொள்ளும் யதார்த்தமான ஸம்பூர்ணக்ஞானத்தை தரக்கூடியதென்று அந்த பதத்தின வியுத்பத்தியைக்கொண்டு ஏற்படுகிறதாய் எல்லோரும் ஒப்புக்கொண்டது. இப்படியிருக்க ப்ரமாணங்களென ஒப்புக்கொள்ளப்பட்டதான சுருதி, ஸூத்ரம், கீதை முதலிய ஆகமங்களாலும் ப்ரத்யக்ஷத்தாலும், அனுமானத்தாலும் சித்தித்திருக்கும் ப்ரபஞ்சசத்திற்கு வ்யவஹாரிக ஸத்யத்வமாகிய மித்யாத்வத்தை எல்லோரும் ஒப்புக்கொள்ளும்பக்ஷத்தில், அந்த பிரமாணங்கள் ஸத்யமாகவுள்ள அதாவது யதார்த்தமான வஸ்துவை விஷயமாக்கிக்கொள்ளும் க்ஞானத்தை தரக்கூடியவைகளாகிய அதன் ப்ரமாண்யம் என்பது தொலைந்துபோம். ஆகையால் ப்ரமாணத்தால் சித்திக்கும் ஜகத்துக்கு அவசியம் ஸத்யத்வத்தைதான் ஒப்புக்கொள்ளவேண்டுமே ஒழிய வ்யாவஹாரிக ஸத்யத்வமாகிய மித்யாத்வத்தை நாம் ஏற்றுக்கொள்ளக்கூடாது.

மேலும் ப்ரமாணங்களென்பது ஸதஸத்விலக்ஷணத்வாதி வியாவஹாரிக ஸத்யத்வத்தை குறிக்கின்றனவென்பதை அத்வைதிகள் கண்டித்திருக்கின்றனர், எப்படியெனில் சங்கராசாரியார் "சூன்யவாதிபக்ஷஸ்து ஸர்வப்ரமாண விப்ரதி ஷித்த: இதி தன்னிராகரணாய நாதர: க்ரியதே" என்னும் பாஷியத்தில் எழுதியிருப்பதற்கு, வியாக்யானம் செய்யும்பொழுது பாமதீகாரர் சொல்லியிருப்பதாவது "லௌகிகானி ஹி ப்ரமாணானி ஸதஸத்வ கோசராணி, தை: கலு ஸத்ஸதிதி க்ருஹ்யமாணம் யதாபூதமவிபரீதம் தத்வம் வ்யவஸ்தாப்யதே, அஸச்சாஸதிதி க்ருஹ்யமாணம் யதாபூதம விபரீதம் தத்வம் வ்யவஸ்தாப்யதே| ஸதஸதோஸ்ச விசாராஸஹத்வம் வ்யவஸ்தாபயதா ஸர்வப்ரமாண விப்ரதிஷித்தம் வ்யவஸ்தாபிதம் பவதி| ததாச ஸர்வ ப்ரமாண விப்ரதிஷேதாந்நேயம் வ்யவஸ்தா உபபத்யதே|" "யத்யுச்யேத தாத்விகம் ப்ராமாண்யம் ப்ராமாணானாம் அநேக விசாரேண வ்யுதஸ்யதே ந ஸாம்வ்யவஹாரிகம்| ததாச பின்னவிஷயத்வாந்ந ஸர்வப்ரமாண விப்ரதிஷேத இத்யத ஆஹ|" "நஹ்யயம் ஸர்வப்ரமாண ப்ரஸித்தோ லோகவ்யவஹாரோ அன்யதத்வமனதிகம்ய சக்யதே அபன்ஹோதும்| ப்ரமாணானி ஹி ஸ்வகோசரே ப்ரவார்த்தமானானி தத்வமிதமித்யேவ ப்ரவர்த்தந்தே| அதாத்விகத்வம் து தத்கோசரஸ்யான்யதோ பாதகாத் அவகந்தவ்யம் ந புன: ஸாம் வ்யவஹாரிகம் ந: ப்ரமாண்யம் ந து தாத்விக

மித்யேவ ப்ரவர்த்தந்தே'' பிரமாணங்கள் ஜகத்தை ஸத்யமென்று காட்டிக்கொண்டிருக்கையில் ஜகத்தை ஸத்யமென்று நீங்கள் சொல்வதால் பிரமாண விரோதம் ஏற்படுவதாய் நாம் பௌத்தர்களைப் பார்த்துச் சொல்லவும் அதற்கு பௌத்தர்கள் "நாம் அவ்வாறு ப்ரத்யக்ஷாதி பிரமாணங்களால் ஏற்கனவே கிரஹிக்கப்பட்டு ஸித்தமாயுள்ள ஜகத்தின் வ்யாவஹாரிக ஸத்யத்வம் இல்லை என்று அதன் வ்யவஹாரிக ஸத்யத்வத்தை நிராகரணம் செய்வதில்லை. ஆனால் இனி இருக்கப்போவதாய் சொல்லப்படும் பாரமார்த்திக ஸத்யத்வத்தைத்தான் நிஷேதிக்கிறோம். ஏனெனில் இந்த பாரமார்த்திக ஸத்யத்வத்தை ப்ரமாணங்கள் கிரகிப்பதில்லை. ஆதலால் ப்ரத்யக்ஷாதி பிரமாணங்களுக்கு விஷயமான அதாவது பிரத்யக்ஷாதி பிரமாணங்களால் ஸித்திக்கும் ஸத்யத்வம் வேறு அதாவது அந்த வ்யவஹாரிக ஸத்யத்வம் வேறு, நாம் இல்லையென்று நிஷேதிக்கும் ஸத்யத்வமாகிய பாரமார்த்திக ஸத்யத்வம் வேறு. ஆக இரண்டு ஸத்யத்வம் வெவ்வேறாக இருப்பதால் நாம் ஜகத்து இல்லை என்கிறோம். ஆதலால் எங்கள் பௌத்தமதத்திற்கு பிரமாண விரோதம் ஏற்படுவதில்லை'' என்று சொல்லவும், அதன்மேல் அத்வைதிகளான நாங்கள் சொன்ன தூஷணையாவது, பிரமாணங்கள் விஷயங்களை கிரகிக்கும்போது பாரமார்த்திக ஸத்யமென்றேதான் கிரகிக்கின்றன. அதன் விஷயங்கள் வியவஹாரிக ஸத்யத்வத்தைக்கொண்டதென்றும் பாரமார்த்திக ஸத்யத்வத்தைக் கொண்டதல்லவென்றும் கிரகிப்பதில்லை. ஆதலால் நீங்கள் பாரமார்த்திக ஸத்யத்வத்தை நிஷேதித்தபோதிலும் ப்ரத்யக்ஷாதி பிரமாணங்களின் விரோதம் வரத்தான்வரும் என்று பாமதீகாரர் சொல்லியுள்ளார்.

ஆதலால் பிரபஞ்சம் பொய்யென்று ஜகத்தின் மித்யாத்வத்தை அறிவிக்கும் பிரமாணங்களே இல்லாதிருப்பதாலும், பிரமாணம் என்றும் பெயர் இருப்பதைக்கொண்டே அந்த சப்தத்தால் குறிக்கப்படுபவைகள் வ்யாவஹாரிக ஸத்யத்வத்தை விஷயமாகக் கொள்வதாய்ச் சொல்வது அஸம்பாவிதமானதால், பிரமாணங்களாயுள்ளவைகள் வ்யவஹாரிக ஸத்யத்வத்தை விஷயமாகக்கொண்டதென்பதை சங்கராச்சாரியார் முதலான அத்வைதிகள் கண்டித்திருக்கிறபடியாலும், "நாபாவ உபலப்தே:'' என்னும் பிரம்மஸூத்திரத்தை வியாக்யானம் செய்யும்பொழுது சங்கராசாரியார் முதலான அத்வைதிகள் பிரபஞ்சம் பொய்யன்று, மெய்யேதான் என்று தீர்மானித்திருப்பதாலும் "விச்வம் ஸத்வம்'' "ததேதத்ஸத்யம்'' முதலான பிரமாணங்களால் ஜகத்தின் பாரமார்த்திக ஸத்யத்வம்தான் சித்திக்கிறது, என்றுதான் நான் உறுதி கூறுகிறேன்.

விச்வம்பர சாஸ்திரி



ஸ்ரீ நாராயண பண்டிதாசாரியார் இயற்றிய

# ஸ்ரீமத்வ விஜயம்.

---

பன்னிரண்டாவது ஸர்க்கம்.

---

## அத்வைதிகளின் தோல்வி.

(முன் 288ம் பக்கம் தொடர்ச்சி)

26. இப்படிப் பலவகையான துராலோசனைகளைக்கொண்ட அந்தமாயாவாதிகள் ஸ்ரீமத்வாசாரியாருடன் வாதாடுவது என்று சாக்கிட்டு அவரை தூஷிக்க இச்சித்தவர்களாய் காஷாயம் தண்டம் கௌபீனம் முதலான அடையாளங்களைக்கொண்டு ஸந்யாஸி வேஷம் தரித்திருப்பவனும் விஷ்ணுத்வேஷியும் தானே பண்டிதனென்று மமதைகொண்டவனுமான புண்டரீகபுரியை ஸ்ரீமத்வாசாரியாருடன் நேரில் வாதாட ஏற்பாடு செய்தனர். 27. ஸ்ரீ மத்வாசாரியாரின் க்ஞானமாகாத்மியத்தை அறியாதிருந்த அந்த புண்டரீகபுரி என்னும் அத்வைத ஸந்யாஸி, பண்டிதோத்தமரான ஸ்ரீ மத்வாசாரியாரை அணுகி தன்னுடன் வாதாடக் கூவினான். அது எப்படி இருந்ததெனில் ஓர் சிம்ஹத்தை அணுகி தானும் கிராமஸிம்ஹம் என்னும் பெயர்கொண்டதாயிற்றே என்ற வீண் மமதைகொண்ட ஓர் நாய், அசுத்தமான எச்சிலைத்தின்ன விருப்பமுள்ளது போருக்கழைத்தாப்போல் இருந்தது. ஸ்ரீ மத்வாசாரியாரைப்போல் இந்த புண்டரீகபுரி ஸன்யாஸியாய், வெளிப்பார்வைக்கு தண்டகாஷாயாதிகளால் ஒத்திருப்பினும், தபஸ் முதலான மகிமைகளில் சிம்ஹத்திற்கும் க்ராம சிம்ஹத்திற்கும் எவ்வளவு வித்யாஸமோ அவ்வளவு பேதம் உண்டு. ஸ்ரீ மத்வாசாரியார் பரிசுத்தமானதில் விருப்பங்கொண்டவர். புண்டரீகபுரி நாயைப் போல் அசுத்தத்தில் விருப்பங்கொண்டவன். ஸ்ரீ மத்வாசாரியார் பரிசுத்தமான வேதத்தில் சொல்லப்பட்ட பரிசுத்தமான ஜீவப்ரம்ம பேதத்தில் விருப்பங்கொண்டவர். பரிசுத்தமான வேதாதிகளுக்கு விருத்தமானதால் அசுத்தமாய் இருக்கும் ஜீவப்ரம்ம ஐக்யத்தில் இந்த புண்டரீகபுரி விருப்பங்கொண்டவன், மற்றொரு வகையாயும்

சொல்லலாம். ஒத்தக்கண்ணுள்ள காகம் ஹம்ஸத்தை போருக்கழைக்காப்போலும் இருந்தது. கர் கர் என்று அர்த்தமில்லாமல் பிரமாண்டமாய் சப்தம் போடும் காகத்திற்கு ஒரே கண்தான். வீண் வார்த்தைகளை உரக்கப்பேசும் இந்த புண்டரீகபுரியும் ஜீவ ப்ரம்ம அபேதம் ஒன்றுதான் ஸத்யம், மற்ற எல்லா ஜகத்தும் அஸத்யமென்று ஒரே க்ஞானப்பார்வையுமுள்ளவன். ஹம்ஸ பக்ஷியைப்போல் அழகாய் ஸம்ஸ்கிருத வாணியைக் கொஞ்சிப்பேசும் பரம ஹம்ஸரான ஸ்ரீமத்வாசாரியாரின் ஞானப்பார்வை விசாலமானது. இன்னமும் மற்றொரு வகையாயும் சொல்லலாம். மாயம் செய்யும் குள்ளநரி பதினாறு அடி வேங்கையை போருக்கழைத்தது போலுமிருந்தது. இந்த புண்டரீகபுரியும் உலகமெல்லாம் பொய் என்று நிரூபிப்பதற்காக இவ்வுலகம் ப்ரம்மத்தினிடத்தில் கல்பிக்கப்படுவதாய்ச் சொல்லி, அதற்காக பிரம்மத்தில் அபிரமாணிகமாயுள்ள ஓர் மாயையை குள்ளநரியைப்போலவே கைக்கொள்ளுகிறான். 28. சபலஸ்வபாவமுள்ளதும் பறக்கவோ தன்னைக் காக்கவோ சாமர்த்தியமில்லாத இறகுகளுள்ளதும் மிகவும் சிறியதுமான விட்டில் பூச்சியை அல்பம்தானே என்று அலக்ஷியம் செய்யாமல், தேஜோமண்டலத்தால் விளங்கும் அக்னி ஏற்றுக்கொண்டு, கொளுத்திவிடுவதுபோல், மந்த்ரம் ஔஷதம் தபஸ் வித்யை முதலியவைகளின் மகிமையால் என்றில்லாமல் இயற்கையாகவே ஏற்பட்டுள்ள மகிமையால், இதரர்களால் ஜயிக்க மாளாதவரான ஸ்ரீ மத்வாசாரியார் சபலசித்தனும் தன் சித்தாந்தத்தை ஸ்தாபித்துக்கொள்ளவோ சத்ரு சித்தாந்தத்தைக் கண்டிக்கவோ முடியாததான அத்வைத சித்தாந்தத்தைக் கொண்டவனும் இதனால் மிக மிக பலஹீனனுமான இந்த புண்டரீகபுரியை அலக்ஷியம் செய்யவில்லை. 29. அவனுடன் வாதாடும்பொழுது. இணையற்றவைகளாகவும் எல்லா கக்ஷியினராலும் மதிக்கக்கூடியவைகளாயுமுள்ள சுருதிகள் யுக்திகள்முதலிய பிரமாணங்களைச் சொல்லி பிரகாசிப்பவரும் வேதார்த்தத்தை நன்கு அறிந்திருப்பவருமான ஸ்ரீமத் ஆனந்த தீர்த்த பகவத்பாதாள் எதிர்வாதம் செய்யும் அந்த புண்டரீகபுரியின் வார்த்தைகளை பிரபலமான சுருத்யாதி பிரமாணங்களைக்கொண்டு கண்டித்து அவனை பதில் சொல்ல முடியாமல் செய்து, தன் சித்தாந்தத்தை ஸ்தாபித்துடவும் அவனை



சபையினின்றும் எழுந்து ஓடியபின்பும் கேவலம் பகவத் ப்ரீதிக்காக அந்த சபையில் வேதத்தைப்பற்றி உபன்யாஸம் செய்தார். 30. அச்சமயம் வேதவாக்யங்களை எடுத்து சொல்லும் பொழுது ஸ்வரம்வர்ணம் முதலியவைகளை ஸம்பிரதாய கிரமப்படி வேதாத்யயனம் செய்திருந்த எண்ணிறந்த பிராம்மணர்கள் மிகுந்த ஆச்சரியத்துடன் அவருடைய சமீபம் வந்து அவர் சுற்றிலும் உட்கார்ந்து, சுந்தரமூர்த்தியும் வேதாசார்யர்களில் சிரேஷ்டருமான ஸ்ரீ மத்வாசாரியாரையே உற்றுப்பார்த்தனர். 31. இவ்வாறு வேதத்தைச் சொல்லிவரும்பொழுது க ச ட முதலிய வர்ணங்களை அந்தந்த வர்ணங்களுக்குக் குறித்ததாய் சாஸ்திரத்தில் கூறியிருக்கும் கண்டம் தாலு முதலான உருப்புகளிலிருந்து வெளியிடுபவராயும், அந்தந்த வர்ணங்களுக்குக்குறித்ததாயுள்ள ஒரு மாத்திரை அரை மாத்திரை முதலான மாத்திரை அளவுகளின் சரியான கணக்கின்படி ஸ்பஷ்டமாயும் அநாயஸமாயும் எழுத்துக்களை உச்சரிப்பவராயும் அப்பொழுது பச்யந்தி மத்யமா வைகரீ என்னும் மூவகை உச்சார நிலையையும் அந்தந்த நிலைக்குள்ள அபிமானி தேவர்களை அவரவர்களின் லக்ஷணங்களை தியானித்து, அந்தந்த அபிமானி தேவர்களை உற்பத்தி செய்கிறவராயுமுள்ள ஸ்ரீமத்வாசாரியாரைப் பார்த்து, ஆகாயத்தில் நின்று கேட்டிருந்த தேவர்களுக்கு, தேவர்களால் துதிக்கப்படும் நாராயணரின் ஞாபகம் வந்தது. ஸ்ரீ நாராயணரும் இவ்வாறேதான் வேதங்களில் "ப்ரம்மா சிரஸி லலாடே ருத்ர: சங்க்ரமாமணஸோஜாத:" முதலான சுருதிகளில் எங்கெந்த அவயவங்களிலிருந்து எங்கெந்த தேவர்கள் உற்பத்தி செய்யப்பட்டனர் என்று சொல்லப்பட்டிருக்கிறதோ அம்மாதிரியேதான் பிரம்மாதி தேவர்களை அந்தந்த ஸ்தானங்களிலிருந்து உற்பத்திசெய்கிறார். பிரசித்தமான ஆகாசாதி பஞ்சபூதங்களையும் அவைகளின் பஞ்ச மாத்திரைகளையும் அவைகளின் குணங்களான சப்த ஸ்பர்ச ரூபங்களையும் சிருஷ்டி செய்வதில் நிபுணராயிருக்கிறார். ச்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரமாகிய மூன்று நிலைகளையும் அவைகளின் அங்கங்களாயிருக்கும் ப்ரதானமாயுள்ள ஸத்வம் முதலான குணங்களுடன் சிருஷ்டி செய்கிறார்.

(தொடரும்)

# ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாமம்.

(முன் 290-ம் பக்கம் தொடர்ச்சி.)

380 உத்பவ: (ஓம் உத்பவாய நம:) பரமசிவனை வெளிக்கிளப்பியவர். பார்வதி முதலானவர்களைவிட பரமசிவனை மேலாக இருக்கும்படி செய்பவர். ஸம்ஸாரத்தினின்றும் வெளியேறியவர்.

381 க்ஷோபண: (ஓம் க்ஷோபணாய நம:) பிருகிருதி புருஷர்களை கலக்குகிறவர்.

382 தேவ: (ஓம் தேவாய நம:) க்ரீடாதிகளைக் செய்பவர். துதிக்கப்படுகிறவர். அடையப்படுகிறவர். ஜயத்தால் பிரகாசிப்பவர். காந்தியால் பிரகாசிப்பவர். விரும்பப்படுகிறவர். எங்கும் செல்பவர்.

383 ஸ்ரீகர்ப்ப: (ஓம் ஸ்ரீகர்ப்பாய நம:) மகாலட்சுமிக்கு கர்ப்பம் தருபவர். மகாலட்சுமியை கர்பம்போல் ரக்ஷிப்பவர்.

384 பரமேச்வர: (ஓம் பரமேச்வராய நம:) எல்லோருக்கும் உத்தமரும், ஈசுவரருமானவர். ஸம்ரக்ஷிப்பவரும், லக்ஷ்மீபதியுமானவர்.

385 கரணம் (ஓம் கரணாய நம:) கையில் சுகத்தைக்கொண்டவர். கையில் பலத்தைக்கொண்டவர்.

386 காரணம் (ஓம் காரணாய நம:) உலகம் தம்மால் ஸிருஷ்டிக்கப்பட இருப்பவர். ஜலத்தை ஆசிரயமாய்க்கொண்டவர். ப்ரம்மாவுக்கும், வாயுபகவானுக்கும் ஆசிரயமாய் இருப்பவர்.

387 கர்த்தா (ஓம் கர்த்ரே நம:) எல்லாவற்றையும் செய்பவர். பந்தத்தை சேதிப்பவர்.

388 விகர்த்தா (ஓம் விகர்த்ரே நம:) பலவகையான ஜகத்தை ஸிருஷ்டிப்பவர். பலவகையாய் செய்பவர். கர்த்தாவில்லாதவர்.

389 கஹன: (ஓம் கஹனாய நம:) அறியமுடியாதவர்.

390 குஹ: (ஓம் குஹாய நம:) எல்லாவற்றையும் மறைப்பவர். தன் ஸ்வரூபத்தை மறைப்பவர். உலகத்தை ரக்ஷிப்பவர்.

391 வ்யவஸாய: (ஓம் வ்யவஸாய நம:) நிச்சய ரூபியானவர். க்ஞான ரூபியானவர். ஸூர்ய மண்டலம், சந்த்ர மண்டலம், நக்ஷத்திர மண்டலங்களைக்கொண்ட ககோளம் தம்மிடம் ஆதீனமாக்கியவர். ஆகாசத்தை சரீரமாகக்கொண்டவர்.



392 வ்யவஸ்தான: (ஓம் வ்யவஸ்தானாய நம:) ஜாக்ரதை ஸ்வப்னம் ஸுஷுப்தி முதலிய அவஸ்தைகளை நடத்துகிறவர். தைத்யர்களுக்கு விருத்தமான நிலைமையைத் தருப்வர். எல்லாவிவஸ்தைகளுக்கும் ஆதாரமானவர். கருடன்மீது நிலையுள்ளவர்.

393 ஸம்ஸ்தான: (ஓம் ஸம்ஸ்தானாய நம:) தேவர்களுக்கு ஸிறந்த ஸ்தானத்தை அளிப்பவர். ஸிறந்த நிலையில் இருப்பவர்களும், ஜீவர்களும் உண்டாகக் காரணமானவர்.

394 ஸ்தானத: (ஓம் ஸ்தானதாய நம:) பக்தர்களுக்கு வைகுண்டாதி ஸ்தானத்தைக் தருபவர். தைத்யர்களின் ஸ்தானத்தை அழிப்பவர்

395 த்ருவ: (ஓம் த்ருவாய நம:) ஸ்திரமாயிருப்பவர்.

396 பரர்த்தி: (ஓம் பரர்த்தயே நம:) உத்தமர்களுக்கு ஐசுவரியமளிப்பவர். மேலான ஐசுவரியமுடையவர்.

397 பரமஸ்பஷ்ட: (ஓம் பரமஸ்பஷ்டாய நம:) விசேஷமாய் வெளியில் தெரியாதவர். மேலானவரும் ஸ்பஷ்டருமானவர். மேலான தன் ரூபத்தாலேயே மாத்திரம் ஸ்பஷ்டமானவர்.

398 துஷ்ட: (ஓம் துஷ்டாய நம:) பக்தர்கள் செய்யும் ஸேவையால் சந்தோஷப்படுகிறவர். ஆனந்த ரூபி.

399 புஷ்ட: (ஓம் புஷ்டாய நம:) போஷிப்பவர். பூர்ணமானவர்

400 சுபேக்ஷண: (ஓம் சுபேக்ஷணாய நம:) மங்களகரமான பார்வையுள்ளவர். தம்மை தரிசிப்பது எல்லோருக்கும் மங்களகரமாய் இருப்பவர்.

401 ராம: (ஓம் ராமாய நம:) ரமாதேவியின்பதி. யோகிகள் தம்மிடம் மகிழும்படி இருப்பவர். மகிழ்கிறவரும் அளவில்லாதவருமாய் இருப்பவர். பக்தர்களை மகிழச்செய்கிறவர். ஆனந்த ரூபியானவர். பூர்ணராயிருப்பவர். அழகான சரீரமுள்ளவர். உலகில் க்ரீடிப்பவர்.

402 விராம: (ஓம் விராமாய நம:) உலகத்தாருக்கெல்லாம் உத்தமியான மகாலட்சுமியை பாரியையாகக் கொண்டவர். பல

வகையார்களான கோபிகைகள் முதலிய ஸ்திரீகளைக்கொண்டவர். ப்ரளய காலத்தில் ஜனங்களை ஓயச்செய்கிறவர்.

403 விரஜ: (ஓம் விரஜாய நம:) ரஜஸ் தமஸ் ஸத்வமாகிய மூன்று ப்ராகிருத குணங்களும் விலகிப்போனவர். தோஷமில்லாதவர்.

404 மார்க்க: (ஓம் மார்க்காய நம:) மிருகமான ஸிம்ஹத்தின் முகமுள்ளவர்.

405 நேய: (ஓம் நேயாய நம:) சிஷ்யர்களுக்கு உபதேசிப்பதால் அழைத்துப்போகப்பட அருகமானவர்.

406 நய: (ஓம் நயாய நம:) அவரைவிட உத்தமர் இல்லாதவர்.

407 அநய: (ஓம் அநயாய நம:) வாயு பகவானை பூமியில் பிறக்கச் செய்கிறவர். ஒருவராலும் நடத்தப்படாதவர். விரோதிகளால் நடத்த முடியாதவர். உத்தமமான நன்மையைச் செய்பவர்.

408 வீர: (ஓம் வீராய நம:) ஞானத்தால் ரமிப்பவர். பாராக்கிரமமுள்ளவர். நடுங்கச் செய்கிறவர்.

409 சக்திமதாம் ச்ரேஷ்ட: (ஓம் சக்திமதாம் ச்ரேஷ்டாய நம:) சக்திவாய்ந்த பிரம்மாதி தேவர்களுக்குமே ச்ரேஷ்டர்.

410 தர்ம: (ஓம் தர்மாய நம:) எல்லாவற்றையும் தரிப்பவர், எல்லோராலும் அடையப்படுகிறவர்.

411 தர்மவித்துத்தம: (ஓம் தர்மவிதுத்தமாய நம:) தர்மம் தெரிந்தவர்களில் சிறந்தவர். தர்மிஷ்டர்களை ஞானிகளாய் செய்தவர்.

412 வைகுண்ட: (ஓம் வைகுண்டாய நம:) விகுண்டா தேவியின் குமாரர் வைகுண்டத்தில் வசிப்பவர்.

413 புருஷ: (ஓம் புருஷாய நம:) எல்லோருக்கும் முன் முதல் இருப்பவர். எல்லா தோஷங்களை நாசம் செய்பவர். சரீரத்தில் இருப்பவர். நிறைந்து இருப்பவர். பரிபாலனம் செய்பவர்.

414 ப்ராண: (ஓம் ப்ராணாய நம:) முக்தர்களைவிட மேலானவர். உத்தமமான பெயருடன் சலிப்பவர்.

415 ப்ராணத: (ஓம் ப்ராணதாய நம:) சுகத்துக்கு எதிரிடையாயுள்ள துக்கத்தை விசேஷமாய் நிவர்த்திப்பவர். சிறந்த



வர்களின் நாயகர். வாயுபகவானைக் குருவாகக்கொண்ட பக்தர்களுக்கு உயிரைத்தருபவர். ப்ரளயகாலத்தில் உயிரை அழிப்பவர்.

416 ப்ரணவ: (ஓம் ப்ரணவாய நம:) சிறந்த நீதியில் நடத்துகிறவர். ஜீவர்களை ப்ரேரிப்பிப்பவர். சிறந்து புதிதாய் இருப்பவர். சிறந்து நமஸ்கரிக்கப்படுபவர்.

417 ப்ருது: (ஓம் ப்ருதவே நம:) ப்ரக்யாதராய் இருப்பவர்.

418 ஹிரண்யகர்ப்ப: (ஓம் ஹிரண்யகர்ப்பாய நம:) ஸுவர்ணமயமான பிரம்மாண்டத்தை வயிற்றில் தரித்திருப்பவர்.

419 சத்ருக்ன: (ஓம் சத்ருக்னாய நம:) சத்ருக்களை ஸம்ஹரிப்பவர்.

420 வ்யாப்த: (ஓம் வ்யாப்தாய நம:) உத்தமர்களான பிரம்மாதிகளுக்கு ஆப்தர். கருடனை வாகனமாய் அடைந்தவர். எங்கும் வியாபித்திருப்பவர்.

421 வாயு: (ஓம் வாயவே நம:) பலரூபியாயும் செல்லச் செய்கிறவராயுமிருப்பவர். செல்பவராயும் உயிரை தரிக்கக் காரணராயும் இருப்பவர். எல்லாவற்றையும் அறிபவர். எல்லாவற்றையும் மறைப்பவர். எல்லாவற்றாலும் மறைக்கப்படுகிறவர். எல்லோராலும் பிரவிருத்திக்கப்படுபவர். எல்லோரையும்விட சிரேஷ்டரானவர். நல்ல வாஸனையை உண்டாக்குகிறவர். எங்கும் செல்பவர்.

422 அதோக்ஷஜ: (ஓம் அதோக்ஷஜாய நம:) அக்ஷகுமாரனை கீழே தள்ளி ஸம்ஹாரம் செய்தவரான ஹனுமாரால் வெளிப்படுத்தப்படுபவர். அந்த ஹனுமாரை உண்டாக்கினவர். இந்திரிய நிக்ரஹமுள்ளவர்களான வசுதேவன் தசரதன் முதலியவர்களிடமிருந்து பிறந்தவர். ப்ரத்யக்ஷத்தை கீழாக்கியவர்.

423 ரிது: (ஓம் ரிதவே நம:) மோக்ஷத்திற்கு ஸாதனமான மார்க்கமாய் இருப்பவர். தன் ஸ்வரூபத்தை அறிவிக்கச் செய்பவர். ருதுவாகிய காலரூபியானவர்.

424 ஸுதர்சன: (ஓம் ஸுதர்சனாய நம:) ஸுதர்சன சக்ரமுள்ளவர். சிறந்த சாஸ்திரமுள்ளவர். அழகிய சாஸ்திரங்களுள்ளவர். ஸுந்தரரூபமுள்ளவர். முக்தியைத்தரும் தரிசனமுள்ளவர். பக்தர்களால் ஸுலபமாய் பார்க்கக்கூடியவர்.

425 காலः (ஓம் காலாய நம:) ஜகத்தைக் கட்டுப்படுத்துபவர். ஜக்த்தை சேதிப்பவர். ஜகத்துக்கு ஞானத்தைத் தருபவர். ஜகத்துக்கு எல்லாவற்றையும் தருபவர். அயோக்யர்களுக்கு சுகம் ஏற்படாமல் தடுப்பவர். பக்தர்களின் சரீரத்தை பூஷிப்பவர். ஸுகத்தை அவரவர்களின் யோக்யதைக்கு தகுந்தபடி பூர்ணமாய்ச் செய்பவர். ஸுகத்தை நன்கு அளிப்பவர்.

(தொடரும்.)

---

# ஸ்மார்த்தர்களின் மாம்ஸபக்ஷணம்.

---

(முன் 312-ம் பக்கம் தொடர்ச்சி.)

வேதவித்துக்கள் யாரெனில் வேதத்தை உருப்போட்டு தங்குதடையின்றி சொல்லும் சமத்காரம் படைத்தவர்கள் அன்று. பூர்வோத்தர விமரிசையுடன் வேதத்தின் நோக்கத்தையும் அர்த்தத்தையும் அறிந்தவர்கள்தான். அப்பேர்ப்பட்ட வேத வித்துக்களில் முதல் ஸ்தானத்தைப்பெற்றவர் யாரெனில் "வேதைஸ்ச ஸர்வைரஹமேவ வேத்யோ வேதாந்தக்ருத் வேதவிதேவ சாஹம்" ஸமஸ்தமான வேதங்களாலும் சொல்லப்படுகிறவன் நான் ஒருவனே என்றும், நான்தான் ஸமஸ்தமான வேதங்களின் தாத்பர்யம் இன்னதென்று நிர்ணயித்து வேதாந்த ஸூத்திரங்களை ஸ்ரீவேதவியாஸரென்னும் ரூபத்தால் இயற்றியிருப்பவனென்றும் ஸமஸ்தமான வேதங்களின் தாத்பரியத்தை அறிந்திருப்பவன் நான் ஒருவனே என்றும் சொல்லிக்கொண்டு, "புத்திர் புத்திமதாஸ்மி" புத்திமான்களுக்கு அவர்களின் புத்தியைத் தருபவன் நானே. என்று உறுதிகூறி, "மத்த ஸ்ம்ருதி: க்ஞானமபோஹனம் ச" என்னாலேயேதான் உலகத்தாருக்கு ஞாபகசக்தியும் சரியான க்ஞானமும், விபரீத க்ஞானமும் உண்டாகிறதென்று விளம்பரம் செய்து, அர்ஜுனனை சாக்கிட்டு, உலகத்தாருக்கு பரம்பொருளைப்பற்றி வேதத்தின் தாத்பரியம் இன்னதென்று பகவத்கீதை மூலமாய் அறிவித்தவரும், வேதத்தின் அபிமானியான லக்ஷ்மீதேவியின் பர்த்தாவமான, ஸ்ரீகிருஷ்ணர்தான். அவரே ஏகாதச ஸ்கந்த பாகவதத்தில் தன் நண்பனான உத்தவனுக்கு தர்ம ரகசியங்களை உபதேசித்து வரும்பொழுது, இத்தகைய யக்ஞத்தைப்பற்றி சொல்லுங்கால், "கிம் விதத்தே கிமாசஷ்டே கிமனூத்ய விகல்பயேத்| இத்யஸ்யா ஹ்ருதயம் லோகே



நான்யோ மத்வேத கஸ்சன" வேதம் இன்னதை செய்யத்தான் வேண்டுமென்று விதி வாக்யங்களால் கட்டாயப்படுத்துகிறதென்பதையும், இன்ன உண்மையை வெளிப்படுத்துகிறதென்பதையும், இன்னதை நிஷேதிக்கிறதென்பதையும் என்னைத்தவிர வேறொருவரும் அறியமாட்டார்களென்றும் மீண்டும் மார்தட்டிக்கொண்டவராய், அறிவித்திருப்பதாவது:- "தேமே மதம் அவிக்ஞாய பரோக்ஷம் விஷயாத்மகா:| வ்ருதா பசூன் விநிக்னந்தி ஹிம்ஸ்யந்தே ப்ரேத்ய தைஸ்துதே| ஹிம்ஸாயாம்யதி ராக: ஸ்யாத் யக்ஞ ஏவ நசோதநா| ஹிம்ஸாவிஹாரா ஹ்யாலப்தை: பசுபி: ஸ்வஸுகேச்சயா| யஜந்தே தேவதா: யக்ஞை: பித்ருபூதபதீன் கலா:||" இன்ன கர்மாதான் எனக்கு சந்தோஷத்தைத் தரக்கூடியதென்று ஸ்பஷ்டமாய் காட்டாமல் இரகசியமாய் வைத்திருக்கும் என் அப்பிராயத்தை வேதவித்துக்கள் என்று தரபிமானம் கொண்ட அந்த அயோக்யர்கள் தெரிந்துகொள்ளாமல் கேவலம் விஷயசுகத்தில் ஈடுபட்டவர்களாய், கேவலம் மோகமடைந்தவர்களாய் வேதத்தில் இவ்வாறு செய்யத்தான் வேண்டுமென்று வற்புறுத்தாமல் இருக்கும்பொழுது வீணாகவே வெள்ளாடு முதலிய பசுக்களை வதைக்கின்றனர். அப்படி அவர்களால் கொல்லப்பட்ட ஆடுகள் இவர்கள் எப்போது இறப்பார்களென்று சமயம் பார்த்திருந்து அவர்கள் யமலோகம் வந்தவுடன் பதிலுக்கு பதிலாய் கோரமான பற்களால் அவர்களை ஹிம்சிக்கின்றன. யக்ஞத்தில் ஆடுகளைக் கொல்லத்தான்வேண்டுமென்று நசோதனை வேதத்தில் எங்கும் நிர்பந்தம் இல்லை. ஆட்டை அடிக்கவும், அதன் மாமிஸத்தை புஜிக்கவும் இவர்களுக்கு ஆசை ஏற்பட்டால் யக்ஞமென்று கடையை பரப்புகின்றனர். ஆடுகளை அடிக்கின்றனர். அதன் மாமிஸத்தை புஜிக்கின்றனர். இவ்வாறு ஆடுகளை அடிப்பதும், அவைகளின் மாமிஸத்தை புஜிப்பதும் அவர்களுக்கு விளையாட்டாகவே இருக்கின்றன. அதில் அவர்கள் ஆனந்தம் அடைகின்றனர். தங்கள் சொந்த ஸுகத்தைக்கருதி இதரர்களுக்கு ஏற்படும் ஹிம்ஸையை கவனியாமல் யாகமென்று சாக்கிட்டு ஆடு அறுத்து இந்த போக்கிரிகள் இத்தகைய யாகங்களை தேவர்கள், பித்ருக்கள், பூதபதிகள் இவர்களை உத்தேசித்தும் செய்கின்றனர் என்று அறிவித்துள்ளார்.

யக்ஞத்தில் வீணாய் தங்களை அடித்துக்கொள்வதற்காக அந்த ஆடுகள் ஆத்திரப்பட்டு அந்த யக்ஞம் செய்தவனை யமலோகத்தில் தாக்கி ஹிம்சிப்பதாய், இவ்வாறு ஸ்ரீகிருஷ்ணர் மட்டில் சொல்லவில்லை. பாகவதம் சதுர்த்தஸ்கந்தத்திலேயும் ப்ராசீன பர்ஹிஸ் என்னும் அரசனைப்பார்த்து, நாரதர் "போபோ ப்ராஜாபதே ராஜன் பசூன் பச்ய

க்வயாத்வரே| ஸம்க்ஞாபிதான் ஜீவஸங்கான் நிர்க்ருணேன வைஹஸா:| ஏதே த்வாம் ஸம்ப்ரதீக்ஷந்தே ஸமரந்தோ வைசஸம் தவ| ஸம்பரேதம் அய: கூடை: சித்தந்தி உத்திதமன்யவ:||" ஜனங்களுக்கு ஆபத்து வராமல் ஸம்ரக்ஷிப்பவனாய் இருக்கும் ராஜனே! இப்போது நீ என்ன செய்து இருக்கிறாய். உன் கண்ணாலேயே பார். இந்த யக்ஞம் என்று சாக்கு வைத்து கொஞ்சம்கூட தயவு இறக்கமில்லாமல் கும்பு கும்பாய் எவ்வளவு ஆடுமாடு முதலிய வாயில்லா ஜீவன்களை வீணாகத்தானே அடித்துப் போட்டிருக்கிறாய்? நீ இவ்வாறு செய்ததற்கு இவைகள் எல்லாம் உன்னை சும்மா விடப்போவதில்லை. நீ விளைவித்த துக்கத்தை மனதிலேயே வைத்துக்கொண்டு பழிக்குப்பழியாய் எப்போது உன்னை கொல்லலாமென்று சமயம் பார்த்துக்கொண்டு உன் மரணத்தை எதிர்பார்த்து இருக்கின்றன. நீ இறந்து யமலோகம் வந்தவுடன் ஆத்திரம் பொங்கி அவைகள் எல்லாமே சேர்ந்து பெரிய பெரிய இரும்புத்தூண்களைப் போன்ற பற்களாலும், கொம்புகளாலும், குளம்புகளாலும் உன்னைக் குத்திக் கிழித்து சின்னாபின்னமாக்கப்போகின்றன. இது நிச்சயம் இதை ஏதோ விளையாட்டாய் மிகைப்படுத்தி சொல்லுகிறேனென்று எண்ணவேண்டாம், "அத்ரதே கதயிஷ்யேமும் இதிஹாஸம் புராதனம்| புரஞ்ஜனஸ்ய சரிதம் நிபோத கததோ மம||" உன்னைப்போன்ற அரசன் ஒருவன் புரஞ்ஜனன் என்பவன் இப்பேர்ப்பட்ட பசு வதைக்கொண்ட யக்ஞத்தை செய்து தக்க தண்டனை அடைந்திருக்கிறான். அதைச் சொல்லுகிறேன் கேள், என்று அவனை கவனிக்கச்செய்து, அற்புதமான புரஞ்ஜனோபாக்யானத்தை விஸ்தாரமாய் அறிவித்துவருகையில் "ஈஜே ச க்ரது பிர்கோரை: தீக்ஷித: பசுமாரகை:| தேவான் பித்ருன் பூதபதீன் நாநாகாமோ யதா பவான்||" ப்ராசீன பர்ஹிஸ்ஸே| உன்னைப்போலவே அந்த புரஞ்ஜனனும் தீக்ஷிதராயிருந்து, ஆடுமாடுகளைக்கொன்று கொடிதான யாகங்களை பலவகை காமனைகளுடன் தேவர்கள் பித்ருக்கள் பூதபதிகளை உத்தேசித்து செய்தான்." என்று சொல்லிவிட்டு "தம் யக்ஞபசவோ நேன ஸம்க்ஞப்தா யே அதயாளுனா| க்ருடாரைஸ் சிச்சிது: க்ருத்தா ஸ்மரந்தோ ஹ்யாத்ம வைசஸம்" அவன் மரணமடைந்து நரகயாதனையை அனுபவித்துவரும்பொழுது, முன்பு பூமியில் அவன் யக்ஞத்தில் நிறிதும் கருணையின்றி கொன்றிருந்த ஆடுமாடு முதலிய பிராணிகள் தங்களை கொலை செய்ததை எல்லாம் ஞாபகத்தில் வைத்துக்கொண்டு கோடரியைப்போல் கூர்மையாய் முளைத்துப்பெற்றதான பற்கள முதலியவைகளால் மிகவும் ஆத்திரத்துடன் அவனுடைய சரீரத்தைப் பிளந்து சின்னாபின்னமாக்கின என்று முன் நடந்த அனுபவத்தையும் தானே நேரில் அறிந்திருப்பதாய் சொல்லியுள்ளார்.



இவ்வாறு ஸ்ரீகிருஷ்ணர் நாரதர் முதலானவர்கள் சொல்லியிருப்பதைக்கொண்டு யக்ஞத்திலேயும் ஆடு அறுப்பது அதன் கொலையே ஆகிறதென்றும், அந்த கொலைக்கு கொலை, பின்பு யமலோகத்தில் தர்மராஜனின் நியாய ஸ்தானத்தில் விசாரணை நடந்து தண்டனை ஏற்படுகிறதென்றும், அந்த உத்திரவை அமுலுக்கு கொண்டுவர அவ்வாறு யக்ஞத்தில் கொல்லப்பட்ட ஆடுகளே தயாராய் ஆத்திரத்துடன் முன் வருகிறதென்றும் ஸ்பஷ்டமாய் தெரியவருகிறது. உண்மையாய் யக்ஞத்தில் ஆடு அறுப்பது ஆட்டிற்கு ஹிம்சையாய் இல்லாமல், சிரங்கு கட்டி வந்தவனுக்கு கத்தியால் அந்த கட்டி அறுக்கப்படும் சமயம் துக்ககரமாயிருந்தாலும் பின்பு அந்த துக்கம் நிவிருத்தியாகி அவனுக்கு பேரானந்தம் ஏற்படுவதுபோல், அந்த ஆட்டிற்கு துக்ககரமாய் அச்சமயம் இருந்தாலும், பின்பு ஸ்வர்க்கவாசம் ஏற்பட்டு பேரானந்தமே உண்டாவது நிச்சயமாய் இருக்கும்பக்ஷத்தில், யக்ஞத்தில் கொலையுண்டு இறந்துபோன ஆடுகளுக்குத் தன்னை கொலை செய்த இந்த கொலைபாதகன் எப்போது இறப்பான் என்றும், யமலோகம் வந்து சேருவான் என்றும் அவனுடைய நாசத்தையே அவைகள் எதிர் பார்த்துக்கொண்டு இருப்பதும், எவ்வளவு வருஷகாலம் ஆனாலும் அவைகளின் ஆத்திரம் தணியாமல் பழிக்குப்பழி வாங்க அவைகள் தீர்மானித்திருப்பதும் சம்பாவிதமல்ல. அச்சமயமும் சரியே பின்பும் சரியே துக்ககரமாய் இல்லாதிருந்தால் ஒருக்காலும் அந்த ஆடுகளுக்கு அவ்வளவு ஆத்திரம் ஏற்படமாட்டாதுதான். தர்மாதர்மங்களை சீர்விசாரித்து அதர்மத்திற்குத் தக்க தண்டனைகளை விதிக்கப்படும் யமதர்மனின் ராஜ்யத்தில் தர்மமென்று வாதாடப்படும் இப்பசுவதைகொண்ட யக்ஞம் செய்தவனுக்கு ஒருக்காலும் பாபசிக்ஷை ஏற்படமாட்டாது. அதற்காக அந்த ஆடுகளே நிருத்தப்பட்டு அவைகளுக்கு இரும்புத்தூண்கள்போலும், கூர்மையான கோடரிகளைப்போலும் பற்களும், கொம்புகளும் குளம்புகளும் முளைத்திருக்கும்படி பிரம்ம சிருஷ்டியும், யமதர்மனின் ஸகாயமும் ஒருக்காலும் ஏற்படமாட்டாது. இவ்வாறெல்லாம் ஏற்பட்டிருப்பதைக்கொண்டு யக்ஞத்தில் செய்யப்படும் ஜீவஹிம்சை ஹிம்சையேயல்லவென்றும் யக்ஞத்தில் ஹிம்சிக்கப்படும் ஆடுகளுக்கு ஸ்வர்க்கவாசம் வந்து ஸுகமே ஏற்படுகிறதென்றும் சொல்வது பகற்கனவேயாகும். இதுவும் மற்றொரு உபாக்யானத்தால் நன்கு வெளியாவதை அறியலாம். சூரிய குலத்து அரசனான அம்பரீஷன் மனுஷ்யனையே பசுவாய்க்கொண்ட புருஷமேதத்தைச் செய்யும்பொழுது அவ்வரசனின் யக்ஞத்திற்கு தடை செய்ய விருப்பங்கொண்டு, மகேந்திரன் யூபத்தில்

கட்டப்பட்டிருந்த அந்த ஆசாமியை ஒருவருக்கும் தெரியாமல் மறைவாய் இருந்து அவிழ்த்துக்கொண்டு போய்விடவும், அம்பரீஷன் உலகெல்லாம் தேடியும் அந்த புருஷனைக் காணமுடியாமல் கிரயம் கொடுத்தாவது தகுந்த புருஷனைக் கொண்டுவர எத்தனித்தும் பலிக்காமற் போகவே மகாத்மாவான ரிசீகமுனிவரின் காலில் விழுந்து அவருடைய மூன்று புதல்வர்களில் ஒருவனை கிரயத்துக்கு தனக்கு கொடுத்து தன் யக்ஞத்தை பூர்த்தி செய்விக்கவேண்டுமென்று பிரார்த்திக்க, ரிசீகர் தன் மூத்த புத்திரனைக் கொடுக்கமுடியாதென்று சொல்லிவிடவும், விச்வாமித்திரரின் சகோதரியான அவருடைய பாரியாள் கடைசி மகனையும் கொடுக்கமுடியாதென்று மறுத்துவிடவும், மத்யமகுமாரனான சுனச்சேபன் தன்னைத்தான் மாதா பிதாக்கள் இருவரும் கிரயத்திற்கு கொடுத்துவிட இச்சைப்பட்டிருக்கின்றனர் என்று தெரிந்துகொண்டு, பிதாவின் ஆக்ஞையின்பேரில் அம்பரீஷனுடன் புறப்பட்டுப்போகவும், அம்பரீஷன் நடுவழியில் புஷ்கரத்தில் தங்கி மத்யான்ஹகாலத்தில் களைப்பாறி இருக்கும் சமயம் அவனுக்கு தெரியாமல் வெளியே வந்து அங்கு தவம் செய்துகொண்டிருந்த தன் தாய் மாமனான விச்வாமித்திரரின் காலில் விழுந்து, தன் விருத்தாந்தத்தை அறிவித்து எப்படியாவது தன்னை தப்பிவித்துவிடவேண்டுமென்று ப்ரார்த்திக்கவும், விச்வாமித்திரருக்கு தயவுவந்து, தன் ஆயிரம் பிள்ளைகளில் ஒருவனாவது சுனச்சேபனுக்கு பதிலாய் சென்று அம்பரீஷனின் யக்ஞத்தைப் பூர்த்தி செய்யட்டுமென்று தன் ஆயிரம் பிள்ளைகளையும் கேட்டும், அவர்களில் ஒருவரும் அதற்கு சம்மதிக்காமல் போகவே, அவர்கள் எல்லோருமே நாய் மாமிஸம் புஜிக்கும் சண்டாளர்களாய் போகக்கடவது என்று அவர்களுக்கு சாபமிட்டு, எப்படியாவது சுனச்சேபனைக் காக்கவேண்டுமென்று கங்கணங்கட்டிக்கொண்டு, இரண்டு வேத மந்திரங்களை அவனுக்கு உபதேசம் செய்து, யக்ஞத்தில் கொல்லப்படுவதற்காக யூபத்தில் கட்டப்பட்டபின் இவைகளைக்கொண்டு இந்திரனையும், உபேந்திரனையும் துதித்தால் அவர்களால் க்ஷேமம் ஏற்படுமென்று உறுதி கூற, சுனச்சேபனும் அவ்வாறே அம்பரீஷனுடன் சென்று யக்ஞத்தில் துதிக்கவும் அந்த தேவர்கள் மகிழ்ந்து சுனச்சேபனை அவிழ்த்துவிட்டனர். இந்த சரிதை வேதத்திலும், அநேக புராணங்களிலும் காணப்படுவதுடன், எல்லோரும் அதிகமாய்ப் படிக்கும் ஸ்ரீ வால்மீகிராமாயணம் பாலகாண்டத்திலும் (ஸ. 61–62) காணப்படுகிறது. யக்ஞத்தில் கொல்லப்படும் பசுவுக்கு பவபந்தம் விலகி ஸ்வர்க்கவாசம் முதலிய நன்மைகள் ஏற்படுவது உண்மையாயிருந்தால் அறிவாளியான சுனச்சேபன் இவ்வளவு



துக்கத்தையும், தன்னை தப்புவித்துக்கொள்ள இவ்வளவு யத்தனத்தையும் செய்திருக்கமாட்டான். அறிவாளியான விச்வாமித்திரரும், இவ்வளவு பாடுபட்டிருக்கமாட்டார். ஸ்பஷ்டமாக விச்வாமித்திரரிடம் சுனச்சேபன் சொன்ன வார்த்தையிலிருந்தும் இது வெளியாகிறது. "ராஜா ச க்ருத கார்யஸ்யாத் அஹம் தீர்க்காயுரவ்யய:| ஸ்வர்க்கலோகம் உபாச்னீயாம் தபஸ்தப்த்வா ஹ்யனுத்தமம்" மாமாவே! அரசனின் யக்ஞம் காப்பாற்றப்படவேண்டும். நானும் காப்பாற்றப்படவேண்டும். நான் நீண்ட ஆயுளுடன் இருந்து மிக்க மேலான தவம் செய்து ஸ்வர்க்கலோகம் செல்லவேண்டும் என்றார். யக்ஞத்தில் பசுவாய் இருந்து விடுவதைக்கொண்டே ஸ்வர்க்கம் வருவதாய் இருந்தால் காயக்லேசத்துடன் தவம் செய்து ஸ்வர்க்கம் கிடைக்கவேண்டுமென்று சுனச்சேபன் விரும்பியிருக்கமாட்டான். இதனால் யக்ஞ பசுவுக்கு ஸ்வர்க்கவாஸம் முதலான நன்மை கிடைப்பதென்பது உண்மைக்கு மாறானது என்று தெளிவாய் விளங்குகிறது. ஸ்ரீ கிருஷ்ணர் நாரதர் முதலானவர்கள் யக்ஞ பசுவுக்கு துக்கம் உண்டாய் தீக்ஷிதனை அவைகள் பிந்தி தாக்குவதாய் சொன்னதுதான் உண்மையென்று ஏற்படுகிறது. இவர்களின் வார்த்தைக்கு மாறாய் எங்கேயாவது ஏதாவது ஒன்றிரண்டு வார்த்தைகள் காணப்பட்டபோதிலும், அவைகளை அர்த்தவாதம் என்றுதான் சொல்வது ஒழுங்காகும். யக்ஞத்தில் கொல்லப்படும் பசுவுக்கே ஸ்வர்க்கம் கிடைக்கிறதென்றால், சிரத்தாபக்தியுடன் யக்ஞம் செய்பவனுக்கு ஸ்வர்க்கம் கிடைப்பதில் என்ன ஆக்ஷேபனை என்றும் அதனால் யக்ஞயாகாதிகள் செய்யப்படவேண்டுமென்றும்தான் அப்பேர்ப்பட்ட வாக்யங்கள் அறிவிப்பதாய் அர்த்தம் செய்யவேண்டும். அப்படி அர்த்தம் செய்தால்தான் எல்லா வாக்யங்களுக்கும் பிரமாண்யம் ஏற்படுவதுடன் ஐககண்ட்யமும் ஏற்படும். மேலே காட்டியபடி ஆட்டை அடிப்பதும் அதன் மாமிஸத்தை புஜிப்பதும் வேதங்களின் தாத்பர்யமில்லை என்று பகவானே அறிவித்துள்ளார். "சுருதி ஸ்ம்ருதீ ஹமேராக்ஞே" என்று சுருதிஸ்மிருதிகள் ஸ்ரீ ஹரியிட்ட கட்டளைகள். தான் செய்த கட்டளையின் அர்த்தம் இன்னதென்று அவர் சொன்னால், அவர் சொல்லும் அந்த அர்த்தத்தை நாம் ஒப்புக்கொள்ளவேண்டுமேயல்லாது, இதரர்கள் அவர்கள் எப்பேர்ப்பட்ட மகத்வம் வாய்ந்தவர்களாயினும், சொல்லும் அர்த்தத்தை ஏற்பது நியாயமன்று. வேதங்களையோ சாஸ்திரங்களையோ சரியானபடி அர்த்தம் செய்வது எளிதல்ல. அந்த பகவானின் அனுக்ரஹத்தால்தான் அவ்வாறு செய்யும் புத்தி உண்டாகும். அதனால்தான் புத்திர் புத்தி மதாமஸ்மி

என்றார் பகவான். ஆகவே இவ்வாறு பலவகையாய் விமரிசை செய்தாலும், வேதவித்துக்களில் முதல்வரான பகவான் ஸ்ரீகிருஷ்ணர் ஆட்டை அடித்து அதன் மாமிஸத்தை புஜித்து நடத்தும் யாகத்திற்கு ஸம்மதியளிக்கவில்லை என்றும் அவ்வாறு செய்ய வேதத்தின் தாத்பரியமில்லை என்றும் நன்கு வெளியாகிறது.

(தொடரும்.)

---

## ஸ்ரீ நாராயண பண்டிதாசாரியார் இயற்றிய

# ஸ்ரீ ஸங்கிரஹ ராமாயணம்.

---

### 4-வது சர்க்கம்.

(முன் 295-ம் பக்கம் தொடர்ச்சி.)

பிறகு ராமலக்ஷ்மணர்கள் விச்வாமித்திரருடன் அச்சமயம் அங்கு தயாராயிருந்த ஓடத்திலேறினார்கள். ஸரயூ ஜலம் சேருவதால் பிரம்மாண்டமாய் சப்தம் கேட்கும் கங்கையைக் கடந்தார்கள். அக்கரைக்கு வந்து வழிநடக்கும்போது அங்கு பயங்கரமான ஓர் காட்டைப்பார்த்துவிட்டு, ஸ்ரீராகவன் மகரிஷே! இது யாருடைய வனம், சொல்லுங்கள், என்று கேட்டார். அதற்கு விச்வாமித்திரர், ராமா! மலயதேசம், கரூச தேசம் என்று மகேந்திரனின் அனுக்ரஹத்தால் செழித்த இரண்டு தேசங்கள் இவைகள். இதில் இப்பொழுது தாடகை என்னும் ராக்ஷஸி இருக்கிறாள். அவள் முன்பு ஸுகேது என்னும் யக்ஷனின் பெண். பிரம்மாவின் வரத்தால் யாவராலும் கொல்லமுடியாதவள். பதினாயிரம் யானைகளின் பலமுள்ளவள். ஸுந்தன் என்பவனின் பாரியாள். மாரீசனின் தாயார். அகஸ்தியரின் சாபத்தால் பிள்ளையுடன் இவள் ராக்ஷஸியாக மாறி இந்த நாட்டிலுள்ள ஜனங்களை ஈவு இறக்கமின்றி பக்ஷித்துவருகிறாள். கோப்ராம்மண ஸமூகங்களின் மண்டை ஓடுகள், எலும்புகள் குவிந்துகிடந்திருப்பதைப் பார். உன்னைப்போன்றவர்களுக்கு பார்க்க சகிக்காது. இதற்கு மேல் உனக்கு எது உசிதமாகப்படுகிறதோ அதைச்செய் என்று சொல்லி விச்வாமித்திரர் சும்மாயிருந்தவுடன், ராகவன் விச்வாமித்திரருடனும் லக்ஷ்மணருடனும் அந்த தாடகை வசிக்கும் வனத்தினுள்ளேயே பிரவேசித்தார். தனுர்தாரிகளில் சிரேஷ்டரான ஸ்ரீ ராமசந்திரன் தன் தனுஸ்ஸை நாணிழுத்து சப்தம் செய்தவுடன் அது தாடகையின் காதுகளாகிற குகையை அடைந்து அதை அக்னியைப்போல் கொளுத்தியது. அந்த சப்தத்தால் பயந்து பசு பக்ஷி முதலியவைகள் ஓடி ஒளிவதற்குள் அந்த ராக்ஷஸி எதிர்வந்து நின்றாள். பெருத்த சரீரத்துடனிருந்தாள். மகா பலசாலியாயிருந்தாள். அந்த அரக்கி பெரிய குஹைபோன்ற வாயைத்திறந்து கைகளைத் தூக்கியிருந்ததைப் பார்த்து ராமர் சிறிதும் பயமின்றி ஸ்திரமாக நின்றார். அவள் சுழல் காற்றைப்போல் வெகுவேகமாய் சுற்றிக்கொண்டு பிரம்மாண்டமான சப்தமிட்டு ராமர்மீது மண்மாரியைப் பொழிந்தாள். மறுபடியும் கபடம் செய்து கல் மழையைப் பொழிவதைக் கண்டு ராமசந்திரன் இரண்டு பாணங்களைப்போட்டு அவளுடைய இரு கரங்களையும் சேதித்தார். லக்ஷ்மணர் அவளுடைய உதட்டையும், மூக்கையும் சேதித்தார். ஸாதுக்களுக்கு சத்ருவான அந்த ராக்ஷஸி இஷ்டப்படி ரூபம்தரிப்பவளானதால் ஆகாயத்தில் மறைந்திருந்து அவர்களின்மீது ஆயுதங்களை வர்ஷித்தாள். ஸ்திரீயை எப்படிக் கொல்வது என்று வெட்கப்படும் ராமசந்திரனைப் பார்த்து, விச்வாமித்திரர், குழந்தாய், இவள் சாதுக்களை வதைக்க பிசாசு போன்றவள். இவளைக் கொல், கொல் என்றார். உடனே ஸ்ரீ ராகவன் சிறித்துக்கொண்டு சிறிதும் சிரமமின்றி பாணக்கூண்டு கட்டி சக்ரம்போல் சுற்றிக்கொண்டிருந்த அந்த தாடகையை அதில் அடைத்தார். யுத்தம் செய்ய எதிர்நோக்கிவரும் அவளைக் கண்டுவிட்டு மனுஷ்யர்களுக்கு அவர்கள் செய்யவேண்டிய தர்ம மார்க்கத்தைக் காட்ட விருப்பமுள்ளவராய் தாடகையின் மார்பதனை தன் பாணத்தைக்கொண்டு சாமர்த்தியமாய் திறந்து வைத்தார். ஜகதீசுவரனான ராகவா! ஜயஜய! உமக்கு நமஸ்காரம், நமஸ்காரம். இந்த தாடகாவதம், இனி தாம் செய்யப் போகும் ஜயங்களுக்கு ஆரம்பமாகும். இது பக்தர்களுக்கு ஓர் கல்பவிருக்ஷமாகும். என்று சொல்லி சந்தோஷப்படும் தேவர்களின் கூட்டம் ஸ்ரீராமசந்திரன்மீது புஷ்ப வர்ஷம் செய்தது.

நான்காவது ஸர்க்கம் முடிந்தது.

## 5-வது ஸர்க்கம்.

இவ்வாறு தாடகாவதம் ஆனவுடன் லக்ஷ்மணருடன் கூடிய ராமசந்திரன் விச்வாமித்திரரால் மிகுந்த மரியாதை செய்யப்பட்டார். அன்றிரவு அங்கு தங்கியிருந்து காலையில் எழுந்து ஸந்த்யோபாஸ்தியை செய்தார். விச்வாமித்திரர் ராமரை களித்தழைத்து வைஷ்ணவாஸ்திரம், பிரம்மாஸ்த்ரம், சைவாஸ்த்ரம், ஆக்னேயாஸ்த்ரம் முதலிய எல்லா அஸ்திரங்களையும் உபதேசம் செய்தார். இவைகளை உபஸம்ஹாரம் செய்யும் விதங்களையும், ஜ்ரும்பகாஸ்திரங்கள் முதலியவைகளையும் உபதேசித்தார். ராமசந்திரன் எல்லாமறிந்தவரும், ஜகதீசுவரருமாயினும், இவ்வாறு உபதேசிப்பது தனது கடமை என்று விச்வாமித்திரர் உபதேசித்தார். அந்தந்த அஸ்திராபிமானிகளான பிரம்மாதி தேவர்கள் ஸ்ரீராகவனைச் சுற்றி நின்று, அஞ்சலி பந்தம் செய்துகொண்டு, பகவன், நாம் உங்களுக்கு தொண்டுபுரிய காத்திருக்கின்றோம் என்றனர். சத்ரு ஸம்ஹாரகனும், விசால மனதுடையவருமான லக்ஷ்மணரும் ப்ரம்மாஸ்த்ரம் முதலான ஸமஸ்த அஸ்திரங்களையும் விச்வாமித்ரரிடமிருந்து கற்றார். அந்த அஸ்த்ராபிமானி தேவர்களையெல்லாம் விடைகொடுத்து அனுப்பிவிட்டு, வழி நடந்துகொண்டே சமீபத்திலிருந்த ஆசிரமத்தைப்பார்த்து, எல்லாம் தெரிந்தவராயினும், ராமசந்திரன் விச்வாமித்ரரைப் பார்த்து, இது யாருடைய ஆசிரமம் என்று கேட்டார். அதற்கு விச்வாமித்திரர், குழந்தாய்! இது ஓர் உத்தமமான ஆசிரமம். இங்கு முன்பு பராக்கிரமசாலியான விஷ்ணு இருந்தார். இந்த ஆசிரமத்தில் அநேக மகரிஷிகள் தபஸ் செய்து அதன் ஸித்தி பெற்றனராதலால் இதற்கு சித்தாசிரமம் என்று பெயர். அவர்களுக்கு தபஸ் ஸித்தியைக்கொடுத்தவர் ஸாக்ஷாத் நாராயணர்தான். பலி சக்கரவர்த்தியின் பலத்தால் பயந்துபோன தேவர்கள் பிரார்த்தித்ததாலும், கச்யபர் தபஸ் செய்ததாலும், பகவான் அவருடைய பத்னியான அதிதிதேவிக்கு மகனாய் சுந்தரமான கண்ணுள்ளவராய் தேவசத்ருக்களான அஸுராதிகளுக்கு சத்ருவாய் வாமனர் என்று திருநாமத்துடன் பிறந்தார். விளையாட்டாய் பலிச் சக்ரவர்த்தியிடமிருந்து மூன்றடி பூமியை வேண்டினார். பலிச் சக்ரவர்த்தியால் பூமியில் மூன்று அடி பூமி கொடுக்கப்படவும், அணுவிலும் அணுவான பகவான் அக்ஷணமே மகத்திலும் மகத்தாய் ஆகிவிட்டார். விசித்ர பராக்கிரமமுள்ள ராகவா! மூன்று அடியால் மூவுலகத்தையும் அளந்த த்ரிவிக்ரம ரூபங்கொண்ட அந்த வாமனருடைய ஆசிரமம்தான் இது. நானும் இன்னமும் மற்ற மகரிஷிகளும் மகா புத்திசாலியான ராமா! இங்குதான்



வஸிக்கின்றோம் என்று இவ்வாறு நல்ல வார்த்தைகளை ஆடிக்கொண்டு இம்மூவர்களும் அந்த ஆசிரமத்தினுள்ளே பிரவேசித்தனர். இச்சமயம் மகரிஷிகளின் கண்ணுக்கு பெரிய திருவிழாவாய் இருந்தது. சூரியனும் சமுத்திரத்தினுள்ளே பிரவேசித்தான்.

விச்வாமித்திரர் ஆறு நாளில் செய்யப்படும் யாகத்தை ஸப்தரிஷிகளுடன் சேர்ந்து ராமசந்திரனின் ஆக்ஞை பெற்று ஆரம்பித்தார். அந்த உத்தமமான யாகம் மிக்க பெரிதாய் நடைபெற்று வரும்பொழுது ஆறுவது நாளில் ஸம்பூர்ணமான வேதியும், நெருப்புப்பட்டு எரிய ஆரம்பித்தது. பிரம்மாண்டமான ஹா ஹா என்னும் சப்தம் கேட்டது. ராமர் ஆகாயத்தில் கலகலவென்னும் சப்தத்தைக்கேட்டு அண்ணாந்து பார்க்கையில் துஷ்டர்களான மாரீசன், சுபாஹு என்னும் இரண்டு ராக்ஷஸர்கள் இருப்பதைக் கண்டு, லக்ஷ்மணா தயாராகு என்று சொல்லிக்கொண்டே தனுஸ்ஸை எடுத்துக்கொண்டார். அந்த ராக்ஷஸர்கள் இரத்தங்களாலும் மாமிஸங்களாலும் யக்ஞத்தைக் கெடுக்குமுன், யக்ஞத்தின் ஈசுவரனான ராமசந்திரன் பாணத்தை விட்டுவிட்டார். ராமர் விட்ட பாணத்தின் பராக்கிரமத்தால் மாரீசன் நூறு யோசனை தூரம் ஓடி நான் கொல்லப்பட்டுபோனேன் என்றே பயந்து லவண ஸமுத்திரத்தில் மூழ்கினான். அக்னி ஜ்வாலையுடன் கூடிய மற்றொரு பாணத்தை எடுத்து அதைப்போட்டு மகா பாஹுசாலியான ஸுபாஹுவை யமலோகம் அனுப்பினார். இன்னமும் பாணங்களைப் போட்டு, ராக்ஷஸர்களின் சிரஸ்ஸுக்களைப் பழுத்துப்போன பனம்பழங்களைப்போல கீழே உதிர்த்தார். சில ராக்ஷஸர்கள் ஓடிவிட்டனர். விச்வாமித்திரர், மகரிஷி மண்டலங்களால் சூழப்பட்டவராய் யக்ஞத்தை முடித்தார். ஆசீர்வாதங்களை வர்ஷித்து ஸ்ரீராமனை மிகவும் புகழ்ந்தார்.

அன்றிரவு கழிந்தபின் விச்வாமித்திரர் ரிஷிகளின் நடுவில் லக்ஷ்மணனுடன் சேர்ந்திருக்கும் ராமரைப் பார்த்து இவ்வாறு சொன்னார். ராமா! ஜனகராஜனின் குமாரியான சீதைக்கு சுயம்வரம் நடப்பதாய் பூமியில் எங்கும் பறைசாற்றப்பட்டிருக்கிறது. அந்த மகோற்சவத்தைப் பார்க்க ஆவல்கொண்டு எல்லா ஜனங்களும் விதேஹ தேசத்திற்குச் சென்று வருகின்றனர். அரசனின் புதல்வனே! அரசர்களும் அந்த சீதையை மணக்க இச்சைகொண்டு அங்கு செல்கின்றனர். நாங்களும் அங்கு செல்வோம். அந்த சீதா சுயம்வர மகோற்சவத்தைப்பார்ப்போம் என்று விச்வா

மித்ர முனிவர் சொல்லி, மகரிஷிகளுடன்கூடி ராமலெக்ஷ்மணர்களை அழைத்துக்கொண்டு அங்கிருந்து மேலானதான வடதிசை நோக்கிச் சென்றார்.

(தொடரும்.)

---

# விளம்பரம்.

---

## மாத்வ ஸ்திரீகளின் ஸம்பிரதாய ஜபமந்திர ஸ்தோத்திரம்.

மாத்வ ஸ்திரீகள் பிரதிதினம் செய்யவேண்டிய ஸ்ரீகிருஷ்ண மந்த்ர ஜபத்தின் பிரகாரமும் அதன் மந்திரங்களும் ஸம்ஸ்கிருதம் கன்னடம் பாஷைகளிலுள்ள 33 மந்த்ர ஸ்தோத்திரங்களும் அனைவருக்கும் உபயோகப்படும்படி தமிழ் அர்த்தத்துடன் தமிழ் எழுத்தில் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றன. இதுவரை இம்மாதிரியான நூல் வெளியானதில்லை. ஒருவருக்கொருவர் நேர்முகமாகவே படித்தறியும் பல அபூர்வ கன்னட ஸ்தோத்திரங்களை சுலபமாய் இதன்மூலமாய் யாவரும் கற்கலாம். விலை அணா 3. தபாற்கூலி பைசா ௨. முன்பணம் இந்த தொகைக்கு போஸ்டேஜ் ஸ்டாம்பாக அனுப்பப்படவேண்டும்.

*Apply to:—*

மானேஜர், மாத்வமித்திரன்,
'ஸ்ரீ வியாஸவிலாஸம்' கும்பகோணம்.

---

## விசேஷ தினங்கள்.

| | | |
|---|---|---|
| 17—6—38 | சுக்ரவாரம் | சிரவணம் உப. விஷ்ணுப. உப. |
| 24—6—38 | சுக்ரவாரம் | ஏகாதசி உப. |
| 25—6—38 | சனிவாரம் | த்வாதசி. ஸாதனி மணி 7-20க்குள் பாரணை. |
| 26—6—38 | பானுவாரம் | ஸ்ரீவிஜயீந்திரஸ்வாமிகள் புண்யதினம் |
| 27—6—38 | சோமவாரம் | தர்சம். ஸோமவார அமாவாசை. அசுவத்த ப்ரதக்ஷிணம். |
| 8—7—38 | சுக்ரவாரம் | ஏகாதசி. சாதுர்மாஸ்யம் ஆரம்பம். |
| 9—7—38 | சனிவாரம் | த்வாதசி. சாகவ்ரதம் ஆரம்பம் |
| 12—7—38 | மங்களவாரம் | பௌர்ணமி |

## மாத்வமித்திரன் பிரசுரங்கள்.

**ஸ்ரீராகவேந்திரஸ்வாமிகளின் சரித்திரம்:**—எந்த பாஷையிலுமே இதுவரை இம்மாதிரி விரிவாய் வெளியானதில்லை. ஸ்ரீராகவேந்திரர் செய்து காட்டிய திடுக்கிடும்படியான அநேக அரிய சம்பவங்கள் விஸ்தாரமாய் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. இதைப் படித்துக்கொண்டிருக்கும்பொழுதே ஸ்ரீராகவேந்திர குருஸ்வாமியிடம் சித்தம் பதிந்து பக்தி வளர்ந்து ஆனந்தக்கண்ணீர் பெருகி சரீரம் ரோமாஞ்சமாவதை ப்ரத்யக்ஷமாய் காண்போர் பலர். மேலும் பாலர், விருத்தர்வரை மாத்வர்கள் யாவராலும் தினம் உச்சரிக்கப்படும் **ஸ்ரீராகவேந்திரஸ்தோத்திரம், சுலோகங்கள் தேவநாகரத்திலும், தமிழிலும் அவ்வவ்களின் தமிழ் அர்த்தமும் சேர்க்கப்**கப்பட்டிருக்கிறது. ஏராளமாய் சிலவடைந்து வருகிறபடியால் பிந்தி ஏமாறாதிருக்க தற்போது ஆர்டர் செய்யுங்கள். விலை அணா 0—8—0 தபாற் கூலி அணா 0—1—0.

**ஸ்ரீராகவேந்திரஸ்தோத்திரம்:**—தேவநாகரத்திலும், தமிழிலும் சுலோகங்கள் அவைகளின் தமிழ் அர்த்தமும் விலை அணா 2. தபாற்கூலி 0—0—6.

**ஸ்ரீவாயுஸ்துதி:**—தேவநாகரத்தில் சுலோகங்களும் அவைகளின் தமிழ் அர்த்தமும் சேர்க்கப்பட்டிருக்கிறது. வாயுஸ்துதியின் இன்னின்ன சுலோகங்களால் இன்னின்ன பலம் ஏற்படுமென்பதும் புனஸ்சரண விதானமும் காட்டப்பட்டிருக்கிறது. விலை அணா 0—5—0 தபாற்கூலி அணா ஒன்று.

**துவைதமத விளக்கம்:**—ஸ்ரீமத்வமதத்தின் அநேக ப்ரமேயங்கள் ஸ்ரீமத்வாசாரியாரின் ஜீவியசரித்திரம் முதலியவை உள்ளது விலை அணா 2. தபாற்கூலி பைசா 6.

**கும்பகோண மகாத்மியம்:**—(தமிழ்) அணா 4. தபாற்கூலி பை 6.

**துருவசரித்திர நாடகம்:**— அணா 6. தபாற்கூலி அணா 0—1—0.

**கீதாதத்வம்:**— ஸ்ரீஉத்தராதிமடம் ஸ்வாமிகள் இயற்றி ஸ்ரீமான் ஆத்யம் பாகவதராங்கநாதாசாரியாரால் தமிழில் எழுதப்பட்டது. முதல் மூன்று சஞ்சிகைகள் சுமார் 225 பக்கங்கள் தற்போது தயார். இதர சஞ்சிகைகள் அவை வெளியானவுடன் இனமாய் புக்போஸ்ட்டில் அனுப்பப்படும். விலை 1-8-0 தபாற்கூலி 0-6-0. ஒரு ரூபாய்க்கு குறைந்து ஆர்டர் செய்கிறவர்கள் தபாற்கூலியைச் சேர்த்து கிரயத்தொகை போஸ்டேஜ் ஸ்டாம்பாய் அனுப்பப்படவேண்டும். ***Certificate of Posting*** பேரில் புஸ்தகங்கள் அனுப்பப்படும். புஸ்தகங்கள் கிடைக்காவிட்டால் இந்த ஆபீஸ் ஜவாப்தாரியல்ல.

**மானேஜர் மாத்வமித்திரன், ஸ்ரீவியாஸவிலாஸம், கும்பகோணம்.**

வருட சந்தா ரூ. 3. Regd. No. M. 2419.


# டி. எஸ். ஆர்.
அண்டு
# கம்பெனி,
## கும்பகோணம்.

ஸ்தாபிதம் 1909 — தந்தி விலாசம் "கோகுல்"

எங்கள் வாஸனை திரவியசாலையில் தயாரித்து விற்பனைக்குத் தயாராக இருக்கும் சாமான்களின் விபரம்.

| | |
|---|---|
| வாஸனைப்பாக்கு | பலகாய்கறி ஊர்காய்கள் |
| வாஸனைச்சுண்ணம்பு | ரோஜாப்பூ குல்கந்து |
| வாஸனைப் புகையிலை | ஷர்பத் தினுசுகள் |
| ஸ்னோப்பவுடர் | கொப்பரைச்சீவல் |
| கேஸர் பவுடர் | கோகுல் கூந்தல் |
| அம்பர், அரகஜா | பற்பொடி [தைலம் |
| தசாங்கம் | ஊதுவத்திகள் |

சந்தனாதித்தைலம்,

அரைக்கீரைவிதைத் தைலம்,

மற்றும் அநேக வாஸனை சாமான்களும் கிடைக்கும்.

கேட்லாக்குக்கு எழுதுங்கள்.



Printed at Sri Venkateswar Power Printing Works and Published by Bhagavatha Ranganathachariar, Kumbakonam.


4ம்.



# மாத்வ மித்திரன்.

# THE MADHWA MITRAN


EDITOR:
Adyam Bhagavatha Ranganathachariar
KUMBAKONAM.

பௌர்ணமிதோறும் வெளிவரும்

| | | |
|---|---|---|
| Vol. 10<br>புஸ்தகம் 10 | பஹுதான்ய ஸம்வத்ஸரம்<br>ஆஷாட மாஸம். (பௌர்ணமி)<br>(12-7-1938) மங்களவாரம். | நெ. 12 |



18 JUL 1938 MADRAS



| நெ. | பொருளடக்கம். | பக்கம். |
|---|---|---|
| 1 | எமது பகவத்அர்ப்பணம் | 347 |
| 2. | ஸ்ரீ மகாபாரத தாத்பர்ய நிர்ணயம் (ஸ்ரீ மத்வாசாரியார்) | 348 |
| 3. | ஸ்ரீ மத்வவிஜயம் | 351 |
| 4. | ஸ்மார்த்தர் மாத்வராய் மாறினர் | 355 |
| 5. | ஸ்ரீ உத்திராதி மடம் ஸமஸ்தானத்தின் பகிரங்க ஆக்ஞா பத்திரம் | 356 |
| 6. | ஸ்ரீமான் ஸ்ரீனிவாஸய்யரின் மதமாற்றம் | 357 |
| 7. | ஸ்ரீ சங்கிரஹ ராமாயணம் | 362 |
| 8. | அறிவிப்பு | 368 |
| 9. | வெடிகுண்டு | 370 |
| 10. | ஸ்ரீமான் ஸ்ரீனிவாஸய்யரின் கடிதம் | 376 |
| 11. | [illegible]தினங்கள் | 378 |



[illegible] பாகவத ரங்கநாதாசாரியர், கும்பகோணம்.

# மாத்வமித்திரன்.

மாத்வர்களின் சாஸ்திரீயமான தமிழ் பத்திரிகை இது ஒன்றே. ஸ்ரீமத்வமதத்தின் அரிய இரகசியங்கள் ஸம்பிரதாயங்கள் மாகாத்மியங்கள் புராணசரிதைகள் மாத்வவகுப்பு புண்ய புருஷர்களின் சரித்திரங்கள் வேதாந்த சர்ச்சைகள் தர்மசாஸ்திர விசாரங்கள் தினசரி விரதாதி குறிப்பு:— மகாபாரத தாத்பர்ய நிர்ணயம் முதலான அநேக கிரந்தங்களின் மொழிபெயர்ப்புகள் முதலிய எண்ணிறைந்த விஷயங்கள் நிறைந்திருக்கின்றன ஸ்ரீமத்வமதத்தை சுலபமாய் அறிந்துகொள்ள இப்பத்திரிகைக்கே உடனே சந்தாதாராய்ச் சேருங்கள் இது பிரதி பௌர்ணமியிலும் கும்பகோணத்திலிருந்து வெளியாகிறது இதற்கு வருட சந்தா முன்பணமாய் ரூபாய் மூன்று. பிரதி சிராவணமாதமும் இப்பத்திரிகைக்கு வருட ஆரம்பமாகும் எந்த மாதத்தில் சந்தாதாராய்ச் சேர்ந்தாலும் அந்த வருஷத்திய பிந்திய சஞ்சிகைகள் அனுப்பப்படும் பழைய வாலியங்கள் விலைக்குக் கிடைக்கும் பத்திரிகை சரியானபடி கிடைக்காவிட்டால் பௌர்ணமி கழிந்தஒருவாரத்துக்குள் நமக்கு அறிவிக்கவேண்டியதுடன் அந்தந்த தபாலாபீசுக்கும் அறிவித்துவிடவேண்டும் பதிலறிய விரும்புகிறவர்கள் ஸ்டாம்பை அனுப்பவேண்டும். ஒவ்வொரு கடிதத்திலும் தெளிவாய் பூரா மேல் விலாசமும் எழுதி அனுப்பவேண்டும்.

மானேஜர் மாத்வமித்திரன்,

ஸ்ரீ வியால விலாஸம், கும்பகோணம்.

**மாத்வமித்திரன் பழைய வாலியங்கள் வெகு சொற்பம்தானிருக்கின்றன. உடனே அவைகளைப்பெற முந்துங்கள்.**

18 JUL 1938

ஸ்ரீ லக்ஷ்மீ நரஸிம்ஹாய நம:


# மாத்வமித்திரன்.

VOL. 10 | பஹுதான்ய ஸம்வத்ஸரம். ஆஷாட மாஸம். | NO. 12


## எமது பகவத் அர்ப்பணம்.

ஸ்ரீ ஹரிகுரு கிருபையை முன்னிட்டு சென்ற விபவ ஸம்வத்ஸரம் பாத்ரபத மாஸம் பௌர்ணமி (29—9—1928) ஸ்திர வாரத்தன்று, நாம் தொடங்கிய இம் மாத்வ மித்திரன் பத்திரிகை, இந்த பகுதான்ய ஸம்வத்ஸரம் ஆஷாட மாஸம் பௌர்ணமி (12—7—38) மங்களவாரத்தன்று 10வது ஆண்டை நிறைவேற்றிக்கொள்வதை அறிவிக்க ஆனந்தமடைகிறோம். அன்பார்ந்த வாசகர்களின் ஆசீர்மொழிகளாலும், சந்தாதார நேயர்களின் பொருளுதவியாலும் இம்மித்திரன் பற்பல பொறுக்கமாளாத சங்கடங்களிலிருந்தும் வெளிவந்து இணையற்ற இப்பெரும் பதவியை அடைந்திருக்கிறது. இதுவரை இம்மாதிரி பத்து வருஷ காலம் தொடர்ந்து மாத்வ பத்திரிகைகள் யாவும் எங்கும் எப்போதும் வெளிவந்ததாய் சொல்லப்படுவதில்லை. இம் மித்திரன் இவ்வாறு தோன்றிவருவது தமிழ்நாட்டு மாத்வர்களின் மகா பாக்யமே ஆகும். கருணை ஸமுத்திரரான ஸ்ரீ ராகவேந்திரர் இந்நகரிலேயே அநேகமாய் தன் ஜீவதசையை கழித்ததால், தமிழ்நாடு மாத்வர்களிடம் அவருக்கு அதிகமாய் கருணை ஏற்பட்டு, தன் தூதனான இம்மித்திரனை இங்கு ஏவியிருக்கிறார். அப்படி இம்மித்திரன் ஒழுங்காய் பிரசார வேலை செய்யும் பொழுது, அவனுக்கு ஆத்யந்திக நாசம் ஏற்படாவண்ணம் அவனை பல வகையில் சம்ரக்ஷித்துவந்ததுடன், எண்ணிறைந்த ஸ்ரீமத்வ மத சம்பந்தமான அரிய பெரிய விஷயங்கள் இம்மித்திரனில் வெளிவரச்செய்தார். இம்மித்திரனை சிரவணபடனம் செய்கிறவர்களுக்கு ஸகலச்ரேயஸ் ஸாதனங்களையும் அளித்தார். இம்மித்திரனில் வெளிவந்த விஷயங்களில் எல்லாம் அவர்களுக்கு அபிருசியும் அபிநிவேசமும் ஏற்படச்செய்தார். எதிர் நோக்கங்கொண்ட அத்வைத பண்டிதர்களையும் அத்வைத பத்திரி

கைகளையும் தலைகுனியச் செய்தார். இம்மித்திரனுக்கு எங்குமே நல்ல கீர்த்தியே நிலவியிருக்கச் செய்தார். எல்லாவற்றிற்கும் சிரோரத்தினமாக இப்பத்தாம் ஆண்டின் முடிவில், இம்மித்திரனின் மத சேவை, மாத்வ சேவை இப்பேர்ப்பட்டதென்று மாத்வ உலகில் உள்ள சாமானியனுங்கூட கண்டு கொண்டாடும்படியாய் இம்மித்திரனின் சந்தாதாரனை ஒரு அனுபவம் வாய்ந்த ஸ்மார்த்த பிராம்மணரை, தமது சொந்த மதமான அத்வைத மதம் ஹேயமென்றும் மத்வ மதம்தான் உத்தம மதமென்றும், மோக்ஷத்தை அடையக்கூடிய மதமென்றும், உத்கோஷிக்கச் செய்து, தன் அத்வைதத்தை உதறித்தள்ளி மத்வமதத்தில் புகுந்து மகனீயாளான ஸ்ரீ உத்திராதி ஸ்வாமிகளிடமிருந்து தப்த முத்திரை மந்த்ரோபதேசம் முதலியவைகளைப் பெற்று, மாத்வராய் மாறச் செய்தார். இந்த விருத்தாந்தத்தின் பூரா விபரமும் இவ்விதழிலேயே மற்றோர் இடத்தில் காணலாம். ஆகவே ஸ்ரீ ராகவேந்திரரின் முக்ய தாதனும் மாத்வர்களின் மித்திரனும் உள்ள இம்மாத்வமித்திரன் இந்த பத்து வருஷ காலம் மிகுந்த சிரமத்துடனும் சிரத்தையுடனும் செய்த மகா சேவையை ஸ்ரீமத்வாசாரியாரின் ஹிருதயகமல வாஸியான ஸ்ரீ லக்ஷ்மீநரஸிம்ஹாபின்ன ஸ்ரீ வேதவியாஸ மூர்த்திக்கு ஸமர்ப்பணம் செய்கிறோம். இம்மித்திரனிடம் அளவிலா அன்புகொண்டு சந்தாதாரர்களை அனுப்பித்தும் அனுப்பச்செய்தும் பேருதவி புரிந்த சந்தாநேயர்களுக்கும் வாசக வர்க்கங்களுக்கும் எமது மனமார்ந்த வந்தனத்தை செலுத்துவதுடன் இம்மித்திரன் இவ்வாறே இன்னும் பல வருஷகாலம் விசேஷ திரவிய பலத்துடன் பிரசாரவேலை செய்ய சாசுவதமாய் உதவி வரும்படி பிரார்த்திக்கிறோம்.

---

ஸ்ரீ மத்வாசாரியார் இயற்றிய

## ஸ்ரீ மகாபாரத தாத்பர்ய நிர்ணயம்.

(ஸ்ரீமு. வே. பாகவத ரங்கனுதாசாரியாரின் மொழிபெயர்ப்பு.)

(முப்பத்திரண்டாவது அத்யாயம்.)

முன் 321-ம் பக்கம் தொடர்ச்சி.

### அர்ஜுனனின் தோல்வி.

ருக்மணி, ஸத்யபாமை இவர்கள் அல்லாத மற்ற ஆறு பட்டமகிஷிகளில் சிலர் அக்னியில் சரீரம் விட்டும், சிலர் தபஸ் செய்து



சரீரம் விட்டும், விஷ்ணுவை அடைந்தனர். பதிவ்ரதைகளான பலராமாதிகளின் எல்லா பத்னிமார்களும் அக்னிவாயில் சரீரத்தைவிட்டு அவரவர்களின் பர்த்தாவைத்தான் அடைந்தனர். வஸுதேவன் அர்ஜுனன் சொல்லி யாதவர்கள் இறந்ததைக் கேட்டுவிட்டு, ஸ்ரீகிருஷ்ண பக்தியால் கச்யபப்ரஜேசுவரரின் தன்மையை அடைந்தார். அர்ஜுனன் அவரை அவருடைய அசுவமேதாக்னியில் தகனம் செய்தான். வஸுதேவனுடைய பத்னிமார்களும் அந்த அக்னியிலேயே ஸஹகமனம் செய்து சரீரம் விட்டு கச்யபரையே அடைந்தனர். அர்ஜுனன் மற்ற ஸ்திரீகளையும் பாலர்களையும், சொத்துக்களையும் எடுத்துக்கொண்டு ஸ்ரீகிருஷ்ணர் சரீரம் விட்ட ஏழாவது நாளன்று துவாரகையிலிருந்து கிளம்பினான். ஸமுத்ரம் பொங்கி துவாரகையை மூழ்க வைத்தது ஸ்திரீ ஜனங்களுடனும் பாலர்களுடனும் சேர்ந்து அர்ஜுனன் ஒருவனே வழியில் வரும்போது, மகாபாபிஷ்டர்களும் கர்விஷ்டர்களுமான மிலேச்சர்கள் ஸ்ரீகிருஷ்ணரின் சாபம் இருந்ததால் ஸ்ரீகிருஷ்ணரின் ஸ்திரீ ஜனங்களை அபகரித்தனர். ஸ்ரீகிருஷ்ணரின் 16,100 பாரியைகளும் தாங்கள் மிகுந்த ரூபவதிகள் என்று கர்வமடைந்ததால், ஸ்ரீகிருஷ்ணர் அவர்களுக்கு "உங்களை மிலேச்சர்கள் தூக்கிக்கொண்டு போகட்டும்" என்று சாபம் கொடுத்திருந்தார். ஆதலால்தான் அவர்கள் மிலேச்சர்களின் அதீனமாய்ப்போயினர். ஸொத்துக்களையும், ஸ்திரீ ஜனங்களையும் மிலேச்சர்கள் கொண்டுபோய்விடவும், அர்ஜுனன் அவர்களுடன் யுத்தம் செய்ய விரும்பி மிகவும் சிரமப்பட்டு தன் காண்டீவ தனுஸ்ஸில் நாணேற்றினான். அக்ஷயமான அவனுடைய அம்பராத்தூளியில் பகவத் ஸங்கல்பத்தால் பாணங்கள் க்ஷீணித்தன. அஸ்திர மந்த்ரங்கள் ஞாபகத்துக்கு வரவில்லை. தெய்வம்தான் இவ்வாறெல்லாம் செய்தது என்று அறிந்துகொண்டு அர்ஜுனன் ஸ்ரீகிருஷ்ணரை ஸ்மரித்துக்கொண்டு, காண்டீவ தனுஸ்ஸின் தண்டத்தாலேயே சத்ருக்களை அடித்து அவர்கள், கொள்ளையடித்துப்போய் மிச்சம் மீதி இருந்தவர்களை ஸம்ரக்ஷித்து குருதேசம் வந்தான்.

## வஜ்ஜிரனின் பட்டாபிஷேகம்.

அர்ஜுனன் அச்சமயம் குருக்ஷேத்திரத்துக்கு வந்திருந்த ஜகத்குருவாயும் மிகவும் பூர்ணமான க்ஞானம் பலம் இவைகளுக்கு கடலராயும் சிறந்த ஆனந்தமுள்ளவராயும் ஸ்ரீ கிருஷ்ணரின் ஸ்வரூபராயும் வசிஷ்ட வம்சத்தில் பிறந்தவராயும் இருக்கும் ஸ்ரீ வேதவியாஸரைப்பார்த்து துக்கத்துடன் அவருடைய காலில் விழுந்தான். புருஷர்களில் உத்தமரும் அக்ஞானமாகிற இருளுக்கு சூரியனுமான அந்த வேதவியாஸரால், காரணங்களுடன் உபதேசம் அடைந்த அர்ஜுனன் இந்த ஸ்ரீவேதவியாஸர்தான் அந்த ஸ்ரீ கிருஷ்ணர் என்று அவரிடம் அந்த புத்தியை வைத்து தைரியத்துடன் பெரும்பாலும் துக்கங்களை விட்டான். மிலேச்சர்கள் தூக்கிக்கொண்டுபோன ஸ்ரீகிருஷ்ணரின் ஸ்திரீ ஜனங்கள், ஸ்ரீகிருஷ்ணரால் அனுப்பப்பட்ட தால்ப்ய ரிஷி சொன்னதாயும் கோவிந்த மூர்த்தியால் அபிமானிக்கப்பட்டதுமான ஆஷாட சுத்த ஏகாதசியின் மகாத்மியத்தைக் கேட்டு, அன்றே உபவாஸம் செய்து ஸரஸ்வதி ஜலத்தில் ஸ்நானம் செய்து வாயு பகவானின் வாக்யத்தால், சரீரத்தை விட்டு ஸ்வர்க்கம் சென்றனர். கிருதவர்மாவின் மகனை குரு க்ஷேத்திரத்திலேயும் ஸாத்யகியின் மகனை ஸாரஸ்வத தேசத்திலேயும் அர்ஜுனன் பட்டாபிஷேகம் செய்தான். இந்திரியங்களை ஜயித்தவனான அர்ஜுனன் ஸ்ரீ கிருஷ்ணருக்கு பிரியனும் நல்ல குணவானும் அநிருத்தனின் மகனுமான வஜ்ஜிரனை சூரஸேன தேசத்துடன் சேர்த்த இந்திரப்ரஸ்தத்தில் பட்டாபிஷேகம் செய்து ராஜாவாய்ச் செய்தான். ஸ்திரீ ஜனங்களையும், பாலர்களையும் துவாரகையிலிருந்து கொணர்ந்த பொருளையும் வஜ்ஜிரனிடம் ஒப்புவித்துவிட்டு, அர்ஜுனன் அவனுடைய அண்ணன் தம்பிகளிடம் வந்து சேர்ந்தான்.

மகாபாரதம் மௌஸல பர்வம் கதை முடிந்தது.

(தொடரும்)

---



ஸ்ரீ நாராயண பண்டிதாசாரியார் இயற்றிய

# ஸ்ரீ மத்வ விஜயம்

பன்னிரண்டாவது ஸர்க்கம்.

(முன் 331ம் பக்கம் தொடர்ச்சி)

208172
சென்னை-600 008

## ஸ்ரீ மத்வாசாரியாரின் வேத த்வனியின் சிறப்பு.

32. ஸ்ரீமத்வாசாரியார் ஆரம்பத்தில் குறுக்கிச் சொல்வதாயுள்ள வத்ஸானு விருத்தியையும், மாத்திரை அளவின் இரு அம்சங்களையும் காட்டியும், தேவாதிகளால் கண்டுகொள்ளப்பட்டவராய் இதரர்களான வத்ஸானுஸாரிணி, பாகவதி, பிபீலிகா எனப்படும் ச்ரேஷ்டமான வாக்விருத்திகளை அறிவித்தும், வேதத்தை உச்சரித்துக்கொண்டிருக்கும்பொழுது அவர் கோவிந்தனின் பக்தனாயிருப்பினும் கோவிந்தனைப்போலவே தோன்றினார். கோவிந்தனை ஸ்ரீ கிருஷ்ணரோவெனில் ஆரம்பத்தில் குறுகிய சரீரமுடையவராயிருந்ததால் சிறு சிறு பசு வத்ஸங்களை பின் தொடர்ந்து போய் இரு கால்களை வைத்து நடந்து, தாயான யசோதையால் சந்தோஷமாய் கண்டுகொள்ளப்பட்டவராய், இதரர்களான கோபிகைகளை தன்னை ஸேவிப்பதைத் தவிர இதர விருத்திகளைச் செய்யவொட்டாமல் செய்து பிரகாசித்தார். 33. சிக்ஷை முதலான வேதாங்கங்களை அனுஸரித்து வெளியான பாவங்களுடன் உள்ளதும் மூவுலகையும் ஆச்சரியப்படும்படி செய்வதும், ஓர் மாத்திரை இரு மாத்திரைகளாகவுள்ள நாஸிகை த்வனியாகிய ரங்கத்துடன் கூடியதும், இடை இடையே உசிதமான ஓய்வு உள்ளதும் அழகான உதாத்தம் முதலான ஸ்வரங்களுடன் கூடியதுமான ஸ்ரீ மத்வாசாரியாரின் வேத த்வனி மற்றொரு த்ரௌபதியைப் போலவே விளங்கினாள். த்ரௌபதியும் ஸுந்தரமான அங்கங்களில் வெளிப்படையாய்க் காணப்படும் விலாஸத்துடன் இருப்பாள். மூவுலகையும் ஆச்சரியப்படும்படி செய்வாள். ரங்க ஸ்தலமாகிய ஸ்வயம்வர மண்டபத்தில் பிரவேசித்திருப்பாள். சோபிக்

கும் காலடியுடனிருப்பாள். அழகான குரலோசையுடனிருப்பாள். 34. மகத்துவத்தால் ஏற்படக்கூடிய காம்பீர்யம் முதலான நற்குணங்களுடன் கூடியதும் பக்ரம் உச்சம் முதலான பலவகை நாதங்களைக் காட்டி மிகவும் சிலாகிக்கத்தகுந்ததாயுள்ளதும், வேதாங்கமாயுள்ள சிக்ஷா கிரந்தத்தில் இவ்வாறுதான் உச்சரிக்கவேண்டுமென்று சிக்ஷித்திருக்கிற லக்ஷணங்களுக்கு திருஷ்டாந்தமாய் இருப்பதும், அதன் நிமித்தமாக தேவாதிகளாலும் கொண்டாடப்படுவதுமாயுள்ள ஸ்ரீமத்வாசாரியாரின் அந்த வேத உச்சாரணமும் இணையற்றது என்பது என் அபிப்பிராயம் 35. வேதாங்கமான சிக்ஷா கிரந்தத்தில் சொன்ன சிக்ஷையை மட்டில் இவர் கைக்கொள்ளவில்லை. மற்ற வேதாங்கங்களான கல்ப சாஸ்திரத்தில் சொல்லப்பட்டுள்ள வேதார்த்த விதிகளை ப்ரகடனம் செய்துகொண்டும், சந்தஸ் சாஸ்திரத்தில் சொல்லியுள்ள சந்தஸ் சாஸ்திரத்தின் விதிகளையும் வெளியாக்கிக்கொண்டும், சப்த சாஸ்திரமான வேதத்தின் அங்கமாயுள்ள வியாகரண சாஸ்திரத்திற்கு தகுந்தபடி அந்தந்த பதங்கள் ப்ரயோகம் செய்யப்பட்டிருப்பதாய் பெருவாரியாய் நிரூபித்துக் காட்டிக்கொண்டும், நிருக்த சாஸ்திரத்தில் சொன்னபடி அந்தந்த வேத சப்தங்களின் அர்த்தம் செய்யும் வகையையும் நிரூபித்துக்கொண்டும், ஜோதிச் சாஸ்திரமாகிய வேதாங்கமாயுள்ள சாஸ்திரத்தை அறிந்தவர்களில் சிரேஷ்டமான அந்த ஸ்ரீமத்வாசாரியார், இவ்வாறு சிக்ஷா கல்பம் சந்தஸ் சப்தம் நிருக்தம் ஜ்யோதிஷம் என்னும் ஆறு வேதாங்கங்களை அனுஸரித்து வேதத்தை வியாக்கியானம் செய்தார். 36. மனோஹரமான அந்த ஸ்ரீமத்வாசாரியாரின் வேதவ்யாக்யானத்தின் உச்சாரணத்தை அச்சமயம் அதைக்கேட்டு மிகுந்த ஆச்சரியமடைந்த எல்லோரின் வாக்குக்கு அபிமானி தேவர்களான ஸரஸ்வதி கருடன் பிருஹஸ்பதி இவர்கள் ஸ்ரீமத்வாசாரியாரை நமஸ்கரித்து வர்ணித்தனர் என்றால் என்னைப்போன்ற ஒரு மனுஷ்யன் எப்படி வர்ணிக்க முடியும். 37 வேத சமூகங்களை அர்த்த பூர்வகமாய் இவ்வாறு அந்த பிராம்மண சபையில் சதுர்முகனைப்போல் அதிசிலாக்யமாய் சொன்னதைக்கேட்டு, எல்லோரும் மிகவும் மகிழ்ந்து ஜயம் யாருக்கு என்பதை அறிய விருப்பங்கொண்டு, அச்சபையி



லுள்ள பிராம்மணர்கள் எல்லோரும் அந்த புண்டரீகபுரி ஸன்யாஸி இருந்த வேறு இடத்திற்கு சென்று இவ்வாறு பேசினார்கள். 38 பூர்ண ப்ரக்ஞரான ஸ்ரீமத்வாசாரியார் தம்முடைய பூர்ணமான க்ஞானத்தைக்கொண்டு வேதங்களின் அர்த்தத்தை எடுத்துச் சொன்னார். அவருக்கு எதிரியாயிருந்தவரும் க்ஞானியான நீங்களும் அவ்வாறு வேதார்த்தத்தை கேட்க ஆசைப்படும் எங்களுக்கு எடுத்துச்சொல்லவேண்டுமென்று பிரார்த்திக்கிறோம். 39 இவ்வாறு அந்த பிராம்மணர்கள் சொல்லவும் விசாலமான புத்தியுள்ள ஸ்ரீமத்வாசாரியாரைப்போல் ஸாம்யத்தை அடைய எத்தனித்து, துஷ்ட புத்தியுள்ள அந்த புண்டரீகபுரி, முன்பு ஸ்ரீகிருஷ்ணரைப்போல் கருட வாஹனம் சதுர்புஜம் முதலியவைகளைக் கைக்கொண்டு ஸ்ரீ கிருஷ்ணரின் ஸாம்யத்தை அடைய விரும்பிய துஷ்டனான பௌண்ட்ரக வாஸுதேவனைப் போல் அச்சபையில் பரிகசிக்கும்படியாய் ஆனார். 40 அந்த புண்டரீகபுரி ரிக் வேதத்தின் முதல் ஸூக்தமான அக்னிமீளே புரோஹிதம் என்னும் ருக்கத்தை முதலில் ஸம்ஹிதையைச் சொல்லி, பின்பு அதன் பத விபாகத்தைச் சொல்லிவரும்பொழுது, தன் வியாக்யானத்தில் அதிக ஆசை கொண்டிருந்ததால் புத்தி தடுமாறி, அக்னினாரயிபச்னவத் என்னும் மந்திரத்தில், அக்னினா ரயிம் என்று பதவிபாகம் செய்ய வேண்டியதை விட்டு, ஸ்ரீமத்வாசாரியாரின் கிங்கரர்களான ஸரஸ்வதி தேவி முதலானவர்களால் தவறான வழியில் கொண்டுபோகப் பட்டு, அபத்தமாய் அக்னி நார என்று பதவிபாகம் செய்ய, தூஷிக்கத் தகுந்தவனான அந்த புண்டரீகபுரியை எல்லோருமே தூஷித்தனர். 41 உலகை வஞ்சிக்கும் மாயாவாதியான இந்த புண்டரீகபுரியாகிய குள்ளநரி, புண்டரீகமாகிய வேங்கையின் பெயரை அடைந்து ஸ்ரீ மத்வாசாரியாரை அணுகுவதற்குமுன், இவன் உலகில் மகா பண்டிதன் பௌருஷமுள்ளவன் என்று எல்லோராலும் மதிக்கப்பட்டிருந்தான். பிரதிவாதம் செய்பவர்களாகிய வேங்கைகளை அடிக்கும் ஸ்ரீ மத்வாசாரியாராகிய ஸிம்ஹத்தை அந்த புண்டரீகன் அணுகிய பின் அந்த புண்டரீகத்தின் பௌருஷம் மதிப்பு எல்லாம் போய் கேவலம் அவனுக்கு புண்டரீகம் என்ற பெயர் தான் மீந்தது.

## அத்வைதிகள் செய்த திருட்டு.

42. இவ்வாறு அத்வைதிகளின் பிரதிநிதியாகிய புண்டரீகபுரிக்கு தோல்வி ஏற்பட்டபின், விதுச வம்சத்தைச் சேர்ந்த சங்கராசாரியார் என்ற உத்தம பிராம்மணரால் ஸம்ரக்ஷிக்கப்பட்டு வந்ததும், ஸ்ரீவேதவியாஸருக்கு ப்ரியமானதும் தத்வசாஸ்திரம் என்ற பிரஸித்தமான பெயருள்ளதும், தன்னாலேயே இயற்றப்பட்டிருப்பதும், தன் சொந்த சொத்தாக கருதப்பட்டிருந்ததுமான தன் புஸ்தக மூட்டைகளை, அத்வைதிகளின் தூதனை பத்மதீர்த்தன் என்பவன், முன்பு தன் பீமஸேனாவதாரத்தில் ஜயத்ரதன் துரௌபதியை திருடிச்சென்றதை அர்ஜுனன் கேட்டதுபோல், திருடி ஓடிவிட்டதாய் ஸ்ரீமத்வாசாரியார் உடுபியில் கேட்டார். துரௌபதியும் இந்த புஸ்தகங்களைப்போலவே உத்தம ப்ராம்மணரான தௌம்யாசாரியரால் காப்பாற்றப்பட்டிருந்தாள். ஸ்ரீவேதவியாஸருக்கு வேண்டியவளாயிருந்தாள். மகாபாரதமாகிய சாஸ்திரத்தில் பிரசித்தியடைந்த பெயருள்ளவளாய் இருந்தாள். தன்னைச் சேர்ந்தவளாயிருந்தாள். தன் சொந்த சொத்தாயிருந்தாள். 43. ஸ்ரீ மத்வாசாரியார் இதைக் கேட்டதும் வெகு சீக்கிரமே அநேக யோசனை தூரம் வழி நடந்து ஜேஷ்ட ஸன்யாஸியாருடன் கூடி ப்ராக்ர்யவாடம் என்னும் ஊருக்கு வந்து, அங்கு பத்மதீர்த்தனைக் கண்டு பிடித்து, அவனை பலவாறு பேசி பயமுறுத்தி, அவனைப் பயப்படும்படிச்செய்து, அவனை முன்னோடி விடாமல் நிறுத்தி வாதமாடி மௌனமாக்கி, அவனிடமிருந்த புஸ்தகங்களை திரும்பப்பெற்று அவனை ஜயித்து, அவன் முன்னொருசமயம் வாதாடும்பொழுது அந்தர்யாமி அறிவார் என்று சொன்னதை ஞாபகப்படுத்தி, அவனுடைய அத்வைதமதத்திற்கு சம்மதமில்லாததான நியம்ய நியாமகபாவம் இருப்பதை அவனுடைய சொந்த செய்கையால் அவனை ஒப்புக்கொள்ளச்செய்து, அவனைப்பார்த்துப் பரிகஸித்தார். அர்ஜுனனும் துரௌபதியை ஜயத்ரதன் கொண்டு போனான் என்று கேட்டவுடன் வெகு சீக்கிரமே அநேக யோஜனை தூரம் சென்றான். ஜேஷ்டனை பீமசேனருடன் ஜயத்ரதனைக் கண்டுபிடித்தான். பலவாறு பேசி பயமுறுத்தினான். கயிற்றால் கட்டி முன்னே போகவொட்டாமல் தடுத்தான். துரௌபதியை திருப்பப்பெற்றான். அந்த: ப்ரேரகனை மன்மதனால் தூண்டப்பட்டு இவ்வாறு குச்சிதமான காரியத்தைச் செய்தாய் என்று சொல்லி பரிகாசம் செய்தான். (தொடரும்).



# அத்வைதமதம் துச்சம்.

# மத்வமதமே சிறந்தது

### தமிழ் நாட்டிலேயே ஓர் ஸ்மார்த்தரின் உறுதி.

---

# ஸ்மார்த்தர் மாத்வராய் மாறினார்.

# மாத்வமித்திரனின் போதனை காரணம்.

திருநெல்வேலி ஜில்லா கல்லிடைக்குறிச்சி ராமச்சந்திரபுர அக்கிரகாரத்திலிருக்கும் சுப்பய்யர் குமாரர் சுமார் 65 வயதுள்ள பிருஹசரண வகுப்பு ஸ்மார்த்தரான, முன் நவரத்ன வியாபாரம் செய்துவந்த ஸ்ரீமான் ஸ்ரீனிவாஸஅய்யர் அவர்கள் 18-6-1938உ காலை ஸ்திரவாரத்தன்று ஸ்ரீமத் பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்ய த்வைதஸித்தாந்த ப்ரதிஷ்டாபனாசார்ய முதலிய அநேக பிருதுகளால் சோபிதர்களாயிருக்கும் ஸ்ரீ உத்தராதி மடம் ஸம்ஸ்தானாதிபதி ஸ்ரீமத் ஸத்யத்யான தீர்த்தஸ்வாமிகளிடம் சென்று, மாத்வமித்திரன் பத்திரிகை மூலமாயும், ஸ்ரீ ஸ்வாமிகளவர்கள் இயற்றிய கீதா தத்வ ஸிவில்சூட் மூலமாயும், இதர மாத்வ பண்டிதர்கள் மூலமாயும், தனது அத்வைதமதம் துச்சமென்றும் மத்வமதமே மேலானதென்றும், அறிந்து உறுதி அடைந்திருப்பதால், தன்னிடம் அநுக்ரஹம் செய்து, தன்னை மாத்வ ஸத்வைஷ்ணவனாக்கி மந்திரமுத்ராதாரணம் செய்து உத்தாரம் செய்யவேண்டும் என்று நேரிலும் விக்ஞாபன பத்திரம் மூலமாயும் நமஸ்காரபூர்வமாய் பிரார்த்தித்துக் கேட்டுக்கொண்டதின்பேரில், அவ்வாறே அன்றே அவர் மந்த்ர முத்ரைகளைப்பெற்று மாத்வராய் மாறினார். கமலாக்ஷதைகளைத் தரித்தார். அக்ஷணம் முதல் ஸ்ரீனிவாஸாசாரியார் என்று அழைக்கப்பெற்றார். பூரா விவரமும் வேறிடத்தில் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. (ப—ர்.)

# ஸ்ரீ உத்திராதிமடர் ஸம்ஸ்தானத்தின் பகிரங்க ஆக்ஞா பத்திரம்.

---

(கன்னடம்).

ஸம். **182** ஸ்ரீ [ உத்தராதிமடம் சீல் ]

ஸ்ரீமத் ஸத்யத்யான தீர்த்த ஸ்ரீபாதங்களவரு சகே 1860 பஹுதான்ய ஜேஷ்ட பஹுளா ஷஷ்டி தினதல்லி திர்நல்வேலி மடாதிகாரிகே ததா தத்தேச ஸ்தித அசேஷ சிஷ்யபிருந்தக்கே பாசி களிசித ஆக்ஞாபத்ர க்ரமவேனெந்தரே, கல்லடக்குரிச்சி சுப்பய்யர் குமார ஸ்ரீனிவாஸ அய்யரு இவரு, தம்ம அத்வைத மதவன்னு ஹேயவெந்து, மத்மெதவே பரலோக ஸாதனவாத வைதிகமதவெந்து திளதுகொண்டு, மந்த்ரோபதேச முத்ராதாரண மாடி மாத்வநன்னகி மாடி உத்தார மாடபேகெந்து ஸன்னிதான தல்லிபந்து ப்ரார்த்தனமாடிகொண்ட காரண, அவரன்னு உத்தார மாடிருத்தேவே காரண அவரிகே ஹவ்ய கவ்யாதிகளிகே பேகாத ப்ராம்மண முந்தாத ஸஹாய மாடபேகு யந்த நாசாரகுடீஸ்தலதிந்த பரதத்து

---

[உத்தராதி மடம் சீல்]

(தமிழ்.)

ந. **182.** ஸ்ரீ

ஸ்ரீமத் ஸத்யத்யானதீர்த்தஸ்வாமிகள் சகம் 1860 பஹுதான்ய வருஷம் ஜேஷ்ட மாஸம் கிருஷ்ண பக்ஷம் ஷஷ்டி தினமாகிய இன்று எமது திருநெல்வேலி ஜில்லா மடாதிகாரிக்கும் சரியே, மற்றும் இத்தேசவாஸிகளான எமது எல்லா சிஷ்ய சமூகத்திற்கும் சரியே, நாம் கட்டளையிடுவது யாதெனில், கல்லடக்குரிச்சி சுப்பய்யர் குமாரர் ஸ்ரீனிவாஸ அய்யர் என்பவர் தன் மதமாகிய அத்வைத மதம் தூரத்தள்ளத்தக்கது என்றும், மத்மெதம்தான் பரலோகத்திற்கு ஸாதனமாயுள்ள வேதத்தில் கூறப்பட்டுள்ள மதம் என்றும் அறிந்துகொண்டு, தனக்கு மந்த்ரோபதேசத்தையும் முத்ராதாரணத்தையும் செய்து தன்னை மாத்வனாக்கி உத்தாரம் செய்யவேண்டுமென்று சன்னிதானத்திற்கு வந்து பிரார்த்தனை செய்துகொண்டிருப்பதன் நிமித்தம், மேற்படியாரை அவ்வாறே உத்தாரம் செய்து மந்த்ர முத்ராதாரணம் செய்திருக்கிறோமாதலால் மேற்படியாருக்கு ஹவ்யகவ்யாதிகளுக்கு தேவையாயிருக்கும் பிராம்மணர்களாயிருப்பது முதலான ஸஹாயத்தை நீங்கள் செய்யவேண்டும். இது நாச்சியார்கோவில் முகாமிலிருந்து எழுதப்பட்டது.



---

# ஸ்ரீமான் ஸ்ரீனிவாஸய்யரின் மத மாற்றம்.

---

இம்மாத்வ மித்திரனுக்கு முதல் வாலியம் முதற்கொண்டு நாளது வரை எல்லா வாலியங்களுக்குமே தொடர்ந்து சந்தாதாரர்களாயிருக்கும் அன்பார்ந்த அநேக ஸத்புருஷர்களில் ஒருவரான திருநெல்வேலி ஜில்லா கல்லடக்குரிச்சியிலிருக்கும் ஸ்ரீமான் ஸ்ரீனிவாஸ அய்யர், நாளது மாதத்தில் இப்பத்திராதிபரின் வீட்டிற்கு வந்து, தன்னை ஸ்ரீ உத்திராதி மடம் ஸ்வாமிகளிடம் அழைத்துப்போய், முத்திரை கொடுத்து மாத்வனாக்கிவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்ள, அவ்வாறே இப்பத்திராதிபரும் சந்தோஷத்துடன் இந்த ஸத் காரியத்தை சிரமேற்கொண்டு, ஸ்ரீ ஸ்வாமிகள் அச்சமயம் தங்கியிருந்த நாச்சியார்கோவிலுக்கு ஸ்ரீமான் அய்யரை அழைத்துப்போய், ஸ்ரீஸ்வாமிகளிடம் அவருடைய விருப்பத்தை

அறிவித்தார். ஸ்ரீ ஸ்வாமிகளும் புன்னகை காட்டி, ஸ்ரீமான் அய்யரைப் பார்த்து "உங்கள் மதத்தில் என்ன தோஷத்தைக் கண்டு கொண்டீர்? மத்வ மதத்தில் என்ன விசேஷத்தைத் தெரிந்துகொண்டீர்?" என்று பிரச்னம் செய்யவும், அதற்கு ஸ்ரீமான் அய்யர் "அத்வைதத்தில் தோஷம் ஒன்றே இரண்டா இருக்கிறது? எந்த விஷயத்தை எடுத்தாலும் தோஷமேயிருந்துவருகிறது. பரப்ரம்மமான ஸ்ரீ கிருஷ்ணரே கீதையில் ஸ்பஷ்டமாய் ஈசுவரோஹம் ஸோஹம் என்று உபாஸனை செய்பவர்களுக்கு அந்தம் தமஸ்ஸைத்தான் கொடுக்கிறேன், என்று சொல்லியிருக்கும் பொழுது, நான் அப்பேர்ப்பட்ட மதத்தில் இருந்துகொண்டே அந்த வகை உபாஸனை செய்துகொண்டே இருந்து, நான் உத்தாரமடைவேன் என்றும், பிரம்மஸாக்ஷாத்காரமாகப் போகிறதென்றும், நான் காத்திருந்தால் என் எண்ணம் நிறைவேறுமா? நான் எப்போதாவது உத்தாரமடைவேனே? எனக்கு அந்தம் தமஸ்ஸேதான் நிச்சயம் வந்து சேரும் என்று பயம் ஏற்பட்டிருக்கிறது. ஸ்ரீ கிருஷ்ணர்தான் ஸர்வோத்தமர், ஸர்வ சக்திமான், ஸமஸ்த ஜகத்தையும் சிருஷ்டித்தவர், ஸமஸ்த ஜீவராசிகளுக்கும் ப்ரேரகன் என்று என் மனதிற்கு தெளிவு ஏற்பட்டிருக்கிறது. ஜீவன் என்று அனாதியாய் ஒன்று இல்லை என்றும் பிரம்மம்தான் ஜீவன் என்றும், பிரம்மத்தில் இந்த எல்லா உலகும் கல்பிக்கப்பட்டிருக்கிறதென்றும் அதனுல் பிரம்மத்தைத்தவிர எல்லாமே பொய் என்றும், தேவதைகள் மந்திரங்கள் கர்மங்கள் அதனுல் ஏற்படும் புண்ய பாபாதிகள் எல்லாம் பொய் என்றும், பகவானுடைய குணங்களும் பொய் என்றும், அந்த பரப்பிரம்மம் எந்த தன்மையும் இல்லாதவன் என்றும் இப்படி நாஸ்திகம் பேசும் அத்வைதத்தில் எனக்கு மிகுந்த அறுவெறுப்பு ஏற்பட்டிருக்கிறது. அஹம் பிரம்மாஸ்மி, நான்தான் அந்த ஈசுவரன் என்று உபாஸனை செய்தால் அந்த பரப்பிரம்மம் எனக்கு நல்லது செய்யமாட்டார் என்று சாமானிய புத்தியுள்ளவனுமறிவான். நீ தான் உத்தமன் நான் எளியவன் என்று சொன்னுல்தான் எந்த பிரபுவும் காப்பாற்றுவான். எனக்கு அத்வைத உபாஸனை சரி இல்லை என்று நிச்சயம் ஏற்பட்டிருக்கிறது. இந்த பத்து வருஷ காலமாய் விடாமல் மாத்வமித்திரன் பத்திரிகையை வரவழைத்து வாசித்ததில் இந்த எண்ணம் என் மனதில் வேரூன்றிவிட்டது. இந்த ரங்கனுதாசாரியார் எத்தனையோ அற்புதமான விஷயங்களையும் மத்வ மத ரகசியங்களையும் வெளியிட்டிருக்கிறுர். எல்லாவற்றிர்க்கும் சிகரமாக தாங்கள் இயற்றியிருக்கும் கீதா தத்வம் சிவில் சூட் முதலிய புஸ்தகங்கள் அத்வைத மகா பண்டிதர்களையும் பிரமிக்கச் செய்கிறது. அவர்களுக்கே மதமாற்றம்



ஏற்பட்டிருக்கிறது. தாங்கள் காட்டியிருக்கும் அநேக ஆக்ஷேபணைகளையும் சொல்லும் இவைகளுக்கு என்ன சமாதானமென்று நான் அநேக அத்வைத பண்டிதர்களைக் கேட்டும் ஒருவராவது எனக்கு சரியான சமாதானம் சொல்லாமல், இப்படி பதில் சொல்ல முடியாமல் இருப்பதுதான் அத்வைதத்திற்குள்ள கௌரவம் என்று தம் தோஷத்தை பூஷணமாகச் சொல்லி வாய்ப்பந்தல் போடுகின்றனரேயன்றி, பரலோக விஷயத்தில் கிஞ்சித்தாவது அவர்கள் ஒருவருக்காவது சரியான யோஜனை இருப்பதாக தெரியவில்லை. இத்யாதி அநேக காரணங்களைக்கொண்டு அத்வைத மதம் தாழ்ச்சியென்றும், மத்வ மதம்தான் மோக்ஷ ஸாதனமான வைதிக மதம் என்றும், எனக்கு உறுதி ஏற்பட்டிருக்கிறது. அவைதத்தை விட்டு தாங்கள் செய்ததற்போது ஸ்ரீமத்வாசாரியாரைப்போல் விளங்கிவரும் தாங்கள் என்னிடம் பரமானுக்ரஹம் செய்து என்னை உத்தாரமாக்க வேண்டும்" என்று விஸ்தாரமாய்ச் சொன்னுர். அதற்கு ஸ்ரீஸ்வாமிகள் "நீங்கள் முத்திரையைப் பெறுவதில் விசேஷமில்லை. உங்கள் மனம் திடப்படவேண்டும். உங்களுக்கு இருந்துவரும் எல்லா சந்தேகங்களையும் கேளுங்கள், நான் சொல்லுகிறேன். உங்கள் புத்தியில் நிச்சயம் ஏற்பட்ட பின் முத்திரை கொடுப்பதைப்பற்றி யோசிக்கிறேன்." என்று சொல்லவும், மாத்வருய் மாறிவிட தனக்குள்ள விருப்பத்தை சுமார் 3 வருஷங்களுக்கு முன்னமேயே ஸ்ரீமான் அய்யர் அறிவித்த கடிதத்தையும், அதைப்பற்றி பின்பு இப்பத்திராதிபருக்கும் ஸ்ரீமான் அய்யருக்கும் மத்வமதப்ரமேயங்கள் விஷயமாய் நடந்த கடிதப் போக்குவரவுகளையும் இப்பத்திராதிபர் ஸ்ரீஸ்வாமிகளிடம் வாசித்துக்காட்டி, பல வருஷங்களாகவே இவர் ஸ்ரீமத்வமதத்தில் உறுதிகொண்டிருப்பதாயும் இவருக்கு முத்திரை கொடுத்து ஸத்வைஷ்ணவனுக்க அனுக்ரஹிக்கவேண்டுமென்றும் வெகுவாய் பிரார்த்தித்தார். ஆயினும் ஸ்ரீஸ்வாமிகள் இவர் தமது சந்தேகங்களைக் கேட்கட்டும். இவருடைய புத்தி எவ்வாறு பரிபக்குவமடைந்திருக்கிறது என்பதை தெரிந்துகொள்கிறேம் என்று ஆக்ஞாபித்தார். பிறகு அஹோராத்திரம் 2, 3 நாட்கள் ஸ்ரீஸ்வாமிகளுக்கும் ஸ்ரீமான் அய்யருக்கும் நடந்த சம்பாஷணை வெகு ருசிகரமாய் இருந்தது. ஸ்ரீஸ்வாமிகள் ஒவ்வொரு கடினமான விஷயங்களையும் மனதிற்பதியுமாறு லோகதிருஷ்டாந்தங்களை எடுத்துக்காட்டிச் சொல்லிவந்தார். உபாதி சம்பந்தத்தைப்பற்றி ஸ்ரீமான் அய்யர்கேட்டதற்கு, ஸ்ரீஸ்வாமிகள் தம் சமீபத்திலிருந்த பதார்த்தங்களை வைத்து அத்வைத மதத்தின்படி பிரம்மத்துக்கு உபாதி சம்பந்தம் ஏற்படுவதில்லை, என்பதை பலவகையில் நிதர்சனமாய் நிரூபித்துக்காட்டியது எங்களுக்கும்

மறக்கமுடியாததாய் இருக்கிறது. ஸகுண உபாஸனையின் பெருமையைப் பற்றி சொல்லும்பொழுது, ஸ்ரீமான் அய்யர் மெய்மறந்து, வாய்குழறி கண்ணீர் விட்டு அழுதுகொண்டு "ஸ்வாமி! இந்த ஸகுண உபாஸனை பிரயோஜனமில்லை என்று சொல்லும் அத்வைதமதத்திலா நான் இருப்பது? என்னை உத்தாரம் செய்யலாகாதா!" என்று கேட்டபொழுது அங்கிருந்தவர்கள் யாவரும் பரவசமாயினர். அதற்கு ஸ்ரீஸ்வாமிகள் "உங்கள் சங்கராசாரியாரும்கூட ஸகுண உபாஸ்தியால் மோக்ஷம் வருகிறதென்பதை ஒப்புக்கொள்ளுகிறார். அங்கு போனால் திரும்புதல் இல்லை என்பதையும் ஒப்புக்கொள்ளுகிறார். நச புனராவர்த்ததே நச புனராவர்த்ததே ஸர்வான்காமான் ஆப்த்வா அமிர்த: ஸமபவத்ஸமபவத்" என்ற சுருதிக்கு இந்த அர்த்தம்தான் என்பதையும், ஒப்புக்கொள்ளுகிறார். இப்படி ஒப்புக்கொண்டுவிட்டு பிறகு நிர்குணோபாஸ்தியை வெறும் வார்த்தையைக் கொண்டு ஸற்புறுத்தி ஜனங்களை அதோகதியை அடையச் செய்கிறார். இதுதான் ஆச்சரியம் என்று சொல்லி முத்திரையைக் காய்ச்சிக்கொண்டு வரும்படி ஆக்ஞாபித்தார். ஸ்ரீமான் அய்யரும் பன்முறை சாஷ்டாங்கம் நமஸ்கரித்து தன்னை உத்தரிக்கவேண்டுமென்று வேண்டிக்கொண்டார். எல்லா பிராம்மண சமூகங்களும் ஆவலுடன் எதிர்பார்த்திருக்கையில் 18–6–1938உ ஸ்திரவாரம் காலை சுமார் 8 மணிக்கு ஸ்ரீஸத்யாபிநவதீர்த்தரின் பிருந்தாவனத்தின் எதிரில் ஸ்ரீஉத்தராதிமடம் ஸம்ஸ்தானாதிபதி ஸ்ரீமத் ஸத்யத்யானதீர்த்த ஸ்ரீபாதாள் ஸ்ரீமான் கல்லடக்குறிச்சி ஸ்ரீனிவாஸய்யருக்கு மந்த்ராக்னியில் தப்தமான பஞ்சமுத்திரைகளைக் கொடுத்து, காதில்மகாமந்திரங்களை உபதேசம்செய்து இனி நீர் உத்தாரமடைந்தீர். இன்றுமுதல் நீர் மாத்வஸத்வைஷ்ணவனாய் ஆகிவிட்டீர். நீர் செய்யும் எந்த ஸத் கர்மாவும் ஸபலமடைந்து பகவத் ப்ரீதிக்குக் காரணமாகும். என்று அனுக்ரஹித்தார். அங்குள்ளவர்கள் அனைவரும் தாரைதாரையாய் ஆனந்த பாஷ்பம் பெருகவிட்டுக்கொண்டு மெய்மறந்தனர். இப்பத்திராதிபர், ஆனந்தக்கண்ணீர் விட்டுக்கொண்டு ஸாஷ்டாங்கம் நமஸ்கரித்து மத்வவிஜயத்தில் ஸ்ரீபகவத்பாதாள் இவ்வாறெல்லாம் செய்ததாய்க் கேட்டிருக்கிறோம். ஸ்ரீபகவத்பாதாளைப்போலவே ஸ்ரீஸ்வாமிகள் த்வைதமத ஸ்தாபனம் அத்வைத நிக்ரஹம் முதலியவைகளைச் செய்வதைக் கண்டோம். தற்போது ஒருவர்பின்னொருவராக ஸ்மார்த்தர்கள் மாத்வர்களாகிவிட போட்டிப்போட்டுக்கொண்டு முன்னுக்கு வருவதும் ஸ்ரீஸ்வாமிகள் அவர்களிடம் பரமானுக்ரஹம் செய்து அவர்களை உத்தரிப்பதும் ப்ரத்யக்ஷமாகிவிட்டது. ஸ்வாமின்! இந்த பத்து வருஷகாலம் நான் பலவகை தொந்தரவுகளில் மாத்வமித்திரனுக்குகடினமான



சாஸ்திர விஷயங்களை தமிழில் எளிய நடையில் எழுதி அதை பிரசுரித்து வருவது ஸ்ரீபகவத்பாதாளுடையவும், மாத்வஸமூகத்தினுடையவும் மகா ஸேவை என்று எண்ணியிருந்தது உண்மையென்று இன்றுதான் கண்டுகொண்டேன். தற்போது அனுபவிக்கும் ஆனந்தத்திற்கு அளவும் உண்டோ? எனது மாத்வமித்திரனுடைய ஆயிரக்கணக்கான வாசகர்களில் ஒருவராவது மாத்வமித்திரனில் ஸற்புறுத்தப்படும் அர்த்தத்தை மனதிற்குக் கொண்டுவந்து இவ்வாறு அத்வைதத்தை துச்சமாக எண்ணி மத்வமதத்தைத்தழுவி மாத்வராய் மாறியதே எனக்குப் போதுமானது. என் சிரமம் ஸார்த்தக்யமடைந்தது. எனது மித்திரன் ஸபலமடைந்தது. மகாஸ்வாமி! என் பாலியம்முதற்கொண்டு தாங்கள் என்னிடம் கருணைகாட்டி என்னை பரமசிஷ்யனாக வைத்துக்கொண்டு முதல் தீர்த்தம் முதலான மரியாதைகளை பகிரங்கமாய்க் கொடுத்து, ஏகாந்தத்திலும் எண்ணிறைந்த கடினமான விஷயங்களை தெளிவாகச் சொல்லி என்னுள் ஞானதீபம் பிரகாசிக்கச்செய்து என் மாத்வமித்திரனுக்கு பிரவர்த்தி வரும்படி தாங்கள் அனுக்ரஹித்து சம்ரக்ஷித்துவருவதோடு, நான் அழைத்துவந்த என் மாத்வமித்திரன் சந்தாதார நண்பரையும் அனுக்ரஹித்து சாசுவதமான வைகுண்டாதி லோகங்களையும், பகவத் பிரசாதத்தையும் அடையும்படி உத்தாரம் செய்தீர்களே. ஆகா! என்மீது என்ன கருணை" என்று சொல்லி சந்தோஷத்துடன் பலவாறு ஸ்தோத்திரம் செய்தார். ஸாஷ்டாங்கம் நமஸ்கரித்தார். ஸ்ரீஸ்வாமிகளும் உமது பத்திரிகை செய்வது மகா ஸேவைதான். ஆக்ஷேபனை இல்லையென்று இம்மித்திரனின் காரியத்தை பாராட்டிவிட்டு மாத்யான்ஹிக ஸ்நான பூஜைக்கு எழுந்தனர். பிறகு ஸ்ரீமான் ஸ்ரீனிவாஸ அய்யர் சரீரம் முழுதும் வெள்ளைவெளென்று பட்டைபட்டையாய் பூசிக்கொண்டிருந்த விபூதிப் பட்டைகளை இப்பத்திராதிபர் வாயுபகவானின் கைங்கர்யமென்று அனுஸந்தானபூர்வமாய் வாயுஸ்துதியைச் சொல்லிக்கொண்டு ஜலம்விட்டு தன் கையாலேயே சுத்தமாய் அழித்து, கோபீசந்தனத்தால் த்வாதச நாமங்களையும் முத்திரைகளையும் போட்டு, துளசியையும், துளசி மாலிகைகளையும் அணியச் செய்து, அலங்காரம் செய்து "பாருங்கள் இப்பொழுது கண்ணாடியில் உங்கள் முகத்தை" என்றார். அதற்கு ஸ்ரீமான் அய்யர் இப்போதுதான் நான் உயிருள்ளவனாக காணப்படுகிறேன் என்று பாவகர்பிதமாய்ச் சொன்னார். எல்லோரும் இவருடைய வேஷம் மாறியதைக்கண்டு சந்தோஷப்பட்டனர். அவ்வூரிலும் சரியே இந்நகரிலும் சரியே அத்வைதிகளில் அதிக பரபரப்பு ஏற்பட்டது. நூற்றுக்கணக்கான ஜனங்கள் இவரைப் பார்த்துப்போயினர்.

இவ்விதமான சிரத்தாபக்தியைப் பாராட்டாதவர்கள் அதிகமில்லை. பாரலோக விஷயத்தில் இப்பேர்ப்பட்ட அக்கரைதான் காட்டப்படவேண்டும் என்று வித்வான்கள் அநேகர் சிலாகித்துப்பேசினர். மாத்வ உலகமே ஆனந்தஸாகரத்தில் அமிழ்ந்திருந்தது. ஸ்ரீஸ்வாமிகளும் அன்று விசேஷமாக ஸ்வர்ணகசித மகா மண்டபத்தில் ஸ்ரீராமச்சந்திரனை வைத்து பூஜித்து இந்த கைங்கர்யத்தை ஸமர்ப்பணம் செய்து, பக்தகோடிகளுக்கு மிருஷ்டான்னத்தை அளித்தார். சதுஸ்சாஸ்திர வித்வான் ஸ்ரீமான் விச்வம்பர சாஸ்திரிகள் மெது மித்திரனில் வெளியான என்று ரத்தினங்கள்போன்ற மூன்று நிரூபங்கள் மூலமாய் அத்வைத மதம் பரம துச்சமென்று செவ்வனே எடுத்துக்காட்டி மாத்வராய் மாற சமயத்தை எதிர்பார்க்கிறார். ஸ்ரீமான்களான பெங்களூர் H. சுப்பராவ் M.A., V. N. வேங்கடாசாரியார் B.A., கடப்பை ராமச்சந்திரமூர்த்தி M.A., கார்வாரில் இரண்டு ஸெளகார் குடும்பங்கள் இப்படி அநேகர் அத்வைதிகளாயிருந்து சமீபகாலத்தில் மாத்வராய் மாறியிருக்கின்றனர். இவைகளைக் கண்டாவது எமது தென்னாட்டு மாத்வர்கள் மத்வமதத்தில் திடமான விசுவாசம் வைத்து இந்த மத்வமதத்தின் ஞானத்தை சம்பூர்ணமாய் அறிய விசேஷ சிரத்தை எடுத்துக்கொள்வார்களென்று எதிர்பார்க்கிறோம்.

---

ஸ்ரீ நாராயண பண்டிதாசாரியார் இயற்றிய

# ஸங்கிரஹ ராமாயணம்.

(முன் 346ம் பக்கம் தொடர்ச்சி)

---

## கங்காவதரணம்

மேல் திசையை நோக்கிச் செல்லும் ஆறுகளில் சிரேஷ்டமான சோணை ஆற்றின் பிராந்தியத்திற்கு வந்து விசுவாமித்திரர் அன்றிரவு ராமலக்ஷ்மணர்களுடனும் சிஷ்யர்களுடனும் அங்கே வசித்தார். குசிக புத்திரர்களின் அந்த தேசத்தை பார்த்துவிட்டு சொல்லத்தகுந்தவர்களான அவர்களின் கதையை எடுத்துச் சொன்னார். குசராஜனின் பௌத்திரரும் குசநாபனின் புத்திரரும் மகா பலசாலியுமான காதிராஜனிடமிருந்து, விசுவாமித்திரர் தான் பிறந்த விருத்தாந்தங்களை ராமருக்கு எடுத்துச்சொன்னார்.



அங்கிருந்து காலையிலேயே புறப்பட்டு ராமலக்ஷ்மணர்களுடன் கூடிய அந்த பிராம்மணர்கள் சீக்கிரமே கங்கை வந்து சேர்ந்து மத்யான்ஹ காலத்தில் களைப்பாறினர். அங்கு தம்பியுடன் கூடிய அமிர்தத்துக்கொப்பான ஹவிஸ்ஸைபோஜனம் செய்து ப்ரபுவான ஸ்ரீராகவன் ஸாதுக்கள் அறியவேண்டி இவ்வாறு பிரசினம் செய்தார். இந்த கங்கை எங்கிருந்து பிறந்தாள். மீண்டும் பூமிக்கு எதற்காக வந்துசேர்ந்தாள் என்று ராமர் பிரசினம் செய்ய ஸாதுக்களுக்கு நன்மை ஏற்பட விசுவாமித்திரர் இவ்வாறு சொன்னார். ஹிமவங்கிரிக்கு அற்புதமான குணங்கள் வாய்ந்த இரண்டு பெண்களிருந்தனர். ஒருவள் கங்கை, மற்றொருவள் பார்வதி. கங்கை ஆகாயத்தில் ஓடும் நதியானுள். பார்வதி பரமசிவன் பத்னியானுள். பரமசிவனுக்கு பார்வதியுடன் தேவர்களின் கணக்குப்படி ஆயிரம் வருடகாலம் சம்போகம் நடந்தும் ஓரிடத்திலாவது வீரியம் வெளிப்படவில்லை. பரமசிவனின் வீரியத்தால் பயமடைந்த தேவர்கள் அந்த சம்போகத்தை கெடுத்துவிடவும், பரமசிவன் தன் வீரியத்தை கங்கையிலும் அக்னியிலும் பூமியிலும் விழச்செய்தார். அந்த வீரியம் எல்லோராலும் தரிக்கமுடியாதது, ஸாதுக்களுக்கு ஐசுவரியத்தை அளிப்பது, அது எல்லாம் ஒன்றாய்ச்சேர்ந்து அங்கிருந்து ஸ்கந்தனுகிய ஸுப்ரமண்யர் பிறந்தார். மகா காந்தி பொருந்தியவராய் பார்வதி பரமேச்வரர்களுக்கு ஆனந்தத்தை விளைவிப்பவராய் பிரிய குமாரராய் ஆனுர். அவரைத்தான் கார்த்திகேயன் என்றும் கங்கா குமாரன் என்றும் அக்னி குமாரன் என்றும் பெரியோர்கள் சொல்லுகின்றனர். ஸுரபதியான இந்திரன் அவரை தன் ஸேனுதிபதியாகச் செய்து அஸுரர்களை ஸம்ஹரித்தான். வாஸுதேவனை ஸ்ரீ ஹரியின் அனுக்ரஹம் ஏற்படுவதற்காக அந்த பார்வதி பரமேசுவரர்கள் தவத்திலமர்ந்தனர். ஹிமவத்கிரியின் ஓர் பெண்ணுன பார்வதி இப்பேர்ப்பட்ட மகிமை வாய்ந்தவள். இனி கங்கையின் வரலாற்றைச் சொல்கிறேன் கேள். முன்பு விஷ்ணு த்ரிவிக்ரமாவதாரத்தால் உலகை அளந்த சமயம் அவருடைய பாதோதகமாகிய கங்கை ஏதோ ஒரு காரணத்தால் ஹிமவானுடைய பெண்ணுய்பிறந்தாள். மீண்டும் ஸ்வர்க்கலோகம் சென்றுள். முன்பு ஸகரன் என்று ஓர்

ராஜா இருந்தார். அவர் விஷ்ணு பக்தர். முன்னோர்களில் சேர்ந்தவர். மகன் பிறக்க அவர் தவம் செய்தார். அவருடைய ஓர் பாரியாளிடம் வம்சத்தை உண்டாக்கிய அஸமஞ்சஸ் என்ற ஓர் மகன் பிறந்தான். மற்றொரு பாரியாளிடம் அறுபதாயிரம் பிள்ளைகள் பிறந்தனர். அந்த அஸமஞ்ஜஸன் யோகசாலியாய்ப் போய் துஷ்ட ஸகவாஸத்திற்கு பயந்து தான் கொடியவன் என்பதாய் வெளியில் காட்டிக்கொண்டு, அவனுக்கு பிள்ளை பிறந்தபின் அவனுடைய தந்தையால் விலக்கப்பட்டு வனம் சென்றான். பின்பு ஒரு சமயம் ஸகரராஜன் அசுவமேத யாகத்தைச் செய்தான். மகேந்திரன் மறைவாய் இருந்து அந்த யக்ஞத்தின் பரிசுத்தமான அசுவத்தை அபகரித்துச் சென்றான். அந்த யாகாசுவத்தை அடைய விரும்பி அந்த ஸகரராஜனின் அறுபதாயிரம் பிள்ளைகள் ஸமுத்திரம் வரை பூமியைப் பறித்தார்கள். அதனால்தான் ஸமுத்திரத்திற்கு ஸாகரம் என்று பெயர் ஏற்பட்டது. ரஸாதளலோகத்தில் இருந்துவந்த பரம்ஜோதியான கபில மூர்த்தி ஹரியை அந்த குதிரையைத் திருடி வந்தவர் என்று எண்ணி அவரைக் கொல்ல விருப்பங்கொண்டவர்களாய் விட்டில் பூச்சிகள் நெருப்பில் விழுவதுபோல் அவரைத் தாக்கினார்கள். வாஸுதேவனான அந்த கபில முனிவர் கண் திறந்து பார்த்ததால் கிளம்பிய அக்னி அவர்களை எல்லாம் கொளுத்தியது. உலகத்தை எல்லாம் அழிக்கும் அந்த ஹரிக்கு இது ஓர் ஆச்சரியமல்ல. பிறகு அசுவமேதாசுவத்தை தேடிக்கொண்டு அஸமஞ்ஜஸ்ஸின் குமாரனான அம்சுமான் என்னும் அரசன் கபிலமூர்த்தியின் சமீபம் வந்து தன்னை க்ஷமித்தருளவேண்டுமென்று அன்புடன் லோகநாதனான அந்த பகவானுக்கு நமஸ்காரம் செய்தான். கருணையாகிய அமிர்தத்தைக் கொட்டுபவரான அந்த கபிலமுனிவர் அம்சுமானிடம் அனுக்ரஹம் செய்து அசுவமேதாசுவத்தைக் கொண்டு போகலாமென்று அன்புள்ள வார்த்தையாடினார். சிறு வயதுள்ளவனும் சாந்த ஸ்வபாவமுடையவனுமான அம்சுமான் தன் பாட்டனாரின் யாகத்தை முடித்துக்கொடுத்தான். பிராம்மண சாபத்தால் இறந்துபோன பித்ருக்களை ஸ்வர்க்க மார்க்கத்திற்கு கொண்டுபோக, ஆகாயத்திலிருந்து கங்கையை வரவழைத்து அவர்களைஸ்நானம் செய்விக்க



உத்தேசம் கொண்டு அந்த கபில மூர்த்தியின் ஆக்ஞைபடி தபஸ் செய்தான். தன் காரியம் கைகூடாமலே அந்த அரசன் இறந்து போகவும், அந்த அம்சுமானின் குமாரனான திலீபனும் அதற்காக தவத்திலமர்ந்தான். அந்த திலீபனும் காரியம் கைகூடாமல் இறந்துபோகவும், அவனுடைய குமாரனான பகீரதனும் அதற்காக தவம் செய்தான். பிரம்மாவின் அனுக்ரஹத்தால் கங்கையை அடைந்து அவள் பூமியில் வந்துசேர சம்மதிக்க, பூமியில் அவள் ஸ்வர்க்கத்திலிருந்து விழும்போது, அவளுடைய வேகத்தைத் தாங்குபவரை மூவுலகிலும் பகீரதனால் கண்டுபிடிக்க முடியவில்லை. விஷ்ணுவின் காலிலிருந்து உண்டானவளைத் தாங்க அருகரானவர் விஷ்ணுவின் பக்தர்களில் சிரேஷ்டரானவர் பரமசிவன் என்று கண்டுகொண்டு அவரை தன் தபஸ்ஸால் சந்தோஷப்படுத்தி கங்கையை ஸ்வர்க்கத்திலிருந்து பூமியில் இறக்கினார். முத்துமாலையைப் போல்வெளுப்பான கங்கையை அழைத்துக்கொண்டு பகீரதன் முன்னடி செல்லவும் அவள் விசித்ரமாய் சஞ்சாரம் செய்துகொண்டு ஜன்ஹுராஜனின் யக்ஞவாடத்தை தோய வைக்கவும் ஜன்ஹுராஜன் கங்கையை பானம் செய்து தன் காதால் அவளை வெளியாக்கி கங்கை ஜன்ஹுவின் பெண்ணாய் ஆகிவிடவும், அந்த ஜான்ஹவியின் ஜலத்தை ஸாகரத்தின் வழியாய் ரஸாதள லோகத்திற்கு கொண்டுபோய் தன் பித்ரு கூட்டங்களின் சரீரத்தை தோய வைத்து அவர்களை எல்லாம் ஸ்வர்க்க லோகத்திற்கு அனுப்பி வைத்தார். ஸ்ரீஹரியின் கால் தாமரையின் சம்பந்தமடைந்த இந்த கங்கை மகத்தான பாபத்தை போக்குகிறாள் என்பது ஆச்சரியமன்று மனதைக் கவரக்கூடிய ரூபமுள்ள ராமா! விஷ்ணுவே! உன் குணங்களை சிரவணம் செய்வதும் மனனம் செய்வதும் கீர்த்தனம் செய்வதுமே உத்தமமான மோக்ஷத்தைத் தருகின்றனவே.

5வது ஸர்க்கம் முடிந்தது.

## 6வது ஸர்க்கம்

## அமிர்தமதன கதை.

புண்ய சரித்திரங்களைக்கொண்ட புண்யபுருஷர்களின் சரித்திரங்களை இவ்வாறு சொல்லி வருவதால் ஸ்ரீராமருடன் கூடிய அந்த

பிராம்மணர்களுக்கு அந்த இரவு ஓர் க்ஷணம்போல் கழிந்தது. ராமலக்ஷ்மணர்கள் விசுவாமித்திரருடனும் பலவகை மகரிஷிகளுடனும் ஓடத்திலேறி கங்கையின் வடகரைக்குச் செல்ல அதைக் கடந்தார். முன்பு விசாலன் என்ற அரசனால் நிர்மாணம் செய்யப்பட்டதும் அழகான ஸ்தலங்கள் உள்ளதும் விசாலமானதும் மகத்தான ஐசுவரியமுள்ளதுமான வைசாலி என்னும் நகரத்தினுள்ளே அவர்கள் எல்லோரும் சென்றனர். விசுவாமித்திரர் விசால ராஜனின் உற்பத்தியையும் அவனுடைய வம்சத்தையும் ராமருக்குச் சொன்னார். அந்த அரசனின் வம்சத்தார்களால் அந்த நகரம் பிரகாசித்திருந்தது முன்பு அமிர்தத்தை எடுப்பதற்காக தேவாஸுரர்கள் எல்லோரும் க்ஷீர ஸமுத்ரத்தைக் கடைந்தனர். அதில் மந்தர பர்வதம் மத்து ஆயிற்று, ஸர்பராஜனை வாஸுகி கடையும் கயிறாய் ஆனான். மேலே வந்துவிட்ட மந்தர மலையை பகவான் நாராயணன் ஆயிரம் புஜங்களுடன் தோன்றி ஸமுத்ரத்தில் நிலை நிற்கச் செய்தார். ஜலத்தினுள்ளே மூழ்கிப் போகும் அந்த மந்தர மலையை கருணைக்கிருப்பிடமான பகவான் கூர்ம ரூபமெடுத்து அதைத் தாங்கி ஸமுத்ரத்தில் நிலை நிற்கச் செய்தார். தேவாஸுரர்கள் ஸமுத்ரத்தைக் கடைந்து களைத்துப் போனவுடன் நாராயணன் அஜித மூர்த்தி ரூபத்துடன், அணிந்த காப்பு, கொலுசு, நகைகள் சப்திக்க ஆயிரம் கைகளுடன் வாஸுகி ஸர்ப்பக் கயிற்றை பிடித்து மந்தர மலையைப் பிடித்து கடைந்தார். சந்திரனும் மகா லட்சுமியும் வெகு அழகுள்ள அப்ஸரஸ் கூட்டங்களும் அங்கிருந்து உற்பவித்தனர். அமிர்த கலசத்தை எடுத்துக்கொண்டு தன்வந்திரி மூர்த்தி பகவான் அங்கிருந்து உற்பவித்தார். ஆசையுடன் அமிர்தத்தை அபகாரம் செய்த அஸுரர்களை அவர்களின் சத்ருவான நாராயணன் மோகினி ரூபமெடுத்து மயக்கி அவர்களிடமிருந்து பிடுங்கி தன் பக்தர்களான தேவர்களுக்கு அமிர்தத்தை பானம் செய்வித்தார். பிறகு தேவர்களுக்கும் அஸுரர்களுக்கும் யுத்தம் நடந்து அஸுரர்கள் இறந்து போகவும், அவர்களின் தாயான திதிதேவியார் தன் பர்த்தாவான கசியப்ரஜேசுவரரைப் பார்த்துச் சொல்லி, அவரிடமிருந்து கர்பத்தைப் பெறவும், அதை மகேந்திரன் வஜ்ஜிராயுதத்தால் துண்டாடி-



னான். அதனால் அந்த கர்பத்தின் துண்டுகள் அழத்தொடங்கவும் திதியின் வயிற்றிற்குள் புகுந்திருந்த மகேந்திரன் மா ரோதீ: நீங்கள் அழாதீர்கள் என்று சொன்னதால் அவர்கள் மருத்தர்கள் என்று பெயர்கொண்டு மகேந்திரனுக்கு பிரியரானார்கள். உத்தமச்லோகரான நாராயணனின் பக்தர்களுக்கு உத்தமமான ஸம்பத்துகள் ஏற்படுகின்றன. அவருடைய த்வேஷிகளுக்கோ விபத்துகள் தான் உண்டாகின்றன. அப்படி க்ஷீர ஸமுத்ரத்தில் உண்டான அப்ஸரஸ்களில் அழகானவள் அலம்புஸா என்பவள். அவளிடம் ராமா! உன் முன்னோரான இக்ஷ்வாகு மகாராஜனுக்கு விசாலன் என்ற குமாரர் பிறந்தார்—என்று இவர்கள் இப்படி பேசிக்கொண்டிருக்கும்பொழுது, அந்த விசாலராஜனின் வம்சத்தவரான ஸுமதி என்னும் அரசன், தன் தேசத்திற்குள் அந்த மகா புருஷர்கள் வந்திருந்ததைக்கண்டு அவர்களை மகா பூஜை செய்தார். விச்வாமித்திரர் சொல்லி ராமலக்ஷ்மணர்கள் இப்பேர்ப்பட்டவர்கள் என்பதை கண்டுகொண்டு, உலகத்தாரால் கொண்டாடத்தகுந்தவர்களும் உலகத்தில் மகா ஸௌந்தர்யம் படைத்தவர்களுமான அந்த ராமலக்ஷ்மணர்களை அன்புடன் சீராட்டினார். அன்று இரவு அங்கிருந்து அதைக்கழித்து மறுநாள் காலை அந்நகரிலிருந்து புறப்பட்டு தென்றல் காற்று வீசும் மிதிலாநகரத்தின் உத்யானவனம் போய்ச் சேர்ந்தார்.

## அகல்யா சாபவிமோசனம்.

மிதிலையின் சமீப பிராந்தியத்தில் ஓர் ஆசிரமத்தைக்காட்டி ராமரைப்பார்த்து விசுவாமித்திரர் இவ்வாறு இனிமையாய் பேசினார். கௌதம மகா முனிவர் அளவுக்கு மிஞ்சி தபஸ்ஸு செய்து, விடவும் அவருடைய தபஸ்ஸை அபகரிக்க விருப்பங்கொண்டு தேவர்களின் காரியத்தை நிறைவேற்றுவதற்காக ஸுரபதியான மகேந்திரன் அவருடைய ஆசிரமத்திலேயே அவருடைய பாரியாளான அகல்யையை அவரில்லாதசமயம் அணுகி ஸ்பரிசித்தான். கௌதமர் ஆசிரமத்துக்கு வந்து இந்திரன் செய்த காரியத்தை அறிந்து கோபங்கொண்டு, வியபிசாரம் செய்தவளே! உன் ஜார புருஷனுக்கு விருஷணம் அழிந்துபோகட்டும், நீ கல்லாகிவிடு, என்று அகல்யைக்கு சாபம் கொடுத்து ஸ்ரீராமச்சந்திரனைப்

பார்த்தபின், நீ பெண்ணைப்போ என்று அவளிடம் கருணை காட்டி சாப விமோசனத்தையும் கொடுத்தார். பித்ருக்களும், தேவர்களும் யோகசக்தியால் தங்கள் ஆட்டின் விருஷணத்தை எடுத்து மகேந்திரனுக்குக் கொடுக்க அவன் மேஷவிருஷணன் என்று பெயர்பெற்றான். ராமா! மகேந்திரன் உனது பக்தன். அவனுடைய மனோ வியாகூலத்தை பரிகாரம் செய். அஹல்யையிடம் கருணைகாட்டு. நீ கருணைக்கு கடலாய் இருப்பவன் என்று விச்வாமித்திரர் சொல்லவும் ஸ்ரீராமர் சந்தோஷத்துடன் கௌதமரின் அந்த ஆசிரமம் வந்து, மனோஹரமான கடைக்கண் பார்வைகொண்டு கல்லாய்க்கிடந்திருந்த அந்த அகல்யையை கடாக்ஷித்தார். ஸ்ரீராமர் பார்த்தமாத்திரத்திலேயே அவள் திவ்விய ரூபங்கொண்டு கௌதமருக்கு ப்ரியமானவளாய் ஆனாள். தன் புருவத்தை அசைப்பதால் எல்லா ஜகத்துமே உண்டாகும்பொழுது சிலாரூபியான அஹல்யை மனுஷ்ய பாவத்தை அடைந்தது ஸ்ரீஹரியான ராமர் விஷயத்தில் ஆச்சரியமன்று. உத்க்ருஷ்டமான இந்த லீலைகளைக்கொண்ட ஸ்ரீராமச்சந்திரனை தன் பாரியாளான அஹல்யையுடன் சேர்ந்து கௌதம முனிவர் பக்தி பூர்ணராய் பூஜித்தார் விசுவாமித்திரரையும் பூஜித்தார்.

அங்கிருந்து வடக்கே செல்ல விசாலமான பிராந்தியத்தில் யக்ஞ மூர்த்தியான அந்த ராமச்சந்திரன் ஜனகராஜனின் யக்ஞ சாலையைக்கண்டார்.

(தொடரும்)

---

# அறிவிப்பு.

உத்தம குணமுள்ள எமது சந்தாதார நேயர்களின் மேலான சகாயத்தால் இம்மித்திரன் மாத்வ உலகுக்கு இணையற்ற கைங்கர்யம் செய்துவருவதும் அதனால் ஏற்படும் மகா பலன்களும் நிதர்சனமாய் ஏற்பட்டிருப்பதையும் இவ்விதழைக்கண்ட மாத்திரத்தில் நன்கு புலப்படும். ஓர் பத்திரிகை பிரசாரம் செய்து வருவதின்படி, அஸாதாரணமான காரியங்களை அதன் வாசகர்கள் செய்யத் துவக்கினால், பத்திரிகை உலகில் அப்பத்திரிகைக்கு



விசேஷ மதிப்பு உண்டு. இப்பேர்ப்பட்ட மதிப்பு இம்மித்திரனுக்கு ஏற்படுவதற்கு காரணம் எமது சந்தாதார நேயர்களின் கூட்டுறவுதான். பற்பல சந்தர்ப்பங்களில் நாம் இம்மித்திரனை நிறுத்திவிட எத்தனப்பட்டும், இந்த தமிழ் நாட்டில் ஏராளமான மித்ரரத்னங்களான ஸத்புருஷர்கள் இருந்து இம்மித்திரனை அன்புடன் வரவழைத்து வாசிக்க முற்பட்டிருப்பதால்தான், அவர்களின் ப்ரேம பாசத்தில் கட்டுப்பட்டு போதுமான திரவிய பலமில்லாமல் இருந்தும், இம்மித்திரனுக்கு ஆதியில் இருந்தபடி சந்தாதாரர்கள் அதிகமாய் ஏற்படுவார்கள் என்ற பூர்ண நம்பிக்கையுடன், இம்மித்திரனை இதுவரை நடத்தி வந்தோம். தற்போது ஏற்படும் மகா பலன்களைப் பார்க்குமளவில் எமது சந்தாதாரர்களை நிர்ப்பந்தம் செய்தாவது, திரவிய சகாயத்தைப் பெற்று இம்மித்திரனை சாசுவதமாய் நடத்தும்படியான ஏற்பாடு செய்ய நிச்சயம் செய்திருக்கிறோம். இம்மித்திரனை ஓர் கம்பெனியின் மானேஜ்மெண்டில் ஒப்புவிக்க உத்தேசித்திருக்கிறோம். அதன் திட்டத்தை சீக்கிரம் பிரசுரிக்கிறோம். தற்போது சந்தாதாரர்கள் எல்லோருக்குமே சந்தா தொகை ரூ. மூன்று ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. சந்தாதாரர்களின் சங்கியை போதுமான அளவு இல்லாததால் இப்பத்திரிகையை நடத்த இந்த சந்தா தொகை பலம் மிகவும் குறைவாக இருக்கிறது. அதற்காக எமது சந்தாதாரர்களில் பகவத் அனுக்ரஹத்தால் திரவிய ஸம்பத்து, தயா ஸம்பத்து, சிரத்தா ஸம்பத்து, பக்தி ஸம்பத்து முதலிவைகளைப் படைத்த மகான்கள் இச்சமயம் முன்வந்து, இப்பத்திரிகையின் ஸ்தாபகர்களாகவும், போஷகர்களாகவும், சகாயகர்களாகவும் நின்று கைதூக்கிவிடப் பிரார்த்திக்கிறோம். திரவிய அனுகூலமில்லாத சிரத்தாவான்கள், தலா இரண்டு சந்தாதாரர்கள் வீதம் இப்பத்திரிகைக்கு சேர்ச்செய்தால், இப்பத்திரிகைக்கு ஏராளமான சந்தாதாரர்கள் ஏற்பட்டுவிடுவார்கள். இதுவரை இம்மாதிரி சந்தாதாரர்களை பண உதவி செய்ய நாம் கேட்டுக்கொண்டதில்லை. மிகவும் நெருக்கடியான சந்தர்ப்பமாய் இருப்பதால் இவ்வாறு கேட்கத் துணிந்தோம். இம்மித்திரனின் அதிபதியான ஸ்ரீராகவேந்திரர் எமது சந்தாதாரர்களை பிரேரிக்க பிரார்த்திக்கிறோம். இந்த இதழுடன் 10-வது வாலியம் முடிவடைவதால், அடுத்த

11-வது வாலியத்துக்கு சந்தா தொகை ரூ. மூன்றை மணியார்டர் மூலமாகவே முன்னுடி அனுப்பிக்க பிரார்த்திக்கிறோம். V. P. மூலமாய் அனுப்புவதில் அதிகச் செலவு உண்டாவதுடன் சரியான காலத்தில் அவைத அடைய முடியாமல் அநேக V. P.கள் வாபீஸ் செய்யப்பட்டு சொற்ப வரவு செலவுள்ள இப்பத்திரிகாலயத்திற்கு வீரணமான நஷ்டம் உண்டாகிறது. சந்தாதாரர்கள் மணியார்டர் செய்து விடுவதால் சந்தாதாரர்களின் ஸங்கியை முன்னுடி தெரிவதோடு, பத்திரிகையின் எல்லா காரியங்களையும் ஒழுங்கு படுத்த சௌகரியம் ஏற்படுகிறது. அவ்வாறு மணியார்டர் செய்யாத சந்தாதாரர்களுக்கு அடுத்த சஞ்சிகை V. P.யில் அனுப்பப்படும். அவைகளைப்பெற்று ஆதரிக்கப் பிரார்த்திக்கிறோம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஸ்தாபகர் | வருஷம் 1க்கு | ரூ. | 25 | 0 | 0 |
| போஷகர் | ,, | | 15 | 0 | 0 |
| ஸகாயகர் | ,, | | 10 | 0 | 0 |
| சந்தாதார் | ,, | | 3 | 0 | 0 |

மானேஜர், மாத்வமித்திரன்,
ஸ்ரீவியாஸ விலாஸம், கும்பகோணம்.

## வெடி குண்டு.

[ஓர் விநோதன் எழுதுவதாவது]

சென்னை மார்க்கபந்து தொகுதி 4 பகுதி 9, 10, 11ல் வெளியாகியிருக்கும் 'தர்ம தூதன்' கொரடாவுக்கு பதில்.

தர்மதூதா! பலே! பலே! சங்கராசாரியார் கம்மண்டாட்டி பிள்ளை என்று மாத்வர்கள் சொல்வதை மார்க்கபந்து வாசகர்களுக்கும் சிரத்தையாய் அறிவித்ததற்கு மிக மிக வந்தனம். அதற்காக நான் காட்டிய ஆதாரங்களை அபிமானம் என்று நிரூபித்திருந்தால் நீர் புத்திசாலிதான். அதை ஒப்புக்கொண்டுவிட்டு குப்பைக்கூளங்களை கிளறலாகாதென்றும், மதாசாரியார்களிடம்



த்வேஷ பாவத்தை உண்டுபண்ணலாகாதென்றும், எனக்கு புத்தி புகட்ட புறப்பட்டீர். முதலில் இதை உம்முடைய அத்வைதி ஸன்னியாஸிக்கே புத்தி கூறியிருப்பதுதானே! அவர் என் ஆசாரியாரை தூஷித்து நூற்றுக்கணக்கான பிரசுரங்களை நாடெங்கும் பிரசுரம் செய்ததைக்கண்டு நீங்கள் அத்வைதிகள் சந்தோஷப்பட்டீர்களே! நான் அதை மறுத்தால் ஏன் உமக்கு இவ்வளவு ஆத்திரம். அந்த அத்வைத ஸன்னியாஸி குண்டூர் மாந்தாசார்ய ஸ்வாமிகள் 21வது ஸ்ரீமுகத்தில் என்ன எழுதியிருக்கிறாரென்றால், இங்கிலீஷ் பதிப்பு 5வது பக்கம். ***The propagator Madwa was a Golaka being the son of a widow by a wretch of a Brahmin;*** ஸம்ஸ்கிருத பதிப்பு 4வது பக்கம் "மத்வமதம் ச கோளகேன மது காம்ஞ கேனசித் பாஷ்தான த்ரய விருத்தம் ப்ரகல்ப்யத்". மத்வ மதத்தை ப்ரவிருத்தித்த மத்வாசாரியார் ஓர் பிராம்மண ஜார புருஷனால் கம்மண்டாட்டியிடம் பிறந்தவன் என்றார். இவ்வாறு பிரசுரித்ததற்கு, நான் இப்படி மத்வாசாரியாரை ஒருவரும் சொல்வதில்லை என்றும், உமது சங்கராசாரியாரைத்தான் கம்மண்டாட்டி பிள்ளை என்று மணிமஞ்ஜரி, மத்வ விஜயம் முதலான கிரந்தங்களில் நம்மவர்கள் சொல்வதோடு, சங்கராசாரியாரின் காலத்திலேயே ஜனங்கள் அவ்வாறு சொன்னதாய் சங்கரரின் சிஷ்யர்கள் எழுதிய சங்கர விஜயங்களிலேயே சொல்லப்படுகிறதென்றும், பொது ஜனங்களும் இவ்வாறே அபிப்பிராயப்பட்டிருக்கின்றனரென்றும், எழுதினேன். இதில் என்ன தவறு. நீர் சொல்வது, என் பெண் பொல்லாது உன் பிள்ளையை அடக்கு என்று ஒருவன் சொன்ன கதையாகத்தான் இருக்கிறது ஆத்திரக்காரனுக்கு புத்திமட்டு என்பதை நன்றாய்க் காட்டியிருக்கிறீர். என் நிருபத்தின் தலைப்பு குண்டூர் மாந்தாசார்ய ஸ்வாமியின் 21வது ஸ்ரீமுகத்திற்கு பதில் என்று இருப்பது கண்ணுக்கு புலப்படவில்லை போலும். ஐயோ! பாவம்! அத்வைதத்தை தூஷித்தால் அத்வைதி பத்திரிகைக்கு கோபம் வருவது சகஜம்தான். சாஸ்திர ஸம்பிரதாயம் தெரிந்திருந்தால் கோபம் வராது. அத்வைத பண்டிதர்களையே கேட்பதுதானே. ஜனங்களில் வைர பாவத்தை உண்டாக்கவேண்டுமென்றும் த்வேஷத்தை வளர்க்க

லாகாதென்றும் நீர் நியாயம் பேசுவது அழகாய்த்தானிருக்கிறது. மத போதனை விஷயத்தில் இது ஒருக்காலும் சாத்யமில்லை. தன் மதத்தை தகுந்த ஆதாரங்களுடன் ஸ்தாபிப்பதுடன் அந்த மதத்திற்கு விரோதமான மதத்தை கண்டிக்கத்தான் வேண்டும். கோர்ட்டில் ஒரு கக்ஷிக்கு தீர்ப்புக்கூறும் பொழுது, அதற்கு ஸாதகமான ஆதாரங்களை எடுத்துக்காட்டுவதுடன் எதிர் கக்ஷியினர் காட்டியிருக்கும் ருஜுக்களையும் ஆதாரங்களையும் கண்டிப்பதில்லையா? ஸ்வபக்ஷ ஸாதன பரபக்ஷ பாதனாப்யாம் நிர்ணய: என்று, தன் கக்ஷியை ஸ்தாபிப்பதாலும் எதிர் கக்ஷியை தகர்ப்பதாலும் தான் தத்வ நிர்ணயம் ஏற்படுகிறது என்பது எல்லா சாஸ்திரகாரர்களும் ஒப்புக்கொண்ட நியாயம். ஏன்? உமது சங்கராசாரியாருங்கூட தமது பிரம்ம ஸூத்திர பாஷியம் 2வது அத்யாயம் 2வது பாதம் 1வது ஸூத்திரத்தில் எதிர் கக்ஷியினருக்கு த்வேஷம் ஏற்படுவதாயிருந்தாலும் அவர்களின் கக்ஷியை கண்டிப்பது அவசியம்தான் என்று முடிவு கூறியிருக்கிறார். அவர் சித்தாந்தத்திற்கு விரோதமான பௌத்தர்களையும் பௌத்த மதத்தையும் வாய் கொண்டளவு தூஷித்திருக்கிறார். அவர்மட்டில் அன்று, கௌடபாதாசாரியார், பாமதீகாரர், பிரம்மவித்யாபரணகாரர், பஞ்சபாதிகாகாரர் முதலிய அத்வைத சாஸ்திரகாரர்களும் தம் விரோதமான மதங்களை கண்டிப்பது அவசியமென ஒப்புக்கொண்டிருக்கின்றனர். கீதாசார்யரான ஸ்ரீகிருஷ்ணரும் "அஸத்யமப்ரதிஷ்டம் தே" முதலான சுலோகங்களால் எதிர் வாதங்களை கண்டிக்கவில்லையா? பிரம்மஸூத்திரகாரரான ஸ்ரீவேதவியாஸரும் "நேதரோநுபபத்தே" முதலான ஏராளமான ஸூத்ரங்களால் பரமதங்களை கண்டித்திருக்கிறார். வேதத்திலேயும் "தத்தைக ஆஹு: அஸதேவேதமக்ர ஆஸீத்" முதலான வாக்யங்களால் பரமதத்தை கண்டித்திருக்கின்றன. ஆகவே பரமதங்களை தூஷிப்பதுதான் அறிவாளிகளின் கடமை. அதுதான் அவர்களின் அறிவை விளக்கிக்காட்டுவது. ஸமரஸ பாவச் செய்ய முற்படுவது முட்டாள்தனமாகும், அயோக்யத்தனமுமாகும். தாயின்மனம் கோணாமல் எவரும் நடக்கவேண்டியதுதான். அவள் வியபிசாரம் செய்துகொண்டிருந்தால் அவள் மனம் துக்கப்படுமே என்று கண்டித்துச் சொல்லாமல் இருப்பதா?



பிள்ளையின் மனம் துக்கப்படுமென்று அவன் அகாரியம் செய்தால் அதை கண்டிக்காமல்விடுவதா? அத்வைதம் த்வைதத்திற்கு நேர் எதிரிடையானது. த்வைதத்தை நிர்ணயம் செய்து கொடுக்கும் பொழுது அத்வைதத்தை கண்டிக்காமல் இருந்தால் எமது கடமையை நாம் செய்யத்தவறுவோம். த்வைதமும் நிலைநிற்காது.

சங்கராசாரியாரின் உயரிய கொள்களை நான் அறியேனே என்று குறைகூறுகிறீர். எனக்கு தெரியாமலேயே இருக்கட்டும். சதுஸ்சாஸ்திர வித்வான் அத்வைத மகா பண்டிதர் ஸ்ரீமான் விச்வம்பர சாஸ்திரிகள் சமீபத்தில் பல நிரூபங்கள் மூலமாய் சங்கராசாரியாரின் அற்புத அத்வைத கொள்கைகளையும் அபூர்வ அர்த்த கல்பனைகளையும் அழகான விசாரரீதிகளையும் சந்திக்கு இழுத்து சாமானியனுங்கூட கெக்கலி கொட்டி நகைக்கும்படியாய் செய்திருப்பதை நீர் பார்க்கவில்லைபோலும். அவருடைய பகவத் பக்தியைப் பற்றி நான் அறியேன் என்கிறீர். ஒரு சாமானியனையும் பார்த்து நீதான் நான், நான்தான் நீ, எங்கள் இருவர்களில் சிறிதும் வித்யாசமில்லை என்று சொல்லி, அதை அவன் பாரியாள் கேட்டுக்கொண்டிருந்தால் எடுப்பாள் துடப்பக்கட்டையை, சாமரப்ரயோகம்தான் விழும். ஒரு அரசனைப்பார்த்து இவ்வாறு சொன்னால் ராஜத்ரோக குற்றத்திற்கு தீவிர சிக்ஷையே ஏற்படும். ஜகத்தில் சிருஷ்டியாத்யஷ்ட கர்த்தாவான பரப்பிரம்மத்தை அஹம் பிரம்மாஸ்மி என்று உபாஸிப்பது பகவத் பக்தியா, பகவத் த்வேஷமா என்று நீர் யோஜனை செய்யும். அவ்வாறு உபாஸித்தால் அந்தம் தமஸ்ஸூதான் சிக்ஷை என்று ஏற்பட்டிருக்கிறது. இனி சங்கராசாரியாரின் வாசாமகோசரமான கலா ஞானம் எனக்குத் தெரியவில்லை என்கிறீர். உண்மையில் எனக்குத் தெரியாமலிருந்தது. என் ஊரிலுள்ள சங்கர மடத்தில் ஒரு பிரசித்த பாகவதர் சங்கர விஜய ஸீரிஸ் கதையைச் சொல்லும்பொழுது எனக்கு அது வெட்ட வெளிச்சமாயிற்று. சங்கரரின் கலா ஞானம் வாசாமகோசரம் என்பதை அந்த கதையை கேட்ட ஸ்திரீகள் பாகவதரை அன்று வாசாமகோசரமாய் திட்டியதிலிருந்து நன்கு புலப்பட்டது. அவர் சொன்னதாவது:—"ஸ்படிகபலகே ஜ்யோத்ஸ்நாசுப்ரே மனோக்ஞசிரோ க்ருஹே, வரயுவதிபி: திவ்யன்னைஷ: துரோதரகேளிஷு அதரதசனம் பாஹ்வா

வாஹம் மனோத்பலதாடனம், ரதிவிஹீமயம் ராஜாகார்ஹீத் க்ல ஹம் விஜயோ மித:|| அதரஜஸாதாச் லோஷாத் ருச்யம் ஸாகந்தி முகாநில வ்யதிகரவசாத் காம் காந்தாதாகரா தத் மதிப்ரியாம்| மது மதகரம் பாயம் பாயம் ப்ரியா: ஸமபாயயத், கனக சஷகை: இந்துச்சாயா பரிஷ்க்ருதமாகராத்|| மது மதகலம் மந்தனவின்னம் மனோஹர பாஷணம் நிப்ருத புலகம் ஸீத்காராட்டியம் ஸமோருஹ ஸௌரபம்| தரமுகுலிதாக்ஷீபலஜ்ஜம் விஸ்ருத்வர மன்மதம், ப்ரசரதலகம் காந்தாவக்த்ரம் ததீய க்ருதிந்ருப:|| விவ்ருத ஜகனம் ஸந்த்ஷ்டோஷ்டம் ப்ருஹஜ்வன்லதபயோதரம், ப்ரஸ்ருத மணிதம் ப்ராப்தோத்ஸாஹம் ரணன்மணிமேகலம்| நிப்ருத கரணம் க்ருத்யத்தாத்ரம் கதேகர பாவனம், ப்ரஸ்ருமர ஸாகம் ப்ராதுர்பூதம் கிமப்ய பதாம் கிராம்|| மனஸிஜகலாதத்வாபிக்ஞ: மனோக்ஞ விசேஷித: ஸகல விஷய வ்யாவிருத்தாக்ஷ: ஸதானுஸ்ருமோதத்தம: க்ருதகுச குருபாஸ்த்யா த்யந்தம் ஸாந்திர்விருத மானஸ: நிதுவன பரப்ரம்மானந்தம் நிராகளமன்வபூத்"|| ராஜரூபத்துடனுள்ள ஸ்ரீசங்கர பகவத் பாதாள் ராஜ குமாரிகளுடன் சேர்ந்து அழகிய மேல் மாளிகையின்மீது சந்திரிகையின் வெளிச்சத்தில் ஸ்படிக பலகையில் சொக்கட்டாடினர். அந்த ஆட்டத்தில் பற்களால் உதட்டில் கடிப்பதும், கைகளால் இருகக் கட்டுவதும், நீலோத்பலத்தால் அடிப்பதும், நிலை மாறி சம்போகஞ்செய்வதும் அவர்களில் பந்தயமாக வைக்கப்பட்டது. அச்சமயம் ஸ்ரீசங்கர பகவத் பாதாள் அந்த தருணிகள் அன்புடன் கைகளில் வைத்திருந்த லாகிரியைத்தரும் உத்தமமான மதுவுடன் கூடிய ஸ்வர்ண மயமான டம்ளர்களை அபகரித்தார். அவர்கள் குடித்து அவர்களின் எச்சில்பட்டு அந்த மது வெகு ருசியாயிருந்தது. அந்த யுவதிகளின் முகக்காற்று சம்பந்தமடைந்து வெகு வாசனையாய் இருந்தது. ஆகாயத்தில் பிரகாசித்திருந்த சந்திரனின் பிரதிபிம்பம் விழுந்து மனோகரமாய் இருந்தது. அப்பேர்ப்பட்ட மதுவை ஸ்ரீ பகவத் பாதாள் சுயம் அடுத்தடுத்து குடித்தார். சுற்றிலுமுள்ள தருணிகளுக்கு அன்புடன் குடிக்கக் கொடுத்தார். அந்த மது மயக்கத்தால் அவர்களின் வார்த்தை குழற ஆரம்பித்தது. உடம்பில் வேர்வை ஏற்பட்டது. அப்போது கிளம்பிய வார்த்தை மனதைக் கவர்ந்தது. உடம்பில் ரோமாஞ்சம் உண்டாயிற்று, கண் பாதி மூடிற்று, தேகம் முழுதும் மன்மதகலை ஓடிற்று. புருவம் அகன்றது. முகத்தில் தாமரை மலரின் வாசனை வீசிற்று. அப்பேர்ப்பட்ட முகத்தை திருப்பித் திருப்பி முத்தமிட்டார் ஜகனத்தை விரித்து, உதட்டைக் கடித்து, குசங்களை பிடித்து



ஒட்டியாண சலங்கைகள் கலீர் கலீர் என்று ஒலிக்க, உற்சாகம் மேலிட, ஸரஸ வார்த்தைகள் கிளம்ப, சரீரம் சலிக்க, சித்தம் ஒருங்கே பதிய, காம கேளிகையில் க்ரியா பேதங்கள் அனுஸரிக்கப்படவும், வாசாமகோசரமான ஆனந்த கொந்தளிப்பு ப்ராதுர்பவித்தது. தத்வ க்ஞானியும் மனோஹரமான காரியங்களுள்ளவரும் வேறு எல்லா காரியங்களினின்றும் திருப்பிய நோக்கமுள்ளவரும், உத்தமர்களை அனுசரித்தவரும், குருவை உபாஸனை செய்து வைராக்யமடைந்த இந்த ஸ்ரீ பகவத் பாதாள் பிரம்மானந்தத்தை அனுபவிப்பது போல, மன்மதனின் வாசமகோசரமான கலா ஞானத்தை அடைந்தவராய் அந்த தருணிகளின் மனதைக் கவரும் காரியங்களைச் செய்பவராய், வேறு எந்த காரியங்களிலும் கண்ணில்லாதவராய், அவர்களில் சிறந்தவரையே பின்தொடருகிறவராய் பிரம்மானந்தமான காம சுகத்தை தங்கு தடையின்றி யதேச்சமாய் அனுபவித்தார் என்று வாசாமகோசரமாய் ஸ்ரீசங்கர பகவத் பாதாளின் கலா ஞானத்தை சொல்லி முடித்தார், சங்கராசாரியாரின் ஜீவனுக்கு இந்த காம ஸாகம் ஏற்பட்டு ராஜ பத்னிகளின் பாதிவ்ரத்யத்தை கெடுத்ததால் யதி தர்மத்தை மீறிய இவருக்கு பாபசம்பந்தம் எப்படி இல்லாமற் போகுமென்று எனக்கே சந்தேகம் இருந்தது. விதி இல்லை, நிஷேதமில்லை, புண்யம் இல்லை, பாபம் இல்லை என்று சொல்லுகிறவருக்கு இதுஎன்ன பிரமாதம் என்று சமாதானம் செய்துகொண்டேன். நல்லது. தர்மதூதா! நீர் கேட்டதால்தான் இவ்வளவும் சரியே சொன்னேனே அன்றி நானகவே சொல்ல முன் வரவில்லை. நீர் எனக்கு கொரடாவைத் தூக்கினீர். நான் இந்த வெடிகுண்டை உம்முடைய எதிரில் போட்டிருக்கிறேன். மாத்வர்களை பரிகாசம் செய்ய இனி முற்படாதேயும். ஓர் மகானுபாவன் போலகம் சாஸ்திரிகள் ஆர்யதர்மத்தில் மத்வாத்புதலீலா க்கரியம் என்று ஒருவாறு மாத்வர்களை தூஷித்து எழுதினர். அதற்கு மாத்வமித்திரனில் சுமார் 3 வருஷகாலம் சங்கர லீலா விலாஸம் என்ற நிரூபம் வெளியாகி அத்வைத சம்பந்தமாகவும் அத்வைத ஆசாரியார் சம்பந்தமாகவும் அநேக விஷயங்கள் வாசகர்களுக்கு உபயோகப்படும்படி வெளியாயின. நல்லது. உம்முடைய ஸேவை எவ்வளவுதூரம் இனி இருக்கப் போகிறது என்பதை எதிர்பார்க்கிறேன். "க்ருதே து ப்ரதிகர்தவ்யம் ஏஷ தர்ம: ஸநாதன:" என்று ஒருவன் ஒன்றைச் செய்து காட்டினால் அதற்கு பதில் செய்துகாட்டவேண்டுவது ஸநாதன தர்மம் என்பதைத்தான் நான் அனுசரிப்பவன் என்று தர்மதூதனாய் உள்ள நீர் அறியவேண்டியது அவசியமென்று வற்புறுத்துகிறேன்.

விநோதன்.

# ஸ்ரீமான் கல்லிடைக்குறிச்சி ஸ்ரீனிவாஸ அய்யரின் கடிதம்.

நான் பால்யம் முதற்கொண்டே வேதாந்த விசாரம் செய்துகொண்டிருந்தேன். அத்வைத சாஸ்திரத்தில் விசேஷ பரிசயம் அடைந்தேன். பல அத்வைத புஸ்தகங்களைப் படித்தேன். பல பெரியோர்களிடமிருந்து அத்வைத ரகஸ்யங்களை தெரிந்துகொண்டேன். அத்வைத மதத்தின்படி அஹம் பிரம்மாஸ்மி என்ற உபாஸனையையே வெகு காலம் செய்து வந்தேன். ஆயினும் ஆதிமுதல் எனக்கு இந்த நிர்குணோபாஸனையில் ருசி இருந்திருக்கவில்லை. என் ஊரிலிருக்கும் எனது ஆப்த ஸ்நேகிதர் ஸ்ரீமான் M. S. ஸ்ரீனிவாஸராவ் அவர்கள் ஸ்ரீமத்வமதத்தின் பலப்ரமேயங்களை அடிக்கடிச் சொல்லிவந்து மத்வமதத்தில் ருசி உண்டாகச் செய்தார். கும்பகோணத்திலிருந்து மாத்வமித்திரன் பத்திரிகை வெளிவர ஆரம்பிக்கவும், நானும் அவரும் உடனே சந்தாதாரர்களாய்ச்சேர்ந்து அதில் வெளியாகும் ஒவ்வொரு விஷயத்தையும் நாம் இருவரும் பரிசீலனை செய்து மனதில் அவதாரம் செய்து வந்தோம். அதனால் வரவர எனக்கு மத்வமதத்தின் கொள்கைகளில் மனோதிடம் ஏற்பட்டது. அத்வைதமதத்தில் அறவெறுப்பு ஏற்பட்டது. மத்வமதமே மேலானதென்றும் வைதிகமானது என்றும் ஸர்வேசுவரனுக்கு பரமப்ரியமானது என்றும் தெளிவு ஏற்பட்டது. படிப்பாளிகளான அனேக ஸ்மார்த்தர்கள் இப்பால் மாத்வர்களாய் ஆகிவருகிறார்கள் என்று மாத்வமித்திரனில் பிரசுரமானதைக் கண்டேன். நான் உத்தாரமடைவதில் எனக்குத்தான் அக்கரைவேண்டுமென்றும், என் பாரியாள், பிள்ளைகள், பந்துக்கள் மித்திரர்கள் யாருக்குமே அக்கரை இருக்காதென்றும் அவர்களைக் கலந்து யோசிப்பதில் பிரயோஜனம் இல்லை என்றும், நம்முடைய சொந்த புத்தியைக்கொண்டுதான் நிச்சயம் செய்துகொள்ளவேண்டுமென்றும் முடிவு செய்துகொண்டு, நான் உத்தாரமடைய இந்த அத்வைதமதத்தை விட்டு, மத்வமதத்தை தழுவுவதாய் சுமார் 5 வருஷங்களுக்கு முன்பே நிச்சயித்தேன். மாத்வமித்திரன் ஆசிரியரான ஸ்ரீமான் ஆத்யம் பாகவதம் ரங்கனாதாசாரியாருக்கு இந்த என் உத்தேசத்தை அறிவித்து ஸ்ரீ உத்தராதி ஸ்வாமிகளிடம் அழைத்துப்போகக் கேட்டுக்கொண்டேன். அதற்கு அவர் ஸ்வாமிகள் என் உறுதியை பரீக்ஷிப்பார்கள் என்றும் எனக்கு நிச்சலமான புத்தி ஏற்பட்டபின் அதைப்பற்றி யோசிக்கலாம் என்றும் பிடிகொடாமல் எழுதிவிட்டார்கள். சமீபத்தில் ஸ்ரீ உத்தராதி ஸ்வாமிகள் எழுதிய சிவில் சூட் புஸ்தகங்களும், கீதா தத்வத்தின் மொழிபெயர்ப்பும் வெளிவர, அத்வைதத்தின் மீதுள்ள அருவெறுப்பு திடப்பட்டது. அத்வைதமதம் பரம துச்சம் என்றும் பௌத்தமதக் கொள்கைகளையே கொண்டிருக்கிறதென்றும், அத்வைத மதத்தின்படி பகவத் உபாஸனை செய்தால் நரகமே ப்ராப்தமாகும் என்றும், உள்ளங்கை நெல்லிக்கனிபோல் தெரியவந்தது. இந்த புஸ்தகங்களில்



கூறப்படும் அத்வைதமதத்தின்மீதுள்ள தோஷங்களுக்கு என்ன பரிகாரம் என்று எவ்வளவோ அத்வைத வித்வான்களைக் கேட்டேன். கடிதங்களையும் எழுதினேன். ஒருவராவது என் மனதிற்கு தெளிவுபடும்படி சமாதானம் சொல்லவில்லை. சொல்லவும் முடியாதென்றும் தெரிந்துகொண்டேன். இப்படி பதில் சொல்லமுடியாமல் இருப்பதுதான் அத்வைதத்திற்குள்ள கௌரவம் என்று பெரிய பெரிய பண்டிதர்கள் சொல்லுவதைக் கேட்டு எனக்கு மிகவும் ஆச்சரியமாய் இருந்தது. இது என்ன மதம் என்று அத்வைதத்தில் ஹேயபுத்தி ஏற்பட்டது. பரலோக விஷயத்தில் அத்வைதிகள் ஒருவருக்காவது நிச்சய க்ஞானமில்லையே என்று வருத்தமாய் இருக்கிறது. இந்த அத்வைதமதத்தை உதறித்தள்ளி எப்போது மாத்வனாய் ஆகி பகவத் உபாஸனை செய்யும் நற்காலம் பிறக்கும் என்று மிகுந்த கவலையுடன் இந்த ஐந்தாறு வருஷங்களை மிகவும் சிரமப்பட்டு கழித்து வந்தேன். முடிவில் என் தீவினை ஒழிந்தது பாக்யோதயம் உண்டாயிற்று. ஸ்ரீமான் ஆத்யம் பாகவத ரங்கனாதாசாரியார் என் பரலோக பந்துவாய் நின்றார். என் கடிதத்திற்கு தைரியமளித்து பதில் எழுதினார். சிரமம் பாராமல் ஸ்ரீ ஸ்வாமிகளிடம் அழைத்துச் சென்றார். ஸகல ஸௌகரியங்களையும் செய்து கொடுத்து என்னை மாத்வ ஸத்வைஷ்ணவனாக்கினார். என் கூட இராப்பகல் சில நாட்கள் இருந்து எனக்கு மாத்வர்களின் ஆசார அனுஷ்டானங்களைக் கற்பித்தார். தாரதம்யப்படி பகவத் பூஜாதிகள் செய்யும் கிரமத்தையும், தத்வ நியாஸம் மாத்ருகா நியாஸம் மகா மந்திரங்களின் ஜபம் முதலியவைகளை அனுஷ்டிக்கும் முறைகளையும் சொல்லிக்கொடுத்தார். நான் அவரை குருவாக வரித்தேன். அவருடைய ஆத்ய சம்பிரதாயத்தையே கைக்கொண்டேன். இந்த ரகசியங்கள் தெரிந்தபின் மத்வமதம் இவ்வளவு சிறந்ததாவென்றும் அனந்த கல்யாணகுண பரிபூர்ணரான ஸ்ரீ நாராயணனை இவ்வளவு உத்தமமான தெய்வமாக இம்மதம் கொண்டாடுகிறதாவென்பதையும் கண்டுகொண்டு மத்வமதத்தில் பன்மடங்காய் அபிநிவேசம் ஏற்பட்டிருக்கிறது. நான் தற்போது மறு ஜன்மத்தையே அடைந்திருப்பதாக எண்ணுகிறேன். எனக்கு வயதாகிவிட்டது. எனக்கு ஸம்ஸாரத்தில் ஆகவேண்டியது ஒன்றுமில்லை நான் என் உண்மையான உள்ளத்தை அறிவிக்கிறேன். தாரதம்யப்படி ஸர்வேசுவரனை ஸ்ரீவிஷ்ணுவை ஆராதிக்க உதவும் இம்மத்வமதம் எங்கே? அவரை அவமானப்படுத்தும் அத்வைதமதம் எங்கே? இந்த உயர்ந்த நிலைமைக்கு என்னை உயர்த்திய மாத்வமித்திரன் பத்திரிகையையும் அதன் ஆசிரியர் ஸ்ரீமான் ஆத்யம் பாகவத ரங்கனாதாசாரியரையும் என் உயிருள்ளளவும் நான் மறக்கமாட்டேன். இது சத்தியம். இம்மித்திரனைப் படித்ததால்தான் முன்பு அத்வைதமதத்திலே வேரூன்றிகிடந்த என் மனம் திரும்பி மத்வமதத்தில் ஈடுபட்டு நான் மட்டிலன்று, என் இருபத்தி ஒன்று தலைமுறையார்களும் சாசுவதமான வைகுண்ட லோகம் அடையும்படி ஏற்பட்டது. இதன் பிரசார வேலையை நான் எவ்வளவென்று வர்ணிப்பது? தெய்வாதீனமாய் பல ஆபத்துக்

களினின்றும் தப்பி இப்பத்திரிகை நடந்துவருகிறது. இந்த அரிய சந்தர்ப்பத்தை எந்த ஆஸ்திகரும் கைவிடத்தக்கதன்று. ஒவ்வொரு வரும் மாத்வமித்திரனைப் படித்து வேதாந்த தத்வத்தை அறிந்து இந்த பவக்கடலிலிருந்து தப்பி ஸர்வேசுவரனின் அனுக்ரஹத்தைப் பெறுவார்களாக. ஆத்ம க்ஷேத்ராரம்தான் வெகு முக்யமானது. ஸ்ரீஸத்யத்யான தீர்த்தஸ்வாமிகளின் சரணமே சரணம்.

19—6—38,
காஞ்சியார்கோவில். } ஸ்ரீனிவாஸ அய்யர்.

---

## விசேஷ தினங்கள்.

| | | |
|---|---|---|
| 14—7—38 | குருவாரம் | சிரவணம் உப விஷ்ணு ப. உப. |
| 16—7—38 | சனிவாரம் | தக்ஷிணாயன பண்யகாலம் மாலை 5-13 வரையில் |
| 17—7—38 | பானுவாரம் | ஸ்ரீஜயதீர்த்தர் புண்யதினம். |
| 23—7—38 | சனிவாரம் | ஏகாதசி உப. |
| 26—7—38 | மங்களவாரம் | திலதர்ப்பணம். |
| 27—7—38 | புதவாரம் | விஷ்ணு ப. உப. |
| 30—7—38 | சனிவாரம் | நாகசதுர்த்தி. |
| 31—7—38 | பானுவாரம் | நாகபஞ்சமி. |
| 5—8—38 | சுக்ரவாரம். | வரமகாலட்சுமி விரதம். |
| 6—8—38 | சனிவாரம் | ஏகாதசி உபவாஸம் இன்று எல்லா மடத்தார்களுக்கும் எல்லா ஸம்ப்ரதாயத்தார்களுக்கும். |
| 7—8—38 | பானுவாரம் | கௌலகி ஸம்பிரதாயத்தார்களுக்குமட்டில் இன்றும் ஏகாதசி உபவாஸம் (அநிரிக்தம்) மற்றவர்களெல்லாருக்கும் த்வாதசி பாரணை ஹரிவாஸரம் மணி 8-45க்குமேல் |
| 8—8—38 | சோமவாரம் | இன்று கௌலகி ஸம்பிரதாயர்களுக்கு மட்டில் த்வாதசி பாரணை சாதனி மணி 6-45க்குள். |
| 10—8—38 | புதவாரம் | ரிக்வேத உபாகர்மம். சிரவண உப. இல்லை விஷ்ணு ப. உபவாஸம் இல்லை. |
| 11—8—38 | குருவாரம் | பௌர்ணமி யஜுர்வேத உபாகர்மம். காயத்ரி ஜபம், சிரவண உப. இல்லை, விஷ்ணு ப, உப, உண்டு. |

---


## மாத்வமித்திரன் பிரசுரங்கள்.

ஸ்ரீராகவேந்திரஸ்வாமிகளின் சரித்திரம்:—எந்த பாஷையிலுமே இதுவரை இம்மாதிரி விரிவாய் வெளியானதில்லை. ஸ்ரீராகவேந்திரர் செய்து காட்டிய திடுக்கிடும்படியான அநேக அரிய சம்பவங்கள் விஸ்தாரமாய் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. இதைப் படித்துக்கொண்டிருக்கும்பொழுதே ஸ்ரீராகவேந்திர குருஸ்வாமியிடம் சித்தம் பதிந்து பக்தி வளர்ந்து ஆனந்தக்கண்ணீர் பெருகி சரீரம் ரோமாஞ்சமாவதை ப்ரத்யக்ஷமாய் காண்போர் பலர். மேலும் பாலர், விருத்தர்வரை மாத்வர்கள் யாவராலும் தினம் உச்சரிக்கப்படும் **ஸ்ரீராகவேந்திரஸ்தோத்திரம், சுலோகங்கள் தேவநாகரத்திலும், தமிழிலும் அவ்வகளின் தமிழ் அர்த்தமும் சேர்க்கப்**பட்டிருக்கிறது. ஏராளமாய் செலவடைந்து வருகிறபடியால் பிந்தி ஏமாறாதிருக்க தற்போது ஆர்டர் செய்யுங்கள். விலை அணா 0—8—0 தபாற்கூலி அணா 0—1—0.

ஸ்ரீராகவேந்திரஸ்தோத்திரம்:—தேவநாகரத்திலும், தமிழிலும் சுலோகங்கள் அவைகளின் தமிழ் அர்த்தமும் விலை அணா 2 தபாற்கூலி 0—0—6.

ஸ்ரீவாயுஸ்துதி:—தேவநாகரத்தில் சுலோகங்களும் அவைகளின் தமிழ் அர்த்தமும் சேர்க்கப்பட்டிருக்கிறது. வாயுஸ்துதியின் இன்னின்ன சுலோகங்களால் இன்னின்ன பலம் ஏற்படுமென்பதும் புனஸ்சரண விதானமும் காட்டப்பட்டிருக்கிறது. விலை அணா 0—5—0 தபாற்கூலி அணா ஒன்று.

துவைதமத விளக்கம்:—ஸ்ரீமத்வமதத்தின் அநேக ப்ரமேயங்கள் ஸ்ரீமத்வாசாரியாரின் ஜீவியசரித்திரம் முதலியவை உள்ளது விலை அணா 2. தபாற்கூலி பைசா 6.

கும்பகோண மகாத்மியம்:—(தமிழ்) அணா 4. தபாற்கூலி பை 6.

துருவசரித்திர நாடகம்:— அணா 6. தபாற்கூலி அணா 0—1—0.

கீதாதத்வம்:— ஸ்ரீஉத்தராதிமடம் ஸ்வாமிகள் இயற்றி ஸ்ரீமான் ஆத்யம் பாகவதராங்காசாரியாரால் தமிழில் எழுதப்பட்டது. முதல் மூன்று சஞ்சிகைகள் சுமார் 225 பக்கங்கள் தற்போது தயார். இதர சஞ்சிகைகள் அவை வெளியானவுடன் இனமாய் புக்போஸ்ட்டில் அனுப்பப்படும். விலை 1–8–0 தபாற்கூலி 0–6–0. ஒரு ரூபாய்க்கு குறைந்து ஆர்டர் செய்கிறவர்கள் தபாற்கூலியைச் சேர்த்து கிரயத்தொகை போஸ்டேஜ் ஸ்டாம்பாய் அனுப்பப்படவேண்டும். *Certificate of Posting* பேரில் புஸ்தகங்கள் அனுப்பப்படும். புஸ்தகங்கள் கிடைக்காவிட்டால் இந்த ஆபீஸ் ஜவாப்தாரியல்ல.

**மானேஜர் மாத்வமித்திரன், ஸ்ரீவியாஸவிலாஸம், கும்பகோணம்.**

வருட சந்தா ரூ. 3 Regd. No. M. 2419

# டி. எஸ். ஆர்.
## அண்டு
# கம்பெனி,
## கும்பகோணம்.

ஸ்தாபிதம் 1909

தந்தி விலாசம் "கோகுல்"

எங்கள் வாஸனு திரவியசாலையில் தயாரித்து விற்பனைக்குத் தயாராக இருக்கும் ஸாமான்களின் விபரம்.

வாஸனைப்பாக்கு
வாஸனைச்சுண்ணம்பு
வாஸனைப் புகையிலை
ஸ்னானப்பவுடர்
கேஸர் பவுடர்
அம்பர், அரகஜா
தசாங்கம்

பலகாய்கறி ஊர்காய்கள்
ரோஜாப்பூ குல்கந்து
ஷர்பத் தினுசுகள்
கொப்பரைச்சீவல்
கோகுல் கூந்தல் [தைலம்
பற்பொடி
ஊதுவத்திகள்

சந்தனாதித் தைலம்,
அரைக்கீரைவிதைத் தைலம்,
மற்றும் அநேக வாஸனை சாமான்களும் கிடைக்கும்.
கேட்லாக்குக்கு எழுதுங்கள்.

Printed at Sri Venkateswar Power Printing Works and
ublished by Bhagavatha Ranganathachariar, Kumbakonar

# மாத்வ மித்திரன்.
# THE MADHWA MITRAN.

EDITOR:
Adyam Bhagavatha Ranganathachariar,
KUMBAKONAM.

பௌர்ணமிதோறும் வெளிவரும்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
15 AUG 1938
MADRAS


| | | |
|---|---|---|
| Vol. 11<br>புஸ்தகம் 11 | பஹுதான்ய ஸம்வத்ஸரம்<br>ச்ராவண மாஸம். (பௌர்ணமி)<br>(11-8-1938) குருவாரம். | No. 1<br>நெ. 1 |



| நெ. | பொருளடக்கம். | பக்கம். |
|---|---|---|
| 1. | ஸதுபதேசம். | 1 |
| 2. | மத்வவிஜயம். | 2 |
| 3. | ஸ்மார்த்த பிராம்மணர்களின் மாம்ஸ பக்ஷணம். | 6 |
| 4. | ஸ்ரீவிஷ்ணு ஸஹஸ்ரநாமம். | 14 |
| 5 | அஹம் ப்ரம்மாஸ்மி. | 18 |
| 6. | ஸ்ரீமகாபாரத தாத்பர்ய நிர்ணயம் (மத்வாசாரியார் | 21 |
| 7. | செய்தித்திரட்டு. | 26 |
| 8. | மதிப்புரை. | 29 |
| 9. | விசேஷதினங்கள். | 30 |
| 10. | மாத்வமித்திரன் 10வது வால்யம் பொருளடக்கம். | 31 |


ஆசிரியர்:— ஆத்யம் பாகவத ரங்கநாதாசாரியார், கும்பகோணம்.

# மாத்வமித்திரன்.

---

மாத்வர்களின் சாஸ்திரீயமான தமிழ் பத்திரிகை இது ஒன்றே ஸ்ரீமத்வமதத்தின் அரிய இரகஸியங்கள் ஸம்பிரதாயங்கள் மாகாத்மியங்கள் புராணசரிதைகள் மாத்வவகுப்பு புண்ய புருஷர்களின் சரித்திரங்கள் வேதாந்த சர்ச்சைகள் தர்மசாஸ்திர விசாரங்கள் தினசரி விரதாதி குறிப்பு:— மகாபாரத தாத்பர்ய நிர்ணயம் முதலான அநேக கிரந்தங்களின் மொழிபெயர்ப்புகள் முதலிய எண்ணிறைந்த விஷயங்கள் நிறைந்திருக்கின்றன ஸ்ரீமத்வமதத்தை சுலபமாய் அறிந்துகொள்ள இப்பத்திரிகைக்கே உடனே சந்தாதாரராய்ச் சேருங்கள் இது பிரதி பௌர்ணமியிலும். கும்பகோணத்திலிருந்து வெளியாகிறது இதற்கு வருடசந்தா முன்பணமாய் ரூபாய் மூன்று. பிரதி சிராவணமாதமும் இப்பத்திரிகைக்கு வருடஆரம்பமாகும் எந்த மாதத்தில் சந்தாதாரராய்ச் சேர்ந்தாலும் அந்த வருஷத்திய பிந்திய சஞ்சிகைகள் அனுப்பப்படும் பழைய வாலியங்கள் விலைக்குக் கிடைக்கும் பத்திரிகை சரியானபடி கிடைக்காவிட்டால் பௌர்ணமி கழிந்தஒருவாரத்துக்குள் நமக்கு அறிவிக்கவேண்டியதுடன் அந்தந்த தபாலாபீசுக்கும் அறிவித்துவிடவேண்டும் பதிலறிய விரும்புகிறவர்கள் ஸ்டாம்பை அனுப்பவேண்டும். ஒவ்வொரு கடிதத்திலும் தெளிவாய் பூரா மேல் விலாசமும் எழுதி அனுப்ப வேண்டும்.

மானேஜர் மாத்வமித்திரன்,

ஸ்ரீ வியாஸ விலாஸம், கும்பகோணம்.

**மாத்வமித்திரன் பழைய வாலியங்கள்**

**வெகு சொற்பம் தானிருக்கின்றன.**

**உடனே அவைகளைப்பெற**

**முந்துங்கள்**

15 AUG 1938 MADRAS

ஸ்ரீ லக்ஷ்மீ நரஸிம்ஹாய நம:

# மாத்வமித்திரன்

VOL. 11 | பஹுதான்ய ஸம்வத்ஸரம் சிராவண மாஸம். | NO. 1

## ஸ்தோத்ரம்.

---

लक्ष्मीकान्तः प्रकटपरमानन्दपूर्णो मृगाक्षि :
सेव्यो रुद्रप्रमृतिविबुधैः यस्य पादांबु गंगा ।
सृष्टेः पूर्वं सृजति निखिलं भ्रूविभंगेन सद्यः
सोऽहं कस्माद्वदसि बटरे जीवराज्ञो न राजा ॥

லக்ஷ்மீகாந்த: ப்ரகட பரமாநந்த பூர்ணோ மிர்காக்ஷி:
ஸேவ்யோ ருத்ரப்ரம்ருதி விபுதை: யஸ்ய பாதாம்பு கங்கா ]
ஸ்ருஷ்டே: பூர்வம் ஸ்ருஜதி நிகிலம் ப்ருவிபங்கேன ஸத்ய:
ஸோஹம் கஸ்மாத் வதஸி படரே ஜீவராஜ்ஞோ ந ராஜா ]]

ஸ்ரீய: பதியும், எங்கும் எப்போதும் வ்யக்தமாய் இருப்பவைகளும் பூர்ணமாய் இருப்பவைகளுமான கல்யாண குணங்களுக்கு கடலரும், பரமசிவன் முதலான தேவச்ரேஷ்டர்களால் ஆராதிக்கப்படுகிறவரும், லோகபாவனமான கங்கையை காலலம்பும் ஜலமாய்க் கொண்டவரும், உலகம் ஸிருஷ்டிக்கப்படுவதற்கு முன்னமேயே எல்லா சராசர ப்ரபஞ்சத்தையும் தன் புருவத்தை அசைப்பதாலேயே அக்ஷணமே ஸிருஷ்டிப்பவருமான ப்ரம்மமாகிய அந்த விஷ்ணுதான் நான், அதாவது ஸோஹம் என்று, அடே! மானிடப் பதரே! நீ எப்படி சொல்வாய்? நீயோ பிச்சை எடுக்கும் ஜீவன், அவரோ பிச்சையிடும் அரசன், ஸர்வேசுவரன்தானே.

---

## ஸ்ரீ நாராயண பண்டிதாசாரியார் இயற்றிய

# ஸ்ரீ மத்வ விஜயம்

---

### பன்னிரண்டாவது ஸர்க்கம்.

(முன் 10வது வால்யூம் 351-ம் பக்கம் தொடர்ச்சி.)

44 இந்த துஷ்டாத்மாவான பத்மதீர்த்தன் மனோவாக்காயம் இவைகளால் மங்களகரராயும் ஏகாகியாயுமிருந்த, தன் புஸ்தகங்களைப் பாதுகாத்த சங்கராசாரியாரைத் தாக்கியதால், ஒரு வராஹம் ஸிம்ஹத்தை வஞ்சித்து அதன் குட்டியைக் கொன்றுவிட்டால் எப்படி அந்த ஸிம்ஹம் பொறுக்காதோ, அப்படி அந்த பத்மதீர்த்தனை ஸ்ரீமத்வாசாரியாராகிய அர்ஜுனன் க்ஷமிக்கவில்லை. துஷ்டாத்மாவான ஜயத்ரதனும் ஏகாகியாய் இருந்த ஸௌபத்ரனை அபிமன்யுவை பத்மவ்யூஹத்தின் முனையில் கொல்லக்காரணமானதால் ஆயுள்பரியந்தம் பொறுக்கவில்லை. 45 முன்பு எப்படி அர்ஜுனன் தன்னால் ஏற்கனவே பராஜயமடைந்த அசுவத்தாமாதிகள் தனக்கு பயந்து எதிரில் வராமல் சைனியத்தின் பின்னடி இருந்த எந்த ஜயத்ரதனின் க்ஷேமத்தை விரும்பினவர்களாயிருந்தனரோ, அந்த ஜயத்ரதனின் க்ஷேமத்தைக் கருதி அந்த அசுவத்தாமாதிகள் அர்ஜுனனைத் தவிர்த்துள்ள இதர பாண்டவர்களில் ப்ரயோகம் செய்த பாணங்களை ஐந்தாறு பாணங்களால் சேதித்தானோ, அம்மாதிரியே ஸ்ரீமத்வாசாரியார் தன்னால் ஏற்கனவே பராஜயமடைந்த புண்டரீகபுரி, தனக்கு பயந்து எதிரில் வராமல் எல்லோர் பின்னடி இருந்த பத்மதீர்த்தனின் க்ஷேமத்தைக் கருதியவனாய் அவனுக்கு ஸகாயமாய் நிற்கவும், அவனை உத்தேசித்து தன் சிஷ்யர்களின் நடுவில் செய்த அவனுடைய உபன்யாசத்தை ஐந்தாறு வாக்யங்களால் அதன் அபசப்தாதி தோஷங்களை வெளிக்காட்டிக்கண்டித்தார். 46 எப்படி அர்ஜுனன் விஷ்ணுபதமான ஆகாயத்தின் ப்ராந்தியத்தை சோபிப்பதாயும் ஒன்றின் பின்னொன்றாய் பிரேரிபிக்கப்படுவதாயும் தடுக்கப்படமுடியாததாயுமுள்ள பாண சமூகங்களால் ஸிந்து தேசாதிபதியான ஜயத்ரதனை பிளந்து நிக்ரஹித்தானோ, அதுபோல், ஸ்ரீமத்வாசாரியா



ராகிய அர்ஜுனன் பிறகு மீண்டும் மற்றொரு தடவை, பரபிரம்மமாகிய விஷ்ணுவின் ஸ்வரூபத்தை நிர்ணயித்துக்கொடுக்கும் சாஸ்திரத்தை சோபிக்கச் செய்வதாயும், தொடர்ச்சியாய் தங்கு தடையின்றி சொல்லப்படுவதாயும், யாவராலும் நிராகரணம் செய்ய முடியாததாயுமுள்ள சொற்பொழிவுகளின் சமூகங்களால் பத்மதீர்த்தனாகிய ஜயத்ரதனை மௌனமாக்கி நிக்ரஹித்தார்.

### அத்வைதிகள் ஓடிவிட யோசனை கூறியது.

47 இம்மாதிரி பத்மதீர்த்தனும் புண்டரீகபுரியும் தோல்வியடைந்து ஓடிப்போனபின், அங்கிருந்த ஸாது ஜனங்கள் மாயாவாதிகளான அத்வைதிகளைப்பார்த்து சொன்னதாவது:—ஜகத்தெல்லாமே மாயை, கல்பிதம், பொய், முக்காலத்திலும் பொய், இப்பவும் இல்லை, முன்னேயும் இல்லை, பின்னேயும் இல்லை என்று சொல்லும் அத்வைதி திருடர்களே! போதும் போதும்! உங்கள் பேதாதி பிரபஞ்சத்தின் திருட்டு இனி வேண்டாம். இனி இங்கு இருக்காதீர்கள். இங்கிருந்து எல்லோருமே ஓடிவிடுங்கள். உங்களை யார் கண்டாலும் நிக்ரஹம் செய்துவிடுவார்கள். உங்களைக் கண்டு நீங்கள் சொல்வது நிஜமா பொய்யா என்று ஒருவர் கேட்டால் நீங்கள் என்ன சொல்வீர்கள்? நிஜம் என்றால் உங்கள் அத்வைத சித்தாந்தத்திற்கு விரோதம் வந்து சேருகிறது. பொய் என்றால் நீங்கள் சொல்வது பிரமாண சம்மதமாயிருப்பதால் பொய் என்பது சித்திப்பதில்லை. அதனால் உங்களை பதில் பேச முடியாமல் செய்துவிடுவார்கள். ஆகலால் நீங்கள் இனி தலையை வெளிக்காட்டாதீர்கள். நீங்கள் மலைக் குகையில் பதுங்கி விடுங்காலம் நேர்ந்திருக்கிறது. 48 உங்கள் அத்வைத மகா பண்டித சமூகமாகிய சந்திரனின் பிரகாசம் அதாவது அவர்களின் வித்யா கர்வம் அழிந்துவிட்டது. உங்கள் அத்வைதிகளில் குத்ஸிதமான வாதம் செய்பவர்களாகிய நக்ஷத்திரங்களின் சோபையும் அதாவது அவர்கள் ஜயிக்கும் தேஜஸ்ஸும் நன்றாய் மங்கிப்போய்விட்டது. இவ்விரண்டும் பிரகாசிக்கக் காரணமானதும் உலகத்தில் எல்லாம் வியாபித்திருந்ததும் எல்லாவற்றையும் நிர்வகிக்க வல்லது என்று உங்களால் கருதப்பட்டு உங்களுக்கு மிகவும் ப்ரியமானதுமான அஞ்ஞானமாகிற இருள் நிவிருத்தியாகிவிட்டது. இருள் போய்

வெளிச்சம் ஏற்பட்டால் ஜனங்கள் கண்டுபிடித்துக்கொள்வார்களோ என்று திருடர்கள் பயந்து ஓடி விடுவது போல் நீங்கள் ஓடி ஒளியுங்கள். 49 ஸமஸ்த வேதார்த்தங்களையும் அறிபவரான ஸ்ரீமத்வாசாரியாராகிய ஸமஸ்த உலகத்தையும் பிரகாசிக்கச் செய்யும் சூரியன் எல்லோருக்கும் முன் சாக்ஷாத்தாய் பிரகாசிக்கிறாரே. நீங்கள் உங்கள் கண்ணால் பார்க்கவில்லையா? அவரை நேரில் பார்த்தபின்பும் நீங்கள் பகிரங்கமாய் இருப்பது தகுதியன்று. சூரியன் ஏழு குதிரைகளைக் கொண்டவன். இந்த மத்வ சூரியன் ரிக்வேதம், யஜுர் வேதம், ஸாமவேதம், அதர்வ வேதம், மூலராமாயணம், மகாபாரதம், பாஞ்சராத்ரம் ஆகிய ஏழு வித்யைகளாகிய வாஹனங்களைக்கொண்டவர். சூரியன் பூர்வ ஆசையாகிய பூர்வ திக்கை கிரண ஸமூகங்களால் வியாபித்து பிரபஞ்சத்தில் பிரகாசிப்பவர். இந்த மத்வ சூரியனே ஸாது ஜனங்களின் அக்ஞானம் நீங்கவேண்டுமென்றுள்ள பூர்வீகர்களான பிரம்மாதிகளின் ஆசையை வியாபித்து தன் வார்த்தைகளின் சமூகங்களால் ஸாது ஜனங்களுக்கு தத்வோபதேசம் செய்து அவர்களின் அக்ஞானத்தை நிவர்த்தித்து பராபர தத்வத்தை பிரகாசிக்கச் செய்கிறார். 50 ஸமஸ்த ஜகத்திற்கு ஆசிரயமாயும் சரத் காலத்திய நீலோத்பல புஷ்பம் போல காந்தி உள்ளவராயும், மனோஹரமான உருவமுள்ளவராயும் க்ஞானானந்தாதி குணங்கள் கூடியவரென்றும், தோஷமற்றவரென்றும் வேதங்களால் நிர்ணயம் செய்யப்பட்டவராயும் உள்ள பரப்பிரம்மமென்று பெயருள்ளதான ஆகாயத்தை ஆசிரயித்திருக்கும் சூரியனை எவனும் எப்படி ஒளித்துவிட முடியாதோ அப்படியே ஸமஸ்தமான ஜீவராசிகளுக்கும் ஆசிரயமாயிருப்பவரும் சரத் காலத்திய நீலோத்பலம் போன்ற காந்தியுள்ளவராயும் மனோஹரமான ரூபமுள்ளவராயும் வேதங்களால் க்ஞானானந்தாதி குணங்கள் உள்ளவரென்று நிர்ணயம் செய்யப்பட்டவராயும் பரப்ரம்மமென்று பெயருள்ள ஆகாயத்தை ஆசிரயித்திருப்பவராயும் உள்ள ஸ்ரீ மத்வாசாரியாரை ஒருவரும் இனி மூடமுடியாது. 51 ஜீவன் ஜகத்து ஈசுவரன் இம்மூன்றைப்பற்றியுமுள்ள எல்லா வேதங்களும் பொய்யைச் சொல்வதாய்ச் சொல்லும், அஸுரர்களே! இனி நில்லாதேயுங்கள், ஓடி விடுங்கள்! ஓடி



விடுங்கள். உங்கள் கோஷ்டியில் சேர்ந்தவனான ஹிரண்யன் முதலானவர்களை கிழித்துக் கொன்றவரான ஸ்ரீமத்வாசாரியாராகிய நரஸிம்ஹ மூர்த்தி ஜ்வலித்து நிற்கிறார். அவர் உங்கள் கோஷ்டியினருக்கு பயங்கரமாகவுள்ள உபன்யாஸங்களாகிய ஸிம்ஹநாதமுள்ளவராய், முன்பின் விரோதமாய் பேசும் அவிவேகிகளான உங்களுக்கு துக்கத்தை விளைவிக்கும் க்ரூரமான யுக்திகளாகிய நகங்களால் தன் சத்ருக்களைப் பிளந்து வருகிறார். 52 அஸத்ய வாதிகளானதால் அத்வைதிகளாகிய நாக்கு இரண்டு படைத்த பாம்புகளே! கர்வம் கொள்ளாதீர்கள். குகையில் பதுங்கிவிடுங்கள். ஸ்ரீமத்வாசாரியாராகிய கருடன் உங்கள் ஸம்பத்தை அழித்து விபத்தைத்தான் விளைவிப்பார். இந்த ஸ்ரீமத்வாசாரியார் பக்ஷிகளாகிய வேதாந்திகளில் சிரேஷ்டராயினும் பக்ஷிச்ரேஷ்டரான கருடனேயாகமாட்டாராதலால் இவர் ஓர் அலாதியான கருடனேயாவார். கருடன் தன் தோளின்மீது ஸ்ரீ ஹரியின் ஓர் உருவத்தைத்தான் தரிக்கிறான். ஸ்ரீமத்வாசாரியாராகிய கருடனோ தன் ஹிருதயத்திலேயும் பகவானுடைய அநந்தமான ரூபங்களை தரிக்கிறார். கருடன் இரண்டு இறகுகளைக்கொண்டிருக்கிறான். இந்த ஸ்ரீ மத்வாசாரியாராகிய கருடனோ ஸர்வோத்தமமாயுள்ள விஷ்ணு ஸர்வோத்தமத்வ பக்ஷத்தையே கொண்டவர். கருடன் தக்ஷப்ரஜேசுவரின் பெண்ணான விநதா தேவியின் பிள்ளையானதால் தக்ஷனேயாகமாட்டார். இந்த ஸ்ரீ மத்வாசாரியாராகிய கருடனோ தக்ஷரேயாவார். அதாவது எல்லா விஷயங்களிலேயும் ஸமர்த்தரானவர். கருடன் தன் தாயான விநதா தேவிக்கு கொடுக்க எத்தனப்பட்டும் அமிர்தத்தைக் கொடுக்கவில்லை. இந்த ஸ்ரீ மத்வாசாரியாராகிய கருடனோ இந்த பூலோகத்திலேயும் ஸமஸ்தமான ஸாது ஜனங்களுக்கு அமிர்தமாகிய மோக்ஷத்தைக் கொடுத்திருக்கிறார். 53 அத்வைதிகளாகிய தேவ சத்ருக்களே! ஓடுங்கள்! ஓடுங்கள்! உங்களை நிக்ரஹம் செய்யும் இச்சையின்பேரில் நாராயணனே வந்துவிட்டார். எந்த நாராயணன் என்றால் ஸ்ரீமத்வாசாரியாராகிய நாராயணன்தான். இவர் வேத ஸமூகங்களாகிய ஸுதர்சன சக்கரத்தை தரித்திருக்கிறார். பிரமாணாதி வஸ்துக்களை நிர்ணயித்துக்கொடுப்பதால், அழகாய் சோபிக்கும் பிரம்ம

தர்க்கமாகிய பாஞ்சஜன்ய சங்கத்தின் த்வனியுடன் கூடியிருக்கிறார். மிகவும் விளங்கும் புராண சமூகங்களாகிய கௌமோதகி என்னும் கதையுடனிருக்கிறார். பாஞ்சராத்ராகமமாகிய சாரங்க தனுஸ்ஸுடன் கூடியிருக்கிறார். பிரம்மஸூத்திரங்களாகிற பாணங்களென்ன, மகா பாரதம் மூல ராமாயணமாகிய இதிஹாஸங்களாகிற நந்தகமென்னும் பட்டா கத்தி என்ன. இவைகளால் பிரசித்தியடைந்திருக்கிறார். 54 ஜகத்தை மாயை என்று சொல்லும் மாயாவாதிகளான அத்வைதிகளிடம் விசேஷ த்வேஷத்தை காட்டிக்கொடுப்பவர்களான ஸாது ஜனங்களின் கூட்டம் இவ்வாறெல்லாம் கூக்குரல் போட்டுக்கொண்டிருக்கையில், புஸ்தகம் திருடிய பத்மதீர்த்தனை கண்டுபிடித்து நிக்ரஹம் செய்து விஜயம் பெற்ற இடமாகிய அந்த பூந்தோட்டத்திலிருந்து வெளிக்கிளம்பி, ஸ்ரீமத்வாசாரியார் ப்ராக்ர்யவாடம் நகரின் தேவாலயத்தில் அச்சமயம் சேர்ந்த சாதுர்மாஸ்ய ஸங்கல்பத்திற்காக, ஆனந்த சொரூபரான அந்த தேவாலயத்திலுள்ள ஸ்ரீஹரியை சந்தோஷப்படுத்திக்கொண்டு வசித்திருந்தார்.

ஸ்ரீமத் கவிகுல திலகரான ஸ்ரீமத் த்ரிவிக்ரமபண்டிதாசாரியார்
குமாரர் ஸ்ரீநாராயணபண்டிதாசாரியார் இயற்றியுள்ள
மகா காவ்யமான, ஒவ்வொரு சர்க்கத்தின் முடிவு
சுலோகத்திலேயும ஆனந்த பதத்தைக்கொண்ட
ஸ்ரீமத்வவிஜயத்தில்
பன்னிரண்டாவது ஸர்க்கம் முடிந்தது.
ஸ்ரீ கிருஷ்ணார்ப்பணமஸ்து. (தொடரும்)

# ஸ்மார்த்த பிராம்மணர்களின் மாம்ஸ பக்ஷணம்

---

(முன் 10ம் வால்யம் 342ம் பக்கம் தொடர்ச்சி)

இனி அடுத்தபடி வேதவித்துக்களாய் இருப்பவர்களும் ஆட்டை அடித்து அதன் மாமிஸத்தை புஜித்து நடத்தும் யாகத்தை ஒப்புக்கொண்டிருக்கின்றனராவென்பதை யோஜிப்போம். மகரிஷிகள் வேதவித்துக்கள் என்பதை யாவரும் ஒப்புக்கொண்டதே. ரிஷிகள்



என்றாலே க்ஞானிகள் என்ற அர்த்தம். வேதத்தின் அர்த்தத்தை நன்கு தெரிந்தவர்கள் என்று பொருள். அவர்கள் மகா தவம்புரிந்து பகவானின் அனுக்ரஹம் பெற்று வேதார்த்தங்களை அறிந்து இன்னது தான் தர்மம் என்றும், அதைத்தான் ஒவ்வொருவரும் செய்யவேண்டும் என்றும், அதைச்செய்தால்தான் பிரம்மக்ஞானமுண்டாகி பகவத் ப்ரஸாதம் உண்டாகும் என்றும் அறிந்தவர்கள். உலகில் தர்ம சாஸ்திரங்களை பகிரங்கப்படுத்தியவர்கள். "தர்ம சாஸ்த்ர ரதாரூடா: வேத கட்க தரா: த்விஜா:] லீலார்த்தமபி யத் ப்ரூயு: ஸதர்ம: பரம: ஸ்மிருத:" என்று அப்பேர்ப்பட்ட மகான்கள் விளையாட்டாக சொல்வதும்கூட உத்தமமான தர்மம் என்று ஓர் ஸ்மிருதி அறிவிக்கிறது. இந்த மகரிஷிகள் சொன்னதுதான் ஸ்மிருதி என்று கருதப்பட்டிருக்கிறது. "சுருதிம் பச்யந்தி முனய: ஸ்மரந்தி ச ததா ஸ்மிருதிம்] தஸ்மாத் ப்ரமாணம் உபயம் ப்ரமாணை: ப்ரமிதம் புவி" மகரிஷிகள் மனதால் வேதத்தைக் கண்டுகொண்டதால் சுருதியும், அதற்கு வியாக்யானமென்று சொன்னதால் ஸ்மிருதியும், இரண்டும் பிரமாணங்களேயாகும், உலகில் யாவரும் அவ்வாறே ஒப்புக்கொண்டிருக்கின்றனர் என்றார் மனு. இதனால் மகரிஷிகளின் அபிப்பிராயத்துக்கு உயர்வாகிலே எமது சாஸ்திரகாரர்களால் கொடுக்கப்பட்டிருப்பதை ஒருவரும் மறக்கமுடியாது. அப்பேர்பட்ட மகரிஷிகள் பசுவதைகொண்ட யாகத்தை சிறிதும் ஒப்புக்கொள்ளவில்லை என்பதற்கு திருஷ்டாந்தமாக மகாபாரதம் சாந்திபர்வத்தில், பீஷ்மாசாரியார் பிரம்மக்ஞானத்திற்கு சாதகமான தர்மங்களை உபதேசித்த பாகமாகிய மோக்ஷ தர்மத்தில் சொல்லியுள்ள ஒருசில நிகழ்ச்சிகளை கூறுகிறோம்.

1 உபரிசரவஸு ராஜன் என்பவன் மகா பகவத் பக்தன். கடுந்தவம் புரிந்தவன், ஸகல வேதார்த்தங்களை நன்கு அறிந்தவன். அவனுடைய க்ஞான பக்த்யாதிகளுக்கு மகிழ்ந்து, நாராயணன் அவனிடம் விசேஷமாய் அனுக்ரஹம் செய்திருந்தார். மகேந்திரன் அவனுக்கு முக்ய சிநேகிதனாய் இருந்து சதுரங்க ஸைனியங்களுடனும் ஆகாய மார்க்கமாகவே அவன் சுற்றுப்பிரயாணம் செய்வதற்கு அனுகூலமாய் மகத்தான ஓர் விமானத்தை அவனுக்கு கொடுத்திருந்தான். அவன் அம்மாதிரியே சஞ்சரித்திருந்ததால் அந்த வஸுராஜனுக்கு உபரிசர வஸு என்று பெயர் ஏற்பட்டது. அந்த மகானுபாவன் ஒருசமயம் அசுவமேதம் செய்து அதற்கு லோக பூஜ்யர்களான எல்லா மகரிஷிகளையும் வரவழைத்திருந்தான். பிரம்மாவின் மானஸ குமாரர்களான ஏகதர், த்விதர், த்ரிதர் என்ற மூன்று மகான்கள் வந்திருந்தனர். பிருஹஸ்பதி

ஹோதாவாக இருந்தார். தநுஷாக்யரிஷி, ரைப்யரிஷி, அர்வாவஸு ரிஷி, பராவஸுரிஷி, மேதாதிதிரிஷி, தாண்ட்யரிஷி, சாந்திரிஷி, வேதசிரஸ்ரிஷி, கபில மகாமுனி, சாலிஹோத்ர ரிஷியின் தந்தை கபில ரிஷி, ஆத்யகடரிஷி, தைத்திரிரிஷி, வைசம்பாயன முனிவரின் தமையன் தைத்திரிரிஷி, கண்வமுனி, தேவஹோத்ரரிஷி, இவர்கள் ரித்விக்குகளின் வேலை செய்தனர். இப்பேர்ப்பட்ட மகான்கள் கூடியதும் மகாஞானியான உபரிசரவஸுராஜன் யஜமானனாய் இருந்ததுமான அந்த அச்வமேதத்தில் என்ன விசேஷம் நடந்தது என்றால், "ந தத்ர பசுகாதோபூத் ஸராஜைவம் ஸ்திதோபவத்| அஹிம்ஸ்ர: சுசி: அக்ஷுத்ர:" எல்லா யக்ஞங்களிலும் பசுவதை நடப்பதுபோல் இந்த அச்வமேதத்தில் பசுவதை நடக்கவில்லை, குதிரை முதலியவைகள் கொல்லப்படவில்லை. புரோடாசத்தால்தான் தேவர்களுக்கு ஹவிர்பாகம் கொடுக்கப்பட்டது. வேதத்தில் வற்புறுத்தப்பட்டிருக்கிறபடி யக்ஞத்தின் யஜமானனான உபரிசரவஸுவும் அஹிம்சா விரதத்தைக் கொண்டிருந்தான். அதனால் எவ்வகை பாப சம்பந்தமில்லாதவனாயும் சுத்தனாகவே இருந்தான். பகவத் பக்தியுடன் இருந்தான். இவ்வளவு பரிசுத்தமாக யக்ஞம் செய்யப்படவும், யக்ஞத்தின் முக்ய தெய்வமாகிய நாராயணன் மிகவும் சந்தோஷப்பட்டு நேரில் வந்து உபரிசரவஸுக்கு தரிசனமளித்து, ஹோதாவான பிருஹஸ்பதி ஸ்ருக் என்னும் பாத்திரத்தில் கொடுக்க வைத்திருந்த புரோடாச ஹவிஸ்ஸை ஸ்வயம் தன் கையால் எடுத்துக்கொண்டு அதை முகர்ந்து ஸ்வீகரித்தார். இதை அந்த ராஜனைத்தவிர வேறு யாரும் காண முடியவில்லை. பசுவதை இல்லாமற் செய்ததால் அந்த தேவதை நேரில்வந்து எல்லோர் கண்ணிற்பட்டு ஹவிஸ்ஸை ஸ்வீகரிக்கவில்லையோ என்று சங்கித்து, பிருஹஸ்பதி ஆசாரியார், அந்த மகரிஷிகளின் எதிரில் உபரிசரவஸுவைப்பார்த்து, "ந்யாய பசுர் ஹரிநஸ் ச க்ருத: பிஷ்டமய: பசு:" அரசனே! இந்த யக்ஞத்தில் பசுவதை செய்யலாகாது என்று தடுத்தீர். மாவினால் செய்யப்பட்ட பசுவையே கல்பித்தீர். அதனால் நேரில்வந்து முக்யமான தேவதை ஹவிர்பாகத்தைக் கொண்டு போகவில்லை. நானும் அவரைப்பார்க்க முடியவில்லை. என்னை அவமானம் செய்துவிட்டீர். நான் மேலே செய்யவேண்டியவைகளைச் செய்வதில்லை. இனி ஹோமம் செய்யப்போவதில்லை என்று சொல்லவும், வஸுராஜன் அஞ்சலிபந்தம் செய்துகொண்டு, "என் குருவே! நீங்களே இப்படிச் செய்யலாமா? சொல்லலாமா? நானா பசுவதை செய்யலாகாதென்று தடுத்தது? பசுஹிம்ஸா வர்ஜிதா யஜுர்வேதாதி மந்த்ரா:"



யஜுர்வேதத்திலுள்ள அநேக மந்த்ரங்கள் பசுவதை கூடாதென்று தடுக்கின்றனவே! யக்ஞமூர்த்தியான நாராயணனுக்கு ஹவிர்பாகத்தை கொடுக்க இருந்தீர்கள். அவர் நேரில் என் எதிரில் வந்து, உங்கள் கையில் உள்ள ஹவிற்பாகத்தை எடுத்துச்சென்றார். அதை நான் நேரில் பார்த்தேன். நான் அவருடைய பக்தனானதால் என் கண்ணிற்பட்டார். அவர் உங்கள் கண்ணிற் படவில்லையே என்று என்மீது கோபிக்க லாகாது. யக்ஞத்தையும் குறைகூறவும் கூடாது என்று சொல்லியும்கூட, பிருஹஸ்பதியின் கோபம் தணியவில்லை. மகரிஷிகளும் அவ்வாறே சொன்னார்கள். அச்சமயம் ஸதஸ்யர்களாய் இருந்த பிரம்மாவின் மானஸபுத்ரர்களான ஏகதர் த்விதர் த்ரிதர் என்ற மகான்களும் வெகு விஸ்தாரமாய் பேசினார்கள். "பிருஹஸ்பதியே! உம்முடைய கோபத்தை யார்மீது காட்டுகிறீர்கள் என்பதை யோசனை செய்யுங்கள். ஸர்வஸ்வாமியான நாராயணனையா நீர் கோபித்துக்கொள்வது. அவர் உங்கள் கோபத்துக்கு அருகரான தெய்வம் அன்று. அவரை யார்தான் பார்க்கமுடியும். அவர் தாமாகவே மகிழ்ந்து யார் கண்ணிற்பட அநுக்ரஹம் செய்வாரோ, அப்பேர்பட்டவர்தான் அவரைப் பார்க்க முடியுமேயல்லாது நாமாக அவரைப்பார்க்க முடியாது. எப்பேர்ப்பட்ட தபஸ் செய்தாலும் அது சாத்யமாகாது. நாம் மூவரும் சதுர்முகனின் குமாரர்களாய் இருந்தும், நாலாயிரம் வருஷம் க்ஷீர ஸமுத்ரக்கரையில் கடுந்தவம் புரிந்தும், முடிவில் அசரீர வாணி ஆகி அவருடைய லோகமான சுவேதத்வீபம் சென்றும், அங்கும் நூறு வருஷம் கடுந்தவம் புரிந்தும், அங்குள்ள பகவத் பக்தர்களான முக்தர்களைக்காண முடிந்ததேயன்றி அந்த நாராயணனின் தரிசனம் கிடைக்கவில்லை. இன்னமும் கிடைக்கவில்லை. எப்போது கிடைக்குமோவென்று காத்திருக்கிறோம். அப்படியிருக்க நாராயணரின் தரிசனம் கிடைக்கவில்லையே என்று வருந்தப்படுவது உசிதமன்று, என்று விஸ்தாரமாய் எடுத்துச்சொல்லவும், பிருஹஸ்பதி சமாதானமடைந்து யக்ஞத்தை வெகு சிறப்பாய் முடித்தார். பசுவதை இல்லாமல் புரோடாசத்தைக்கொண்டே யக்ஞம் சம்பூர்த்தியடைந்தது. மகான்கள் அனைவரும் சந்தோஷப்பட்டனர். யக்ஞமூர்த்தியான நாராயணனும் சந்தோஷமடைந்து வஸுராஜனுக்கு உத்தம கதியை அளித்தார்.

II ஒரு சமயம் மகேந்திரன் போக ஸ்தானமாகிய ஸ்வர்க்கத்தில் யாகம் செய்வதைவிட கர்மபூமியாகிய பூமியில் யாகம் செய்வது சிறந்ததென்று நிச்சயித்து எல்லா மகரிஷிகளையும் வரவழைத்து ஓர் யாகம் செய்தான். அப்பொழுதும் பிருஹஸ்பதியே ஹோதாவாய் அமர்ந்தார்.

ஸவனம் செய்யப்படவேண்டிய பசுவைக் கொண்டுவரும் சந்தர்ப்பம் ஏற்பட்டவுடனே பிருஹஸ்பதி முப்பத்தி முக்கோடி தேவர்கள் ஒரு புறமும், நாற்பத்தெண்ணாயிரம் மகரிஷிகள் ஒரு புறமும், கூடியிருந்த அந்த மகாஸதஸ்ஸில், தேவர்களைப்பார்த்து "பிஷ்டமாஜியதாம் அத்ர பச்வர்த்தமிதிபாஷத" ப்ரத்யக்ஷ பசுவை இழுத்துவாராதீர்கள். மாவிஞல் செய்யப்பட்ட பசுவைத்தான் கொண்டு வாருங்கள். அதுதான் உபயோகப்படுத்தப்படவேண்டும் என்ருர். எங்கு எந்த யாகம் எப்போது நடக்கும் என்றும் அதில் மாமிஸத்தை சாப்பிடலாம் என்றும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் தேவர்கள், இந்த மகேந்திரனின் யாகத்திலேயே ஆட்டை அடிக்காமலும் அதன் மாமிஸத்தை புஜிக்க முடியாமலும் ஏமாறும்படி ஏற்பட்டதே என்று துக்கமடைந்தவர்களாய், "பிருஹஸ்பதிம் மாம்ஸங்ருத்ரா: ப்ருதக் ப்ருதகிதம் புன:" ஒவ்வொருவரும் தனித்தனியே ஆக்ஷேபணைகளைக் கிளப்பினர். ஆட்டைத்தான் அடிக்கவேண்டுமென்று அடம் பிடித்தனர். அதன் மாமிஸத்தை புஜிக்க வேண்டுமென்று வற்புறுத்தினர். அதுவே தர்மம் என்று வாதாடினர். அதுவே வேதத்தின் தாத்பர்யம் என்று பிரமாணங்களைக் கூறினர். "அஜேனயஷ்டவ்யமிதி ப்ராஹு: தேவா: த்விஜோத்தமான்| ஸச சாகோப்யஜோ க்ஞேய: நான்ய: பசுரிதிஸ்தித:" பிருஹஸ்பதியே! அஜத்தைக்கொண்டு யாகத்தை நடத்தவேண்டுமென்றுதானே வேதம் அறிவிக்கிறது. அஜம் என்ருல் வெள்ளாடு அல்லவா? அதைக்கொன்று தான்யாகத்தை நடத்தவேண்டுமேயல்லாது வேறு பசு கூடவே கூடாது. என்று எல்லோரும் சேர்ந்து கூக்குரல் போட்டனர். அப்பொழுது எல்லா மகரிஷிகளும் சேர்ந்து, "தேவர்களே! அப்படிச் செய்யாதீர்கள். "பீஜைர் யக்ஞேஷு யஷ்டவ்யம் இதிவை வைதிகீ ச்ருதி:| அஜ ஸம்ஞானி பீஜானி சாகம் நோ ஹந்து மர்ஹத|| நைஷ தர்ம: ஸதாம் தேவா: யத்ர வத்யேத வை பசு:" தானியங்களால்தான் யாகம் செய்ய வேண்டும் என்று வேதத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. இதுவேதான் வேதத்தின் அர்த்தம் என்று நாம் கேட்டிருக்கிறோம். தானியங்கள்தான் அஜம் (ஆடு) ஆகும். ஆதலால் தான்யங்களைக்கொண்டுதான் யாகத்தைச் செய்யுங்கள். ஆட்டைக்கொல்லாதீர்கள், அப்படி நீங்கள் கொல்லவும் கூடாது. தேவர்களே! நாம் சொல்வதைக் கேளுங்கள். யக்ஞத்தில் பசுவதை செய்வது ஸாதுக்களின் தர்மம் அன்று. ஆகலால் பசுவதை செய்யலாகாது. தானியங்களைக்கொண்டுதான் இந்த யாகம் நடத்தப்படவேண்டுமென்று இவ்வாறு மகரிஷிகள் அடம்பிடித்தனர். தெய்வாதீனமாய் அச்சமயம் அந்த யக்ஞத்திற்கு உபரிசரவஸு ராஜன் ஆகாய மார்க்கமாய்



வந்து சேரவும், மஹரிஷிகள் சந்தோஷமடைந்து, தேவர்களே! உங்கள் நண்பன் உபரிசரவஸு வந்திருக்கிருர், இவர் வேதார்த்தங்களை அறிந்து தர்மத்தை நன்கு அறிந்தவர். எவ்வளவோ யாகயக்ஞாதிகளைச் செய்தவர். எல்லோருக்கும் நன்மையையே செய்கிறவர். இவர் ஒருக்காலும் பொய் சொல்லமாட்டார். இவரை வேண்டுமாஞலும் கேளுங்கள் என்று சொல்லவும், மகரிஷிகள் சொன்னது சரியே என்று தேவர்களும் ஒப்புக்கொண்டு, "போராஜன் கேன யஷ்டவ்யம் அஜேன ஆஹோஸ்வித் ஔஷதை:" அரசனே! யாகத்தைச் செய்யவேண்டியது ஆட்டைக்கொண்டா அல்லது தானியங்களைக்கொண்டா? எது வேதத்தில் சொல்லப்பட்டிருக்கிற தர்மம்? என்று அரசனைக் கேட்கவும், அரசன் உடனே தீர்ப்புக்கூற பின்தயங்கி எது சொன்ஞல் யாருக்கு எந்த அதிருப்தியை அளிக்குமோ வென்று பயந்துபோய், உங்களில் யார் யார் எப்படி அபிப்ராயப்படுகின்றனர், என்று கேட்க, "ரிஷய: ஊசு:| தான்யை: யஷ்டவ்யமித்யேவ பக்ஷோஸ்மாகம் நராதிப| தேவானாம்து பசு: பக்ஷ:மதோ ராஜன் வதஸ்வ ந:||" மகரிஷிகள், நாம் தானியங்களைக்கொண்டுதான் யாகம்செய்ய வேண்டுமென்பது வேதங்களின் தாத்பர்யமென்கிறோம். தேவர்கள் ஆட்டை அடித்துத்தான் யாகம் செய்யவேண்டுமென்கின்றனர். எது சரி என்று உன் அபிப்பிராயம், அதைச்சொல் என்று கேட்டனர், தேவர்களின் அபிப்பிராயம் இன்னது என்று தெரிந்துகொண்டு, "தேவானாம்துமதம் க்ஞாத்வா வஸுனு பக்ஷஸ்ம்ச்ரயாத்| சாகேன அஜேனயஷ்டவ்யம் இத்யுக்தம் வசஸ்ததா" வஸுராஜன் தேவர்களிடம் தாக்ஷண்யம் வைத்து, அவர்களின் ப்ரீதியை ஸம்பாதிக்க இச்சைகொண்டு, தான் செய்துவந்த அனுஷ்டானத்திற்கு விரோதமாயும், வேதங்களின் அபிப்ராயத்துக்கு விரோதமாயும், ஸதாசாரத்திற்கு விரோதமாயும் ஆட்டை அடித்துத்தான் யாகம் செய்யப்படவேண்டுமென்று தீர்ப்புச்சொன்ஞர். இவ்வாறு வஸு ராஜன் தேவர்களிடம் பக்ஷபாதம் வைத்து தெரிந்தே சுருதி ஸூத்ரங்களுக்கு விரோதமாய்ச் சொன்னதால் எல்லா மகரிஷிகளுக்கும் மகா கோபம் வந்தது. வஸு ராஜனுக்கு உடனே சாபம் இட்டனர். "அரசனே நீ தர்மத்திற்கு விரோதமாய் தெரிந்தே தேவர்களின் கக்ஷியை ஆதரித்ததால், உன் மகத்துவம் இனி அழியட்டும்; ஆகாய மார்க்கமாகவே சஞ்சரிக்கும் சக்தி இக்ஷணம் முதற்கொண்டு இருக்கவேண்டாம், பூமியிலும் இருக்க நீ அநர்ஹன், பூமியும் உன்னை தரிக்க முடியாமல் போய் அது வெடித்து உன்னை அதன் வழியாய் கீழே தள்ளிவிட்டு பூமிக்கும் வெகு கீழாகவே ரஸாதளத்தில் உன்னை வஸிக்கச் செய்யட்டும். நாம் ஏதோ எங்கள் கக்ஷிக்கு விரோதமாய் நீ பேசிஞய்

என்று கோபிப்பதில்லை. தெரிந்தே சுருதி ஸூத்ரங்களுக்கு விரோதமாய் நீ பேசியிருக்கிறாய். இது சத்தியமாக இல்லாமல் "விருத்தம் வேத ஸூத்ராணாம் உக்தம் யதி பவேன் ந்ருப| வயம் விருத்தவசனா யதி தத்ர பதாமஹே" நாம் சொன்ன கக்ஷிதான் யக்ஞத்தில் ஆட்டை அடிக்கலாகாதென்றும் தானியங்களால்தான் யக்ஞம் செய்யப்பட வேண்டுமென்றும் சொன்னது, சுருதி ஸூத்ரங்களுக்கு விருத்தமாயிருக்கும் பக்ஷத்தில், எங்கள் எல்லோருக்கும் இம்மாதிரியானசிக்ஷை ஏற்படட்டும். நாங்கள் பூமியிலிருந்து கீழே விழுவோம்" என்று மகரிஷிகள் எல்லோரும் சேர்ந்து உரக்க மகா ப்ரதிக்ஞை செய்யவும், வஸு ராஜன் ஆட்டை அடித்து யாகம் நடத்தவேண்டுமென்று சொன்னது உண்மையில் சுருதிஸூத்ரங்களுக்கு விருத்தமாய் இருந்ததால் வஸு ராஜனுக்கே சாபம் பலித்தது. ஆகாயத்தில் சஞ்சரிக்கும் மகாத்மியம் அழிந்தது, அவன் பூமியிலும் தங்க முடியவில்லை. உடனே அவன் நின்ற பூமி படீரென்று வெடித்தது, கீழே வெகு தூரம் ரஸாதளத்தில் விழுந்து விட்டான். அவன் நாராயணனுடைய பக்தனானதால் அவருடைய அனுக்ரஹத்தால் ஞாபக சக்தி மட்டில் அவனுக்கு போகவில்லை. இவனுக்கு நேர்ந்த கதியைக் கண்டு தேவர்கள் மிகவும் பச்சாத்தாபப்பட்டனர், தங்களிடமுள்ள தாக்ஷண்யத்தால் தானே இவன் சுருதி ஸூத்ரங்களுக்கு விருத்தமாகப் பேசி, மகரிஷிகளின் சாபத்தை அனுபவிக்க நேர்ந்தது என்று வஸு ராஜனிடம் கருணை ஏற்பட்டது. உடனே இந்திராதி தேவர்கள் அவன் கிடந்திருந்தவிடத்திற்கு நேரில்வந்து, "விருத்தம் வேத ஸூத்ராணாம் ந வக்தவ்யம் ஹிதார்த்தினா| அஸ்மத் பக்ஷநிமித்தேன வ்யஸனம் ப்ராப்தம் ஈத்ருசம்" இவ்வாறு யக்ஞத்தில் ஆட்டை அடிக்கவேண்டுமென்று நாம் ஏதோ அதன் மாமிஸத்தை புஜிக்க இச்சையின்பேரில் சொன்னோமென்று, வேத சாஸ்திரங்களறிந்த நீர் சூத்ரசூத்ரங்களுக்கு விரோதமாய் எங்களிடமுள்ள தாக்ஷண்யத்தினால் சொல்லலாமா? அரசனாயிருப்பவன் நியாயம் பேசி இருக்கவேண்டாமா? எங்கள் நிமித்தமாக உமக்கு இப்பேர்ப்பட்ட மகா சங்கடம் ஏற்பட்டுவிட்டதே, ஆயினும் நாம் ஒருவாறு உமக்கு சகாயம் செய்கிறோம். நீர் இந்த சாபத்தை அனுபவித்திருந்து இங்கு கிடக்கும் வரையில், யக்ஞத்தில் கொடுக்கப்படும் வஸோர்த்தாரை உமக்கே வந்துசேரும்படி அனுக்ரஹிக்கிறோம். உமக்கு பசி தாகம் தீரட்டும். தேஜஸ் முதலியவை உண்டாகட்டும் என்று சொல்லிப்போயினர். வஸு ராஜனும் அங்கிருந்து பஞ்ச மகா யக்ஞங்களைச் செய்துகொண்டு நாராயணாஷ்டாக்ஷரியை ஜபித்துக் கொண்டிருக்க, பல வருஷங்களுக்குப்பின். நாராயணன் இதுவரை



பிராம்மண சாபத்திற்கு நாம் மரியாதை செய்தாய்விட்டது. அவன் சாபம் அனுபவித்தது போதும். உடனே போய் வஸு ராஜனை மேலே கொண்டுவந்து விட்டுவிடு என்று கருடனிடம் சொல்லி வஸுராஜனை மறுபடியும் உபரிசரனாகச் செய்தார். வஸு ராஜனும் பச்சாத்தாபமடைந்து மகரிஷிகளின் சாபத்தினின்றும் மீண்டு, பகவத் பக்தி செய்து பிரம்ம லோகம் அடைந்தான்.

III மகா பாரதம் அசுவமேத பர்வத்திலும் இந்த இதிஹாஸத்தை ப்ரஸ்தாபித்திருக்கையில் மகரிஷிகள் சொல்லியிருப்பதாவது.— "ஊசு: சக்ரம் உபாகம்ய நாயம் யக்ஞவிதி: சுப:| அபரிக்ஞான மேதத்தே மகாந்தம் தர்மம் இச்சத:| ஸந்தி யக்ஞே பஹுகுணா: விதித்ருஷ்டா: புரந்தர| ஆகமேனைவ தே யக்ஞம் குர்வந்து யதி சேச்சஸி| விதித்ருஷ்டேன யக்ஞேன தர்மஸ்தே ஸுமகான் பவேத்| யக்ஞம் பீஜை: ஸஹஸ்ராக்ஷ த்ரிவர்ஷ பரமோஷிதை:| ஏஷதர்மோ மகான் சக்ர சிந்தயானோ விகம்யதே"|| மகேந்த்ரா! நீ என்ன வேதார்த்தங்களை அறியாதவனா! ஏன் ஆட்டை அடித்து யாகம் செய்யவேண்டுவது வேதத்தின் தாத்பர்யம் என்கிறாய்? நீ இதை எப்படி அறிந்தாய்? யக்ஞத்தில் பசு ஹிம்ஸையை செய்யத்தான் வேண்டுமென்பதற்கு வேதத்தில் ஒரு விதி வாக்யத்தையாவது காட்டு பார்ப்போம்? யக்ஞத்தில் பசு ஹிம்சை செய்ய வேண்டுமென்று வேத்ததில் எங்கும் ஒரு வாக்யமாகிலும் இல்லை, இது நிச்சயம். அப்படி இருப்பதாய் நீ அக்ஞானத்தால் எண்ணியிருக்கிறாய் நீயோ உன் ஸ்வர்க்கத்தை விட்டு இந்த கர்ம பூமியில் யக்ஞம் செய்து மகா புண்யத்தை சம்பாதிக்க விரும்புகிறாய். அந்த யக்ஞத்தை வேதத்தில் சொன்ன விதிப்பிரகாரம் செய்தால்தானே உனக்கு புண்யம் வந்து சேரும். வேத விதிப்படி யக்ஞத்தை செய்துவிட்டால் கணக்கற்ற புண்யம் வருமென்பதில் ஆக்ஷேபனை இல்லை. நீ இப்போது செய்யப் போவது அப்பேர்ப்பட்டதாக இல்லையே. ஆட்டை அடித்து அதன் மாமிஸத்தை புஜித்து நீ நடத்த யோசித்திருக்கும் யாகம் புண்யத்தை அழிக்கக்கூடியதாகவிருக்கிறதே. ஏன் நீ அதை அறியவில்லை. அதர்மத்தை தர்மமாக அறிந்திருக்கிறாய். ஆட்டை அடித்து நடத்தப்படும் யக்ஞம் தர்ம நிருதமான யக்ஞமாகாது. இதில் சிறிதும் சந்தேகமில்லை. ஆட்டை அடிப்பது தர்மமாகுமா? பிராணி ஹிம்ஸை தர்மமாகுமா? அவ்வாறு பிராணிஹிம்சையை தர்மமென்று ஒருவரும் சொல்லமாட்டார்கள் இதில் நீ யுக்தி பேசுவது பிரயோஜனமில்லை. நாம் சாஸ்திரத்தைத்தான் பிரமாணமாகக்கொள்ளவேண்டும். அந்த ஆகமங்களில் சொன்னபடி

தான் யக்ஞத்தைச் செய்யவேண்டும். அப்படிச் செய்தால்தான் மகத்தான தர்மலாபம் உண்டாகும். ஆதலால் நாம் எல்லோரும் சேர்ந்து வேதவித்துக்களான எங்கள் முடிவான அபிப்பிராயத்தை அறிவிப்பது யாதெனில், மூன்று வருஷத்துக்கு மேற்பட்ட புராதனமான தானியங்களைக்கொண்டுதான் புரோடாசத்தால்தான் ஹவிஸ்ஸைக் கொண்டு யாகம் செய்யவேண்டும். ஆட்டை அடித்து அதன் மாமிஸத்தை புஜித்து யாகத்தை நடத்தலாகாது. இதுதான் வேதத்தில் சொல்லப்பட்டிருக்கிறது, அப்படி செய்தால்தான் மகத்தான தர்மம்உண்டாகும். இந்த எங்கள் அபிப்பிராயம்தான் சரி, நீ உன் புத்தியைக்கொண்டு சாவதானமாய் யோசித்தாலும் உனக்கு இதன் உண்மை விளங்கும், என்று சொன்னார்கள். இவ்வளவு வியக்தமாய் மகரிஷிகள் சொல்லியும்கூட ''சதக்ரதுஸ்து தத்வாக்யம் ரிஷிபி: தத்வதர்சிபி:] உக்தம் ந ப்ரதிஜக்ராஹ மானமோகவசம்கத:'' மகேந்திரன், தான் ஸுரபதியானபடியால் தான் எடுத்த கக்ஷி வீணாய் போய்விட கூடாதென்றும், தன் கக்ஷியே மேலிட வேண்டுமென்றும் எண்ணி, தான் என்ற கர்வத்திற்கும் அக்ஞானத்திற்கும் வசனாய் ஆகி, வேதார்த்தங்களை நன்கு அறிந்த தத்வக்ஞானிகளான அம்மகரிஷிகள் செய்த உபதேசத்தை எற்கவில்லை. பிறகுதான் உபரிசரவஸுவை அவர்கள் மத்யஸ்தம் பேசி அவன் தேவர்களுக்கு தாக்ஷிண்யப்பட்டு ஆட்டை அடித்து யக்ஞம் செய்யவேண்டுமென்று சொல்லி மகா துக்கத்தை அடைந்தான்.

(தொடரும்)

# ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ர நாமம்.

(முன் 10வது வாலியம் 336ம் பக்கம் தொடர்ச்சி)

426 பரமேஷ்டீ (ஓம் பரமேஷ்டினே நம:) பரமமான ஹிருதயாகாசத்தில் இருப்பவர்.

427 பரிக்ரஹ: (ஓம் பரிக்ரஹாய நம:) பரமாத்மாவை மனதில் கொண்டவர்களான ஹரி பக்தர்களை அனுக்ரஹிப்பவர். சரணாகதர்களால் ஏற்கப்படுகிறவர். பக்தர்களால் அறியப்படுகிறவர். பக்தர்களால் அளிப்பதை ஸ்வீகரிப்பவர்.

428 உக்ர: (ஓம் உக்ராய நம:) ருத்திரனை விழுங்குபவர், உயர்ந்தவர்களான பிரம்மாதிகளை ரமிக்கச் செய்பவர். உலகத்தை வீழ்த்துகிறவர். அபக்தர்களிடம் கொடியராயிருப்பவர்.



429 ஸம்வத்ஸர: (ஓம் ஸம்வத்ஸராய நம:) வத்ஸர்களாயிருக்கும் பிரம்மாதிகளை நன்கு ரமிக்கச் செய்பவர். வத்ஸங்களிடம் கிருஷ்ண ரூபத்துடன் நன்கு விளையாடுபவர். சிறந்ததான ஸ்வாமி புஷ்கரணி முதலான ஸரோவரஸ்தானங்களில் ரமிப்பவர். ஸம்வத்ஸரத்தை நடத்துகிறவர்.

430 தக்ஷ: (ஓம் தக்ஷாய நம:) சமர்த்தரானவர், ஜனங்கள் அழியச்செய்யும் ராக்ஷஸாதிகளை அழிப்பவர்.

431 விச்ராம: (ஓம் விச்ராமாய நம:) சிரமமில்லாதவர் பக்தர்களுக்கு சிரமங்களின் ஸமூகம் இல்லாமல் செய்பவர்.

432 விச்வதக்ஷிண: (ஓம் விச்வதக்ஷிணாய நம:) ஜகத் சிருஷ்டியாதிகளில் திறமை பெற்றவர். வாயு பகவானை வலதுபாரிசுவத்தில் இருக்கச்செய்பவர்.

433 விஸ்தார: (ஓம் விஸ்தாராய நம:) உலகத்தை விஸ்தாரப்படுத்தினவர்.

434 ஸ்தாவர: (ஓம் ஸ்தாவராய நம:) ஸத்ய லோகாதி கீழ் லோகங்களிலுள்ள தேவாதிகளை குறைந்தவர்களாய்ச் செய்பவர். நிலையாயிருக்கும் ஸ்வபாவமுடையவர்.

435 ஸ்தாணு: (ஓம் ஸ்தாணவே நம:) ஸ்தாணுவான பரமசிவனின் அந்தர்யாமியாய் இருப்பவர்.

436 ப்ரமாணம் (ஓம் ப்ரமாணாய நம:) உத்தமமான வேதாதிகளை பிரமாணமாய்க் கொண்டவர். சரீராதி பரிமாணத்தை த்ரிவிக்ரமாவதாரத்தில் உத்தமராகக் கொண்டவர். க்ஞானனந்தங்களை உத்தமமாகக் கொண்டவர்.

427 பீஜம் (ஓம் பீஜாய நம:) வேதவியாஸர் முதலிய ரூபங்களால் க்ஞானத்தை உண்டாக்குபவர். க்ஞானத்தை வெளிப்படுத்துபவர்.

428 அவ்யயம் (ஓம் அவ்யயாய நம:) க்ஞானமுள்ளவர்களால் அடையப்படுகிறவர். நாசமில்லாதவர்.

439 அர்த்த: (ஓம் அர்த்தாய நம:) பக்தர்களால் அறியப்படுபவர். பக்தர்களால் பிரார்த்திக்கப்படுவர்.

440 அநர்த்த: (ஓம் அநர்த்தாய நம:) முக்ய ப்ராணரை ரதமாகக்கொண்டவர். முக்ய ப்ராணரால் ப்ரார்த்திக்கப்படுபவர், அயோக்யர்களுக்கு அநர்த்தத்தைக் கொடுப்பவர்.

441 மகாகோச: (ஓம் மகாகோசாய நம:) மஹத்தான சரீரமுடைய மகா லட்சுமியால் விரும்பப்படுபவர். மஹத்தாயும் பிரம்மாவுக்கு மேலான சுகத்தை அளிப்பவராயுமிருப்பவர்.

442 மகாபோக: (ஓம் மகாபோகாய நம:) பூர்ணமான ஆனந்தமுள்ளவர்.

443 மகாதன: (ஓம் மகாதனாய நம:) மகத்தான சம்பத்துடையவர், பூஜாதி உத்ஸவத்தால் பூரா சம்பத்து வரச்செய்பவர்.

444 அநிர்விண்ண: (ஓம் அநிர்விண்ணாய நம:) சோர்வை சம்சயமில்லாதவர், க்ஞானனந்தம் போகாதவர்.

445 ஸ்தவிஷ்ட: (ஓம் ஸ்தவிஷ்டாய நம:) மிக மிக ஸ்தூலமாய் இருப்பவர்.

446 அபூ: (ஓம் அபுவே நம:) ஆதாரம் இல்லாதவர், ஜனனமில்லாதவர், இருப்பிடமில்லாதவர்.

பூ: (ஓம் புவே நம:) பூர்ணமானவர், ஸமஸ்தமான ஜகத்தையும் உண்டாக்குபவர், ஸமஸ்தமான ஜகத்துக்கும் ஆசிரயமாயிருப்பவர்.

447 தர்மயூப: (ஓம் தர்மயூபாய நம:) ஜகத்தை தரிப்பவராயும் பக்தர்களால் மனதில் கட்டப்படுபவராயும் இருப்பவர். தர்மஸாதனமாக யூப ஸ்தம்பத்தைச் செய்தவர்.

448 மகாமக: (ஓம் மகாமகாய நம:) மகத்தான யாகங்களை தன் உத்தேசமாக இருக்கும்படி செய்தவர். மகத்தானவராயும் அளவில்லாத ஆகாயம் கொண்டவராயுமுள்ளவர்.

449 நக்ஷத்ரநேமி: (ஓம் நக்ஷத்ரநேமயே நம:) நக்ஷத்திரங்களாகிய ஜ்யோதிஸ் சக்கரத்திற்கு சிம்சுமார ரூபத்தால் ஆதாரமாய் இருப்பவர், க்ஷத்திரியர்களல்லாமல் க்ஷத்திரியர்களுக்கு ஸமானர்களான பிராம்மணர்களுக்கு ஆதாரமாய் இருப்பவர்.

450 நக்ஷத்ரீ (ஓம் நக்ஷத்ரிணே நம:) பரசுராம ரூபத்துடன் க்ஷத்திரியர்களைக் கொன்றதுபோல் எப்போதும் கொல்லாதிருப்பவர். நக்ஷத்திரங்களுக்கு நியாமகராய் இருப்பவர்.

541 க்ஷம: (ஓம் க்ஷமாய நம:) நாசத்தைப் போக்கடிப்பவர். நரகங்களை மூடுபவர். ஸமஸ்தமான காரியங்களிலும் திறமைபெற்றவர்,



452 க்ஷாம: (ஓம் க்ஷாமாய நம:) லக்ஷ்மியை வராஹாதி ரூபத்தால் தரிப்பவர். வாமனாவதாரத்தால் க்ஷமையாகிய பூமியை ஸ்வீகரிப்பவர்.

453 ஸமீஹன: (ஓம் ஸமீஹனாய நம:) எங்கும் ஸமானமாய் பேதமில்லாததான ரூபங்களைக்கொண்டவரும் எங்கும் நடமாடுகிறவருமானவர். சிறந்ததான தேவ பூஜாதிகளைக்கொண்டவர்களை வைகுண்டாதிகளுக்கு அழைத்துப்போகிறவர்.

454 யக்ஞ: (ஓம் யக்ஞாய நம:) யக்ஞ பலனை புஜிப்பவர். யக்ஞஸ்வரூபியானவர். கிருஷ்ணாவதாரத்தில் தன்னையே ஆராதிப்பவர். ராமாவதாரத்தில் அஹல்யையை கௌதம முனிவருடன் சேர்ப்பவர். யாகத்தின் பலனை அளிப்பவர்.

455 ஈஜ்ய: (ஓம் ஈஜ்யாய நம:) யாகத்தின் உத்தேசமாய் இருப்பவர். பூஜையைப் பெறுபவர்.

456 மகேஜ்ய: (ஓம் மகேஜ்ய:) யக்ஞாதி உத்ஸவங்களில் பூஜையைப் பெறுபவர். ஸீதா விவாஹோத்ஸவகாலத்தில் நாணேற்றுவதை பந்தயமாகக்கொண்டவர். ஸ்ரீதேவி பூதேவி இவர்களைக்கொண்டவர்.

457 க்ரது: (க்ரதவே நம:) சிருஷ்ட்யாதிகளைச் செய்பவர். கிருதியாய் இருப்பவர். க்ஞான ரூபியானவர்.

458 ஸத்ரம் (ஓம் ஸத்ராய நம:) ஸாதுக்களை ஸம்ரக்ஷிப்பவர். ஸாதுக்களை ரமிப்பவர்.

459 ஸதாம் கதி: (ஓம் ஸதாம்கதயே நம:) மோக்ஷத்தில் விருப்பமுள்ளவர்களால் அடையப்படுபவர். நக்ஷத்திரங்களை நடத்துகிறவர்.

460 ஸர்வதர்சீ (ஓம் ஸர்வதர்சினே நம:) தர்சமாகிய எல்லா யக்ஞங்களுக்கும் இருப்பிடமானவர். எல்லாவற்றையும் பார்ப்பவர்.

461 விமுக்தாத்மா (ஓம் விமுக்தாத்மனே நம:) ஜீவர்களை முக்தர்களாய்ச் செய்பவர். விசேஷமாய் முக்தர்களுக்கு ஸ்வாமியாய் இருப்பவர்.

462 ஸர்வக்ஞ: (ஓம் ஸர்வக்ஞாய நம:) எல்லாவற்றையும் அறிந்தவர். ஜீவர்களை ஸர்வக்ஞர்களாய்ச் செய்பவர்.

463 க்ஞானமுத்தமம் (ஓம் க்ஞானமுத்தமாய நம:) தன் விஷயமான க்ஞானத்தால் விசேஷமாய் சந்தோஷத்தைத் தருபவர். தன் க்ஞானத்தால் சந்தோஷமுள்ள தேவர்களால் விரும்பப்படுபவர். க்ஞானானந்தத்திற்காக விரும்பப்படச் செய்பவர்.

464 ஸுவ்ரத: (ஓம் ஸுவ்ரதாய நம:) தன் விஷயத்தில் அழகிய விரதத்தைக்கொண்டவர். ஜகத் ரக்ஷணம் முதலான சிறந்த விரதமுள்ளவர்.

465 ஸுமுக: (ஓம் ஸுமுகாய நம:) அழகிய முகமுள்ளவர்.

466 ஸூக்ஷ்ம: (ஓம் ஸூக்ஷ்மாய நம:) ஸூக்ஷ்ம ரூபியானவர்.

467 ஸுகோஷ: (ஓம் ஸுகோஷாய நம:) சிறந்த வேதாதிகளின் சப்தமுடையவர். பாஞ்சஜன்ய சங்கத்வனி உள்ளவர்.

468 ஸுகத: (ஓம் ஸுகதாய நம:) மோக்ஷானந்தத்தைக் கொடுப்பவர். அயோக்யர்களின் ஸுகத்தைக் கெடுப்பவர்.

469 ஸுஹ்ருத் (ஓம் ஸுஹ்ருதே நம:) சிறந்த மனமுடையவர். பக்தர்கள் செய்யும் கர்ம பலனை அங்கீகரிப்பவர். காரணமில்லாமல் உபகாரம் செய்பவர்.

470 மனோஹர: (ஓம் மனோஹராய நம:) கோபிகைகளின் மனதைக் கவர்ந்தவர். எண்ணுகிறவரும் ஹவிஸ் முதலியவைகளை வாங்குகிறவருமாவார். பக்தர்களின் மனதால் அபகரிக்கப்படுகிறவர்.

(தொடரும்).

# அஹம் ப்ரம்மாஸ்மி.

## சாஸ்திரியாரும், ஆசாரியாரும்.

*சாஸ்திரி:* ஆசார்வாள்! இன்று 'அஹம் ப்ரம்மாஸ்மி' என்னும் மகா வாக்யத்தை விசாரம் செய்வோமா?

*ஆசார்:* வாக்யமோ மகாவாக்யமோ எதை விசாரம் செய்வதிலும் எனக்கு ஆக்ஷேபணையில்லை. நீர் தத்வம் இன்னது என்று சரியாய் உணரவேண்டும்.

*சாஸ்திரி:* அதற்காகத்தான் இந்த எத்தனம். இந்த வாக்யமாவது அத்வைதத்திற்கு ஆதாரம் என்பதை ஒப்புக்கொள்வீரோ?



*ஆசார்:* ஒப்புக்கொள்ளச் செய்யுங்கள்.

*சாஸ்திரி:* ஒப்புக்கொள்ளச்செய்யவும் வேண்டுமோ? கைப்புண்ணுக்கு கண்ணாடியுமா வேண்டும். 'அஹம் ப்ரம்மாஸ்மி' நான் ப்ரம்மமாக இருக்கிறேன் என்று ஸ்பஷ்டமாய் இருக்கிறதே.

*ஆசார்:* நான் ப்ரம்மம் என்று சொன்னது ஸ்பஷ்டமாகத்தான் இருக்கிறது. அதில் சந்தேகமில்லை. அவ்வாறு சொன்னது யார் என்று அறிந்தீரோ?

*சாஸ்திரி:* யார் என்ன? ஜீவன் தான்.

*ஆசார்:* அதுதானே இல்லை. அப்படிச் சொன்னது ப்ரம்மமே. இதோ சுருதியைப்பாரும். "ப்ரம்மவா இதமக்ர ஆஸீத், தத் ஆத்மானமேவ அவேத், அஹம் பிரம்மாஸ்மி இதி" (இதமக்ரே) இந்த ஜகத் சிருஷ்டியாவதற்கு முன் (ப்ரம்மவா) ப்ரம்மம்தான் (ஆஸீத்) இருந்தது. (தத்) அந்த ப்ரம்மம் (ஆத்மானமேவ) தன்னையே (அஹம் ப்ரம்மாஸ்மி) நான் ப்ரம்மமாக இருக்கிறேன். (இதி) என்று (அவேத்) அறிந்தது. என்று ப்ரம்மம்தான் தன்னையே 'அஹம் ப்ரம்மாஸ்மி, என்று அறிந்துகொண்டதாய் சொல்லப்பட்டிருக்கிறது. ஓர் அரசன் தன்னை 'நான் அரசனாக இருக்கிறேன்' என்று அறிந்துகொண்டான் என்றால் அவனுக்கு அடங்கிய அவனுடைய பிரஜை ஒருவன் "நான் அரசனாக இருக்கிறேன்" என்று அறிந்துகொண்டதாய் சொல்வதோ? அதுபோல் ப்ரம்மம் தன்னை 'அஹம் ப்ரம்மாஸ்மி' என்று அறிந்துகொண்டதாய் சுருதி அறிவித்தால், ஜீவன் 'அஹம் ப்ரம்மாஸ்மி' என்று அறிந்தது என்று சொல்வது வெகு அழகாய்த்தான் இருக்கிறது.

*சாஸ்திரி:* ஆசாரியாரே! இவ்வாறு சொன்னது நீர் ப்ரம்மம் என்கிறீர். நான் ஜீவன் என்கிறேன். அதை விமரிசை செய்வோமே. வேதத்திலோ 'தத்' அது என்று பொதுவாய் சொல்லப்பட்டிருக்கிறது.

*ஆசாரியார்:* அது என்றால் என்ன? முன்னாடி ப்ரஸ்தாவம் செய்யப்பட்டது என்று பொருளாகுமல்லவா. 'ப்ரம்ம வா' என்று ப்ரஸக்தமாயிருப்பதால் 'தத்' என்பதற்கு ப்ரம்மம் என்று அர்த்தம் கூறப்பட்டு ப்ரம்மம் தன்னை 'அஹம் ப்ரம்மாஸ்மி என்று அறிந்ததாய் அர்த்தம் சொல்கிறேன். இவ்வாறு சொன்னது ஜீவன் என்று எப்படி நீர் சொல்கிறீர். ஜீவன் என்று வியக்தமாக இந்த வாக்யத்தில் சொல்லப்பட்டிருக்கிறதோ?

*சாஸ்திரி:* இல்லை.

*ஆசாரியார்:* அல்லது 'அஹம் ப்ரம்மாஸ்மி' என்று சொன்னதாய் வியக்தமாய் சொல்லப்பட்டிருக்கும் 'தத்' என்னும் பதத்திற்கு உமது

சங்கராசாரியாராவது ஜீவன் என்று அர்த்தம் செய்திருக்கிறாரோ?

சாஸ்திரி: இல்லை. 'தத்' என்பதற்கு ப்ரம்மம் என்றே அர்த்தம் செய்திருக்கிறார்.

ஆசாரியார்: இப்படி இருந்தும் இவ்வாறு சொன்னது ஜீவன்தான் என்று சொல்கிறீர். உங்களுக்கே இது சரியென்று தோன்றுகிறதா?

சாஸ்திரி: ஓர் வாக்யத்தை முன்பின் விமரிசை செய்துதான் அர்த்தம் நிஷ்கரிக்கவேண்டும். நடுவில் உள்ளதை மட்டில் துண்டாக எடுத்துக் கண்டபடி அர்த்தம் செய்யலாகாது.

ஆசாரியார்: பேஷ். சரியான வார்த்தை. இது கடைசிவரையில் உம்முடைய கவனத்திலேயே இருக்கட்டும். மேலே சொல்லும்.

சாஸ்திரி: இந்த வாக்யத்திற்கு முன்பு 'ததாஹு: ப்ரம்மவித்யயா' முதலான வாக்யங்களால் பிரம்மவித்தையால் பூர்ணதை உண்டானதாய் எதை தெரிந்துகொள்கிறார்களோ, அதன் விஷயத்தைப்பற்றி விசாரம் செய்கிறார்கள் என்று சொல்ல ஆரம்பித்து, 'கிமு தத் ப்ரம்ம அந்த ப்ரம்மம் யார் என்றும், 'கிமு தத் ப்ரம்ம அவேத்' அந்த ப்ரம்மம் எதைத் தெரிந்துகொண்டது என்றும், இரண்டு பிரசினங்கள் செய்யப்பட்டன. 1. 'கிமு தத் ப்ரம்ம' அந்த ப்ரம்மம் யார் என்ற கேள்விக்கு 'ப்ரம்மவா இத மக்ர ஆஸீத்' என்பது பதிலாக புறப்பட்டது. இதற்கு என்ன என்ன அர்த்தம் என்றால் 'இதம்' எல்லா சரீரங்களிலேயும், ப்ரவேசம் செய்திருப்பதாய் காணப்படுபவன். அதாவது ஜீவன் 'அக்ரே' ப்ரம்மக்ஞானமுண்டாவதற்குமுன் 'ப்ரம்ம வா' ப்ரம்மமாகவே 'ஆஸீத்' இருந்தான். அந்த ஜீவன் அக்ஞானத்தால்தான் நான் ப்ரம்மமல்லவென்றும், ஸர்வ ஜகத்தின் ரூபமுள்ளவன் அல்லவென்றும் எண்ணி, பிரமைகொண்டவனாய், நான் கர்த்தா, நான் போக்தா, நான் சுகமுள்ளவன், நான் துக்கமுள்ளவன், நான் ஸம்ஸாரி என்றுதான் அறிந்துகொள்கிறானேயன்றி அந்த ஜீவன் ஸம்ஸாரி விலக்ஷணனாய் ப்ரம்மரூபனாய், ஸர்வரூபனாய்த்தான் இருந்தான். 2. 'கிமு தத் ப்ரம்ம அவேத்' அந்த ப்ரம்மம் எதைத் தெரிந்துகொண்டது என்ற இரண்டாவது பிரசினத்திற்கு 'தத் ஆத்மானம் அவேத் அஹம் ப்ரம்மாஸ்மி இதி' என்று பதில் சொல்லப்பட்டது. இதற்கு என்ன அர்த்தம் என்றால் கருணையுள்ள ஆசாரியன் வந்து, நீதான் ப்ரம்மம், நீதான் ஸர்வமும் என்று உபதேசம் செய்யவும் 'தத்' அந்த ப்ரம்மம் 'அஹம் ப்ரம்ம அஸ்மி இதி' நான் ப்ரம்மமாக இருக்கிறேன் என்று 'ஆத்மானம் ஏவ' தன்னையே 'அவேத்' அறிந்துகொண்டான். 'தத:' அந்த ஐக்ய க்ஞானத்தால் 'ஸர்வம் அபவத்' ஸர்வபாவத்தை அடைந்தான். ஸர்வபாவம் என்பது



முன்பே இருந்ததாயினும் நான் ஸர்வரூபனும் அல்ல என்ற பிரமை உண்டாயிருந்ததால் அந்த பிரமை அதாவது நான் ஸர்வரூபனும் அல்ல என்ற பிரமை தொலைந்தது. என்றிவ்வாறு இரண்டு கேள்விகளுக்கு இரண்டு பதில்கள் சொல்லப்பட்டிருப்பதிலிருந்து 'அஹம் ப்ரம்மாஸ்மி' என்று அறிந்தது ஜீவன் என்றே ஏற்படுகிறது.

ஆசாரியார்: அடே அப்பா? பிரம்மாண்டமாய் அர்த்தம் சொல்லிவிட்டீரே! இவ்வளவெல்லாம் இதற்கு அர்த்தமா? சுருதியில் இருப்பதெல்லாம் கூடி 'ப்ரம்ம வா இதமக்ர ஆஸீத், ததாத்மான மேவேத் அஹம் ப்ரம்மாஸ்மி இதி' என்றுதானே?

சாஸ்திரி: ஆமாம். இதற்குத்தான் இவ்வளவு அர்த்தம்.

ஆசாரியார்: பதத்தின்பேரில் இவ்வளவு அர்த்தம் இல்லை. நீர் விரும்பும் அர்த்தத்தை இவ்வளவெல்லாம் சொல்லி இந்த சுருதியில் புகவிட பார்க்கிறீர். நல்லது. சங்கதி தெரிந்தது. பின்னடி இதை நிரூபித்துக்காட்டுகிறேன். ஜீவன் ஜீவன் என்று உருப்போடுகிறீரே! ஜீவன் என்பதற்கு என்ன பதம் இருக்கிறது. (தொடரும்)

ஸ்ரீ மத்வாசாரியார் இயற்றிய

# ஸ்ரீ மகாபாரத தாத்பர்ய நிர்ணயம்.

(முப்பத்திரண்டாவது அத்யாயம்)

முன் வாலியம் 10வது 350-பக்கம் தொடர்ச்சி

(ஸ்ரீம. வே. பாகவத ரங்கனுதாசாரியாரின் மொழிபெயர்ப்பு.)

பாண்டவர்களிடம் யாதவகுல நாசம் முதலான சங்கதிகளை அர்ஜுனன் சொன்னான். பாண்டவர்களும் ஸ்ரீ கிருஷ்ணர் விட்டு பிரிந்தால் தாங்களும் ராஜ்யமாளப்போவதில்லை என்று அவர்கள் முன்பு செய்து கொண்டிருந்த சங்கேதத்தை ஞாபகத்திற்கு கொணர்ந்து பகவத் பக்தனும் பௌத்திரனுமான ஸ்ரீ பரீக்ஷித் ராஜனை தங்கள் மகாராஜ்யத்திற்கு பட்டாபிஷேகம் செய்து வைத்தார்கள். ஸ்ரீகிருஷ்ணரின் ஸ்திரீகளை அபகரித்துச்சென்ற மிலேச்சர்களைக் கொல்லும்படி பரீக்ஷித் ராஜனுக்கு ஆக்ஞை யிட்டனர். பாண்டவர்களின் ராஜ்யபாரத்தை ஒப்புக்கொண்ட பரீக்ஷித்ராஜன் அந்த மிலேச்சர்களை சம்ஹரித்தான்.

ஸ்ரீகிருஷ்ணரின் பாதஸ்பரிசம் இந்த பூமியில் இருக்குமளவும் இந்த பூமிக்கு கண்டகர்கள்போன்ற அஸுரர்களைக் கொல்வதென்றும், ஸ்ரீகிருஷ்ணர் வைகுண்டத்திற்கு பிரயாணம் சென்ற பின் அவர் பின்னாடியே தங்கள் லோகத்திற்கு பிரயாணம் புறப்படுவதென்றும், பாண்டவர்கள் பிரதிக்ஞை செய்திருந்தனர். அந்த பிரதிக்ஞையைக் காப்பாற்றிக் கொள்வதற்காகத்தான் பீமசேனர் முதலான பாண்டவர்கள் ஸ்ரீகிருஷ்ணரின் பாரியைகளை தூக்கிச்சென்ற மிலேச்சர்களை சுயம் கொல்லவில்லை. ஸ்ரீகிருஷ்ணரின் பின்னாடி பிரயாணம் போகும் நாம், ஸ்ரீகிருஷ்ணர்விட்டுச் சென்ற பூமியை தாம் அனுபவிக்கிறதில்லை என்றும் ஸம்ரக்ஷிக்கிறதில்லை என்றும் பாண்டவர்கள் முன் காலத்திலேயே நியமம் செய்திருந்தனர்.

அப்பொழுது பீமசேனருடைய பத்னியான காளி என்பவள் விஷ்ணுவைக் குறித்து சமாதியடைந்து அவளுடைய அந்த மனுஷ்ய சரீரத்தைவிட்டு திரௌபதியுடன் ஐக்யம் அடைந்தாள்.

ஸுபத்ராதேவி முதலான பாண்டவர்களின் பத்னிமார்களும் யுயுத்ஸுவும் பாண்டவர்களின் ஆக்ஞையின்பேரில், பரீக்ஷித் ராஜனுக்கு தர்மத்தை போதித்துக் கொடுப்பதற்காக, பரீக்ஷித்துடன் ஹஸ்தினாபுரத்திலேயே வாசம் செய்தனர்.

பாண்டவர்கள் ராஜசின்ஹங்களான சத்ரசாமரங்கள் முதலானவைகளை விட்டு விஷ்ணுவை த்யானம் செய்துகொண்டு திரௌபதியுடன்கூடி வீரர்கள் செல்லும் மார்க்கத்தில் பிரயாணம் செய்தனர். ஆரம்பத்தில் ஈசான்யதிக்கை நோக்கிச் சென்றனர். பாண்டவர்களில் அர்ஜுனன் மட்டில் காண்டீவதனுஸ்ஸில் லோபம் வைத்தவனாய் அதை விடாமல் தரித்திருந்தான். கடற்கரையில் அக்னி பகவான் நேரில் வந்து, அர்ஜுனன் தனுஸ்ஸை விட்டுப் பிரியாதிருந்ததைப் பார்த்து, தர்மபுத்திரரை அந்த தனுஸ்ஸைக் கொடுக்கும்படி யாசித்தார். தர்மபுத்திரர் அதைக் கொடுக்கும்படி அர்ஜுனனிடம் சொல்லவும் அர்ஜுனன் அந்த காண்டீவ தனுஸ்ஸையும் இரண்டு அம்பராதூளிகளையும் ஸமுத்ரத்தில் விட்டெறிந்தார். அக்னி பகவான் வருணனிடம் திரும்ப உம்முடைய தனுஸ்ஸையும் அம்பராத்தூளிகளையும் கொணர்ந்து தருகிறேன்



என்று முன் சொல்லியிருந்த வார்த்தையை நிறைவேற்றிக்கொடுத்து மறைந்துசென்றார். அந்த பாண்டவர்கள் ஏழு சமுத்ரத்தையும் தாண்டி சீக்கிரமே பிரயாணம் செய்தனர். யோகத்தில் நிலைபெற்றிருந்த அந்த பாண்டவர்கள் எந்த மார்க்கத்திலேயும் களைப்பில்லாதவர்களாய், ஏழு நாளினுளேயே பூமியை ப்ரதக்ஷிணம் வந்து, கந்தமாதன பர்வதத்தில் இருந்துவரும் நாராயணாசிரமத்தில், முதலில் திரௌபதி, பின்பு ஸஹதேவன். பின்பு நகுலன், பின்பு அர்ஜுனன், பின்பு பீமசேனன், இவ்வாறு இந்த கிரமப்படி இவர்களின் சரீரம் விழுந்தது. அப்பொழுது பீமசேனர், திரௌபதி முதலானவர்கள் மனுஷ்யசரீரத்துடன் ஸ்வர்க்கத்திற்கு போக விரும்பாததால், இவர்களின் சரீரம் பூமியில் விழுந்துவிட்டதென்று உண்மையை அறிந்திருப்பினும், என்னென்ன பாபத்தால் எங்கள் சரீரம் தாழ்ந்தவர்களின் வரிசையில் கீழேவிழுந்துவிட்டது என்று தர்மபுத்திரரை பிரசினம் செய்தார். மரணகாலத்தில் ஒருவருடைய தோஷத்தை ஒருவர் சொல்லும்பக்ஷத்தில், தோஷத்தை சொல்பவனிடமிருந்து, தோஷம் சொல்லப்பட்டவனுக்கு ரிண நிவிருத்தி ஆகிறதென்று சுருதி இருந்துவருகிறது. ஆகவே திரௌபதி முதலானவர்களுக்கு தர்மபுத்திரரின் ரிணானுபந்தம் நிவிருத்தியாவதற்காக, பீமசேனர் தர்மபுத்திரரால் திரௌபதி முதலானவர்களின் தோஷங்களை சொல்லச் செய்தார். சுத்தமான காரியங்களுள்ள திரௌபதி முதலானவர்களின் சரீரங்கள் அவ்வவர்களின் இச்சையின்பேரிலேதான் விழுந்தனவென்பதை தர்மபுத்திரர் அறியாமல், இப்பேர்பட்ட தோஷத்தால் அப்படி நேர்ந்திருக்கும் என்று ஊகித்தும், காரணமில்லாமல் காரியம் ஏற்படாது என்ற நிச்சயத்தாலும், காரணமின்னதென்பதை அறியாமலும், திரௌபதிதேவி அர்ஜுனனிடம் அதிகமான பக்ஷபாதம் வைத்திருந்த தோஷத்தாலும், ஸஹதேவன் தான் நீதியை அறிந்தவன் என்று கர்வங்கொண்டிருந்த தோஷத்தாலும், அர்ஜுனன் தான் வீரனென்று கர்வங்கொண்டிருந்த தோஷத்தாலும், பீமசேனர் தான் பலிஷ்டன் என்று கர்வங்கொண்டிருந்த தோஷத்தாலும் இவர்கள் மரணமடைய நேரிட்டது என்று இந்த தோஷங்களை இவர்களின் மரணத்திற்குக் காரணமாக தர்ம

புத்திரர் சொன்னார். அவர்களின் இச்சைப்படி மரணமுள்ள அந்த பாண்டவர்களும், துரௌபதியும் யோகாப்யாஸத்தால் தங்கள் சரீரங்களை விட்டு, தேவர்களும் எந்த பதவியை அடையமாட்டார்களோ, அப்பேர்பட்ட உத்தமஸ்தானத்தை அடைந்தனர். என்று வேதமே இருந்துவருவதால் க்ஞான பக்தியாதிகளால் மேலானவர்களான துரௌபதி முதலான ஐவர்கள் பாபங்களால் சரீரங்களை விடவில்லை. பீமசேனர் துரௌபதி முதலானவர்களின் தோஷங்களை தர்மபுத்திரரால் சொல்லச் செய்து, தர்மபுத்திரரின் ரிணங்கள் அவர்களுக்கு இல்லாமற்செய்து, விஷ்ணுவை த்யானம் செய்துகொண்டு, தன் சரீரத்தை த்யாகம் செய்தார். உத்தமமான ஸ்தானத்தை அடைந்தார் என்று ரிஷிகளுக்கு ஸ்ரீ வேதவியாஸர் சொன்னதாய் ஸ்காந்த புராணத்தில் இருந்துவருகிறது. பீமசேனரைத் தவிர்த்துள்ள நான்கு பாண்டவர்களில் அர்ஜுனனிடம் துரௌபதிதேவிக்கு விசேஷமாய் சிநேகமிருப்பது உசிதமே. அது துரௌபதிக்கு ஒரு தோஷமாகாது. சகதேவன், நகுலன், அர்ஜுனன் பீமசேனர் இவர்களுக்கு நீதி, ரூபம், வீரியம், பலம் இவைகள் மகத்தாய் இருந்ததால், அதில் அபிமானம் வைத்தது அவர்களுக்கு தோஷமாகாது. பீமசேனர் முக்ய ப்ராணரின் ஸ்வரூபமானதால் தர்மபுத்திரர் தோஷமாகச் சொன்ன அதிகமாய்ச் சாப்பிடும் போக சக்தியும் தோஷமாகாது. தன் ஸ்வரூபத்தின்படி தன்னை அறிந்துகொள்வது தோஷத்திற்கு காரணமாகாது என்று வியாஸஸ்மிருதி இருப்பதால், துரௌபதி முதலானவர்களுக்கு தர்மபுத்திரர் சொன்ன தோஷம் எவ்வாறுதான் ஏற்படக்கூடும்? ஸகதேவன், நகுலன், அர்ஜுனன் இவர்களுக்கு நீதி, ரூபம், வீரியம், இவைகளில் மகா கர்வம் ஒரு சமயம் உண்டாயிருக்கக் கூடும். ஆயினும் இவர்கள் சரீரம் விட்டது இந்த அகங்காரத்தின் பலனன்று. இந்த அகங்காரத்துக்கு பலன் யாதெனில் மோக்ஷத்தில் அவர்களுக்கு ஸமானமானவர்களைவிட சிறிது அதிகமாய் ஏற்படக்கூடிய ஆனந்தத்திற்கு குறை ஏற்பட்டு தாரதம்மியம் உண்டாவதுதான். தோஷத்திற்கு பெருக்கையும் குணத்திற்கு குறைவையும் உண்டாக்கி இந்த ஸம்ஸாரத்திலேயே தாரதம்மியத்தையும் இந்த கர்வம் உண்டாக்குகிறது. அபரோக்ஷ க்ஞானத்திற்கு



பிறகு பாபம் இல்லாத அபரோக்ஷக ஞானிக்கும் கூட அவனு
டைய சரீரத்தை துவக்கிய அவனுடைய ப்ராரப்த கர்மத்தின்
நாசமடைந்தால் அவனுடைய தேகம் விழும். ஆதலால் சரீரம்
விழுவது மகா கர்வத்தின் பலமாகாது.

தர்மபுத்திரர் மனுஷ்ய சரீரம் கொண்டவராகவே ஸ்வர்க்கத்திற்கு போயினும், அந்த மனுஷ்ய தேகத்துடன் ஸ்வர்க்க போகத்
தை அனுபவிக்கவில்லை. அதனால் தர்மபுத்திரருக்கு ப்ராரப்த கர்
மத்தின் நாசம் ஆகாமல் இருந்ததால் அவனுடைய சரீரம் பூமியில்
விழவில்லை. பீமசேனருக்கு அதி போஷம் அதிகச் சாப்பாடு முத
லான தோஷங்கள் எப்படி வரும்? ஸமஸ்தமான ஜீவராசிகளைவிட
அநாதிகாலமாய் குணங்கள் அதிகமாய் இருப்பவர்கள் யாரோ,
யார் ஸமஸ்தமான தோஷங்களும் இல்லாதவர்களோ, தேவர்
களின் தேவர்களிலேயும் முக்யமான தேவர்கள் யாரோ, அப்
பேர்ப்பட்ட ரிஜு என்னும் தேவர்கள்தான், வாயு பகவானின்
ஸ்தானத்தை அடைபவர்கள். பீமசேனருக்கு அதிமானம் முத
லான தோஷங்கள் இல்லை என்று ஸ்ரீ கிருஷ்ணர் உத்யோக பர்
வத்தில் சொல்லியிருக்கிறார். ஹே பீமசேனா! உன்னிடம் க்ஞா
னானந்தம் முதலான கல்யாண குணங்களை ஸ்வல்ப்பமாகத்தான் நீ
அறிந்திருக்கிறாய். நானோ அவைகளை ஆயிரம் மடங்காய் அறிந்
திருக்கிறேன். அந்த காரணத்தைக்கொண்டு, தர்மபுத்திரர் துரி
யோதனனின் வதத்தால் தர்மம் தொலைந்து போனதாய் எப்படி
நினைத்துக்கொண்டாரோ, அப்படித்தான் இச்சந்தர்ப்பத்திலேயும்
அதர்மத்தால் தேகம் விழுந்தது என்று சொன்னார். தங்களைவிட
வயஸில் மூத்தவர்களாயிருப்பவர்களின் முன், தங்கள் சரீரம்
விழவேண்டுமென்று விருப்பம் மிகுந்த துரௌபதி முதலானவர்
களுக்கு, அவர்களின் விருப்பப்படி மூத்தவர்களின் எதிரில் சிறு
வர்களின் சரீரம் விழுந்தது. பாபத்தால் அவர்களின் சரீரம் விழ
வில்லை. மோக்ஷம் அடைபவர்களுக்கு, அவர்களைவிட உத்தமர்
களின் பூர்வத்திலேயே சரீரம் விழுவதுபோல், மோக்ஷமுண்டா
கும் சந்தர்ப்பத்தில் சரீரம் விழுவது பாபத்தின் பலமன்று என்றும்
ப்ராரப்த கர்மம் நாசமடைந்ததின் பலன் என்றும் ஸமஸ்த சாஸ்தி
ரங்களிலேயும் நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது.

பீமசேனாதிகள் சரீரம் விட்டு தன் லோகத்திற்கு சென்றபின் தர்மபுத்திரர் நாய் உருவமுள்ள யமனுடன்கூடி முன்னடி சென்றார். அப்பொழுது தர்மபுத்திரர் முன், தேவர்கள் அனுப்பித்த ரதம் வந்திறங்கியது, ரதத்தில் உட்காரர்ந்திருந்த மகேந்திரன் தர்மபுத்திரரை ரதத்தில் ஏறும்படி சொல்லவும், தன்னுடன் வந்த நாய் முதலில் ஏறட்டும் என்று சொன்னார். நாய் ஏறுவது உசிதமல்லவென்று இந்திரன் சொன்னார். அதற்கு தர்மபுத்திரர் நாயை விட்டு நான் ரதம் ஏறமாட்டேன், என்று நிச்சயமாய்ச் சொல்லிவிடவும், யமன் தான் இந்த நாய் உருவத்தை விட்டு தன் சொந்த ரூபத்தையடைந்து யமனின் ரூபத்தை தர்மபுத்திரருக்கு காட்டினான். யமன் தர்மபுத்திரரின் ரூபங்கொண்ட தனக்கே கிருதக்ஞனென்ற கீர்த்தியை தர்மங்களோடு கூடிய வார்த்தையால் பிரசித்தம் செய்தார். பிறகு லக்ஷ்மீபதியின் பிரியரான தர்மபுத்திரர் தேவர்களின் ரதத்தில் ஏறிக்கொண்டு எல்லா ராஜாக்களையும் தாண்டி பூமிமுதலான லோகங்களுக்கு மேன்மேல் இருக்கக்கூடிய ஸ்வர்க்கத்திற்குச் சென்றார்.

ஸ்ரீ மகா பாரதம் மகாப்ரஸ்தான பர்வ கதை முடிந்தது.

(தொடரும்)

# செய்தித் திரட்டு.

கோயமுத்தூர் ஸ்ரீவியாஸராஜ மடாதிகாரியாய் ஸ்ரீமான் பண்டித தெக்கலூர் கிருஷ்ணசாரியார் நியமிக்கப்பட்டதை முன்னிட்டு அந்நகர் சின்ன கடை வீதி ஸ்ரீ ஆஞ்சநேயரின் கோவிலில் 7—7—38வயன்று மாத்வ மகா ஜனங்கள் சுமார் 200 பேர் வரையில் கூடி தமது உற்சாகத்தை தெரிவித்தனரென்றும், அச்சமயம் உத்திராதிமடாதிகாரி ஸ்ரீமான் அவலக்கி ஸ்ரீனிவாஸாசாரியார் பண்டிதர்களாயிருப்பவர்கள் மடாதிகாரிகளாய் இருப்பது எல்லோருக்கும் பூஷணமென்று அறிவித்ததாயும் ஸ்ரீமான் தெக்கலூர் ஆசாரியாருக்கு வஸ்திர மரியாதை செய்யப்பட்டதாயும், கோயமுத்தூர் ஸ்ரீமான் V. ராமராவ் அறிவிக்கிறார்.

கோயமுத்தூர் ஸ்ரீமத்வ ஸித்தாந்த புபுத்ஸு சபையாரால் ஸ்ரீமான் சஞ்சீவி ராயரின் ஆஞ்ஜனேய ஸ்வாமி கோவிலில் ஸ்ரீ ஜயதீர்த்தரின் புண்யதின மகோற்சவம் 16—7—38 முதல் 3 நாட்கள் வெகு விமரிசையாய் கொண்டாடப்பட்டதென்றும் முதல் நாள் ஸ்ரீமான் அவலக்கி ஸ்ரீனிவாஸாசாரியாரும், மறுநாள் ஸ்ரீமான் நாமக்கல் வெங்கண்ணாசாரியாரும் ஜயதீர்த்தரின் சரித்திரம் அவருடைய நூல்களின் மகத்துவம் முதலியவைகளைப்பற்றி உபன்யஸித்தார்களென்றும், ஆராதனை தினத்தன்று ஸ்ரீ ஆஞ்ஜனேயருக்கு விசேஷ அபிஷேக அலங்காராதிகள் நடந்ததுடன், இந்நகரில் சாதுர் மாஸ்ய ஸங்கல்பத்திற்கு அமர்ந்திருக்கும், ஸ்ரீ உத்திராதி மட ஸ்வாமிகளிடம் பல வருஷங்கள் வித்யாப்பியாஸம் செய்துவந்த ஸ்ரீ பண்டர்கோர் மடாதிபதி ஸ்ரீமத் பரமஹம்ஸேத்யாதி விருதுக்களால் சோபிதர்களான ஸ்ரீவித்யாமான்ய தீர்த்த ஸ்வாமிகள் 18வயன்று மாலையில் விசேஷ வைபவத்துடன் சபையின் அதிகாரிகளால் வரவேற்கப்பட்டு, அழகிய ஆஸனத்தில் அமர்ந்து அதி அற்புதமாய் ஸ்ரீ மத்வஸித்தாந்தத்தின் பெருமையை நன்கு உபன்யஸித்தார்களென்றும், எல்லா ஸித்தாந்திகளும் ஒப்புக்கொண்ட ப்ரஸ்தானத்ரயங்களான ஸூத்ரம் உபநிஷத் கீதை இவைகளுக்கு ஸ்ரீமத்வாசாரியார் செய்த பாஷியத்தையும் இதரர்கள் செய்த பாஷியத்தையும் ஒப்பிட்டுக்காட்டி, சாமானியர்களுக்கும் ஸ்ரீ பகவத்பாதாளின் ஸித்தாந்தம்தான் பிரமாண பலமுள்ளதென்று நிரூபித்து ஸ்ரீமன் மத்வ மதே ஹரிபரதர: என்னும் சுலோகங்களில் கண்ட ஒன்பது ப்ரமேயங்களும் மத்வ மதத்திய ஒன்பது ரெத்தினங்கள் என்று சொல்லி, அவைகளை தகுந்த ஆதாரங்களுடன் அங்கு கூடியிருந்த இதர மதத்தார்களும் ஒப்புக்கொள்ளும்படி விளக்கிக்காட்டினாரென்றும் எல்லோரும் இதைக் கேட்டு பரமானந்தமடைந்தனரென்றும், ஸ்ரீ ஸ்வாமிகள் ரூ. 10 நன்கொடை அளித்து, இச்சபை நீடூழி நிலைக்க பரமானுக்ரஹம் செய்தனர் என்றும், விஸ்தாரமாய் இச்சபையின் காரியதரிசி ஸ்ரீமான் S. V. ஸ்ரீனிவாஸராவ் அறிவிக்கிறார்.

மதுரை மெல்லிகொம்டான் ஸ்ரீமான் சசுவரய்யரின் குமாரருக்கு விவாகம் நடந்ததை முன்னிட்டு, மதுரைக்கு ஒரு மைல் தூரத்திலுள்ள மொலலின் சௌடி என்னும் ஸௌராஷ்

டிர பிராம்மணர்களின் நந்தவனத்தில் ஸ்ரீமான் நரசிம்மய்யர் நடத்திவைத்த பெரியதொரு சமாராதனை உற்சவ கூட்டத்தில், மதுரை இந்திய இளைஞர் சங்கம் (Young Men's Indian Association) ஸ்தாபகரும், காங்கிரஸ் சிறை சென்ற தேசபக்தரும், மத்வமத ப்ரசாரகரும், இந்நகர் பிரபல டாக்டருமான ஸ்ரீமான் N. சங்கர்லால் ஜாபாலி அவர்கள் மத்வ மதத்தின் அடிப்படையான தத்வங்களை மிக விஸ்தாரமாய் எடுத்துக்காட்டிய பின், குரு ராகவேந்திர ஸ்வாமிகளின் திவ்ய சரித்திரத்தை மிக அழகாகவும் விரிவாயும் எளிய நடையில் உபன்யாஸம் செய்து, இறுதியில் மத்வமத சம்பந்தமான அரிய விஷயங்களை வெளியிட்டு வரும் மாத்வ மித்திரன் மாதப் பதிப்பை ஒவ்வொரு மாத்வரும் வேறு மதத்தினரும் வாங்கிப் படிக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டார் என்றும், கூட்டத்திற்கு வேறு மதத்தினர் பலரும் வந்திருந்தனரென்றும் மதுரை Y. M. I. A. கௌரவ காரியதரிசி அறிவிக்கிறார்.

பெங்களூர் கண்டோன்மெண்டு அல்சூரில் 28-5-38யன்று கும்பகோணம் நமது நண்பர் ஸ்ரீமான் வாதிராஜராவ் பாகவதர் ஸ்ரீ ராமகிருஷ்ண பாமஹம்ஸரின் சரித்திரத்தை ஹரிகதையாகச் செய்ய அவ்வூர் மகாஜனங்களால் தங்கப்பதக்கம் அளிக்கப்பட்டது என்றும், இவர் சென்ற 6 மாதகாலம் இந்த இடத்தில் ஸ்ரீமத் ராமாயணத்தை 24 கதைகளாய் வெகு இனிதாய் சொல்லிமுடித்து பட்டாபிஷேகத்தன்று பெரிய கூட்டத்தில் ஸ்ரீமதி லேடி C. V. ராமன் இவரை வெகுவாய் சிலாகித்துப் பேசினார் என்றும், மைசூர் மகாராஜாவின் எதிரிலும் அவருடைய பிறந்த நாள் கொண்டாட்டத்தின்போது சுபத்திராபரிணயம் ஹரிகதை செய்து மகாராஜாவால் நன்கு மதிக்கப்பெற்றாரென்றும், இம்மாதிரியே பம்பாய் ஹைதராபாத் கத்வால் முதலான இடங்களில் ஹரிகதைகள் செய்து, தங்கப்பதக்கங்கள் பரிசுபெற்றிருக்கிறாரென்றும், இவருக்கு கத்வால் ஸம்ஸ்தானத்தில் 'லலிதகலாவல்லப' என்று பட்டமும் கொடுக்கப்பட்டதென்றும், அவருடைய போட்டோவுடன் பெங்களூரிலிருந்து ஸ்ரீமான் R. S. கிருஷ்ணாசாரியார் அறிவித்திருப்பதைக் காண மிகவும் மகிழ்கிறோம்.



திருநெல்வேலி ஜில்லா ஸ்ரீவைகுண்டம் கார்னேஷன் ஹைஸ்கூல் உதவி ஆசிரியரான ஸ்ரீமான் V. ராமச்சந்திர ராயரால் அழைக்கப்பெற்று 'பாகவதாசாரியார்' என்று பட்டம் பெற்ற நமது நகர் ஸ்ரீமான் G. பூவராகாசாரியார் சுமார் 2 மாதகாலம் அங்கு ஹரிவம்சம் சொல்லி அவ்வூராரால் நன்கு கௌரவிக்கப்பட்டாரென்றும் திரும்புங்கால் ஸ்ரீவில்லிபுத்தூரில் பாகவதத்திலிருந்து சில பாகங்களை உபந்யாஸிக்கப்படவும் அங்கு வசிக்கும் சேத்தூர் ஸமஸ்தான வித்வான் கவிபூஷணம் ஸ்ரீமான் நரசிம்மாசாரியார்ஸ்வாமி அன்னவரின் உபன்யாசத்தைப் புகழ்ந்து கவி பாடி அதை ஸமர்ப்பிவித்தார் என்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

பெங்களூர் சீதாபதி அக்கிரகாரத்தில் சமீபகாலத்தில் பிருந்தாவன பிரதிஷ்டையடைந்து எப்போதுமே நூற்றுக்கணக்கான ஸேவார்த்திகளை அவரவர்களின் மனோபீஷ்டங்களை அளித்து ஆகர்ஷித்து, மந்திராலயம்போல் விசேஷ கன்னிதானம் பெற்றிருக்கும் ஸ்ரீகுரு ராகவேந்திரஸ்வாமி பிருந்தாவனத்தின் ஆராதனை வெகு விமரிசையாய் இவ்வருஷம் 12-8-38முதல் மூன்று நாட்கள் நடைபெறுமென்றும், பக்தகோடிகள் இயன்றளவு திரவிய சகாயத்தை ஸ்ரீமடத்தின் ஆக்ஞைபெற்ற ஸ்ரீமான் S. N. ஹனுமந்தராயர் பேருக்கனுப்பி அச்சடித்த ரசீது பெறவேண்டுமென்றும், சென்ற வருஷத்து ஆராதனை வரவு சிலவு ரூ 672-0-9 என்றும், 13,000 ஜனங்களுக்கு சமாராதனை நடந்ததென்றும், ஆராதனையன்று காலையில் வெள்ளிப்பல்லக்கும் மறுநாள் ரதோத்ஸவமும் நடைபெறுகிறதென்றும் அச்சான ரிபோர்ட் மூலமாய் பெங்களூரிலிருந்து ஸ்ரீமான் S. N. ஹனுமந்தராவ் அறிவிக்கிறார்.

## மதிப்புரை.

### த்ரி பில்வ தளசம்பு.

இந்நூல் மகா கீர்த்திவாய்ந்த மதுரை தமிழ் சங்கத்தின் கட்டிடத்தில் ஸம்ஸ்கிருத பாஷையில் தயாராகி தேவநாகர எழுத்தில் அச்சிடப்பட்டு எமது பார்வைக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. R. D. காலேஜ் மாஜி ப்ரின்ஸ்பால் ஸ்ரீமான் V. S. ராமஸ்வாமி சாஸ்திரி பி. ஏ. பி. எல். அவர்கள் இதன் ஆசிரியர் ஆவார். அவர்

சென்ற வருஷம் ஹிமவத் ப்ராந்தியம் ஹ்ருஷீகேச க்ஷேத்திரம் வரை யாத்திராக்கிரமமாய் போய் பாரததேசத்தை சுற்றிவந்ததில், தான் கண்டது கேட்டது அனுபவித்தது யாவற்றையும், சுருக்கமாயும் தெளிவாயும் ருசிகரமாயும் எளிய தேவபாஷையில் சுலோகமாகவும் வாக்யமாகவும் அறிவித்திருப்பது மிகவும் மெச்சத் தகுந்ததாய் இருக்கிறது. தன் ஞாபகார்த்தமாகவே இந்நூல் எழுதப்பட்டிருக்கிறதென்று அவர் ஆரம்பத்தில் அறிவித்திருப்பதை அனுசரித்து ஆங்காங்கு அவருக்கு நேர்ந்த சிறு சிறு அனுபவங்களும்கூட எடுத்துரைக்கப்பட்டிருக்கின்றன. பம்பாய் ரயில்வேஸ்டேஷன், க்ராபோர்ட் மார்கெட், காசி ஹிந்து யூனிவர்ஸிடி, ஆக்ரா தாஜ்மஹால், டெல்லி கௌன்ஸில் ஹால், முதலிய அநேக முக்ய ஸ்தலங்களும் வர்ணிக்கப்பட்டிருக்கின்றன. நூதனமான பதப்ரயோகங்கள், வியாகரண ப்ரயோகங்கள், வ்ருத்தலக்ஷணங்கள் முதலியவைகளைக் குறித்து சிறு குறிப்புகளை ஸாமானிய ஸம்ஸ்கிருத வ்யுத்பத்தியுள்ளவர்கள் அபேக்ஷிப்பார்களாயினும், அவர்களுக்கு அர்த்தமாகாமல் எந்த பாகமும் இந்நூலில் காணப்படாததைப்பற்றி மிகவும் மகிழ்கிறோம். ஆங்கிலத்திலும் உயர்தர படிப்புவாய்ந்த ஸ்ரீமான் சாஸ்திரிகள் இயற்றிய இந்நூல் நமது நாட்டில் எங்கும் ஸம்ஸ்கிருதமே பேசப்பட்டுவர வழிகாட்டியாய் இருக்குமென்பதில் ஆக்ஷேபணை இல்லை.

---

## விசேஷதினங்கள்.

| | | |
|---|---|---|
| 13—8—38 | சனிவாரம் | ஸ்ரீ ராகவேந்திரஸ்வாமிகளின் 268-வது வருஷத்திய புண்ணியதினம். |
| 18—8—38 | குருவாரம் | கோகுலாஷ்டமி உப, இரவில் கோகுல பூஜை. |
| 19—8—38 | சுக்ரவாரம் | காலை மணி 9-1க்குமேல் எல்லோருக்கும் பாரணை. |
| 22—8—38 | சோமவாரம் | ஏகாதசி உப. |
| 25—8—38 | குருவாரம் | திலதர்ப்பணம். |
| 28—8—38 | பானுவாரம் | விநாயகசதுர்த்தி, ஸாமவேத உபாகர்மம். |
| 29—8—38 | சோமவாரம் | ரிஷிபஞ்சமி. |
| 5—9—38 | சோமவாரம் | ஏகாதசி உப. |
| 6—9—38 | மங்களவாரம் | த்வாதசி, பால் விரதம் ஆரம்பம். |
| 7—9—38 | புதவாரம் | ச்ரவணம் உப. விஷ்ணு ப. உப. |
| 8—9—38 | குருவாரம் | அநந்தவிரதம். |
| 9—9—38 | சுக்ரவாரம் | பௌர்ணமி, விஷ்ணு ப. உப. |

# மாத்வ மித்திரன்

---

10-வது வாலியம் (1937—1938)

பொருளடக்கம்.


விஷயம் பக்கங்கள்

ஸ்ரீ மகாபாரத தாத்பர்ய நிர்ணயம்
(ஸ்ரீமத்வாசாரியார்) பக்கம் 19 (அத்யாயம் 29 சுலோகம் 33) 33 (30–1) 73 (30–31) 97 (30–73) 129 (30–116) 161 (30–147) 276 (31–1) 303 (31–45) 315 (32–1) 348 (32–39)

2 *ஸ்ரீ மத்வ விஜயம்
(ஸ்ரீ நாராயண பண்டிதாசாரியார்) பக்கம் 12 (ஸர்க்கம் 11 சுலோகம் 21) 68 (11–58) 116 (11–72) 174 (12–1) 283 (12–13) 329 (12–26) 351 (12–32)

3 *ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ர நாமம் 1, 39, 65, 112, 138, 179, 266, 288, 332

4 *லக்ஷ்மணன் பரதனுக்கு தமையனே 6, 44, 78, 119

5 . *பிரம்மசூத்திரம் (ஸ்ரீமான் M. ராமராவ்) 25, 55, 84, 126, [145

6 *ஸங்கிரஹராமாயணம்
(ஸ்ரீ நாராயண பண்டிதாசாரியார்) 193, 225, 257, 291, 342. 362

7 குண்டூர் மாந்தாசார்ய ஸ்வாமி செய்த நாம முத்திரை தூஷணைக்கு பதில்
(ஒரு விஞ்ஞன்) 216, 239, 262

8 யக்ஷ பிரசினம் (ஸ்ரீ மகாபாரதம்) 154, 166


---

*தொடர்ந்த விஷயங்கள்.

| | விஷயம் | பக்கங்கள் |
|---|---|---|
| 9 | தாரஸ்திரீயை ஒதுக்கல் | 51 |
| 10 | மாத்வ வகுப்பார்களில் கலப்பு விவாஹம் அவசியம் | 207 |
| 11 | வாயு பகவானின் மேன்மை | 134 |
| 12 | *ஸந்தியாவந்தன விமரிசை (ஆசாரமாலை) | 141 |
| 13 | ஸத்யபாமையின் வீரச்செயல் | 88 |
| 14 | துரௌபதி ஸத்யபாமை ஸம்வாதம் | 107 |
| 15 | கன்னட வாயுஸ்துதி (ஸ்ரீ வாதிராஜர்) | 223 |
| 19 | அத்வைத ப்ரம்மம் குதிரைக் கொம்புதான் (ஸ்ரீமான் விச்வம்பர சாஸ்திரி) | 201 |
| 20 | ஜீவப்ரம்ம பேதமும் அப்ரமாணிகமே (ஸ்ரீமான் விச்வம்பர சாஸ்திரி) | 231 |
| 21 | பிரபஞ்சம் பொய்யன்று மெய்யேதான் (ஸ்ரீமான் விச்வம்பர சாஸ்திரி) | 271, 296, 321 |
| 22 | வெடிகுண்டு (சென்னை மார்க்கபந்து தூஷணைக்குபதில்) (ஒரு விஞ்ஞன்) | 370 |
| 23 | ஸ்ரீமான் ஸ்ரீனிவாசய்யரின் மதமாற்றம் | 357 |
| 24 | *ஸ்மார்த்த பிராம்மணர்களின் மாமிஸ பக்ஷணம் | 311, 336 |
| 25 | ஜனனக்கிரமம் (ஸ்ரீ வாதிராஜர்) | 92, 104 |
| 26 | யுதிஷ்டிராசுவமேதத்தில் அசுவத்தின் வரலாறு | 148 |
| 27 | எமது பகவத் அர்ப்பணம் | 347 |
| 28 | கடிதங்கள் | |
| | ஸ்ரீமான் கோயம்புத்தூர் K ராகவேந்திர ராவ் | 60 |
| | ஸ்ரீமான் கல்லடக்குரிச்சி ஸ்ரீனிவாஸய்யர் | 376 |
| 29 | விளம்பரம் | 18, 254, 282, 313, 346, 356. 368 |
| 30 | செய்திகள் | 29, 62, 94, 183, 192, 355 |
| 31 | செய்திதிரட்டு | 63, 125, 191, 212, 254, 281, 305 |



தமிழ்நாடு [illegible]
௨0௮௭௭௨
சென்னை-600 [illegible]



## மாத்வமித்திரன் பிரசுரங்கள்.

ஸ்ரீராகவேந்திரஸ்வாமிகளின் சரித்திரம்:—எந்த பாஷையிலுமே இதுவரை இம்மாதிரி விரிவாய் வெளியானதில்லை. ஸ்ரீராகவேந்திரர் செய்து காட்டிய திடுக்கிடும்படியான அநேக அரிய சம்பவங்கள் விஸ்தாரமாய் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. இதைப் படித்துக்கொண்டிருக்கும்பொழுதே ஸ்ரீராகவேந்திர குருஸ்வாமியிடம் சித்தம் பதிந்து பக்தி வளர்ந்து ஆனந்தக்கண்ணீர் பெருகி சரீரம் ரோமாஞ்சமாவதை ப்ரத்யக்ஷமாய் காண்போர் பலர். மேலும் பாலர், விருத்தர்வரை மாத்வர்கள் யாவராலும் தினம் உச்சரிக்கப்படும் ஸ்ரீராகவேந்திரஸ்தோத்திரம், சுலோகங்கள் தேவநாகரத்திலும், தமிழிலும் அவ்வகளின் தமிழ் அர்த்தமும் சேர்க்கப்கப்பட்டிருக்கிறது. ஏராளமாய் சிலவடைந்து வருகிறபடியால் பிந்தி ஏமாறாதிருக்க தற்போது ஆர்டர் செய்யுங்கள். விலை அணா 0—8—0. தபாற் கூலி அணா 0—1—0.

ஸ்ரீராகவேந்திரஸ்தோத்திரம்:—தேவநாகரத்திலும், தமிழிலும் சுலோகங்கள் அவைகளின் தமிழ் அர்த்தமும் விலை அணா 2 தபாற்கூலி 0—0—6.

ஸ்ரீவாயுஸ்துதி:—தேவநாகரத்தில் சுலோகங்களும் அவைகளின் தமிழ் அர்த்தமும் சேர்க்கப்பட்டிருக்கிறது. வாயுஸ்துதியின் இன்னின்ன சுலோகங்களால் இன்னின்ன பலம் ஏற்படுமென்பதும் புனஸ்சரண விதானமும் காட்டப்பட்டிருக்கிறது. விலை அணா 0—5—0 தபாற்கூலி அணா ஒன்று.

துவைதமத விளக்கம்:—ஸ்ரீமத்வமதத்தின் அநேக ப்ரமேயங்கள் ஸ்ரீமத்வாசாரியாரின் ஜீவியசரித்திரம் முதலியவை உள்ளது விலை அணா 2. தபாற்கூலி பைசா 6.

கும்பகோண மகாத்மியம்:—(தமிழ்) அணா 4. தபாற்கூலி பை 6.

துருவசரித்திர [illegible] தபாற்கூலி அணா 0—1—0.

கீதாதத்வம்:— ஸ்ரீஉத்தராதிமடம் ஸ்வாமிகள் இயற்றி ஸ்ரீமான் [illegible]யம் பாகவதரங்கநாதாசாரியாரால் தமிழில் எழுதப்பட்டது. முதல் மூன்று சஞ்சிகைகள் சுமார் 225 பக்கங்கள் தற்போது தயார். இதர சஞ்சிகைகள் அவை வெளியானவுடன் இனமாய் புக்போஸ்ட்டில் அனுப்பப்படும். விலை 1–8–0 தபாற்கூலி 0–6–0. ஒரு ரூபாய்க்கு குறைந்து ஆர்டர் செய்கிறவர்கள் தபாற்கூலியைச் சேர்த்து கிரயத்தைகை போஸ்டேஜ் ஸ்டாம்பாய் அனுப்பப்படவேண்டும். *Certificate of Posting* பேரில் புஸ்தகங்கள் அனுப்பப்படும். புஸ்தகங்கள் கிடைக்காவிட்டால் இந்த ஆபீஸ் ஜவாப்தாரியல்ல.

**மானேஜர் மாத்வமித்திரன், ஸ்ரீவியாஸவிலாஸம், கும்பகோணம்.**